அடவு aṭavu, *n.* [K. *aṭavu*, M. *aṭavu.*] Pledge, pawn; அடகு. (W. G.)

அடவுசெய்வார் aṭavu-ceyvār, *n.* < அடைவு +. See அடவிமார். (M. E. R. 313 of 1916-B.)

அடவோலை aṭa-v-ōlai, *n.* < அடை +. See அடகோலை. *Loc.*

அடனி aṭaṉi, *n.* < *aṭani.* Extremity of the bow; வில்லின் நுனி. (சிந்தா. நி. 84.)

அடாசு-தல் aṭācu-, *5 v. tr.* cf. அடைசு-. (W.) 1. To recede, give place to; விலகுதல். 2. To stuff; திணித்தல்.

அடாத்தியம் aṭāttiyam, *n.* prob. *haṭhāt.* Impropriety, injustice; அக்கிரமம். (W.)

அடாநிந்தை aṭā-nintai, *n.* < அடு- + ஆ neg. +. 1. Unfounded reproach; ஆதாரமற்ற பழிச்சொல். (W.) 2. Unbearable slander; பொறுக்கமுடியாத பழிச்சொல். *Loc.*

அடாநெறி aṭā-neṟi, *n.* < id. + id. +. Evil ways; தகாதவழி. அடாநெறி யறைதல் செல்லா வருமறை (கம்பரா. எதிர்கோள். 1).

அடார்வெளி aṭār-veḷi, *n.* perh. *aṭa*+. Open, bare field; தரிசு நிலம். (R.)

அடாலத்து aṭālattu, *n.* < U. *adālat.* Court of justice; நியாயஸ்தலம். (P. N.)

அடாவரி aṭā-vari, n. <அடு- + ஆ neg. +. Unjust tax; அநியாய வரி. (R.)

அடாவழி aṭā-vaḻi, n. <id. + id. +. (R.) 1. Rough way; கடுவழி. 2. See அடாநெறி.

அடி[1] aṭi, n. <id. 1. Supreme Being; கடவுள். ஆரே யறிவா ரடியின் பெருமை (திருமந். 2126). 2. Lineage, descent; சந்தானம். (J.) 3. Sediment; மண்டி. (அக. நி.)

அடி[2] aṭi, n. <செருப்படி. A herb; செருப் படை. (பச். மூ.)

அடிக்கட்டை aṭi-k-kaṭṭai, n. <அடி +. See அடிமரம். (M. Navi. 81.)

அடிக்கலம் aṭi-k-kalam, n. <id. +. Anklet; சிலம்பு. அடிக்கல மாற்ற (சீவக. 2041).

அடிக்குழம்பு aṭi-k-kuḻampu, n. <id. +. That which settles at the bottom; sediment; அடிவண்டல்.

அடிகல் aṭi-kal, n. <அடி- +. Dressed cut-stone; செதுக்கித் திருத்திய கல்.

அடிகாயம் aṭi-kāyam, n. <id. +. Contused wound caused by a blow; அடியால் உண்டாம் இரணம். அடிகாயம் (மதி. களஞ். ii, 119).

அடிகாரன் aṭi-kāraṉ, n. <அடி +. Colloq. 1. Butcher; உணவுக்காகக் கால்நடைகளைக் கொல் பவன். 2. Fencer; சிலம்பம் வீசுவோன்.

அடிச்சட்டம் aṭi-c-caṭṭam, n. <id. +. Bottom piece, as of a door; கதவு பலகணி முதலியவற்றின் அடியில் இடும் மரம். Loc.

அடிச்சரக்கு aṭi-c-carakku, n. <id. +. (R.) 1. Inferior articles of merchandise; மட்ட மான சரக்கு. 2. Refuse; குப்பை.

அடிச்சூத்திரன் aṭi-c-cūttiraṉ, n. <id. +. A person of inferior caste; தாழ்ந்த வகுப்பினன். (W. G.)

அடிச்சேரி aṭi-c-cēri, n. prob. id. +. 1. Village near a town; suburb; நகரையடுத்த ஊர். Cm. 2. Part of a village in which the hereditary proprietors reside; ஊரிற் காணியாளர் வசிக்கும் பாகம். (W. G.)

அடிசிற்பள்ளி aṭicir-paḷḷi, n. <அடிசில் +. Kitchen; மடைப்பள்ளி. ஐவே றமைந்த வடிசிற் பள்ளியும் (பெருங். இலாவாண. 7, 133).

அடிஞானம் aṭi-ñāṉam, n. <அடி +. (Śaiva.) Spiritual wisdom; பதிஞானம். அடிஞான மான்மாவிற் றோன்றும் (சி. சி. 8, 28).

அடித்தலம் aṭi-t-talam, n. <id. +. Sandals of a great person; திருவடிநிலை. அடித் தலம் . . . சூடினன் (கம்பரா. கிளைகண். 136).

அடித்தழும்பு aṭi-t-taḻumpu, n. <id. +. See அடிதாறு. (W.)

அடித்தளம் aṭi-t-taḷam, n. <id. +. (W.) 1. Ground-floor; கட்டடத்தின் அடிநிலைப்பரப்பு. 2. Foundation of a well; கிணற்றின் அடிப்பார். 3. Rear of an army; படையின் பின்னணி.

அடித்துண்டு aṭittuṇṭu, n. cf. அடுத்தூண். Subsistence allowance; சீவனும்சம். (மருத்.)

அடித்துமுதலானது aṭittu-mutal-āṉatu, n. <அடி- + முதல் + ஆ-. Quantity of grain threshed and heaped at the threshing-floor; கதிரையடித்துக் களத்திற் குவித்த தானியம். Colloq.

அடித்துவிடு-தல் aṭittu-viṭu-, v. tr. <id. +. To accomplish by force; பலவந்தமாக முடித்தல். (R.)

அடித்தொடை aṭi-t-toṭai, n. <அடி +. 1. Upper part of the thigh; தொடையின் மேற் பாகம். 2. The back part of the thigh; தொடை யின் பின்புறம்.

அடிதடி aṭitaṭi, n. <அடிதடி. Quarrel that ends in blows; அடிதடிச் சண்டை. (மதி. களஞ். ii, 173.)

அடிதண்டா aṭi-taṇṭā, n. <அடி +. Bar laid across a door; கதவிற் குறுக்காக இடுஞ் சட்டத் தாழ்ப்பாள். Loc.

அடிதலை aṭi-talai, n. <id. +. Order, regularity; ஒழுங்கு. (W.)

அடிதாளம் aṭi-tāḷam, n. <அடி- +. Beating time with the hand; கைகளாற் போடுந் தாளம். அடிதாளம் போடாவிட்டால் பாட்டொவ்வாது என்பார்கள் (மதி. களஞ். ii, 72).

அடிதாறு aṭi-tāṟu, n. <அடி +. Foot-print; அடிச்சுவடு. நிழலு மடிதாறு மானோம் (திவ். இயற். பெரியதிருவந். 31).

அடிநா aṭi-nā, n. <id. +. Root or lower part of the tongue; நாவின் அடிப்பகுதி. (W.)

அடிநாய் aṭi-nāy, n. <id. +. A term of humility meaning 'Slave-dog'; பெரியோர்முன் தன்னைத் தாழ்த்திக்கூறுஞ் சொல். அடிநாயுரை (தேவா. 742, 11).

அடிநாயேன் aṭināyēṉ, n. <அடிநாய். A term of humility referring to oneself as 'Your humble slave-dog'; 'நாய்போலத் தாழ்ந்த அடிமை யாகிய நான்' என்ற பொருளில் வரும் ஒரு வணக்க

மொழி. உத்தம வடிநாயே ஞேதுவேதுளது (கம்பரா. கங்கை. 63).

அடிநிலை aṭi-nilai, n. < அடி +. Foundation; அஸ்திவாரம். ஆகமத்தா லடிநிலை பாரித்து (பெரியபு. பூச. 6).

அடிநிலைச்சுற்று aṭi-nilai-c-cuṟṟu, n. < id. + நிலை +. Stirrup; குதிரை யங்கவடி. அடிநிலைச் சுற்றோ டியாப்புப் பிணியுறீஇ (பெருங். இலாவாண. 18, 22).

அடிப்பட்டடைநெல் aṭi-p-paṭṭaṭai-nel, n. < id. + பட்டடை +. Grains of paddy caught in the straw on which paddy is heaped; களத்துப்பட்டடையில் வைக்கோலோடு கலந்துகிடக்கும் நெல். (R. T.)

அடிப்படி aṭi-p-paṭi, n. < id. +. Bottom piece of the frame of a door; கதவுநிலையின் அடிமரப்படி. *Loc.*

அடிப்படுத்து-தல் aṭi-p-paṭuttu-, v. tr. Caus. of அடிப்படு-. To establish firmly; நிலைபெறச் செய்தல். தன்னெறிமுறைமை அடிப்படுத்து வருதற்குப் பிரிவன் (கலித். 26, துறை).

அடிப்படை aṭi-p-paṭai, n. < அடி +. Main division of an army; சேனையில் தலைமையாகவுள்ள பகுதி. (W.)

அடிப்பற்று aṭi-p-paṟṟu, n. < id. +. 1. Food, curry, etc., charred in cooking; தீந்துபோன சோறு முதலியன. *Loc.* 2. Rock-salt; பாறையுப்பு. (யாழ். அக.)

அடிப்பிடி-த்தல் aṭi-p-piṭi-, v. intr. < id. +. To be charred, as rice, vegetables, etc., in cooking; சோறு கறி முதலியன தீந்துபோதல். (யாழ். அக.)

அடிப்புக்கண்டுமுதல் aṭippu-k-kaṇṭu-mutal, n. < அடிப்பு +. Gross out-turn of paddy; மொத்த நெல்விளைவு. (R. T.)

அடிப்புல் aṭi-p-pul, n. < அடி +. Grain stored by ants under the ground; தரையின் அடியில் எறும்புகள் சேர்த்துவைக்குந் தானியம். *Tp.*

அடிப்பெருங்கடவுள் aṭi-p-peruṅ-kaṭavuḷ, n. < id. +. The Supreme Being; எல்லாவற்றுக்கும் மூலமான கடவுள். அடிப்பெருங் கடவு ளூழியீறதொறும் (தக்கயாகப். 656).

அடிபறி-தல் aṭi-paṟi-, v. intr. < id. +. To be uprooted; வேரோடு பெயர்தல். ஊசிவேர் அடிபறிய (தக்கயாகப். 144, உரை).

அடிபிடி-த்தல் aṭi-piṭi-, v. < id. +. intr. 1. To get a clue, as to a crime; துப்பறிதல். (W.) 2. To trace one's footstep; ஒருவனுடைய அடிச்சுவடுபற்றிப் போதல்.—tr. 1. See அடைகட்டு-, 1. அரண்டகடாகம் வெடித்து அடிபிடிக்க வேண்டும்படி (திவ். அமலனாதி, 2, வ்யா. பக். 33). 2. To pursue; தொடருதல்.

அடிபிழை-த்தல் aṭi-piḻai-, v. intr. < id. +. To act unlawfully, illegally; நெறிதவறி நடத்தல். வேந்தன் அடிபிழைத்தாரை யொறுக்குந் தண்டத்து (மணி. 19, 42).

அடிபுதையரணம் aṭi-putai-y-araṇam, n. < id. + புதை- +. A kind of sandals covering the feet; செருப்புவகை. அடிபுதையரண மெய்தி (பெரும்பாண். 69).

அடிபுனைதோல் aṭi-puṉai-tōl, n. < id. + புனை- +. Sandal; செருப்பு. அடிபுனைதோலி னரண் சேர்ந்து (பெருந்தொ. 437).

அடிமடக்கு aṭi-maṭakku, n. < id. +. (Rhet.) Repetition of a line in a stanza with or without a variation in sense; பொருள் வேறுபட்டேனும் வேறுபடாமலேனும் செய்யுளின் அடிமீண்டுமீண்டு வருவதாகிய சொல்லணிவகை. கொச்சகமெலா மடிமடக்கு (பெருந்தொ. 1793).

அடிமடையன் aṭi-maṭaiyaṉ, n. < id. +. Utter idiot; முழுமுட்டாள். *Colloq.*

அடிமண்டி aṭi-maṇṭi, n. < id. +. Dregs; deposit; அடியிற் றங்கும் மண்டி முதலியன. தாம்தந்த மயர்வறு மதிநலமெல்லாம் அடிமண்டியோடே கலங்கிற்று என்னுமிகோள் (ஈடு, 1, 4, 3, வ்யா. பக். 183).

அடிமயக்கு aṭi-mayakku, n. < id. +. (Pros.) A verse so constructed that transposing of its lines does not destroy its sense; பொருளில் திரிபின்றி அடிகளை முன்பின்னாக மாற்றும்படி யமைந்த பாடல். (W.)

அடிமரம் aṭi-maram, n. < id. +. Lower mast; பாய்மரத்தின் அடிப்பாகம். (M. Navi. 81.)

அடிமுகனை aṭi-mukaṉai, n. < id. +. Beginning; ஆரம்பம். (W.)

அடிமுட்டாள் aṭi-muṭṭāḷ, n. < id. +. See அடிமடையன். *Colloq.*

அடிமுடி aṭi-muṭi, n. < id. +. See அடிதலை. (யாழ். அக.)

அடிமுண்டம் aṭi-muṇṭam, n. < id. +. 1. Stump of a tree; வெட்டியமரத்தின் அடிப்பாகம். 2. Worthless person; பயனற்றவ-ன்-ள். *Loc.* 3. See அடிமடையன். *Loc.*

அடிமைக்காசு aṭimai-k-kācu, n. < அடிமை +. A fee collected from temple servants; கோயில்வேலைக்காரரிடமிருந்து பெறும் வரிவகை. (I. M. P. Sm. 38.)

அடிமைச்சீட்டு aṭimai-c-cīṭṭu, *n.* <id. +. Slave-bond; அடிமைப்பத்திரம். *Colloq.*

அடிமைப்பள்ளன் aṭimai-p-paḷḷaṉ, *n.* <id.+. Serf or labourer of the Paḷḷa caste; பள்ளரில் அடிமைப்பணி செய்பவன். (P. T. L.)

அடியந்திரம் aṭiyantiram, *n.* [M. *aḍi-yantara.*] Speciality, anything special; விசேஷமானது. *Nāñ.*

அடியர் aṭiyar, *n.* <அடி-மை. Slaves; அடிமைகள். *அடியரு மாயமும் நொடிவனர் வியப்ப* (பெருங். உஞ்சைக். 34, 179).

அடியல் aṭiyal, *n.* perh. அடு-. (யாழ். அக.) 1. Pouring; சொரிகை. 2. Continuity; தொடர்கை.

அடியறு-த்தல் aṭi-y-aṟu-, *v. tr.* <அடி +. To eradicate; மூலத்தோடு நீக்குதல். *அஹங்கார மமகாரங்களையும் . . . அடியறுத்து* (ஈறாயை. 320).

அடியறை aṭi-y-aṟai, *n.* <id.+. That which has no basis or support; அடியற்றது. *Loc.*

அடியாட்டி aṭi-y-āṭṭi, *n.* <அடி-மை +. Fem. of *அடியான்.* See அடியாள். *கூனிசொன்னது கேட்கவேண்டா தொழிகிறது அடியாட்டி யாகை யாலே* (திவ். திருநெடு. 12, வ்யா.).

அடியாள் aṭi-y-āḷ, *n.* <id.+. Woman servant; குற்றேவற் பெண். (I. M. P. Sm. 38.)

அடியிலேயுறை-தல் aṭiyilē-y-uṟai-, *v. intr.* <அடி +. To reverence, worship; வழிபடுதல். (*கலித்.* 140, *உரை.*)

அடியுடுப்புமுண்டு aṭi-y-uṭuppu-muṇṭu, *n.* <id. + உடு- +. Cloth worn round the waist; இடுப்பு வேஷ்டி. *Nāñ.*

அடியுரம் aṭi-y-uram, *n.* <id. +. Foundation; அஸ்திவாரம். (*யாழ். அக.*)

அடியெழுத்து aṭi-y-eḻuttu, *n.* <id +. (Gram.) The primary letters comprising the twelve vowels and the eighteen consonants; பன்னிருயிரும் பதினெட்டு மெய்யுமாகிய முதலெழுத்து. (*பேரகத்.* 8, *உரை.*)

அடியொட்டி aṭi-y-oṭṭi, *n.* <id.+. A kind of shrub; பூடுவகை. (குருகூர்ப். 45.)

அடியொற்று-தல் aṭi-y-oṟṟu-, *v. intr.* <id.+. To start; to step out; புறப்படுதல். *பரமபதத்தினின்றும் அடியொற்றினான், திருமலையள வும் பயணமுண்டாயிருந்தது* (திவ். அமலனாதி. 3, வ்யா. பக். 47).

அடியோட்டி aṭi-y-ōṭṭi, *n.* <id.+. cf. அடியொட்டி. Caltrops, a spiked instrument to pierce the feet of men and cattle; முட்போன்ற கூர்மைபொருந்திப் பிராணிகளின் காலைக் கிழிக்க வல்லதான கருவிவகை. (W.)

அடிவரலாறு aṭi-varalāṟu, *n.* <id.+. Lineage; ancestry; வமிசாவளி. (W.)

அடிவரை aṭi-varai, *n.* <id.+. Foot of a mountain; தாழ்வரை. *அடிவரையிலே சிங்கம் பாய்ந்தாற்போல்* (*கலித்.* 86, *உரை*).

அடிவரையறை aṭi-varaiyaṟai, *n.* <id. +. Index of initial syllables of the stanzas in a poem; பாட்டின் முதற்குறிப்பு வரிசை. (*மீனாட். சரித்.* 1, *பக்.* 10.)

அடிவினை[1] aṭi-viṉai, *n.* <அடி- +. Washing of clothes; ஆடையொலிக்கை. *அடிவினைக்கமரியர் நெடிப்பட வடுக்கிய* (பெருங். இலாவாண. 4, 183).

அடிவினை[2] aṭi-viṉai, *n.* <அடி +. 1. Stratagem; சூழ்வினை. *அவனுக்கு அடிவினை வைக்கிறான். Colloq.* 2. Perversity; மாறாட்டம். 3. Extreme malice; கறுவு. (R.)

அடிவைக்கும்ஆலாத்து aṭi-vaikkum-ālāttu, *n.* <id. + வை- +. Foot rope; ஆட்கள் நின்று வேலை செய்யும்படி பாய்மரம் முதலியவற்றின் கீழ்ப்பாரத்திலிருக்குங் கயிறு. (M. Navi. 86.)

அடிஸ்தானம் aṭi-stāṉam, *n.* <id. +. Basis, foundation; ஆதாரம். *Nāñ.*

அடுக்கம் aṭukkam, *n.* <அடுக்கு. 1. Ledge of rock, stratum of stone; பாறை. *மால்வரை யடுக்கத்து* (*கலித்.* 44). 2. Bed; படுக்கை. *நறுவீ யடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்* (*அகநா.* 2).

அடுக்களைக்குருக்கள் aṭukkaḷai-k-kuruk-kaḷ, *n.* prob. அடுக்களை +. Spiritual guru of the women of the Nāṭṭu-k-kōṭṭai Cheṭṭi caste; நாட்டுக்கோட்டைச்செட்டிப் பெண்டிர்க்கு உரிய குரு. *Nāṭ. Chetti.*

அடுக்களைகாணுதல் aṭukkaḷai-kāṇutal, *n.* <id. +. The *cīmantam* ceremony, when the girl's mother visits her in her house; சீமந்தச் சடங்கு. *Nāñ.*

அடுக்களைப்புறம் aṭukkaḷai-p-puṟam, *n.* <id. +. Endowment for the kitchen expenses of a temple; கோயில் மடைப்பள்ளிச் செலவுக்காக விடப்படும் மானியம். (M. E. R. 574 of 1926.)

அடுக்குப்பாற்சொற்றி aṭukku-p-pāṟ-coṟṟi, *n.* <அடுக்கு +. A variety of *Ruellia secunda;* பாற்சொற்றிவகை. (W.)

அடுக்குவிருசு aṭukku-virucu, *n.* <id. +. A kind of rocket; வாணவகை. (T. C. M. II, 2, 598.)

அடுகிடைபடுகிடை aṭukiṭai-paṭukiṭai, *n.* Redupl. of. படுகிடை. 1. Lying down at a person's house determined not to leave the place till the thing asked for is obtained; நினைத்தது பெறுமளவும் ஒருவன் வீட்டின்முன் படுத்துக் கிடக்கை. (W.) 2. Being completely bedridden, as in illness; நோய்வாய்ப்படுகை. *அடுகிடைபடுகிடையாகக் கிடக்கிறான்.*

அடுகுவளம் aṭu-kuvaḷam, *n.* prob. அடு-+. Food; போசனம். *அடுகுவளம் தடைப்படும் போலே காணும* (*ஈடு*, 10, 4, 3).

அடுத்தி aṭutti, *n.* perh. அடர்-. cf. அடத்தி. Usury; அக்கிரம வட்டி. (W. G.)

அடுத்துக்கழுத்தறு-த்தல் aṭuttu-k-kaḻuttaṟu-, *v. tr.* <அடு-+. 1. To kill by treachery; சதிசெய்து கொல்லுதல். (W.) 2. To do harm insidiously; நட்பினன்போற் பழகிக் கேடுசெய்தல். *Loc.*

அடுநறா aṭu-naṟā, *n.* <id.+. Distilled toddy; காய்ச்சிய சாராயம். *அடுநறா மகிழ்தட்ப* (*பரிபா.* 21).

அடுப்பம் aṭuppam, *n.* <id. 1. Heaviness, weight; கனம். *மேக அடுப்பமும் பார் அடுப்பமும் ஒத்தன பேய்க்கணங்கட்கு* (*தக்கயாகப்.* 361, *உரை*). 2. Close intimacy or relationship; நெருங்கிய உறவு. *Tinn.*

அடுப்பூதி aṭuppūti, *n.* <அடுப்பு+ஊது-. 1. Cook; சமையற்கா-ரன்-ரி. 2. Fool; மூடன். (*மதி. களஞ்.* ii, 5.)

அடுமா aṭumā, *n.* Nut; கொட்டை. (*பரி. அக.*)

அடுவம் aṭuvam, *n.* Wight's Indian nettle; மலைப்புன்கு. (L.)

அடை¹-தல் aṭai-, *4 v. intr.* To be closed, choked up or filled up; தூர்தல். *Colloq.*

அடை²-த்தல் aṭai-, *11 v.* perh. அடு-. *intr.* To allot; வகுத்தல்.—*tr.* To be appropriate to; தகுதியாதல். *அக்காலத்துக்கு அடைத்த காற்றுக்கள்* (*ஈடு*, 10, 3, *ப்ர. பக்.* 71).

அடை³ aṭai, *n.* <செருப்படை. A herb. See அடி². (*பச். மூ.*)

அடைக்க aṭaikka, *adv.* <அடை-. Entirely; முழுவதும். *வீடடைக்க நோயாயிருக்கிறது.*

அடைக்கப்பட்டார் aṭaikkappaṭṭār, *n.* A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (*கள்ளர்சரித்.* 145.)

அடைக்கப்புடைக்க aṭaikka-p-puṭaikka, *adv.* <அடை-+புடை-. Hurriedly, quickly; விரைவாக. *Loc.*

அடைக்கலஞ்செய்-தல் aṭaikkalañ-cey-, *v. tr.* <அடைக்கலம்+. To bury, inter, entomb; பிரேதவடக்கஞ் செய்தல். (*மதி. களஞ்.* ii, 145.)

அடைக்கலமாதா aṭaikkala-mātā, *n.* <id.+. The Lady of Refuge; அடைக்கல மளிக்கும் தேவமாதா. *R. C.*

அடைக்கலஸ்தலம் aṭaikkala-stalam, *n.* <id.+. Asylum; புகலிடம். (R.)

அடைகட்டு-தல் aṭai-kaṭṭu-, *v. tr.* <அடை+. 1. To construct a bank or bund; நீர்ப்பெருக்கைத் தடுக்க வரம்புண்டாக்குதல். *அண்டகடாகம் வெடித்து அடைகட்ட வேண்டும்படியிறே அபேக்ஷிதம்பெற்று வளர்ந்தபடி* (*திவ். அமலனாதி.* 2, *வ்யா. பக்.* 34). 2. To place a bar of wood or stone in front of a wheel of a carriage to prevent its motion; வண்டி நகராதபடி சக்கரத்தின் முன் தடை வைத்தல். *Loc.* 3. To insert a wedge-like piece of wood to raise the wheel of a car or cart; தேர் வண்டிகளின் சக்கரத்தைத் தூக்க அடியில் முட்டுக்கொடுத்தல். *Loc.*

அடைகடல் aṭai-kaṭal, *n.* <id.+. Sea-coast; கடற்கரை. (*தொல். சொல்.* 419, *உரை.*)

அடைகரை aṭai-karai, *n.* <id.+. Shore; கரைப்பக்கம். (*குறுந்.* 175.)

அடைகுடி aṭai-kuṭi, *n.* <id.+. Cultivating tenant; பயிரிடுங் குடி. (S. I. I. ii, 250.)

அடைகுத்து-தல் aṭai-kuttu-, *v. tr.* <id.+. To mortgage; அடைமானம் வைத்தல். *குடியொருகுடிபெறும்விலைக்கு அடைகுத்துக என்று* (S. I. I. v, 305).

அடைகொள்(ளு)-தல் aṭai-koḷ-, *v. tr.* <id.+. To take on mortgage, as land; ஒற்றியாகப் பெறுதல். *இலக்ஷ்மண நம்பி அடைகொண்ட நிலமும்* (S. I. I. iv, 81).

அடைசாரல் aṭai-cāral, *n.* <அடை-+. Heavy monsoon; பருவகாலத்து அடைமழை. *ஆனி முற்சாரல், ஆடி அடைசாரல்.*

அடைசு-தல் aṭaicu-, *5 v. intr.* To be full; நிறைவாதல். *அடைசிச் சாப்பிடுதல்.*

அடைசுபலகை aṭaicu-palakai, *n.* <அடைசு-+. Plank placed above the lintel of a door-frame; கதவுநிலைகளின் மேல் வைக்குந் தூரிப்பலகை. (W.)

அடைசொல் aṭai-col, n. <அடை-+. (Gram.) Termination, ending of a word; விகுதி. (தக்கயாகப். 463.)

அடைத்து aṭaittu, adv. <id. Entirely, wholly; முழுவதும். வீடடைத்து நோய்.

அடைதூண் aṭai-tūṇ, n. <அடை+. The pillar to which the churning rod is tied; தயிர்கடை தறி. மத்துமந்திரம் வாசுகிகடைகயி றடை தூண் மெத்து சந்திரன் (கம்பரா. அகலிகை. 21).

அடைநேர்-தல் aṭai-nēr-, v. tr. <id. +. To agree to give one's daughter in marriage; மகட்கொடைக்கு உடம்படுதல். தலைவர்க்கே நம்மை அடைநேர்ந்திலராயினும் (குறிஞ்சிப். 23, உரை).

அடைப்படி aṭai-p-paṭi, n. <id.+. Pledge; அடைமானம். (S. I. I. iii, 307.)

அடைப்பம் aṭaippam, n. <id. Servant serving betel; அடைப்பக்காரன். (I. M. P. N.A. 195.)

அடைப்பிரதமன் aṭai-p-piratamaṉ, n. <id.+. A variety of *piratamaṉ;* பாயசவகை. *Loc.*

அடைப்பு[1] aṭaippu, n. See அடைப்பம். (M. E. R. 205 of 1919.)

அடைப்பு[2] aṭaippu, n. <அடை-. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 146.)

அடைப்புமுதலிகள் aṭaippu-mutalikaḷ, n. <id.+. Executive officers of an assembly; சபையின் காரியநிர்வாகிகள். (M. E. R. 191 of 1925.)

அடைப்பைகட்டு-தல் aṭaippai-kaṭṭu-, v. intr. <அடைப்பை+. To serve betel-roll for chewing; வெற்றிலை மடித்துக்கொடுத்தல். பிரதாபருத்திரனிடத்திற்போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா (பெருந்தொ. 1203).

அடைப்பையான் aṭaippaiyāṉ, n. <id. Attendant serving betel-roll; வெற்றிலை மடித்துக் கொடுக்கும் வேலையாள். அடைப்பையான் சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் (பெருந்தொ. 863).

அடைபடு-தல் aṭai-paṭu-, v. intr. <அடை-+. 1. To be shut or enclosed; அடைக்கப்படுதல். *Colloq.* 2. To be completed; முடிதல். *Loc.*

அடைபுடை aṭai-puṭai, n. <அடை+. 1. Surroundings; அக்கம்பக்கம். *Loc.* 2. Day and night; இராப்பகல். அடைபுடை தழுவி அண்டநின் றதிரும் (திவ். பெரியதி. 4, 10, 3).

அடைபொருள் aṭai-poruḷ, n. <அடை-+. Earnings; சம்பாத்தியப் பொருள். அடைபொருள் கருதுவிராயின் (இறை. 28, உரை, பக். 133).

அடைமுதற்பற்று aṭai-mutaṟ-paṟṟu, n. <அடை+முதல்+. Land leased out to tenants; குடிகட்குப் பற்றடைக்கப்பட்ட நிலம். (M. E. R. 209 of 1925.)

அடையன் aṭaiyaṉ, n. Chebulic myrobalan; கடுக்காய். (T. C. M. ii, 2, 429.)

அடையாண்கிளவி aṭaiyāṇ-kiḷavi, n. <அடையாளம்+. Word used for recognition, pass-word; அடையாளச்சொல். அறியக்கூறிய வடையாண்கிளவியும் (பெருங். உஞ்சைக். 56, 184).

அடையாள் aṭai-y-āḷ, n. <அடை-+ஆள். Servant; வேலையாள். (S. I. I. vii, 72.)

அடையாளக்காரர் aṭaiyāḷa-k-kārar, n. <அடையாளம்+. Persons who carry the insignia of royalty or royal paraphernalia; ராஜ விருதுகளைப் பிடித்துச் செல்வோர். (ரஹஸ்ய. 587.)

அடையுண்(ணு)-தல் aṭai-y-uṇ-, v. intr. <அடை-+. To be shut up or enclosed; அடைபடுதல். புலிக்குட்டி கூட்டிடத்தே அடையுண்டிருந்து (பட்டினப். 221).

அடையெழுது-தல் aṭai-y-eḻutu-, v. tr. <அடை+. To enter in an account; கணக்கில் தாக்கல் செய்தல். (S. I. I. iv, 150.)

அடைவளைந்தார் aṭai-vaḷaintār, n. prob. id.+. A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 144.)

அடைவுசரக்கு aṭaivu-carakku, n. <அடைவு+. A kind of camphor; கர்ப்பூர வகை. (சிலப். 14, 109, உரை.)

அண்டகபாடம் aṇṭa-kapāṭam, n. <*aṇḍa*+. See அண்டபித்தி. (தக்கயாகப். 622, உரை.)

அண்டகம் aṇṭakam, n. <*aṇḍa*. Testicle; பீசம். (சிந்தா. நி. 101.)

அண்டகூடம் aṇṭa-kūṭam, n. <id.+. Globe of the universe; அண்டகோளகை. அண்டகூடமுஞ் சாம்பராயொழியும் (கம்பரா. அகலிகை. 14).

அண்டசம் aṇṭacam, n. <*aṇḍa-ja*. 1. Bird; பறவை. (அக. நி.) 2. Chameleon; ஓந்தி. 3. Snake and other reptiles; பாம்பு முதலியன. 4. Fish and other aquatics; சலசர முதலியன. 5. Conch; சங்கு. (உரி. நி.) 6. Tortoise; ஆமை. (அக. நி.)

அண்டசை aṇṭacai, n. <*aṇḍa-jā*. Musk; கஸ்தூரி. (பரி. அக.)

அண்டநாடு aṇṭa-nāṭu, n. <அண்டம்+. A sub-division of the Pāṇḍya country; பாண்டி நாட்டின் ஒரு பகுதி. (I. M. P. ii, 62.)

அண்டப்பொகுட்டு aṇṭa-p-pokuṭṭu, *n.* <id.+. See அண்டகூடம். பூதலப்பரப்பி னண்டப் பொகுட்டினுட் புறத்துள் (கம்பரா. பிணிவீட். 113).

அண்டபஸ்மம் aṇṭa-pasmam, *n.* <*aṇḍa* +. Calcination of medicinal drugs with eggs; கோழிமுட்டைக்கருவைக் கொண்டு செய்யும் மருந்து.

அண்டபித்தி aṇṭa-pitti, *n.* <id.+. The vault of the heavens, as the shell of the universe imagined to be in the form of an egg; அண்டகோளத்தின் மேலோடு. ஒரு திருவடிகளே அண்டபித்திக்கு மவ்வருகேபோய் (திவ். திருநெடுந். 5, வ்யா.).

அண்டபேரண்டபட்சி aṇṭapēraṇṭa-paṭci, *n.* <கண்டபேரண்டம்+. A monster bird; கண்டபேரண்டம் என்னும் பெரும்பறவை. *Loc.*

அண்டம் aṇṭam, *n.* <*aṇḍa*. 1. Sac of the civet cat; புழுகுசட்டம். (சம். அக. Ms.) 2. Brain; மூளை. (வை. மூ.) 3. Skull; தலையோடு. (யாழ். அக.)

அண்டரசம் aṇṭa-racam, *n.* <id.+. Mercury; பாதரசம். (வை. மூ.)

அண்டரண்டபட்சி aṇṭaraṇṭa-paṭci, *n.* <கண்டபேரண்டம்+. 1. See அண்டபேரண்ட பட்சி. *Loc.* 2. Eagle; கழுகு. *Pond.*

அண்டவாணன் aṇṭa-vāṇaṉ, *n.* <அண்டம்+. God; தேவன். அண்டவாணனடி யுள்குதலால் (தேவா. 1114, 11).

அண்டிரன் aṇṭiraṉ, *n.* <*aṇḍīra*. Man; மனுஷன். (சிந்தா. நி. 114.)

அண்டீரன் aṇṭīraṉ, *n.* <*aṇḍīra*. (நாநார்த்த.) 1. Man; மனிதன். 2. Hero, warrior; வீரன்.

அண்ணம் aṇṇam, *n.* <அண். Lower jaw; கீழ்வாய்ப்புறம். (யாழ். அக.)

அண்ணமார் aṇṇamār, *n.* A minor village deity; ஒரு கிராமதேவதை. *Madr.*

அண்ணல் aṇṇal, *n.* <அண்-. 1. Master, lord; தலைவன். அண்ணலா ரறுத்த கூலிகொண்டு (பெரியபு. அரிவாட். 11). 2. Father; தந்தை. (அரு. நி.) 3. Preceptor, spiritual guide; குரு. 4. The Buddha; புத்தன். (பொதி. நி.) 5. Śiva; சிவன். அண்ணலாரு மதுவுணர்ந்து (பெரியபு. திருநாவுக். 296). 6. Arhat; அருகன். (நாநார்த்த.) 7. Elder brother; அண்ணன். (நாநார்த்த.)

அண்ணவோதை aṇṇa-v-ōtai, *n.* <அண்ணம்+. Clicking sound produced by pressing the tongue against the roof of the mouth; நாவாற்கொட்டும் ஒலி. (W.)

அண்ணாக்கயிறு aṇṇā-k-kayiṟu, *n.* <அரைநாண்+. Waistcord; அரைஞாண். *Colloq.*

அண்ணாநாடு aṇṇā-nāṭu, *n.* <அண்ணா+. The region about Tiru-v-aṇṇāmalai; திருவண்ணாமலைப் பிரதேசம். அண்ணாநாட்டு எல்லையில் திருந்திசையாற்றை யடைத்து (S. I. I. viii, 44).

அண்ணாவி aṇṇāvi, *n.* <அண்+ஆள்-. (யாழ். அக.) 1. Elder brother; தமையன். 2. Poet; புலவன்.

அண்ணிசு aṇṇicu, *n.* <அண்ணு-. Proximity, nearness; அணிமை. (யாழ். அக.)

அண்ணியன் aṇṇiyaṉ, *n.* <அண்-மை. Close kinsman; நெருங்கிய உறவினன். தமப்பன் பகையாக அவனிலும் இவன் அண்ணிய னென்றுவரநின்ற ப்ரஹ்லாதன் (ஈடு, 10, 3, ப்ர. பக். 70).

அண்ணு-தல் aṇṇu-, 5 *v. tr.* To resemble; ஒத்தல். புகலும் வாளரிக் கண்ணியர் (கம்பரா. வரைக்காட். 58).

அண்ணுண்டார் aṇṇuṇṭār, *n.* A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர் சரித். 145.)

அண்ணூத்திப்பிரியர் aṇṇūttippiriyar, *n.* perh. ஐந்நூற்றுப்பேரர். A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அண்ணை aṇṇai, *n.* cf. மண்ணை. Devil, ghost, goblin; பேய். (பொதி. நி.)

அண்பினர் aṇpiṉar, *n.* <அண்-. Those who have taken refuge; அண்டினவர். அண்பினர் பிரியார் (தேவா. 224, 6).

அணங்கம் aṇaṅkam, *n.* prob. அணங்கு. Grammar; இலக்கணம். (சிந்தா. நி. 103.)

அணங்காட்டு aṇaṅkāṭṭu, *n.* <id.+. Dance under possession by Skanda; வெறியாட்டு. (W.)

அணங்கு-தல் aṇaṅku-, 5 *v. intr.* To sound, make noise; ஒலித்தல். புகையணங்க (பு. வெ. 10, பொது. 8).

அணங்குடையாட்டி aṇaṅkuṭai-y-āṭṭi, *n.* <அணங்கு+. A woman divinely inspired and having oracular powers; தெய்வாவேசங் கொண்டு ஆடுபவள். (பெரியபு. கண்ணப்ப. 67.)

அணங்குறைவாள் aṇaṅkuṟaivāḷ, *n.* <id.+. See அணங்குடையாட்டி. (பெரியபு. கண்ணப்ப. 153.)

அணவல் aṇaval, *n.* < அணவு-. Tooth; பல். (சம். அக. Ms.)

அணவா-தல் [அணவருதல்] aṇa-vā-, *v. intr.* < அணவு + வா-. 1. To come near; சமீபமாதல். 2. To be raised; மேலெடுக்கப்படுதல். நீர்வழிக் கணவரு நெடுங்கைய வாகி (பெருங். உஞ்சைக். 54, 42).

அணாப்பு aṇāppu, *n.* < அணாப்பு-. Deceit, fraud; ஏமாற்றுகை. *Loc.*

அணி[1] aṇi, *n.* < அணி. 1. Disguise; வேஷம். அணியி னரங்கின்மே லாடுநர்போல் (ஏலாதி, 24). 2. Pile, heap; திரள். அணியணியாகிய தாரர் (பரிபா. 6). 3. Tier; அடுக்கு. அணிநிலை மாடம் (பெருங். உஞ்சைக். 33, 105). 4. Cant for 35; முப்பத்தைந்தைக் குறிக்குங் குழூஉக்குறி. (சோதிட. அக.)

அணி[2] aṇi, *n.* < அண்-. Limit, boundary; எல்லை. (யாழ். அக.)

அணி[3] aṇi, *n.* cf. அணிநுணா. Dyeing mulberry; நுணா. (பரி. அக.)

அணி[4]**-தல்** aṇi-, 4 *v. tr.* To spread; பரத்தல். சுணங்கணி யாகம் (கலித். 4).

அணிகயிறு aṇi-kayiṟu, *n.* < அணி- + . Rein; குதிரையின் வாய்க்கயிறு. அணிகயிறு தெரிபு வருவார் (பரிபா. 9).

அணிகலம் aṇi-kalam, *n.* < அணி + . 1. Jewel casket; நகைப்பெட்டி. *Pond.* 2. Smith's instrument; கம்மாளர் கருவி. (யாழ். அக.)

அணிச்சை aṇiccai, *n.* cf. அனிச்சை. Ringworm root; நாகமல்லி. (பச். மூ.)

அணிஞ்சில் aṇiñcil, *n.* cf. அழிஞ்சில். Sage-leaved alangium; அழிஞ்சில். (W.)

அணிந்தம் aṇintam, *n.* < அளிந்தம். Pial at the entrance of a *gōpura;* கோபுரவாயிலின் முகப்பிலுள்ள மேடை. (W.)

அணிந்தற்றுப்போ-தல் aṇintaṟṟu-p-pō-, *v. intr.* < அணி- + அறு- + . To become destitute; வறுமைப்படுதல். (R.)

அணிநிலைமாடம் aṇi-nilai-māṭam, *n.* < அணி + நிலை + . Storeyed house; அடுக்கான மேனிலைகளுள்ள வீடு. அத்தம்பெயரிய வணிநிலை மாடத்து (பெருங். உஞ்சைக். 33, 105).

அணிமுகம் aṇi-mukam, *n.* < id. + . Decorated portal; அலங்காரமான வாயில்முகப்பு. வாயின்மாடத் தாய்நல வணிமுகத்து (பெருங். மகத. 3, 31).

அணிமை aṇimai, *n.* < அணு. Minuteness; நுட்பம். (சிந்தா. நி. 105.)

அணியப்பாய்மரப்பருமல் aṇiya-p-pāymara-p-parumal, *n.* < அணியம் + பாய்மரம் + . See அணியப்பாய்மரப்பாய். *Pond.*

அணியப்பாய்மரப்பாய் aṇiya-p-pāy-mara-p-pāy, *n.* < id. + id. + . Canvas on the prow of a vessel; அணியத்திலுள்ள பாய்மரத்திற் கட்டும் பாய். *Pond.*

அணியிடுவான்வரி aṇi-y-iṭuvāṉ-vari, *n.* < அணி + இடு- + . An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. iv, 122.)

அணியிழை aṇi-y-iḻai, *n.* < id. + . Woman, as adorned with jewels; பெண். அணியிழை தந்நோய்க்குத் தானே மருந்து (குறள், 1102).

அணிவிளக்கு-தல் aṇi-viḷakku-, *v. tr.* < id. + . To adorn; அலங்கரித்தல். தில்லைநகர் மணிவீதி யணிவிளக்கும் . . . அனபாயன் (பெரியபு. புகழ்ச். 8).

அணு aṇu, *n.* < *aṇu.* Mantra; மந்திரம். (பொதி. நி.)

அணுக்கச்சேவகம் aṇukka-c-cēvakam, *n.* < அணுக்கம் + . Service as personal attendant; அரசர் முதலியோரிடம் அணுகிப் புரியுந் தொண்டு. அணுக்கச்சேவகத்திலுள்ளோர் (பெரியபு. ஏயர். 332).

அணுக்கநம்பி aṇukka-nampi, *n.* < id. + . Saint Sundarar; சுந்தரமூர்த்திநாயனார். (செந். xxv, 342.)

அணுக்கம் aṇukkam, *n.* (அக. நி.) 1. cf. அணுகம். Sandalwood; சந்தனம். 2. Snake; பாம்பு.

அணுக்கவிளக்கு aṇukka-viḷakku, *n.* < அணுக்கம் + . Light burning near the chief deity of a temple; கோயில்மூர்த்திக்குப் பக்கத் தெரியும் திருவிளக்குவகை. இரவை சந்திக்கு அணுக்கவிளக்காக எரியவைத்த விளக்கு ஒன்றுக்கு (S. I. I. viii, 34).

அணுகம் aṇukam, *n.* cf. அணுக்கம். Red sanders; செஞ்சந்தனம். (பச். மூ.)

அணுகன் aṇukaṉ, *n.* < *aṇuka.* (நாநார்த்த.) 1. Skilled person, expert; நிபுணன். 2. Mean, ill-bred person; அற்பன்.

அணுதரிசினி aṇu-taricini, *n.* < அணு + . Microscope; நுண்பொருளைப் பெரிதாகச் செய்யுங் கருவி. *Mod.*

அணுபரிணாமவாதம் aṇu-pariṇāma-vātam, *n.* < *aṇu* + . Atomism; அணுவிலிருந்து எல்லா உலகமும் உண்டாயிருப்பதாகக் கூறுஞ் சித்தாந்தம். *Mod.*

அணுபை anupai, *n.* <*anu-bhā.* Lightning; மின்னல். (சிந்தா. நி. 105.)

அணுமை anumai, *n.* <*anu-mā.* (Log.) Inference, as a mode of proof; அனுமானப்பிரமாணம். புனைவுசே ரணுமை (நீலகேசி, தருமவுரைச். 110).

அணை aṇai, *n.* <அணை-. (பொதி. நி.) 1. Small wooden seat; மணை. 2. Pillow; தலையணை.

அணைக்கட்டி aṇai-k-kaṭṭi, *n.* <அணை+. Furrow-slice; உழுசாலிற் பெயருங் கட்டி. *Loc.*

அணைக்கட்டிபோடு-தல் aṇai-k-kaṭṭi-pōṭu-, *v. intr.* <அணைக்கட்டி+. To break the clods thrown in the furrow and level; படைச்சாலில் சேர்ந்த கட்டிகளை யுடைத்து நிரவுதல். *Loc.*

அணைக்கல் aṇai-k-kal, *n.* <அணை+. Upright stones in a dam; அணையிலுள்ள குத்துக்கல். (R. T.)

அணைகோலு-தல் aṇai-kōlu-, *v. intr.* <id.+. To form an embankment; நீர்ப்பெருக்கைத் தடுக்க அடைப்புப்போடுதல். வெள்ளம் வருவதற்குமுன்ன ரணைகோலி வையார் (நன்னெறி, 30).

அணைப்பு aṇaippu, *n.* See அணுப்பு. *Loc.*

அணைவு aṇaivu, *n.* <அணை-. Embracing; தழுவுகை. அணைவுதந் தாளுதற்கே (மஸ்தான். பாடல், 124).

அணோக்கம் aṇōkkam, *n.* perh. அண்+நோக்கம். Tree; மரப்பொது. (W.)

அத்தக[1] attaka, *adv.* <அ+தகு-. In that manner; அத்தன்மையதாக. அத்தக நிறீஇ (பெருங். இலாவாண. 6, 50).

அத்தக[2] attaka, *adv.* prob. அம்+. Beautifully; அழகுபொருந்த. அத்தக வரிவைய ரளத்தல் காண்மின் (பரிபா. 12).

அத்தகண்டம் atta-kaṇṭam, *n.* <*hasta*+. (Yōga.) See அத்தகண்டாதனம். (தத்துவப். 108.)

அத்தகண்டாதனம் atta-kaṇṭātaṉam, *n.* <அத்தகண்டம்+. (Yōga.) A yōgic posture in which one leg is held in upright position by one hand, while the other leg is stretched on the ground, the whole body resting on the other hand; ஒருகாலை மேல் நீட்டி அவ்வாறு நீட்டிய காலை ஒரு கையைக்கொண்டு கட்டி மற்றைக்கையை நிலத்தில் ஊன்றியும் மற்றொரு காலை நிலத்தில் நீட்டியுமிருக்கும் ஆசனவகை. (தத்துவப். 108, உரை.)

அத்தகம் attakam, *n.* perh. *hastaka.* Accountant; கணக்கன். அத்தகங் கூட்டமிடு மங்கணத்தில் (நெல்விடு. 318).

அத்தகானி atta-kāṉi, *n.* <*artha-hāni.* Loss of wealth; பொருட்கேடு. (தஞ். சரசு. i, 307.)

அத்தத்தாவெனல் attattā-v-eṉal, *n.* <அத்தன்+அத்தன்+. Expr. of child calling its father; குழந்தை தந்தையைக் கூப்பிடுதற் குறிப்பு. அடுத்தடுத் தத்தத்தாவென்பான் (கலித். 81).

அத்ததாளி attatāḷi, *n.* False-fern tree; காட்டுப்பூவரசு. (L.)

அத்தம்[1] attam, *n.* <*hasta.* (நாநார்த்த.) 1. Tuft of hair; மயிர்க்கற்றை. 2. Half of a yard; முழம். 3. Proboscis of an elephant; யானையின் துதிக்கை.

அத்தம்[2] attam, *n.* <அற்றம். 1. End, termination; முடிவு. *Tinn.* 2. Destruction; கேடு. (நாநார்த்த.)

அத்தம்[3] attam, *n.* *Kentipāṣāṇam,* an arsenic; கெந்திபாஷாணம். (வை. மூ.)

அத்தம்பியார் attampiyār, *n.* Sister's husband; அத்திம்பேர். *Loc.*

அத்தமானம் attamāṉam, *n.* <*asta-mana.* The western mountain behind which the sun is supposed to set; சூரியன் மறையும் மேற்குமலை. கதிரோன் றேரொன்று முதயத்தோ டத்தமானம (கம்பரா. இரணி. 151).

அத்தமேற்கால் atta-mēṟ-kāl, *n.* <அத்தம்+மேல்+. (Yōga.) See அத்தமேற்காலாதனம். அத்தமேற்கா லேகபாத மேகவத்தம் (தத்துவப். 108).

அத்தமேற்காலாதனம் attamēṟkāl-ātaṉam, *n.* <அத்தமேற்கால்+. (Yōga.) A yōgic posture in which a person lying on his back holds his folded legs upright with his hands; கீழே கிடந்தவண்ணம் இரண்டுகாலும் சம்மணமாக மடித்து அவ்வாறு மடித்த காலிரண்டுந் தலைக்கு மேலாக உயர்த்திக் கையாற்பிடித்துக் கொண்டு கிடக்கையாகிய ஆசனவகை. (தத்துவப். 108, உரை.)

அத்தரசிதம் attaracitam, *n.* Yellow orpiment; அரிதாரம். *Pond.*

அத்தவத்திரதம் attavattiratam, *n.* A kind of drug; மருந்துச்சரக்குவகை. துத்தமாஞ்சியத்தவத்திரதம் (பெருங். மகத. 17, 147).

அத்தவாளம் attavāḷam, *n.* Pleasantness, recreation; உல்லாசம். (R.)

அத்தனை attaṉai, *n.* cf. அத்துணை. That much; அவ்வளவு என்ற பொருளில் வழங்குஞ்

சொல். நீருரைத்த தொன்றை நான் செய்யுமத்தனே (பெரியபு. இயற். 9).

அத்தாங்கம் attāṅkam, n. <*hasta*+*aṅga* +. (Yōga.) See அத்தாங்காதனம். கேசாங்கமு மத்தாங்கம் (தத்துவப். 107).

அத்தாங்காதனம் attāṅkātaṉam, n. <id. +id.+. (Yōga.) A yōgic posture in which a person stands on folded hands, keeping the body aloft; கையிரண்டும் மடித்து நிலத்தி லூன்றி உடல் மேற்படநிற்கும் ஆசனவகை. (தத்துவப். 107, உரை.)

அத்தாணி attāṇi, n. <Pkt. *attāṇi* <*ā-sthāna*. (சம். அக. Ms.) 1. Nearness; சமீபம். 2. Intimacy; அந்தரங்கம்.

அத்தாந்தரம்[1] attāntaram, n. prob. *ardha*+*antara*. Helpless condition; கதியற்ற நிலை. அவனை அத்தாந்தரத்தில் விட்டுவிட்டான்.

அத்தாந்தரம்[2] attāntaram, n. <*hasta*+. Cashier; ரொக்க வரவுசெலவுசெய்யுங் கணக்கன். அம்பலஞ்செ யத்தாந்தரம் என்றும் (நெல்விடு. 317).

அத்தாபத்தி attāpatti, n. prob. *atyāpat*. See அத்தியாவஸ்தை. *Tinn.*

அத்தாபம் attāpam, n. See அத்தாபத்தி. *Loc.*

அத்தாயப்படு-தல் attāya-p-paṭu-, v. intr. <அத்தாயம்+. To suffer; to be distressed; கஷ்டப்படுதல். அவன் மிக அத்தாயப்படுகிறான். *Loc.*

அத்தாயம் attāyam, n. perh. *ati*+*āyāsa*. *Loc.* 1. Fatigue, weariness; இளைப்பு. 2. Distress; துன்பம்.

அத்தாவரி attāvari, n. The drug known as *veṭpālai-y-arici*; வெட்பாலையரிசி. (பரி. அக.)

அத்தாள் attāḷ, n. cf. ஆத்தாள். Mother; தாய். (R.)

அத்தாளி attāḷi, n. cf. அத்தத்தாளி. False fern tree; காட்டுப்பூவரசு.

அத்தான் attāṉ, n. <முடக்கற்றான். Balloon vine; முடக்கொற்றன். (பரி. அக.)

அத்தானம் attāṉam, n. <*ā-sthāna*. Gateway under a turret or tower, as of a pagoda; கோபுரவாயில். (R.)

அத்தி[1] atti, n. Bird; பறவை. (பொதி. நி.)

அத்தி[2] atti, n. <*abdhi*. Natural spring or pond; பொய்கை. (நாநார்த்த.)

அத்தி[3] atti, n. cf. *arthi*. Avidity; ஆசை. அத்தியா லடியார்க்கொன் றளிக்கிலே (தேவா. 391, 2).

அத்தி[4] atti, n. <*asti*. (Jaina.) Ontological categories which are five in number; அத்தி காயம். அத்தியைத் தானுள்ள வாறறைந்தாய் (திரு நூற். 29).

அத்திகோசம் atti-kōcam, n. <*hastin*+. A Vaiśya caste, whose store of wealth is so large as to need an elephant to carry it; யானை எடுத்தற்குரிய பொருள் படைத்த வணிகர்வகையார். ஐம்பெருங்குழுவு மத்திகோசமும் (பெருங். வத்தவ. 9, 5, அரும்.).

அத்திநகர் atti-nakar, n. <id.+. Hastināpuram near modern Delhi; அஸ்தினா புரம். அத்திநக ரெய்தினா னங்கு (பாரதவெண். 147).

அத்திபஞ்சரம் atti-pañcaram, n. <*asthi-pañjara*. Skeleton; எலும்புக்கூடு. (சிந்தா. நி. 147.)

அத்திபுரசாதனி attipuracātaṉi, n. Indigo; அவுரி. (பச். மூ.)

அத்திம்பியார் attimpiyār, n. cf. அத்திம் பேர். *Loc.* 1. Elder sister's husband; தமக்கை கணவன். 2. Father's sister's husband; அத்தை கணவன்.

அத்திமானம் attimāṉam, n. cf. *hastaka*. Castor plant; ஆமணக்கு. (சித். அக.)

அத்தியந்தம் attiyantam, adv. <*atyanta*. To the last end; entirely; அறவே. பாவங்களை அத்தியந்தம் போக்கடிக்கிறவர்களாயும் (வேதாந்தசா. 13).

அத்தியயனவிருத்தி attiyayaṉa-virutti, n. <*adhyayana*+. Tax-free land endowed for the service of reciting the Vēdas in temples; கோயிலில் வேதமோதற்கு விடப்பட்ட மானியம். (M. E. R. 493-4 of 1926.)

அத்தியயனாங்கம் attiyayaṉāṅkam, n. <id.+*aṅga*. See அத்தியயனவிருத்தி. (M. E. R. 197 of 1924.)

அத்தியாகினம் attiyākiṉam, n. cf. அத் தகம். Black cumin; கருஞ்சீரகம். (பரி. அக.)

அத்தியாத்துமசாத்திரம் attiyāttuma-cāttiram, n. <*adhyātma*+. The spiritual science, of three kinds, *cāṅkiyam*, *pātañcalam*, *vētāntam*; சாங்கியம் பாதஞ்சலம் வேதாந்தம் என முவகைப்பட்ட ஆத்துமவிசார சாத்திரம். (விவேகசிந். 15.)

அத்தியாத்துமமதம் attiyāttuma-matam, n. <id.+. The doctrine of the soul, of four kinds, *pāskarīyam*, *māyāvātam*, *catta-p-pirama-vātam*, *kirīṭā-p-pirama-vātam*; பாஸ்க ரீயம் மாயாவாதம் சத்தப்பிரமவாதம் கிரீடாப்பிரம

வாதம் என நால்வகைப்பட்டு ஆத்துமாவின் சொரூபத்தை விளக்கும் மதம். (விவேகசிந். 16.)

அத்தியாத்துமிகம் attiyāttumikam, *n.* See அத்தியான்மிகம்.

அத்தியாயனம் attiyāyaṉam, *n.* <*adhyayana.* Reciting the Vēdas; வேதமோதுகை. (சிந்தா. நி. 121.)

அத்தியாவஸ்தை attiyāvastai, *n.* <*atyāvasthā.* Critical condition, as of a disease-stricken person; நெருக்கடியான நிலை. *Colloq.*

அத்தியாளி atti-yāḷi, *n.* <*hastin*+. A fabulous animal; யானையாளி. (பெரும்பாண். 257-9, அடிக்குறிப்பு.)

அத்தியான்மிகம் attiyāṉmikam, *n.* <*ādhyātmika.* 1. Pertaining to the soul; ஆன்மாவுக்குரியது. (W.) 2. (Śaiva.) A section of Śaivāgamas; சைவாகமங்களுள் ஒரு பகுதி. *வைதிகம் அத்தியான்மிகம் அதிமார்க்கம் . . . என நூல்களை ஐவகைப்படுத்து* (சி. போ. பா. சிறப். 17). 3. (Phil.) Physical and mental afflictions caused to one's self by others; ஆன்மா பிறரால் அடையுந் துக்கம். (சி. சி. 2, 39, சிவாக்.)

அத்திரம்[1] attiram, *n.* <*astra.* Bow; வில். (நாநார்த்த.)

அத்திரம்[2] attiram, *n.* 1. Indian bdellium; குங்கிலியம். (சித். அக.) 2. Japanese wax-tree; கடுக்காய்ப்பூ. (வை. மூ.) 3. Ginger; இஞ்சி. (பச். மூ.)

அத்திரா attirā, *n.* cf. அத்திரு. Pipal; அரசு. (சித். அக.)

அத்திரி attiri, *n.* <*adri.* (பொதி. நி.) 1. Sun; சூரியன். 2. Sky, firmament; விண்.

அத்திரிசாரம் attiri-cāram, *n.* prob. *adri-sūra.* Iron; இரும்பு. (வை. மூ.)

அத்திரியர் attiriyar, *n.* A title of Kaḷḷars; கள்ளர்பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அத்தீர் attīr, *n.* Rootless nelumbo; தழீத் தாமரை. (பரி. அக.)

அத்துகமணி attukamaṇi, *n.* cf. அத்துகமாணி. Pipal; அரசு. (பச். மூ.)

அத்துசம் attucam, *n.* Tree turmeric; மரமஞ்சள். (பச். மூ.)

அத்துலாகியம் attulākiyam, *n.* cf. அத்துலாக்கி. See அத்துவர்க்காயம். (T. C. M. ii, 2, 429.)

அத்துவநியாசம் attuva-niyācam, *n.* <அத்துவா+. Purification of *attuvā;* அத்துவ சுத்தி.

அத்துவர்க்கயம் attuvarkkayam, *n.* See அத்துவர்க்காயம். (சித். அக.)

அத்துவர்க்காயம் attuvarkkāyam, *n.* cf. அத்துவாக்காயம். Black cumin; கருஞ்சீரகம். (பச். மூ.)

அத்துவா attuvā, *n.* prob. *a-dvaita.* Union of two things; இரண்டு ஒன்றாயிருப்பது. (சிந்தா. நி. 146.)

அத்தை attai, *n.* <Pkt. *attā.* Guru's wife; குருபத்தினி. (நாநார்த்த.)

அத்தைநாறி attaināṟi, *n.* Prussic acid tree; காட்டுச்சேராங்கு. (L.)

அத்தொய்தம் attoytam, *n.* <*a-dvaita.* Advaita, non-dualism: அத்துவிதம். (வேதாந்தசா. 84.)

அத்தொய்தன் attoytaṉ, *n.* <*a-dvaita.* One who is matchless, without a second; ஒப்பற்றவன். *அத்தொய்தனு யிருக்கிற வுனக்குப் பயமென்ன ?* (வேதாந்தசா. 85.)

அத்வக்காத்து atvakkāttu, *n.* <E. Advocate; வக்கீல். (J.)

அதங்கதம் ataṅkatam, *n.* cf. அதிங்கம். Food of elephant; யானைத்தீவனம். (அக. நி.)

அதப்பு atappu, *n.* <அதை-. Pride; கர்வம். *Loc.*

அதபு atapu, *n.* <Arab. *adab. Muham.* 1. Obedience; வணக்கம். 2. Manners; மரியாதை. *அதபு கெட்டவன்.*

அதமசரீரம் atama-carīram, *n.* Kalpaka tree; கற்பகவிருட்சம். (சிந்தா. நி. 124.)

அதமதசம் atamatacam, *n.* Borax; வெங்காரம். (வை. மூ.)

அதமர்ணன் atamarṇaṉ, *n.* <*adhamarṇa.* One who takes loans; debtor; கடன் வாங்குவோன். (சுக்கிரநீதி, 97.)

அதமவிம்சதி atama-vimcati, *n.* <*adhama-viṁśati.* The last twenty years from *pilavaṅka* to *atcaya,* in the Jupiter cycle; அறுபது வருஷங்களுள் பிலவங்க முதல் அட்சய வரையுள்ள 20 ஆண்டுகள். (பெரியவரு.)

அதர்[1] atar, *n.* cf. அசறு. Dandruff; தலைப் பொடுகு. *குழலான மாலைப்பார்த்தா லதர் மிடைந்து ளுறும்* (நூற்றெட். திருப்புகழ். 56).

அதர்² atar, *n.* 1. Gravel; சிறுகல். (பொதி. நி.) 2. Sediment in medicine; மருந்துக்கசடு. (சித். அக.)

அதர்வை atarvai, *n.* < அதர். 1. Way, path; வழி. (பெருங். உஞ்சைக். 53, 145, அடிக் குறிப்பு.) 2. A climber; கொடிவகை. அதர்வைக் கொடிபுரை கயிற்றொடு கொளுத்தினர் (பெருங். உஞ்சைக். 55, 53).

அதரஞ்செய்-தல் atarañ-cey-, *v. intr.* prob. அந்தரம்+. To make obstruction; தடைசெய்தல். புரையிடத்திற் சென்று அதரஞ்செய்யுமவர்களும் (T. A. S. iii, 194).

அதரம்¹ ataram, *n.* < *adhara.* Place or space below; கீழ். (நாநார்த்த.)

அதரம்² ataram, *n.* prob. *haridrā.* Turmeric; மஞ்சள். (பரி. அக.)

அதரவன் ataravan̲, *n.* Malabar glory-lily; வெண்டோன்றி. (வை. மூ.)

அதலி atali, *n.* Corr. of அத்திலி. *Tinn.*

அதவம்¹ atavam, *n.* < அதவு. 1. Country fig; அத்தி. வெண்கோட் டதவத் தெழுகுளிறு மிதித்த வொருபழம் (குறுந். 24). 2. Sacrificial ladle; நெய்த்துடுப்பு. அதவமாய் நறுநெயுண்டு (கம்பரா. விராதன். 45).

அதவம்² atavam, *adv.* < *atha.* Then, afterwards; பின்பு. (சிந்தா. நி. 140.)

அதவல்குதவல் atavalkutaval, *n.* Loose motions; தீவனஞ்சேரியாது கழிந்த மலம். சாணி அதவல்குதவலாகப் போடும் (பெரியமாட். 104).

அதவிடம் atavitam, *n.* < *ati-viṣa.* Atis; அதிவிடை. (W.)

அதன்மி atan̲mi, *n.* < *a-dharma.* Fallen woman; ஒழுக்கங்கெட்டவள். அதன்மி யாரெனை வாங்கவன் வினவ (பெருங். உஞ்சைக். 35, 69).

அதா¹ atā, *n.* < அதவு. Country fig; அத்தி. (பரி. அக.)

அதா² atā, *adv.* cf. அந்தா. There; அங்கே. *Tinn.*

அதாதிரு atātiru, *n.* < *a-dātṛ.* Miser; உலோபி. (சிந்தா. நி. 137.)

அதி-த்தல் ati-, *11 v. intr.* < *ati.* To excel; சிறத்தல். அதிக்கின்ற ஐவருள் (திருமந். 610).

அதிக்கண்டம் ati-k-kaṇṭam, *n.* prob. *ati-khaṇḍa.* (Pros.) Metrical foot; செய்யுட்சீர். அதிக்கண்ட மென்றும் . . . சீரை . . . பகர்வர் (யாப். வி. பக். 97).

அதிக்கிராந்தம் atikkirāntam, *n.* < *ati-krānta.* That which transcends; கடந்தது. (சி. சி. 7, ஞானப்.)

அதிகதை atikatai, *n.* < *ati-kathā.* Meaningless talk, senseless expression; வெற்றுரை. (W.)

அதிகம் atikam, *n.* < *adhika.* (Log.) A fault in argumentation; தோல்வித்தானத் தொன்று.

அதிகமரிச்சம் atikamariccam, *n.* cf. அதிபறிச்சம். Seeds of climbing-staff plant; வாலுளுவை யரிசி. (சு. வை. ர. 558.)

அதிகமான் atikamān̲, *n.* A title of Kaḷḷars; கள்ளர் பட்டங்களு ளொன்று. (கள்ளர்சரித். 145.)

அதிகரணத்தண்டம் atikaraṇa-t-taṇṭam, *n.* < *adhi-karaṇa*+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. ii, 353.)

அதிகரி-த்தல் atikari-, *11 v. intr.* < *adhi-kṛ.* To be employed or engaged in; காரியத்திலே முனைதல். ஐவர்க்கும் பரதந்த்ரனாய்க் கொண்டு தூதக்ருத்யத்திலே அதிகரித்து (திவ். பெரியாழ். 1, 8, 3, வ்யா. பக். 161).

அதிகல் atikal, *n.* cf. அதிரல். Wild jasmine; காட்டுமல்லிகை. (W.)

அதிகவாரம் atika-vāram, *n.* < அதிகம்+. An extra share in the division of the crop assigned to Brahmins or other privileged persons; பிராமணர் முதலிய சிறப்புரிமையாளர்க்கு மாத்திரம் பிரித்துக்கொடுக்கும் அதிகப்பங்கு. (W. G.)

அதிகாசம் ati-kācam, *n.* < *ati*+*hāsa.* Loud laughter; பெருநகை. (சிந்தா. நி. 120.)

அதிகாந்தம் ati-kāntam, *n.* < *ati-kānta.* 1. A precious stone; இரத்தினவகை. (W.) 2. Red sky at sunset; செவ்வானம். (சிந்தா. நி. 137.)

அதிகாரக்கணக்கு atikāra-k-kaṇakku, *n.* < அதிகாரம்+. Accounts relating to state revenue; அரசாங்கக் கணக்கு. (J. N.)

அதிகாரச்சாலை atikāra-c-cālai, *n.* < id. +. Office, court; கச்சேரி. (R.)

அதிகாரசூத்திரம் atikāra-cūttiram, *n.* < id.+. A sūtra defining the scope of the other sūtras in a section of a treatise; தான் ஒன்றனையும் விதிக்காது பல சூத்திரங்கட்கு முன் படிக்கப்பட்டு அவற்றுக்குப் பொருள்கொள்ளும்போது தானும் அவற்றுடன் சேர்ந்து பொருள்கொள்ளப்படுஞ் சூத்திரம்.

அதிகாரடாகை atikāra-ṭākai, n. <id. + U. *ṭīgā*. Pride of power; அதிகாரத்தால் உண்டாகுங் கர்வம். *அதிகாரடாகையின்மே லார்த்து* (*சரவண. பணவிடு*. 109).

அதிகாரதத்துவம் atikāra-tattuvam, n. <id. +. (Śaiva.) The function of God in which the principle of energy dominates that of wisdom; கிரியை மிகுந்து ஞானம் குறைந்த ஈச்சுர தத்துவம். (*சி. சி*. 1, 65, *ஞானப்*.)

அதிகாரப்புறனடை atikāra-p-puṟa-ṉaṭai, n. <id. +. (Gram.) General permissive rule at the end of a chapter; அதிகாரவிறுதியிற் கூறும் புறனடைச்சூத்திரம். (*தொல். சொல்*. 45, *சேனா. பக்*. 54.)

அதிகாரப்பேறு atikāra-p-pēṟu, n. <id. +. A tax; வரிவகை. (S. I. I. iv, 125.)

அதிகாரப்பொன் atikāra-p-poṉ, n. <id. +. A kind of tax in gold; பொன்னுணாய மாக வாங்கும் வரிவகை. (S. I. I. iv, 195.)

அதிகாரம்[1] atikāram, n. <*adhikāra*. Administrative sub-division of a taluk; தாலுக்காவின் உட்பகுதி. *Nāñ*.

அதிகாரம்[2] atikāram, n. perh. *அதிரசம்*. A kind of sweet cake; பணியாரவகை. *Nāñ*.

அதிகாரமேலெழுத்து atikāra-mēl-eḻuttu, n. <*அதிகாரம்* +. Revisional order; கீழுத்தியோகஸ்தர் செய்த கட்டளையை மாற்றியெழுதும் உத்தரவு. *திருச்சிவிந்திரத்து மஹாஸபையோம் அதிகாரமேலெழுத்து* (T. A. S. iii, 71).

அதிகாரவர்த்தனை atikāra-varttaṉai, n. A collection of taxes; வரித்தொகுதி. (M. E. R. 428 of 1913.)

அதிகாரன் atikāraṉ, n. <*adhikārin*. Superintendent, head, director; officer; அதிகாரி. *வரிகளைச் சுமத்தி அநியாயஞ்செய்த பூர்விக அதிகாரர்கள் சதிகாரர்களே* (*பெண்மதிமாலை, பக்*. 136).

அதிகாரி[1] atikāri, n. <id. 1. (Śaiva.) Mahēśvara aspect of Śiva in which the Energy of action predominates; மகேசுவரன். (*சி. சி*. 1, 65, *மறைஞா*.) 2. Officer in charge of an *atikāram*; அதிகாரத்திற்குரிய தலைமை உத்தியோகஸ்தன். *Nāñ*.

அதிகாரி[2] ati-kāri, n. <*அதி* + *காரம்*. cf. *அதிகாரி*. Ceylon leadwort; கொடுவேலி. (*பச். மூ*.)

அதிகோரம் atikōram, n. Emblic myrobalan; நெல்லி. (T. C. M. ii, 2, 429.)

அதிங்கு atiṅku, n. cf. *அதிங்கம்*. Liquorice-plant; அதிமதுரம். *அரக்குமதிங்கும்* (*பெருங். இலாவாண*. 18, 46).

அதிசந்தானம் ati-cantāṉam, n. <*ati-sandhāna*. Falsehood; பொய். (*சிந்தா. நி*. 122.)

அதிசயவுவமை aticaya-v-uvamai, n. <*atiśaya* +. (Rhet.) A simile which states that there is no difference between *uvamāṉam* and *uvamēyam* except in their *loci*; மிகையுவமை. (*வீரசோ. அலங்*. 14, *உரை*.)

அதிசரம் aticaram, n. <*ati-cara*. Sigh; நெட்டுயிர்ப்பு. (W.)

அதிசூக்குமதேகம் ati-cūkkuma-tēkam, n. <*ati* + *sūkṣma* +. (Śaiva.) Subtle body, containing the *pūtam, taṉmāttirai, ñāṉēntiri-yam, kaṉmēntiriyam, antakkaraṇam, kuṇam, mūla-p-pakuti* and *kalāti*; பூதம் தன்மாத்திரை ஞானேந்திரியம் கன்மேந்திரியம் அந்தக்கரணம் குணம் மூலப்பகுதி கலாதி என்பவற்றில் ஒவ்வொன்று கொண்ட நுண்ணுடல். (*சி. போ. பா*. 2, 3, *பக்*. 194.)

அதிசூக்குமம் ati-cūkkumam, n. <*ati-sūkṣma*. Anything very subtle; மிக நுண்ணியது. (*சி. போ. பா*. 2, 3, *பக்*. 194.)

அதிசூக்குமை aticūkkumai, n. <*ati-sūkṣmā*. (Śaiva.) A form of Śiva-Śakti; சிவசத்திபேதங்களு ளொன்று. (*சதாசிவ*. 21, *உரை*.)

அதிசோபனை ati-cōpaṉai, n. <*ati-śōbhanā*. Pārvatī; பார்வதி. (*கூர்மபு. திருக்கலியாண*. 22.)

அதிட்டகன்மம் atiṭṭa-kaṉmam, n. <*a-dṛṣṭa* +. The invisible karma which causes enjoyment and suffering; நன்மை தீமைகளை அனுபவிக்கச் செய்யுங் கருமம். (*சிவப்பிர*. 19, *உரை, பக்*. 213.)

அதிதனு atitaṉu, n. Gold; பொன். (W.)

அதிதானம் ati-tāṉam, n. <*ati* +. Bounty, gift; ஈகை. (*சிந்தா. நி*. 143.)

அதிதி atiti, n. <*aditi*. (*நாநார்த்த*.) 1. Earth; பூமி. 2. Pārvatī; பார்வதி.

அதிநீசம் ati-nīcam, n. <*ati-nīca*. 1. (Erot.) The sexual union of a man of the hare class with a woman of the elephant class, one of *aivakai-p-puṇarcci*, q.v.; ஐவகைப் புணர்ச்சியுள் யானைச்சாதிப் பெண்ணுடன் முயற்சாதியாண் கூடுங் கூட்டம். *விழைவுற அதிநீச மென்ன* (*கொக்கோ*. 3, 7). 2. (Astron.) Highly debilitated position of a planet in the house of its

depression; கிரகம் நீசவீட்டில் மிகத்தாழ்வான பாகையிலிருக்கை. (சோதிட. சிந்.)

அதிநுண்கணிதம் ati-nuṉ-kaṇitam, *n.* <அதி + நுண்-மை +. Differential calculus; கணிதவகை. *Pond.*

அதிநோய் atinōy, *n.* cf. அதிகோலம். Sage-leaved alangium; அழிஞ்சில். (பரி. அக.)

அதிப்பிரசங்கம் ati-p-piracaṅkam, *n.* <அதி +. Digression, introducing extraneous matter; மற்றொன்று விரிக்கை. (தருக்கசங். பக். 249.)

அதிபம் atipam, *n.* Margosa; வேம்பு. (சித். அக.)

அதிபலம் ati-palam, *n.* True croton oil plant; நேர்வாளம். (பச். மூ.)

அதிபிள்ளை ati-piḷḷai, *n.* prob. ஆதி +. Senior wife; மூத்த மனைவி. *Cm.*

அதிமல்லி atimalli, *n.* cf. அதிமலம். A species of crataeva; மாவிலங்கம். (மலை. அக.)

அதிமார்க்கநூல் atimārkka-nūl, *n.* <அதிமார்க்கம் +. (Saiva). See அதிமார்க்கிகசாத்திரம். (சித். பிர. பக். 14.)

அதிமார்க்கம் ati-mārkkam, *n.* <*ati* + *mārga*. 1. (Śaiva.) Religious sects not intimately related to Śaivasiddhānta; அகப்புறச்சமயம். (சித். பிர. 14.) 2. A section of Śaivāgamas; சைவாகமப் பிரிவினுள் ஒன்று. (சி. போ. பா. 17.)

அதிமார்க்கிகசாத்திரம் ati-mārkika-cāttiram, *n.* <id. + *mārgika* +. (Saiva.) The religious treatises which deal with *pācupatam*, *kāpālikam* and *māviratam*; பாசுபதம் காபாலிகம் மாவிரதமென்னும் மார்க்கங்களைக் கூறுஞ் சாத்திரங்கள். (விவேகசிந். 17.)

அதிமித்திரன் ati-mittiraṉ, *n.* <id. +. Husband; கணவன். (சிந்தா. நி. 132.)

அதிமிருத்தியாதிமாத்திரை ati-miruttiyāti-māttirai, *n.* perh. id. + *mṛtya* + *ādi* +. Medicinal pill made of bezoar; கோரோசனை மாத்திரை. (W.)

அதிமுனி atimuṉi, *n.* perh. அதிகம் + உண்-. Dues payable by the owners of fields to the owners of wells for drawing water from the wells for irrigating their fields; பிறருடைய கிணற்றிலிருந்து நீர் இறைத்துச் சாகுபடி செய்வதற்காகக் கிணறுடையவனுக்குக் கொடுக்கும் வாரம். (R. T.)

அதிமுத்தகம் ati-muttakam, *n.* <*ati-muktaka*. (நாநார்த்த.) 1. Common delight of the woods; குருக்கத்தி. 2. East Indian kino; திமிசு.

அதிமேஷ் atimēṣ, *n.* <U. *azmāish*. Estimate of standing crop, made by a subordinate revenue officer; அரசிறைக் கீழ்த்தி யோகஸ்தனிட்ட புள்ளிமதிப்பு. *Loc.*

அதியுக்தம் atiyuktam, *n.* <*atyukta*. Exaggeration; மிகைபடக் கூறுகை.

அதியுச்சம் ati-y-uccam, *n.* <*atyucca*. 1. (Erot.) The sexual union of a man of the horse class with a woman of the deer class, one of *aivakai-p-puṇarcci*, q.v.; ஐவகைப் புணர்ச்சியுள் மான்சாதிப்பெண்ணுடன் குதிரைச்சாதி ஆண் கூடுங் கூட்டம். (கொக்கோ. 3, 7.) 2. (Astron.) Highly exalted position of a planet in the house of its exaltation; கிரகம் உச்சவீட்டில் மிக உச்சமான பாகையிலிருக்கை. (சோதிட. சிந்.)

அதிர் atir, *n.* cf. U. *hadd*. [M. *atir*.] 1. Limit, boundary; எல்லை. *Loc.* 2. Propriety; மரியாதை. அதிர்கடந்து பேசுகிறான். *Tinn.*

அதிர்காணி atir-kāṇi, *n.* prob. id. +. Proprietary right in village lands; காணியாட்சி மிராசு. தனக்கு அதிர்காணியாக (S. I. I. iv, 156).

அதிர்த்தி[1] atirtti, *n.* <அதிர்-. Loud noise or report; அதிர்ச்சி. அதுதான் இவன் கன்றுமறித் தோடுகிற வதிர்த்தியாலும் (திவ். பெரியாழ். 3, 2, 3, வ்யா. பக். 539).

அதிர்த்தி[2] atirtti, *n.* <அதிர். See அதிர், 1.

அதிர்ப்பு atirppu, *n.* <அதிர்- Fear; அச்சம். (நாநார்த்த.)

அதிர்ஷ்டஜன்மபோக்கியம் atirṣṭa-jaṉma-pōkkiyam, *n.* <*adṛṣṭa* + *janma* +. Enjoyment of the fruits of karma, either in heaven, hell or in succeeding birth; சுவர்க்கத்திலேயாதல் நரகத்திலேயாதல் மறுசன்மத்திலேயாதல் பலிக்குங் கர்மானுபவம். (சி. சி. 4, 40, சிவாக்.)

அதிரடி atir-aṭi, *n.* <அதிர்- +. 1. Violent agitation; பெருங் கலக்கம். அச்சங் கிகிலு மதிரடியுஞ் சொற்பனமும் (பஞ்ச. திருமுக. 720). 2. Bluff; மிரட்டு. *Tinn.*

அதிரதம் ati-ratam, *n.* <*ati-ratha*. A class of chariots, one of four *iratam*, q.v.; தேர்வகை நான்கனு ளொன்று. (ஸ்ரீபத்ம. தென்றல் விடு. 67, குறிப்பு.)

அதிரர் atirar, *n.* prob. *a-sura*. Asuras; அசுரர். அதிரர் தேவ ரியக்கர் (தேவா. 380, 8).

அதிராத்திரியாஜி atirāttiri-yāji, *n.* <*ati-rātra*+*yājin*. A title of learned Brahmins; வேதம்வல்ல பிராமணர் பட்டப்பெயர். (S. I. I. v, 161.)

அதிரிச்சியம் atiricciyam, *n.* <*adṛśya*. Art of making visible objects invisible; பண்டங்களைப் பிறர் காணாமல் மறைக்கும் வித்தை. *புசரிலா வதிரிச்சிய மஞ்சனம்* (திருவிளை. எல்லாம். 17).

அதிருஷ்டபரதந்திரத்துவம் atiruṣṭa-paratantira-t-tuvam, *n.* <*a-dṛṣṭa*+. Being subject to the results of *puṇṇiyam* and *pāpam*; புண்ணியபாப வசத்தனாகை. (விவேகசிந். 3.)

அதிருஷ்டபோக்கியம் atiruṣṭa-pōkkiyam, *n.* <id.+. Effects of unseen actions, experienced in after-life; மறுமையில் சொர்க்க நரகங்களில் நுகரும் அனுபவம். (சி. சி. 2, 39, ஞானப்.)

அதிருஷ்டயத்தினம் atiruṣṭa-yattiṉam, *n.* <id.+. Fruitful attempt; பயந்தரும் முயற்சி. *தேவர் செய்தருளின அதிரஷ்டயத்னமாய் இப்படிப் பலித்தது* (S. I. I. vi, 189).

அதிருஷ்டானுகூலம் atiruṣṭāṉukūlam, *n.*<id.+. Luck; நற்காலப் பயன். *இவனுடைய அதிருஷ்டானுகூலம் எப்படியோ?* (தமிழறி. 24).

அதிலி atili, *n.* Corr. of அலரி. *காக்கணம் வேர் அதிலிவேர் பாலைவேர் இம்மூன்றும் அரைத்துப் பாதலேபனம் செய்யவும், விஷந்தீண்டாது* (T. C. M. ii, 2, 481).

அதிலோகம் atilōkam, *n.* Sublimate of mercury; இரசகர்ப்பூரம். (வை. மூ.)

அதிவசம் ativacam, *n.* <*ativiṣā*. (பரி. அக.) 1. Atis; அதிவிடை. 2. Sweet flag; வசம்பு.

அதிவிருத்தம் ati-viruttam, *n.*<*ati-vṛtta*. Transgression; வரம்புமீறுகை. (நாநார்த்த.)

அதினம் atiṉam, *n.* cf. அதனம். [T. *adanamu*.] Excess; மிகுதி. *Loc.*

அதிஷ்டானம் atiṣṭāṉam, *n.* <*adhi-ṣṭhāna*. 1. City; நகர். (நாநார்த்த.) 2. Seat; இருக்கை. (M. E. R. 343 of 1927-8.) 3. Chariot-wheel; தேர்க்கால். (நாநார்த்த.) 4. The base of a temple *vimāṉam*; கோயில்விமானத்தின் கீழுள்ள பகுதி. (M. E. R. 146 of 1928-9.) 5. Fame; பிரபாவம். (நாநார்த்த.) 6. Roaring, shouting; ஆரவாரிக்கை. (நாநார்த்த.)

அதீதியம் atītiyam, *n.* perh. *atīndriya*. Absence of desire or attachment; ஆசையின்மை. (சிந்தா. நி. 143.)

அதீனம் atīṉam, *n.* <*adhīna*. (W.) 1. Right of possession; உரிமை. 2. Dependence; சார்பு.

அதுகுபடி atukupaṭi, *n.* Supplying water to a cultivator at a low rate of assessment on condition of his bringing a piece of unoccupied land into cultivation; சாகுபடிக்கு யோக்கியமாக ஒரு நிலத்தைத் திருத்தும்பொருட்டுக் குறைந்த தீர்வைக்குக் கொடுக்கப்படும் பாசனநீர். (R. T.)

அதுலிதம் atulitam, *n.* <*a-tulita*. State of being at rest; அசைவின்மை. (சிந்தா. நி. 120.)

அதை-த்தல் atai-, *11 v. intr.* To wander about; அலைதல். *உளைநாடி யதைத்தொழிந்தேன்* (திருமந். 1691).

அதைப்பு ataippu, *n.* <அதை-. Pride; கர்வம். *Loc.*

அதோ atō, *adv.* <அது. There, over there; அங்கே. *Loc.*

அதோலம்பம் atōlampam, *n.* <*adhas*+*lamba*. Perpendicularity; செங்குத்தான நிலை. (W.)

அந்தக்கரணசாட்சி antakkaraṇa-cāṭci, *n.* <அந்தக்கரணம்+. Conscience; மனச்சாட்சி. (W.)

அந்தக்கேணி anta-k-kēṇi, *n.* <அந்தம்+. Hidden well; covered well; மறைகிணறு. *அந்தக் கேணியு மெந்திரக் கிணறும்* (பெருங். உஞ்சைக். 33, 3).

அந்தகசயன் antaka-cayaṉ, *n.* <*antaka-jaya*. Śiva; சிவபெருமான். (W.)

அந்தகசன்னிபாதம் antaka-caṉṉi-pātam, *n.* <அந்தகம்+. One of 13 kinds of *caṉṉi*, q.v.; சன்னிபாதவகை. (சீவரட்.)

அந்தகாசுரஹரணர் antakācura-haraṇar, *n.* <*andhakāsura*+*haraṇa*. (Śaiva.) A manifestation of Śiva; சிவபேதம் இருபத்தைந்தனுளொன்று. (காஞ்சிப்பு. சிவபுண். 24, தலைக்குறிப்பு.)

அந்தகூபம் anta-kūpam, *n.* <அந்தம்+. See அந்தக்கேணி. (P. N.)

அந்தகோளம் antakōḷam, *n.* cf. அந்த கோலம். Emblic myrobolan; நெல்லி. (வை. மூ.)

அந்தசந்தம் anta-cantam, *n.* Redupl. of அந்தம். Beauty; அழகு. *Loc.*

அந்தண்பாடி antaṇ-pāṭi, *n.* <அந்தண்மை+. Quarters where Brahmins reside; பிராமணர் குடியிருக்கு மிடம். *அந்தண்பாடியு மனுகி யல்லது* (பெருங். மகத. 4, 33).

அந்தணநாகம் antaṇa-nākam, n. <அந்தணன் +. Cobra; நல்லபாம்பு.

சுவரிலுப்பு cuvaril-uppu, *n.* <சுவர்+. Salt prepared from saline earth; உவர் மண்ணி னின்றுங் காய்ச்சியெடுக்கு முப்பு. (சங். அக.)

சுவல்வரி cuval-vari, *n.* <சுவல்+. Squirrel; அணில். (யாழ். அக.)

சுவாக்கீரை cuvākkīrai, *n.* A shrub; பூடுவகை. (யாழ் அக.)

சுவாகை cuvākai, *n.* <*svāhā.* Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 22.)

சுவாசக்கண்ணறை cuvāca-k-kaṇṇaṟai, *n.* <சுவாசம்+. Air-cell of the lungs; சுவாசப் பையிலுள்ள கண்ணறை. (இங். வை.)

சுவாசகந்தி cuvācakanti, *n.* cf. சுவி. White fig; இத்தி. (யாழ். அக.)

சுவாத்தியாயம் cuvāttiyāyam, *n.* <*sva-adhyāya.* Studying without the help of a teacher; voluntary study; சுயமாகக் கற்ற கல்வி. (R.)

சுவாதுமூலம் cuvātu-mūlam, *n.* <*svādu* +. Carrot; கிழங்குவகை. *Pond.*

சுவாந்தம் cuvāntam, *n.* <*svānta.* Mind; மனம். (W.)

சுவாமிக்கடா cuvāmi-k-kaṭā, *n.* <சுவாமி +. Ram dedicated to a temple; கோயிற்குப் பிரார்த்தனையாக விடப்படும் ஆட்டுக்கடா. *Loc.*

சுவாரி cuvāri, *n.* Back riggings of a ship; கப்பலின் பின்னணியம். (யாழ். அக.)

சுவாலினி cuvāliṉi, *n.* <*jvālinī.* (Śaiva.) A supernal world under the regency of Kālak-

kiṉi; காலாக்கினியுலகங்களுள் ஒன்று. (சைவபூ. சந். 57.)

சுவீயை cuvīyai, *n.* <*svīyā*. See சுவகீயை. (சுக்கிரநீதி, 212.)

சுவைப்பாடு cuvai-p-pāṭu, *n.* <சுவை+. Taste; ருசி. இனிமையால் நினைக்கிறதுசுவைப் பாட்டை (திவ். பெரியதி. 1, 2, 10, வ்யா. பக். 91).

சுழங்கு-தல் culaṅku-, 5 *v. intr.* prob. சுழல்-. To whirl; to be tossed about; உழலுதல். நெஞ்சகஞ் சுழங்குற (காஞ்சிப்பு. பன்னிரு. 276). (W.)

சுழல்நாற்காலி culal-nāṟkāli, *n.* <id. +. Revolving chair; சுற்றுந் தூரிச்சிவகை. (மதி. க. ii, 190.)

சுழற்றி culaṟṟi, *n.* <சுழற்று-. Fan; விசிறி. அங்கைச் சுழற்றிகொண் டெழுப்பில் (ஞானபூசா. 25).

சுழிப்பு culippu, *n.* <சுழி-. Agitation; சஞ்சலம். மின்னினுடைய சுழிப்பையு முடைத்தாய் (திவ். பெரியாழ். 3, 5, 4, வ்யா. பக். 639).

சுழிமழை culi-malai, *n.* <id.+. Raining in patches; திக்குத்திக்காய்ப் பெய்யுமழை. (யாழ். அக.)

சுழிமுல்லாவெட்டு culimullāveṭṭu, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 133.)

சுழியாறுபடு-தல் culi-y-āṟu-paṭu-, *v. intr.* <சுழி+ஆறு+. To be in floods, with whirlpools; சுழித்துச் செல்லும் பூர்ணப் பிரவாக மாதல். அழகாலும் சீலத்தாலும் காஞ்சீபுரமித்தனையும் நிரம்பிச் சுழியாறுபடும்படி திருவூரகத்திலே நின்றருளி னவனே (திவ். திருநெடுந். 8, வ்யா. பக். 66).

சுழியோடி culi-y-ōṭi, *n.* <சுழியோடு-. Diver for pearls; முத்துளிப்பவன். (J.)

சுள்ளக்கன் cuḷḷakkaṉ, *n.* <சுள். (W.) 1. Angry person; கோபக்காரன். 2. Spirited horse or bull; அடங்காத குதிரை அல்லது மாடு.

சுள்ளெனல் cuḷḷeṉal, *n.* Expr. of sternness, severity or pungency; கடுமையாயிருத் தற் குறிக்குஞ் சொல். வெயில் சுள்ளென்றது (நேமிநா. 66, உரை).

சுளகம் cuḷakam, *n.* cf. *ślōka*. Terse saying; நன்மொழி. சுத்தருரைத்த சுளகமறிந்தவத் தூயவரே (தேசிகப். 1, 29).

சுளாவு-தல் cuḷāvu-, 5 *v. tr.* <சுலாவு-. To whirl; சுழலச்செய்தல். (யாழ். அக.)

சுளுக்குப்பாரை cuḷuku-p-pārai, *n.* Shovel; மண்வாருங் கருவிவகை. *Loc.*

சுளுவு cuḷuvu, *n.* <*sulabha*. Alleviation; mitigation; மட்டுப்படுகை. (யாழ். அக.)

சுற்றலங்காரம் cuṟṟalaṅkāram, *n.* <சுற்று +. External decorations; வெளிப்பக்கத்திற் செய்யுஞ் சிங்காரிப்பு. *Pond.*

சுற்று-தல் cuṟṟu-, 5 *v. tr.* To think, consider; to meditate; சிந்தித்தல். (திவ். திருச் சந். 52, வ்யா. பக். 151.)

சுற்றுக்கல்லூரி cuṟṟu-k-kallūri, *n.* <சுற்று-+. A portion of a building; கட்டடத்தி லோர் பகுதி. (S. I. I. ii, 107.)

சுற்றுப்பிரயாணம் cuṟṟu-p-pirayāṇam, *n.* <id.+. Tour; பலவூர்கட்குஞ் சென்றுவருகை. *Mod.*

சுற்றுவசனம் cuṟṟu-vacaṉam, *n.* <id.+. Circumlocution; நேரேயன்றி சுற்றலாகப் பேசுகை. *Pond.*

சுன் cuṉ, *n.* (யாழ். அக.) 1. cf. *śūnya*. Emptiness; வெறுமை. 2. Whiteness; வெண்மை. 3. Semen; விந்து.

சுன்னாமுக்கி cuṉṉā-mukki, *n.* Indian senna; நில ஆவிரை. (இங். வை.)

சுஜாவந்தி cujāvanti, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 104.)

சுஸ்தி custi, *n.* <Persn. *susti*. Non-existence; இன்மை. தஸ்திக்கு ஏற்பாடு சுஸ்தியாய்ப் போச்சு (தாசில்தார்நா. பக். 28).

சூ

சூக்குமதாரி cūkkuma-tāri, *n.* <சூக்குமம் +. Deceitful person; வஞ்சகன். (யாழ். அக.)

சூகை cūkai, *n.* perh. *śuṣka*. That which is withered or shrunken; வற்றியுலர்ந்தது. சூகை மூலை.

சூசககுரு cūcaka-kuru, *n.* <*sūcaka*+. Preceptor who instructs his pupil in the virtues of *camam, tamam* etc.; சமம் தமம் முதலியவற்றை உபதேசிக்குங் குரு. (விவேகசிந். பக். 28.)

சூசிகன் cūcikaṉ, *n.* <*sūcika*. Tailor; தையற்காரன். (யாழ். அக.)

சூசிகாபரணம் cūcikāparaṇam, *n.* A kind of medicine; மருந்துவகை. (தஞ். சர. iii, 68.)

சூசிகாபைசாசி cūcikā-paicāci, *n.* A variety of the Prākṛt language; பாகதமொழி வகை. (சி. சி. பாயி. மறைஞா. பக். 6.)

சூசிவியூகம் cūci-viyūkam, *n.* <*sūci*+. A kind of battle-array; சூசிகாவியூகம். (*சுக்கிரநீதி*, 338.)

சூசு cūcu, *n.* <E. Shoes; பாதரட்சை. *காலின்மேல சூசுகள் போடலாமா (கட்டபொம்மு. பக்.* 51).

சூட்சம் cūṭcam, *n.* prob. *சூட்சுமம்*. Deceit; வஞ்சம். *Pond.*

சூட்சமகந்தம் cūṭcama-kantam, *n.* <*sūkṣma*+. Electricity; மின்சாரம். *Pond.*

சூட்சவண்டி cūṭca-vaṇṭi, *n.* <*சூட்சம்*+. Bic,cle; மிதிவண்டி. *Loc.*

சூட்டு cūṭṭu, *n.* <*சூடு*-. Capital of a pillar; தூணின் தலைக்கல். *Loc.*

சூடடி-த்தல் cūṭaṭi-, *v. tr.* <*சூடு*+. See சூடுபோடு-. *Tinn.*

சூடாலம் cūṭālam, *n.* <*cūḍā*. Head; தலை. (*யாழ். அக.*)

சூடிகை cūṭikai, *n.* <*cūḍikā*. Fabulous gem on a cobra's hood; நாகத்தினுடைய படத்திலுள்ளதாகக் கருதப்படும் அரதனமணி. *படத்தெடுத்த சூடிகை பறித்துமே (தக்கயாகப்.* 362).

சூடுபோடு-தல் cūṭu-pōṭu-, *v. tr.* <*சூடு*+. To brand, as animals; மாடு முதலிய பிராணிகளுக்குக் குறிசுடுதல்.

சூடுவளர்தல் cūṭu-vaḷartal, *n.* <id.+. Granular ophthalmia; கண்ணோய்வகை. (M. L.)

சூத்திரவுருவம் cūttira-v-uruvam, *n.* <*சூத்திரம்*+. Puppet in *pommal-āṭṭam;* பொம்மலாட்டத்தில் ஆடும் பதுமை. (*யாழ். அக.*)

சூத்திரன் cūttiraṉ, *n.* <*sūtra*. One who wears the triple cord or the sacred thread; முப்புரிநூ லணிந்தோன். (*யாழ். அக.*)

சூதகபாத்தியம் cūtaka-pāttiyam, *n.* <*சூதகம்*+. Nearness of relationship entailing observance of pollution on occasions of birth and death; தீட்டுக் கொண்டாடும்படியான நெருங்கிய பந்துத்துவம். (*மதி. க.* ii, 79.)

சூதடி-த்தல் cūtaṭi-, *v. tr.* <*சூது*+. To cheat, deceive; ஏமாற்றுதல். *வீட்டிற் சூதடித்து நாமிருக்கிற்போமோ (குருகூர்ப்.).*

சூதமணி cūta-maṇi, *n.* perh. *சூதம்*+. A medicinal preparation; ஒருவகைக் கட்டுமருந்து. (*தஞ். சர.* iii, 76.)

சூதராட்சசன் cūta-rāṭcacaṉ, *n.* <*sūta*+. A kind of amber; பொன்னம்பர். (*யாழ். அக.*)

சூதவைரி cūta-vairi, *n.* perh. *சூதம்*+. Tender leaf of bael tree; வில்வத்தளிர். (*யாழ். அக.*)

சூதானு cūtāṉu, *n.* prob. *sāvadhāna*. cf. *சூதானம்*. 1. Repair; பழுதுபார்க்கை. (*கோயிலொ.* 36.) 2. Care, circumspection; முன்சாக்கிரதை. *Loc.* 3. Safety; சேமம். *Loc.*

சூதி cūti, *n.* <*sūti*. Childbirth; பிள்ளைப்பேறு. *Pond.*

சூதிமம் cūtimam, *n.* perh. *sūci*. Stitching; தைக்கை. (*யாழ். அக.*)

சூந்து cūntu, *n.* perh. *சுளுந்து*. Straw effigy; கொடும்பாவி. *Tinn.*

சூப்பியறுத்தல் cūppi-y-aṟuttal, *n.* <*சூப்பி*+. Circumcision; சுன்னத்துக்கலியாணம். *Pond.*

சூபி cūpi, *n.* <Arab *sūfi*. Pious man; devotee; பக்தன். *Muham.*

சூர்ப்பகர்ணன் cūrppa-karṇaṉ, *n.* <*Śūrpa-karṇa*. God Gaṇēśa; விநாயகக்கடவுள். (*சர. பேந்திர. குற.* 8, 3.)

சூர்ப்பகன்னம் cūrppa-kaṉṉam, *n.* <*śūrpa-karṇa*. Elephant; யானை. (*யாழ். அக.*)

சூரியகபாலம் cūriya-kapālam, *n.* <*sūrya*+. Headache which lasts from sunrise to sunset; எழுஞாயிறு நோய். (*பரராச.* i, 24.)

சூரியகாந்தம் cūriya-kāntam, *n.* <id.+. Mus. A primary *rāga;* மேளகர்த்தாக்களுளொன்று. (*சங். சங்.* 17.)

சூரியகாந்தாரி cūriya-kāntāri, *n.* <id.+. (Mus.) A specific melody-type; இராகவகை. (*பரத. ராக.* 103.)

சூரியமணி cūriya-maṇi, *n.* <id.+. A kind of shoe-flower, *Hibiscus phoeniceus;* செம்பரத்தைவகை. *Pond.*

சூரியவாஸ்து cūriya-vāstu, *n.* <id. +. House whose measurement east to west is longer than that of south to north; கிழக்குமேற்காக நீண்டிருக்கும் வீடு. (*சிற்பரத்.* 16.)

சூலதீபம் cūla-tīpam, *n.* <*śūla*+. A kind of temple lamp; கோயில் தீபவகை. (*பரத. ஒழிவி.* 41-43.)

சூலினி cūliṉi, *n.* A primary *rāga;* மேளகர்த்தாக்களுளொன்று. (*சங். சங்.* 47.)

சூலைக்குச்சம் cūlai-k-kuccam, *n.* <*சூலை* +. A kind of disease; நோய்வகை. (*கடம்ப. இலீலா.* 110.)

சூற்பிபாசம் cūr-pipācam, *n.* prob. சூல்+. A hell; நரகவகை. (சி. போ. பா. 2, 3, பக். 204.)

சூராவளிக்கிணறு cūrāvaḷi-k-kiṇaṟu, *n.* <சூராவளி+. Under-well inside a well; உள்ளூறைக் கிணறு. *Loc.*

சூனியார்க்கம் cūṉiyārkkam, *n.* <*śūnya*+. (Astrol.) Predicting the period when the prices of commodities will rise; அகவிலை ஏறுங் காலத்தைக் கணிக்கை. (சங். அக.)

சூனியோபாதானம் cūṉiyōpātāṉam, *n.* <id.+*upādhāna*. State of void, as the principle from which the visible universe came into existence; உலகம் உண்டாவதற்குக் காரணமான சூனியநிலை. (W.)

சூனை cūṉai, <*sūnā*. Slaughter-house; வதைசெய்யப்படும் இடம். சொன்ன சூனைத் துறந்த வற்றட்டன (நீலகேசி, 314).

சூஸ்திரம் cūstiram, *n.* Corr. of ஸூத்திரம். Machine, engine; இயந்திரம். *Colloq.*

செ

செ-த்தல் ce-, *11 v. tr.* To intend; to purpose; to design; கருதுதல். வெப்புடை யாடூஉச் செத்தனென் (பதிற்றுப். 86).

செக்குக்கிழி-த்தல் cekku-k-kiḻi-, *v. intr.* <E. *cheque*+. To issue cheque; உண்டியல் எழுதுதல். *Mod.*

செக்குமன்றாடி. cekku-maṉṟāṭi, *n.* prob. செக்கு+. A tax; வரிவகை. (M. E. R. 134 of 1924.)

செக்குவெட்டு-தல் cekku-veṭṭu-, *v. intr.* <E. *cheque*+. See செக்குக்கிழி-. *Mod.*

செகண்டிமுத்திரை cekaṇṭi-muttirai, *n.* perh. சேகண்டி+. (Śaiva.) A hand-pose; முத்திரை வகை. (சைவாநு. 19.)

செகண்டை cekaṇṭai, *n.* cf. சேகண்டி. Gong; சேகண்டி. தண்ணுமை செகண்டை (மேருமந். 1030).

செகதம் cekatam, *n.* Eating; பட்சிக்கை. (யாழ். அக.)

செகதம்பிகை cekat-ampikai, *n.* <*Jagad-ambikā*. See செகன்மாதா.

செகதி cekati, *n.* perh. செய்தி. Indication, hint; இங்கிதம். (யாழ். அக.)

செகன்மாதா cekaṉ-mātā, *n.* <*Jagan-mātā*. Pārvatī, as Mother of the World; பார்வதி. வேதாகம மேனுறையுஞ் செகன்மாதாவும் நீயாதலினால் (பேரின்பக்கீர்த். பக். 67).

செங்கண்ணன் ceṅ-kaṇṇaṉ, *n.* prob. செம்-மை+கண். A kind of fish; மீன்வகை. குமிளா மாசினி செங்கண்ணன் (பறாளை. பள்ளு. 74).

செங்கழனாரை ceṅkaḻaṉārai, *n.* <id.+கழல்+. Pelican ibis; செங்காலனாரை. (யாழ். அக.)

செங்கழுநீர்க்கல் ceṅ-kaḻunīr-k-kal, *n.* <செங்கழுநீர்+. Red ochre; reddle; காவிக்கல் வகை. (W.)

செங்கழை ceṅkaḻai, *n.* <செம்-மை+கழை. Red sugarcane; செங்கரும்பு. (யாழ். அக.)

செங்கற்சீரை ceṅkaṟ-cīrai, *n.* <செங்கல்+. Ochre-colored cloth; காவித்துணி. கையில் அர்த்தமுண்டான காலம் பார்யையைச் செங்கற்சீரை கட்டிக் கூப்பிட்டுத் திரியவிடுமவன் (திவ். பெரியதிரு. 1, 1, 4, வ்யா. பக். 34).

செங்கற்றாழை ceṅ-kaṟṟāḻai, *n.* <செம்-மை+. A species of aloes; கற்றாழை வகை. (சித். அக.)

செங்கருப்பிருங்கு ceṅ-karuppiruṅku, *n.* <id.+கருப்பு+. A kind of maize; சோளவகை. (விவசா. 3.)

செங்கனிறமணி ceṅkaṉiṟa-maṇi, *n.* <செங்கல்+நிறம்+. A kind of precious stone; சோவாங்கப்பதுமராகம். (யாழ். அக.)

செங்காரை ceṅ-kārai, *n.* <செம்-மை+. Spurious honey-thorn; காரை. (L.)

செங்குட்டம் ceṅ-kuṭṭam, *n.* <id.+. A disease; நோய்வகை. தணிந்திடச் செய்யா திடர் செய்யுஞ் செங்குட்டரோகர் (கடம்ப. பு. இலீலா. 124).

செங்குறுவை ceṅ-kuṟuvai, *n.* <id.+. A kind of paddy; ஒருவகைநெல். கோடைக்குறுவை குளவாளை செங்குறுவை (நெல்விடு. 179).

செங்கொடிக்காணம் ceṅ-koṭi-k-kāṇam, *n.* <id.+. An ancient tax; பழையவரிவகை. (S. I. I. ii, 352.)

செஞ்சாமிருதம் ceñcāmirutam, *n.* Corr. of செஞ்சாமார்தம். Show or display of skill; செஞ்சாமாருதம். *Loc.*

செஞ்சிலுவைச்சங்கம் ceñ-ciluvai-c-caṅkam, *n.* <செம்-மை+சிலுவை+. Red-cross society; ஆபத்துக்காலத்தில் உதவிசெய்யும் ஒரு கூட்டத்தார். *Mod.*

செஞ்சிற்றகத்தி ceñ-ciṟ-ṟ-akatti, *n.* <id.+. A variety of common sesban; மர வகை. (சித். அக.)

செஞ்சுருட்டை ceñ-curuṭṭai, n. <id.+. A species of ragi; வரகுவகை. (விவசா. 3.)

செஞ்சொட்டி ceñ-coṭṭi, n. <id.+. A plant; பூடுவகை. செஞ்சொட்டி யடிபொட்டி (குரு கூர்ப். 45).

செட்டுக்காரர் ceṭṭu-k-kārar, n. <செட்டு +. Dēvāṅgas of Coimbatore; கோயம்புத்தூரில் வாழும் தேவாங்க சாதியார். (E. T. ii, 155.)

செடம் ceṭam, n. <śaṭha. Evil humour of the body destroying the innate intelligence of the soul at birth; பிறக்கும்போது ஆன்மாவின் நல்லறிவைக் கெடுக்கும் வாயு. செடநீறெழ வெரிக் கும் க்ருபாகர (நூற்றெட்டுத். திருப்புகழ். 15).

செண் ceṇ, n. <செண்ணு-. Tresses done into a knot; மகளிர் கொண்டை. செண்ணியற் சிறு புறம் (அகநா. 59).

செண்பகக்குளிகை ceṇpaka-k-kuḷikai, n. An ancient coin; பழைய நாணயவகை. (Pudu. Insc. 261.)

செணம் ceṇam, n. <kṣaṇa. Moment; க்ஷணம். (யாழ். அக.)

செத்தல் cettal, n. <சா-. Chaff, withered or blighted grain; பதர். (S. I. I. v, 84.)

செத்தலை cettalai, n. perh. செய்+தலை. Cultivation accounts; உழவுக் கணக்கு. செத்தலை யிலே புள்ளித்தரவு எழுதவும்.

செத்து cettu, n. prob. செ-. Doubt; சந்தேகம். (யாழ். அக.)

செத்துவம் cettuvam, n. <satva. Evil spirit; பிசாசம். செத்துவங்க டாக்கி (நீலகேசி, 112).

செந்தலி-த்தல் centali-, 11 v. intr. To be fresh and attractive; செவ்வியுறுதல். நம்முகம் பண்டுபோலே செந்தலித்திருக்க நாம் காண்பதெப் போதோ? (திவ். திருநெடுந். 12, வ்யா. பக். 107).

செந்தாரை cen-tārai, n. <செம்-மை+. Pale redness; வெண்மைகலந்த சிவப்பு. Loc.

செந்தாழம்பழம் cen-tāḻam-paḻam, n. <id.+. Pine-apple fruit; அன்னாசிப்பழம். (மூ. அ.)

செந்தாழை cen-tāḻai, n. <id.+. A kind of paddy; நெல்வகை. (குருகூர்ப். 58.)

செந்திருக்கை cen-tirukkai, n. <id.+. A kind of tirukkai fish; திருக்கைமீன்வகை. (D.)

செந்திலகம் cen-tilakam, n. <id.+. A kind of plant; செடிவகை. (புட்ப. 29.)

செந்திம் centīm, n. <Fr. centime. Centime, one hundredth part of a franc; பிரெஞ்சுக் காசின் நூற்றிலொரு பங்கு. Pond.

செந்துநாசனம் centu-nācaṉam, n. <செந்து+. Asafoetida; பெருங்காயம். (யாழ். அக.)

செந்துரிப்போ-தல் centuri-p-pō-, v. intr. perh. சிந்துரி-+. To stop the holes in an earthen vessel with lac; மண் பாண்டத்தின் ஓட்டையை அரக்காலடைத்தல். Tinn.

செந்துருக்கம் centurukkam, n. <சந்திரகம். Ola leaf wound round an ola letter; எழுதிய ஓலையின்மேற் சுற்றும் ஓலைச்சுருள். (யாழ். அக.)

செந்துறைச்செந்துறை centuṟai-c-centuṟai, n. <செம்-மை+. A kind of musical composition; இசைப்பாட்டுவகை. (யாப். வி. 537.)

செந்துறைமார்க்கம் centuṟai-mārkkam, n. <id.+. Musical composition which could be sung in any of the four major paṇ and of the 21 tiṟaṉ; நாற்பெரும் பண்ணிலும் இருபத்தொரு திறனிலும் பாடக்கூடிய இசைப்பாடல். (யாப். வி. 537.)

செந்தூக்கு cen-tūkku, n. <id.+. Weight which can be easily lifted by a person; கையால் இலேசாய்த் தூக்குங் கனமுள்ளது. (யாழ். அக.)

செந்தூட்படுத்து-தல் centūṭ-paṭuttu-, v. intr. <செந்தூள்+. To reduce to dust; நாசஞ் செய்தல். வழக்கையெல்லாம் செந்தூட்படுத்தி (பேரின் பக்கீர்த். பக். 103).

செந்தூரி-த்தல் centūri-, 11 v. intr. <செந்தூரம். To calcine; சிந்தூரமாக்குதல். (யாழ். அக.)

செந்நெய்தல் cen-neytal, n. <செம்-மை +. A kind of water-lily; அல்லிக்கொடிவகை. (புட்ப. 4.)

செந்நென்முத்து cenneṉ-muttu, n. <செந்நெல்+. Pearl believed to be formed in cennel paddy; செந்நெலில் உண்டாவதாகக் கருதப் படும் முத்து. (யாழ் அக.)

செப்பவாய் ceppavāy, n. Waist; இடை. (யாழ். அக.)

செப்பாடல் ceppāṭal, n. An ancient coin; பழைய நாணயவகை. (பணவி. 139.)

செப்பாடு cep-pāṭu, n. prob. செப்பம்+. Straightness, justness; நேர்மை. செப்பாடுடைய திருமாலவன் (திவ். பெரியாழ். 3, 5, 6).

செப்புநிறம் ceppu-niṟam, n. <செம்பு+. Dark-red colour; கருஞ்சிவப்பு. (யாழ். அக.)

செப்புப்பத்திரம் ceppu-p-pattiram, n. <id.+. Copper-plate grant; செப்புப்பட்டயம். விடுபேறாகச் செப்புப் பத்திரஞ்செய் தட்டிக் கொடுத் தேன் (T. A. S. ii, 68).

செப்புமலை ceppu-malai, n. <id.+. Ochre-coloured cloth; காஷாயவுடை. (யாழ். அக.)

செபக்கூடம் cepa-k-kūṭam, n. <செபம்+. Chapel; கிறிஸ்தவர் செபஞ்செய்யு மிடம். *Chr.*

செபத்திட்டப்புஸ்தகம் cepa-t-tiṭṭa-p-pustakam, n. <id.+திட்டம்+. Directory for worship at the church; கிறிஸ்தவர்கள் செபங்கள் செய்யவேண்டிய காலம் முதலியவற்றைக் குறிக்குஞ் சுவடி. *Pond.*

செம்பஞ்சுநிறமணி cem-pañcu-niṟa-maṇi, n. <செம்-மை+பஞ்சு+. A kind of precious stone; சௌகந்திகப்பதுமராகம். (யாழ். அக.)

செம்பட்டலரி cem-paṭṭalari, n. <செம்-மை +. A kind of oleander; அலரிவகை. (புட்ப. 29.)

செம்பட்டை cem-paṭṭai, n. <id.+. A kind of musical instrument; ஒருவகை வாத்தியம். குடமொடு பாணி யிடக்கை செம்பட்டை (வள்ளி. கதை. Ms.).

செம்படம் cem-paṭam, n. <id.+. See செப்புமலை. (நீலகேசி, 244, உரை.)

செம்படர் cem-paṭar, n. <id.+படம். Buddhists, as wearing red-coloured cloth; பௌத்தர்கள். இது செம்படர்க ளிறைவ னுறையு மிடம் (நீலகேசி, 464).

செம்பன் cempaṉ, n. <செம்பு. Brown-coloured cow or bull; சிவலை. (யாழ். அக.)

செம்பாந்தள் cem-pāntaḷ, n. <id.+. Moon's descending node; கேது. (சாதகசிந். 7.)

செம்பால்முடாங்கி cempālmuṭāṅki, n. A shrub; பூடுவகை. (யாழ். அக.)

செம்பிறை cem-piṟai, n. <செம்-மை+. 1. A kind of metallic ore; கானற்கல். (யாழ். அக.) 2. See செம்பொடி, 1. (யாழ். அக.)

செம்பினிறம் cempiṉiṟam, n. <செம்பு +நிறம். A kind of precious stone; மாந்தளிர்க் கல். (யாழ். அக.)

செம்பு cempu, n. A blemish in coin; நாணயக்குற்றவகை. (சரவண. பணவிடு. 66.)

செம்பை cempai, n. A disease affecting paddy crop; நெற்பயிரின் நோய்வகை. (நீலகேசி, 366, உரை.)

செம்பொடி cem-pōṭi, n. <செம்-மை+. 1. Blue stone; நீலக்கல். (யாழ். அக.) 2. Red oxide of mercury; சிந்தூரம். செம்பொடிப் புரத்திக் கயங்களை (தக்கயாகப். 496).

செம்போத்து cempōttu, n. Champak tree; செண்பகம். (யாழ். அக.)

செம்போத்துக்காரி cempōttu-k-kāri, n. <செம்போத்து+. Bull partly grey and partly black in colour; சில இடங்கள் வெளுத்தும் சில இடங்கள் கறுத்து முள்ள எருது. *Loc.*

செம்மண் cem-maṇ, n. <செம்-மை+. A flaw in rubies, one of *māṇikka-k-kuṟṟam;* மாணிக்கக்குற்றங்களு ளொன்று. (திருவாலவா. 25, 14.)

செம்மணிச்சை cem-maṇiccai, n. <id.+ prob. மணிச்சிகை. A tree; மரவகை. (S. I. I. iii, 408.)

செய்காடு cey-kāṭu, n. <செய்-+. Thicket; குறுங்காடு. (திருக்கோ. 148, உரை.)

செய்காரியஅட்டவணை cey-kāriya-aṭ-ṭavaṇai, n. <id.+காரியம்+. Index of items of work to be done in temple service; கோயிலில் நடக்க வேண்டிய காரியங்களைக் காட்டும் பட்டி. *Loc.*

செய்கால் cey-kāl, n. <id.+. Labour necessary for the cultivation of lands; நிலஞ் சாகுபடி செய்தற்கு வேண்டும் உழைப்பு. *Tj.*

செய்கைக்காரன் ceykai-k-kāraṉ, n. <செய்கை+. Servant; வேலைக்காரன். (யாழ். அக.)

செய்கைத்தரை ceykai-t-tarai, n. <செய்கை+. Field prepared for sowing; பண்படுத்தின நிலம். (யாழ். அக.)

செய்திப்பிழை ceyti-p-piḻai, n. <செய்தி +. Unconscious mistake; slip; அறியாது செய்த தவறு. எப்பொழுதுந் தன் மனத்துக்கேற்க நடப்பார்க் கொரு செய்திப்பிழை வாராதோ தினகர (தினகர வெண்பா, 85).

செய்துகோள் ceytu-kōḷ, n. <செய்-+. Artificiality; தானே உண்டாகாது செய்துகோள் ளப்பட்டது. (நம்பியகப். 1, பக். 36.)

செய்நீர் cey-nīr, n. <id.+. Tincture; மருந்துச் சரக்கினின்று இறக்கப்படுஞ் சத்துநீர். *Loc.*

செய்ம்மெழுகு cey-m-meḻuku, n. <id+. Lac; அரக்கு. *Loc.*

செய்யுட்டாரணை ceyyuṭ-ṭāraṇai, n. <செய்யுள்+தாரணை. One of *navatāraṇai*, q.v.; நவதாரணையுள் ஒன்று. (W.)

செய்யோன் ceyyōṉ, n. <செம்-மை. Sun; சூரியன். (சீவக. 2322, உரை.)

செயங்கொண்டான் ceyaṅ-koṇṭāṉ, n. <செயம்+. A kind of paddy; ஒருவகை நெல். சித்திரக்காலிவாலன் செயங்கொண்டான் மணல்வாரி (முக்கூடற். 97).

செயபரி ceya-pari, n. <id.+. State horse; பட்டத்துக் குதிரை. (யாழ். அக.)

செயவானை ceya-v-āṉai, n. <id.+. State elephant; பட்டத்து யானை. (யாழ். அக.)

செயினட்டிகை ceyiṉ-aṭṭikai, n. <E. *chain*+. A necklet in the pattern of a watch chain to which a pendant is attached; கடிகாரச் சங்கிலிபோலச்செய்த அட்டிகைவகை. *Mod.*

செருவாடி ceruvāṭi, n. <சிறுவாடு. Petty savings in money; சிறுவாடு. செருவாடி போகம் கொண்டு (S. I. I. v, 285).

செல்லாமை cellāmai, n. <செல்-+ஆ neg. +. Powerlessness to control oneself; ஆற்றாமை. பெரிய திருவடியுடைய செல்லாமையாலும் தன் செல்லாமையாலும் நித்யஸூரிகளை அனுபவிப்பிக்கைக் காகவும் அழகு சென்றேறக் கடவதாயிறே யிருப்பது (திவ். திருநெடுந். 6, வ்யா. பக். 50).

செல்லுஞ்செலவுக்கு celluñ-celavukku, adv. <id.+. Sufficiently for actual or necessary expenses; அவசியமான செலவுக்குப் போதியதாக. *Loc.*

செல்லெழுத்து cel-l-eḻuttu, n. <செல்+. (Legal.) Endorsement of payment, as on bonds; உண்டியல் பத்திரம் முதலியவற்றில் வரவு வைத்திடுங் கையொப்பம். *Loc.*

செல்லெழுது-தல் cel-eḻutu-, v. intr. <id.+. To cancel, as a bond, by superscription; பத்திரத்திற் கடன் தீர்ந்ததாக எழுதி ரத்து செய்தல். *Loc.*

செல்லொப்பம் cel-l-oppam, n. <id+. (Legal.) Counter-signature; பத்திரம் முதலியவை களில் இடப்பெறும் மேல் ஒப்பம். (J.)

செல்வக்கடி celva-k-kaṭi, n. <செல்வம்+. Biting, in playfulness; பருங்கடி. (யாழ். அக.)

செல்வர் celvar, n. <id. *Śrī-pali* in Viṣṇu temples; திருமால் கோயிலிலுள்ள ஸ்ரீபலிமூர்த்தி. *Loc.*

செலு celu, n. prob. செதில். Splinter; சிலாம்பு. பௌவமுற்றுமோர் செலுவுட்சென்று (பாகவத. 8, 8, 17).

செலை celai, n. <சிலை. Fragrant sirissa; சிலை. (G. Tj. D. I, 115.)

செவ்வண் cevvaṇ, n. prob. செம்-மை. Steepness; செங்குத்து. (யாழ். அக.)

செவ்வாக்கு cev-vākku, n. <id.+. Long curve; நீண்ட வளைவு. (யாழ். அக.)

செவ்வாய் cev-vāy, n. <id.+. Festival in a Pitāri temple; பிடாரிகோயில் திருவிழா. *Cetti.*

செவ்வியம் cevviyam, n. Cinnabar; பவளமனோசிலை. *Pond.*

செவ்வெள்ளையிருங்கு ce-v-veḷḷai-y-iruṅku, n. <செம்-மை+. A kind of maize; சோளவகை. (விவசா. 3.)

செவணை cevaṇai, n. perh. செவி+அணை-. Deafness; செவிடு. *Loc.*

செவிக்காயம் cevi-k-kāyam, n. <id.+. Earwax; காதுக்குறும்பி. *Loc.*

செவிப்படு-தல் cevi-p-paṭu-, v. intr. <id.+. To be heard; கேட்கப்படுதல். ஆபரணவொலி செவிப்படா நின்றது (ஈடு, 10, 6, 6, வ்யா. பக். 200).

செவிப்பாம்பு cevi-p-pāmpu, n. <id.+. A blemish in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரிய மாட். 20.)

செவிமலர் cevi-malar, n. <id.+. Inner ear; உட்செவி. *Tinn.*

செவியம் ceviyam, n. Ear; செவி. (திவ். கண்ணிநுண். 10, வ்யா. பக். 82.)

செழுகாதனம் ceḻukātaṉam, n. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 109, உரை.)

செழுவர் ceḻuvar, n. A sub-division of the Paḷḷar caste; பள்ளர்வகையினர். *Tp.*

செறி-த்தல் ceṟi-, 11 v. tr. To close, shut, as eyes; மூடுதல். கண்ணையும் செறித்து (திவ். திருப்பல். 3, வ்யா. பக். 40).

செறுப்புநோய் ceṟuppu-nōy, n. perh. செறு-+. A disease; நோய்வகை. (கடம்ப. பு. இலீலா. 111.)

சென்னபட்டணத்தான் ceṉṉapaṭṭaṇattāṉ, n. <சென்னபட்டணம். An ancient coin; பழையநாணய வகை. (பணவிடு. 117.)

சென்னசிறை ceṉṉaciṟai, n. A plant; பூடுவகை. (T. C. M. ii, 2, 649.)

சென்னம் ceṉṉam, n. perh. சின்னம். Shape; வடிவு. (யாழ். அக.)

சென்னீர்வெட்டி cennīr-veṭṭi, *n.* <id.+ id.+. A tax; வரிவகை. (S. I. I. iii, 300.)

சென்னீரமஞ்சி cennīramañci, *n.* <செல்- +நீர்+. A tax; வரிவகை. (S. I. I. vi, 155.)

சே

சேக்பறுவான் cēkparuvāṉ, *n.* Cross-jack yard; களமிமரத்தின் அடிக்கட்டைக்குத் துறுக்கே போடப்படும் பறுவான். (M. Navi. 82.)

சேகரம் cēkaram, *n.* Horse-radish tree; முருங்கை. (யாழ். அக.)

சேகரி-த்தல் cēkari-, *11 v. intr.* <*śēkhara.* To excel; சிறந்திருத்தல். *அவர்களுக்குச் சிகாமணி போலே சேகரிக்குமவராய் (திவ். பெருமாள். தனியன், வ்யா. பக்.* 6).

சேகாரம் cēkāram, *n.* <சேகரி-. That which is gathered together; சேகரித்த பொருள். *Pond.*

சேகு cēku, *n.* cf. சேக்கை. Scar; தழும்பு. (யாழ். அக.)

சேசுரவாதி cēcura-vāti, *n.* <*sēśvara-vādin.* Theist; கடவுளுண்மையை ஒப்புக்கொள்வோன். (விவேகசிந். பக். 20.)

சேடவட்டில் cēṭa-vaṭṭil, *n.* <சேடம்+. Plate for food; உண்கலம். (யாழ். அக.)

சேடா cēṭā, *n.* *Caṭai-p-pūrāṉ*, centipede; சடைப்பூரான். *Tinn.*

சேடித்துவம் cēṭi-t-tuvam, *n.* <*śēṣi-tva.* State of being the master; ஆளுந்தன்மை. *சேடித் துவப்பரரெவர் (நூற்றெட்டுத். திருப்புகழ்.* 62).

சேத்துமம் cēttumam, *n.* <*ślēṣma.* Phlegm; சிலேட்டுமம். *திருவிரல் மூன்றிலோடில் சேத்தும நாடியாமே (தஞ். சர.* ii, 307).

சேதனத்துவம் cētaṉa-t-tuvam, *n.* <*cētana-tva.* State of being a *cētaṉaṉ;* சைதன்னியநிலை. (வேதாந்தசாரம். பக். 59.)

சேதிமரம் cēti-maram, *n.* <*caitya*+. Sacred tree in a Jaina temple; சைத்தியவிருக்ஷம். *சேதிமரங்க ளெட்டு (மேருமந்.* 1063).

சேந்துகிணறு cēntu-kiṇaṟu, *n.* <சேந்து- +. Draw-well; இறைகிணறு. *Loc.*

சேப்பு ceppu, *n.* prob. *śiphā.* Root of the lotus; தாமரைக்கிழங்கு. *பாசடைச் சேப்பினுள் (கலித்.* 74).

சேபம் cēpam, *n.* <*śēpha.* Membrum virile; ஆண்குறி. (யாழ். அக.)

சேமண்டன் cēmaṇṭaṉ, *n.* <*cēmaṇḍa.* One who has lost his father; தந்தையிலி.

சேமணவம் cē-maṇavam, *n.* prob. சே+ மணவு. Red stone, ruby; சிவந்த மணி. (யாழ். அக.)

சேர்-தல் cēr-, *4 v. tr.* To cut; சேதித்தல். *வாழ்மரஞ் சேர்ந்தவை (நீலகேசி,* 369).

சேர்சவாய் cērcavāy, *n.* Stay-sail; கப்பலின் சவாய்களில் விரிக்கப்படும் முக்கோணப்பாய். (M. Navi. 82.)

சேர்ந்தணையாக cērntaṇai-y-āka, *adv.* <சேர்- +. Continuously, without break; சேரி டையாக. *Loc.*

சேர்ப்பு cērppu, *n.* <id. Wharf; கப்பலி னின்று சரக்கிறக்கும் பாலம். *Pond.*

சேர்மானம் cēr-māṉam, *n.* <id.+. Partiality; பட்சபாதம். (யாழ். அக.)

சேர்வை cērvai, *n.* <id. Poultice; பற்று. *Pond.*

சேர்வைக்களி cērvai-k-kaḷi, *n.* prob. சேர்வை+. A defect in coins; நாணயக் குற்ற வகை. *கள்ளனென்றுஞ் சேர்வைக்களி யென்றும் (நெல்விடு.* 345).

சேரிமொழி cēri-moḻi, *n.* <சேரி+. Colloquialism; வழக்குச்சொல். *சேரிமொழியாற் செவ்விதிற் கிளந்து (தொல். பொ.* 553).

சேலஞ்சர்க்கரை cēlañ-carkkarai, *n.* <சேலம்+. See சேலஞ்சீனி. *Loc.*

சேலஞ்சீனி cēlañ-cīṉi, *n.* <id.+. Country sugar, after Salem where it was originally manufactured; பழுப்புச் சர்க்கரை. *Loc.*

சேவகக்காசு cēvaka-k-kācu, *n.* <சேவகம்+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. v, 365).

சேவகப்பதம் cēvaka-p-patam, *n.* perh. id. +. Rice not fully boiled; அரிசிப்பதம். (W.)

சேவற்கட்டு cēvaṟ-kaṭṭu, *n.* <சேவல்+. Cock-fight; கோழிப்போர். (எங்களூர். 10.)

சேவனம் cēvaṉam, *n.* <*sēvana.* Stitching; தைக்கை. (யாழ். அக.)

சேழகாரன் cēḻa-kāraṉ, *n.* <*śēṣa*+. Nephew; மருமகன். (T. A. S. iii, 229.)

சேற்றுப்பலகை cēṟṟu-p-palakai, n. <சேறு+. Wooden lintel; மண்தாங்கிப்பலகை. *Madr.*

சேறை cēṟai, n. <K. *sēra.* Handful, as of rice; உள்ளங்கை கொண்டது. *Colloq.*

சேனாபதி cēṉāpati, n. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. 103.)

சேனாபதியாழ்வார் cēṉāpati-y-āḻvār, n. <*senāpati*+. *Viṣvaksēna,* the chief of Viṣṇu's host; சேனைமுதலியார். (M. E. R. 514 of 1917.)

சேனைநாதன் cēṉai-nātaṉ, n. <சேனை+. See சேனாபதியாழ்வார். நாதமுனிசடகோபன் சேனை நாதன் (ரஹஸ்ய. 51).

சேனைபோகம் cēṉai-pōkam, n. <id.+. An office in the military service; படைக்குரிய உத்தியோகங்களு ளொன்று. (S. I. I. iv, 134.)

சேனையங்காடிகள் cēṉai-y-aṅkāṭikaḷ, n. perh. சேலை+. A sect of cloth merchants; அறுவைவாணிகரு ளொருவகையினர். (S. I. I. vii, 430.)

சேஷ்பம் cēṣpam, n. <சிலேஷ்பம். Phlegm; சிலேஷ்மம். (வேதாந்தசாரம், பக். 7.)

சேஷச்சினையெண் cēṣa-c-ciṉai-y-eṇ, n. <சேஷம்+சினை+. Aliquant; வகுத்தலிற் சரியா யடங்காத எண். *Mod.*

சை

சைத்தியம் caittiyam, n. <*caitya.* Stone epitaph; இறப்புக் கல்வெட்டு. (யாழ். அக.)

சைத்தியவிருட்சம் caittiya-viruṭcam, n. <id.+. See செதிமரம். (மேருமந். 625, உரை.)

சைதிகம் caitikam, n. <*chaidika.* Cane; பிரம்பு. (யாழ். அக.)

சையல் caiyal, n. cf. சாயல். Exact likeness; சாயல். சாமிநாடையைப்போல . . . சையலிலே நான் காணேன் (கட்டபொம்மு. பக். 57).

சைவகலாலயசக்கரவர்த்தி caiva-kalā-laya-cakkaravartti, n. <*śaiva*+*kalā*+*ā-laya* +. A title of the learned Śivācāryas; கல்வி கேள்விகளில் வல்ல சிவாசாரியரது பட்டங்களு ளொன்று. சைவகலாலயசக்கரவர்த்தி உள்ளிட்டோ ரும் (S. I. I. v, 98).

சைவசக்கரவர்த்தி caiva-cakkaravartti, n. <id.+. A title of Śivācāryas; சிவாசாரியரது பட்டங்களு ளொன்று. பாண்டியன் தனஞ்செயன் சைவேசுரமுடையான் சைவசக்கரவர்த்தி உள்ளிட்டோரும் (S. I. I. v, 98).

சைவசூளாமணி caiva-cūḷāmaṇi, n. <id.+. A title of Śivācāryas; சிவாசாரியரது பட்டங்களு ளொன்று. பாண்டியன் கந்தனை சைவ சூளாமணி பிரமாதராயனேன் (S. I. I. v, 101).

சைவநூல் caiva-nūl, n. <id.+. The Śaiva Āgamas; சைவாகமம். (சி. சி. 8, 15.)

சைவபஞ்சதபனம் caiva-pañca-tapaṉam, n. <id.+*pañca.* The five Upaniṣads of Śaivism, viz., *kālākkiṉiruttiram, cuvētāccuvatarам, kaivalliyam, atarvacikai, atarvaciracu;* காலாக் கினிருத்திரம் சுவேதாச்சுவதாம் கைவல்லியம் அதர்வ சிகை அதர்வசிரசு என்னுஞ் சைவசமயத்துக்குரிய உபநிஷதங்கள். (சைவபூ. சந். 24.)

சைவாத்திரம் caivāttiram, n. <id.+*astra.* *Pācupatāttiram,* an arrow which has Śiva as its presiding deity; பாசுபதாத்திரம். தவம்புரியச் சைவாத்திரங் கொடுக்கவாங்கி (கடம்பர். உலா. 34).

சைனர் caiṉar, n. <E. *China.* China-men; சீனதேசத்தார். (யாழ். அக.)

சைனாப்பெட்டி caiṉā-p-peṭṭi, n. <id.+. A kind of fireworks; சீனப்பெட்டி. *Madr.*

சொ

சொக்கன் cokkaṉ, n. peh. சொக்கு-. Simpleton; மூடன். சொக்கனுக்குச் சட்டியளவு.

சொக்கன்சம்பா cokkaṉ-campā, n. சொக்கன்+. A kind of *campā* paddy; சம்பாநெல் வகை. நேர்பெருகு சொக்கன்சம்பா நெல்லென்றும் (நெல்விடு. 189).

சொக்காரி cokkāri, n. Fem. of சொக்காரன். Female agnate; தாயாதிக்காரி. *Loc.*

சொகுரு cokuru, n. <*sva*+*guru.* One's own teacher; தன்னுடைய ஆசாரியன். (சிவநெறிப் பிர. உரை.)

சொச்சொரூபம் co-c-corūpam, n. <id.+ *svarūpa.* Inherent nature; தன்னியல்பு. (சொரூப சா. சொரூபஸர்க்கம்.)

சொடக்கு coṭakku, n. Wind instrument; துளைக்கருவி. *Pond.*

சொண்டாங்கலயம் coṇṭāṅ-kalayam, n. <சண்டு+. A small, round, earthen vessel; சிறு மட்பாண்டம். *Tinn.*

சொண்டுமிளகாய் coṇṭu-miḷakāy, n. <சொண்டு+. Blighted pod of chilly; விதை யில்லாத சொத்தை மிளகாய்த்தோல். *Tinn.*

சொர்க்கப்படம் corkka-p-paṭam, *n.* <*svarga*+. Board for a kind of back gammon; கட்டங்களிற் காய்கள் வைத்தாடும் ஒருவகைப் படம். *Mod.*

சொர்க்கஸ்தரா-தல் corkkastar-ā-, *v. intr.* <சொர்க்கம்+. To die; இறத்தல். *பரமேசுர போத்தரயர் சொர்க்கஸ்தராவது* (S. I. I. iv, 10).

சொர்ணம் cornam, *n.* Excess; மிகுதி. (*திருவாவடுதுறைக். கோ. நூலாராய்ச்சி. பக்.* 21.)

சொரிநெல் cori-nel, *n.* <சொரி-+. Paddy heaped up; குவித்திருக்கும் நெல். (W.)

சொருகுமுந்தானை coruku-muntāṉai, *n.* <சொருகு-+. The end of a *saree* which is tucked in; புடைவையின் சொருகு தலைப்பு. (W.)

சொருவம் coruvam, *n.* prob. சொரூபம். Estate of Nambudri Brahmins, royal personages, etc.; நம்பூதிரி முதலியோரின் மனை முதலிய ஸ்தாவர சொத்து. *நம்மிட சொருவத்துக்குள்ள* (T. A. S. iii, 216).

சொருவா coruvā, *n.* Gruel; கஞ்சி. (*அக. நி.*)

சொரூபவித்து corūpa-vittu, *n.* <*svarūpa-vid.* One who has attained self-realisation; தன்னியல்பினை யுணர்ந்தவன். *சொரூபவித்தான மேலோர் சுபாவமே யாகுமன்றோ* (*விவேகசூடா.* 43).

சொல்லழிம்பு col-l-aḻimpu, *n.* <சொல்+. Obscene word; இடக்கர்ச்சொல். *அவன் சொல் லழிம்பு மகாமோசம். Colloq.*

சொல்லறிபுள் col-l-aṟi-puḷ, *n.* <id.+ அறி-+. 1. Parrot; கிளி. (*யாழ். அக.*) 2. Myna; பூவை. (*சங். அக.*)

சொல்லாடு-தல் col-l-āṭu-, *v. intr.* <id. +. To be current in colloquial usage; பேச்சில் வழங்குதல். *இப்படி ஒன்று சொல்லாடுகின்றது. Tj.*

சொல்லெடுப்பு col-l-eṭuppu, *n.* <id.+. Emphasis; அழுத்தமாகச் சொல்லுகை. *Pond.*

சொல்வல்லபம் col-vallapam, *n.* <id.+. Power of speech, eloquence; பேச்சுவன்மை. (W.)

சொல்வார்த்தை col-vārttai, *n.* <id.+. (W.) 1. Admonition; புத்திமதி. 2. False accusation; பொய்ச்சாற்று.

சொலிதை colitai, *n.* <*jvalitā.* Brilliance; பிரகாசம். *சொலிதை யுற்றிடும் விவேகர்* (*பாடு.* 28, *அடியவர்*).

சொலிப்பு colippu, *n.* <சொலி-. Shining, glittering; பிரகாசம். (W.)

சொற்கட்டு coṟ-kaṭṭu, *n.* <சொல்+. Falsehood; fib; பொய். *Loc.*

சொற்கலகம் coṟ-kalakam, *n.* <id.+. Controversy; வாக்குவாதம். (W.)

சொற்செல்(லு)-தல் coṟ-cel-, *v. intr.* <id.+. To command obedience; அதிகார முடையவனாதல். *எனக்கு அடைத்த விஷயத்தில் சொற்செல்லாதாகி லன்றோ எனக்குக் குறையாவது* (ஈடு, 10, 2, 1).

சொற்சேர்க்கை coṟ-cērkkai, *n.* <id.+. Dictionary; அகராதி. *Pond.*

சொற்பாடு coṟ-pāṭu, *n.* <id.+படு-. Fame; புகழ். *குலந்தனிலிட்ட சொற்பாடும்* (*சொக்க. உலா,* 259).

சொன்மலைவு coṉ-malaivu, *n.* <id.+. Self-contradictory statement; முன்பின் விரோதமாகக் கூறுகை. *சொல்லலன் யானெனச் சொல் லுவையாயினுஞ் சொன்மலைவாம்* (*நீலகேசி*, 384).

சொஸ்தி costi, *n.* <Persn. *susti.* Nothing; வெறுமை. *சொத்தையெல்லாம் சொஸ்தி யாக்கி விட்டான்.*

சோ

சோக்கதார் cōkka-tār, *n.* <Hind. *caukī* +. Chowkidar; சௌக்கிதார். *சோக்கதார் கடிகை யின்ன* (*பிரதாப. விலா.* 2).

சோகசாவேரி cōka-cāvēri, *n.* perh. சோகம் +. (Mus.) A specific melody-type; இராகவகை. (*பரத. ராக.* 55.)

சோகிதன் cōkitaṉ, *n.* <*śōkita.* One who is sorrowful; துக்கமுற்றவன். (*பாரதவெண்.* 28, *உரை.*)

சோசியார்திருவடி cōciyār-tiruvaṭi, *n.* An officer of the king; அரசாங்க உத்தியோகஸ்தரு ளொருவகையான். (S. I. I. v, 339.)

சோட்டா cōṭṭā, *adj.* <Hind. *chōṭā. Colloq.* 1. Light; இலேசான. 2. Little, small; சிறிய.

சோட்டாப்பையன் cōṭṭā-p-paiyaṉ, *n.* <சோட்டா+. Boy-attender; ஊழியச் சிறுவன். *Mod.*

சோட்டாஹஸ்ரி cōṭṭā-hasri, *n.* <id.+ Arab. *hāziri.* Light refreshment; chota hazari; சிற்றுணவு. *Mod.*

சோட்டையன் cōṭṭaiyaṉ, *n.* perh. சொத்தை. Useless fellow; பயனற்ற ஆள். *Tinn.*

சோடசகர்மம் cōṭaca-karmam, *n.* <*ṣoḍaśa*+. The sixteen essential ceremonials in the life of a person, *karuppātāṉam, puñcavaṉam, cīmantam, uṉṉayaṉam, cātakaṉmam, nāmakaraṇam, upaniṣkiramaṇam, aṉṉa-p-pirācaṉam, caulam, upanayaṉam, makānāmiyam, makāviratam, upaniṣattu, cōpaṉam, uttuvakaṉam, miruti;* கருப்பாதானம் புஞ்சவனம் சீமந்தம் உன்னயனம் சாதகன்மம் நாமகரணம் உபநிஷ்கிரமணம் அன்னப்பிராசனம் சௌளம் உபநயனம் மகாநாமியம் மகாவிரதம் உபநிஷத்து சோபனம் உத்துவகனம் மிருதி என்னும் பதினாறுவகை ஸம்ஸ்காரங்கள். (*த. நி. போ.* 24.)

சோடம்[1] cōṭam, *n.* <*cōḍa*. A kind of corset; முலைக்கச்சுவகை. *Pond.*

சோடம்[2] cōṭam, *n.* <*sōḍha*. Patience, endurance; பொறுமை. (*யாழ். அக.*)

சோடை cōṭai, *n.* cf. சொள்ளை. *Loc.* 1. That which is withered, blighted or decayed; சொத்தை. 2. Useless, good-for-nothing person; உபயோகமற்றவ-ன்-ள். 3. Weak, emaciated person; உடல்வலியற்றவ-ன்-ள்.

சோணகவாளை cōṇaka-vāḷai, *n.* cf. சோனகம்வாளை. A kind of *vāḷai* fish; வாளைமீன்வகை. (M. M.)

சோதம் cōtam, *n.* prob. *cyōta*. Pure water; நல்லதண்ணீர். (W.)

சோதனாபிரதிகாலம் cōtaṉā-pirati-kālam, *n.* <*cōdanā*+*prati*+. Adjournment of a suit for examination of witnesses; சாட்சி விசாரணைக்காக வழக்கை ஒத்திவைக்கை. (*சுக்கிரநீதி*, 282.)

சோதனை cōtaṉai, *n.* <*cōdanā*. Purgative; பேதிமருந்து. *Loc.*

சோதா cōtā, *n.* <*śōdhā*. Trial, examination, inquiry; விசாரணை. (P. T. L.)

சோதிசாத்திரம் cōti-cāttiram, *n.* <*jyōti*+. Astronomy; ககோளசாத்திரம். *Mod.*

சோதிட்டம் cōtiṭṭam, *n.* Trifle, very little; மிகவற்பம். (*யாழ். அக.*)

சோதிடத்தேவர் cōtiṭa-t-tēvar, *n.* <*jyōtiṣa*+. (Jaina.) A class of gods; ஒரு சார் தேவசாதியார். *வாய்தல் சோதிடத்தேவர்காப்ப* (*மேரு மந்.* 1060).

சோதிடி cōtiṭi, *n.* <சோதிடன். Astrologer; சோதிடன். (*தத்துவப்.* 182, *உரை.*)

சோதிடோப்பரிகை cōtiṭōpparikai, *n.* <சோதிடம்+உப்பரிகை. Observatory; கிரகநட்சத்திரங்களின் கதிகளை ஆராய்தற்குச் சாதகமாகக் கட்டப்பட்டிருக்கும் கோபுரம். (M. Navi. 55.)

சோதிப்பு cōtippu, *n.* <சோதி-. Examination; பரிசோதனை. *Pond.*

சோதிர்லோகம் cōtir-lōkam, *n.* <*jyōtir-lōka*. (Jaina.) One of the seven worlds; எழுவகையுலகுளொன்று. (*திருக்கலம்*, 6, *உரை.*)

சோதிராங்கம் cōtirāṅkam, *n.* <*jyōtir-āṅga*. A *kalpataru* whose splendour casts all other bright objects into shade; எல்லா ஒளியையுமடக்கும் ஒளியை வீசும் கற்பதரு. (*தக்கயாகப்.* 757, *குறிப்பு.*)

சோமசுந்தரம் cōmacuntaram, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (*சங். சந்.*)

சோமதாரி cōma-tāri, *n.* <சோமன்+. Rocksalt; இந்துப்பு. (*யாழ். அக.*)

சோய்வு cōyvu, *n.* prob. சோர்-. Languor; சோர்வு. (*யாழ். அக.*)

சோலா cōlā, *n.* cf. *cōla*. A kind of corset; முலைக்கச்சுவகை. *Pond.*

சோலாந்திரம் cōlāntiram, *n.* Hard task; கஷ்டமான வேலை. *Nāñ.*

சோழிசொங்கமான் cōḻi-coṅkamāṉ, *n.* <சோழி+. Cowries, bag, etc., as the belongings of a *paratēci;* பரதேசிக்குரிய பை சோழி முதலிய அடையாளங்கள். *Colloq.*

சோழியன்காசு cōḻiyaṉ-kācu, *n.* <சோழியன்+. An ancient coin; பழைய நாணயவகை. (*சரவண. பணவிடு.* 56.)

சோழியன்வெட்டு cōḻiyaṉ-veṭṭu, *n.* <id.+. An ancient coin; பழைய நாணயவகை. (*பணவிடு.* 134.)

சோளியல் cōḷiyal, *n.* <U. *jōlnī*. Bag, pouch; சோளிகை. (*நெல்விடு.*)

சோற்றடைப்பு cōṟṟaṭaippu, *n.* <சோறு+. Endowment for free feeding; அன்னதானக்கட்டளை. *சோற்றடைப்புக்கு உடலாம் போனகப் பழநெல்* (S. I. I. vii, 299).

சோற்றுப்புரை cōṟṟu-p-purai, *n.* <id.+. Kitchen; மடைப்பள்ளி. *சோற்றுப்புரை மணியஞ்சூரியன்* (*தெய்வச். விறலிவிடு.* 388).

சோற்றுமுத்து cōṟṟu-muttu, *n.* <id.+. Artificial pearl; போலிமுத்து. *Loc.*

சோறு cōṟu, *n.* Paste used in drums; மிருதங்கத்தின் நடுப்பாகத்திற் பூசும் கலவைச்சாந்து. (*கலைமகள்*, xii, 401.)

சோறுமாடு cōṟumāṭu, *n.* cf. சோறுமாட்டு. A tax; வரிவகை. (S. I. I. vii, 27.)

சோனிசி cōṉici, *n.* Cave; குகை. (யாழ். அக.)

சௌ

சௌபன்னம் caupaṉṉam, *n.* <*sauparṇa.* (யாழ். அக.) 1. Dried ginger; சுக்கு. 2. Emerald; மரகதம்.

சௌரசனம் cauracaṉam, *n.* cf. சூரசேனி. *Cūracēṉī*, a Prakṛt language; சூரசேனி என்னும் பாகதமொழி. (சி. சி. பாயி. 2, மறைஞா. பக். 61.)

ஞ

ஞத்தி ñatti, *n.* <*jñapti.* Understanding; தெளிந்த அறிவு. ஞத்தியுடையவர் முத்திபெறுவர்கள் (பாடு. 91, வீட்டுநெறி).

ஞா

ஞாதி ñāti, *n.* <*jñāti.* One of *ēkātaca-ruttirar*, q. v.; ஏகாதசருத்திரரு ளொருவர். (தக்கயாகப். 443, உரை.)

ஞாபகி ñāpaki, *n.* <ஞாபகம். Person with good memory; ஞாபகசக்தியுள்ளவன். (யாழ். அக.)

ஞாலமாது ñālamātu, *n.* cf. ஞாழல்மாது. Purple stramony; ஊமத்தை. (யாழ். அக.)

ஞாளியாதனம் ñāḷi-y-ātaṉam, *n.* <ஞாளி +. (Śaiva.) A yogic posture; யோகாசனவகை. (தத்துவப். 108, உரை.)

ஞானவாக்கினை ñāṉa-v-ākkiṉai, *n.* <*jñāna*+. Order of the minister; கிறிஸ்தவ குருமாரின் கட்டளை. *Chr.*

ஞானஸ்நானகுல்லா ñāṉasnāṉa-kullā, *n.* <ஞானஸ்நானம்+. Chrisom; கிறிஸ்தவக் குழந்தைக்குப் பேரிடும்போது இடும் ஆடை. *Chr.*

ஞானாத்மா ñāṉātmā, *n.* <*jñāna*+. Buddhi, the principle of the intellect; புத்தி. (விசாரசு. 305.)

ஞானாதிகாரி ñāṉātikāri, *n.* <id.+. (Phil.) One who is qualified to follow the *ñāṉa-mārkkam*; ஞானமார்க்கத்துக் குரியவன். நிராசையுடன் கூடினவன் ஞானாதிகாரி (வேதாந்தசா. 21).

ட

டக்குத்தையல் ṭakku-t-taiyal, *n.* <E. *tack*+. Tacking; ஓட்டுத்தையல். *Loc.*

டக்தர் ṭaktar, *n.* <Fr. *Docteur.* Doctor; வைத்தியன். *Pond.*

டப்பால் ṭappal, *n.* <Hind. *ṭippāl.* Post; தபால். *Mod.*

டப்பு ṭappu, *n.* Log, an instrument for ascertaining the speed of a ship; கப்பற் கதியை அளக்குங் கருவி. (M. Navi. 66.)

டப்புக்கயிறு ṭappu-k-kayiṟu, *n.* <டப்பு+. Rope passing through the holes at the extremities of a log; டப்புப்பலகையின் துவாரங்களின் வழியாய்ச் செல்லுங் கயிறு. (M. Navi. 66.)

டப்புப்பலகை ṭappu-p-palakai, *n.* <id. +. The piece of wood, quadrant in shape, which is used in the log; டப்புக்கருவியிலுள்ள மரத்துண்டு. (M. Navi. 67.)

டபரா ṭaparā, *n.* A kind of metallic cup; பாத்திரவகை. *Madr.*

டமரா ṭamarā, *n.* See டபரா. *Madr.*

டவர்மரம் ṭavar-maram, *n.* <E. *tower*+. Royal mast; பாய்மரத்தின் நாலாவது அல்லது உச்சிப்பாகம். (M. Navi. 81.)

டஸ்தூர் ṭastūr, *n.* Studding sail; பறுவான்களில் விரிக்கப்படுஞ் சதுரப்பாய்களின் வெளிப்புறத்துப் போடப்படுந் துணைப்பாய். (M. Navi. 83.)

டா

டாவு ṭāvu, *n.* Haughtiness; செருக்கு. *Colloq.*

டை

டைமன் ṭaimaṉ, *n.* <E. *diamond.* Diamonds, a suite in playing-cards; விளையாட்டுச்சீட்டுக் கட்டில் ஒருசாதிச் சீட்டு. *Colloq.*

த

தக்காளியுழுவான் takkāḷi-y-uḻuvāṉ, *n.* <தக்காளி+. Mud grillus; பிள்ளைப்பூச்சி. *Pond.*

தக்கிராடம் takkirāṭam, *n.* <*takrāṭa.* Churning stick; மத்து. (யாழ். அக.)

தக்கு-தல் takku-, 5 *v. intr.* To yield; to be submissive; வசப்படுதல். (யாழ். அக.)

தகட்டுக்குழை takaṭṭu-k-kuḻai, *n.* <தகடு +. A part of necklace; கழுத்தணி உறுப்புவகை. (S. I. I. viii, 128.)

தகடு takaṭu, *n.* [T. K. *tagaḍu.*] The middle portion of a plantain leaf, cut longitudinally; வாழையிலையின் நடுப்பகுதியை நறுக்கிய ஏடு. *Tj.*

தகணிதம் takaṉitam, n. perh. *dahana*. cf. தகனே. Oxide of metals; உலோக மணல். (விவ. ரசா. 6.)

தகரம் takaram, n. <*dahara*. Young of an animal; விலங்கின் பிள்ளை. (யாழ். அக.)

தகவன் takavaṉ, n. <தகவு. Worthy man; தகுதியுடையவன். தகவா தகவல்லது செய் தனேயே (சீவக. 1382).

தகன் takaṉ, n. <*dahana*. (யாழ். அக.) 1. Fire; தீ. 2. *Pūrāṉ*, a centipede; பூரான்.

தகனகரம் takaṉa-karam, n. <id.+*kara*. Oxygen; பிராணவாயு. (விவ. ரசா. 5.)

தகனோபலம் takaṉōpalam, n. <*dahanō-pala*. Sun-stone; சூரியகாந்தக்கல். (யாழ். அக.)

தகுணி takuṇi, n. cf. தகுணிச்சம். A kind of drum; வாச்சியவகை. சங்கம் பொற்றாளம் தகுணி துடிபடகம் (சிவைக். பிரபந். தஞ்சைப்பெரு. 51).

தங்கக்கம்பி taṅka-k-kampi, n. <தங்கம்+. Person of amiable character; நல்ல குணமுடைய வ-ன்-ள். தம்பிமேலே சங்கையு மன்புள்ளவன் தங்கக்கம்பி (பெண்மதிமாலை, பக். 6).

தங்கப்பட்டை taṅka-p-paṭṭai, n. <தங்கு-+. Strap for the saddle; சேணங் கட்டுங் கச்சு. (யாழ். அக.)

தங்கப்பூவிராகன் taṅka-p-pū-virākaṉ, n. <தங்கம்+பூ+. A kind of gold mohur; பொன் ஞணயவகை. (யாழ். அக.)

தங்கரளி taṅkaraḷi, n.<id.+அரளி. cf. தங் கலரி. Common yellow trumpet-flowered tree; நாகசெண்பகம். (B.)

தங்கி taṅki, n. <தங்கு-. Support, stay; ஆதாரமானது. *Pond*.

தச்சதுலாம் taccatulām, n. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. iv, 79.)

தசமம் tacamam, n. <*daśama*. One-tenth part; பத்திலொன்று. (யாழ். அக.)

தசராத்திரஞாதி taca-rāttira-ñāti, n. <தசம்+ராத்திரம்+. Agnatic relations within the 7th degree, as persons for whom pollution for 10 days is ordained on occasions of birth and death; பத்துநாள் தீட்டுக் காத்தற்குரிய ஏழுதலை முறைக்குட்பட்ட தாயாதி. *Brah.*

தசாதரு tacā-taru, n. perh. தசம்+. Ten marks of horses; குதிரைச் சுழிகள் பத்து. (அசுவ. 17.)

தசிரம் taciram, n. cf. *dasra*. Drizzling; மழைத்தூறல். (யாழ். அக.)

தஞ்ஞன் taññaṉ, n.<*dakṣa*. Wise man; அறிஞன். (யாழ். அக.)

தட்சணநட்சத்திரராசி taṭcaṇa-naṭcat-tira-rāci, n. <தட்சிணம்+நட்சத்திரம்+. The southern constellations; இராசி மண்டல நட்சத் திரங்களுக்குத் தென்பாலுள்ள நட்சத்திரத் தொகுதி. (M. Navi. 109.)

தட்டஞ்சுற்று-தல் taṭṭañ-cuṟṟu-, v. intr. <தட்டம்+. To go round the deity in a temple with a lighted salver in hand, during the evening service; திருவந்திக்காப்பிற் கடவுளைத் தீபத் தட்டுடன் வலம்வருதல். *Loc.*

தட்டடுவு taṭṭaṭuvu, n. A tax; வரிவகை. (T. A. S. iii, 216.)

தட்டழி-தல் taṭṭaḻi-, v. intr. <தட்டு+. To deteriorate; சீர்கெடுதல். சாப்பாடு மெல்ல மெல்லத் தட்டழிந்து (பஞ்ச. திருமுக. 274).

தட்டாரநாயகன் taṭṭāra-nāyakaṉ, n. <தட்டான்+. An ancient coin; பழைய நாணய வகை. (சரவண. பணவிடு. 58.)

தட்டாரப்பொட்டு taṭṭāra-p-poṭṭu, n. <id.+. Ostentation, show; வெளிவேஷம். (யாழ். அக.)

தட்டான் taṭṭāṉ, n. cf. தட்டான்கொட் டோசை. Common snake-gourd; புடோல். (யாழ். அக.)

தட்டானுப்பி taṭṭāṉuppi, n. A kind of creeper; செடிவகை. (W.)

தட்டுக்கடுதாசி taṭṭu-k-kaṭutāci, n. <தட்டு +. Single sheet of paper; தனிக்காகிதம். *Pond.*

தட்டுக்குதிரை taṭṭu-k-kutirai, n. <id.+. Pony; குதிரைவகை. *Loc.*

தட்டுடை taṭṭuṭai, n. <id.+. Cloth worn round the loins, without passing it between the legs; தட்டாடை. வேறு மடியொன்றைத் தட்டுடையாக உடுத்திக்கொண்டு (மீனாட். சரித். ii, 152).

தட்டுப்புழுகு taṭṭu-p-puḻuku, n. <id.+. Secretion from the gland in the anal pouch of the civet-cat; புனுகுச்சட்டம். தட்டுப்புழுகுஞ் சாத்தி (S. I. I. viii, 186).

தட்டுமாற்று taṭṭu-māṟṟu, n. <id.+. Stratagem; தந்திரம். (W.)

தட்டொலி taṭṭoli, n. An ancient tax; வரிவகை. (S. I. I. ii, 114.)

தட taṭa, *adj.* Soft, tender; மெல்லிய. தடந்தாளென்பது மெல்லியவாகிய ஸ்ரீபாத மென்ற வாறு (நீலகேசி, அவையடக்கம், 1, உரை).

தடநார் taṭanār, *n.* prob. தளை+. cf. தளைநார். Foot-brace used by climbers of palmyras; பனையேறிகள் காலில் மாட்டிக்கொள்ளுங் கயிறு. (யாழ். அக.)

தடனம் taṭaṉam, *n.* <*taḍ*. Patting, tapping; தாடனம். ஒருகை எத்துதடனத்தொனி யெடுத்தெறிய (செல்வி. 286).

தடா taṭā, *n.* <தட. A vessel larger than a *miṭā*; மிடாவினும் பெரிதான பாத்திரம். அந்தப்பானை யெல்லாம் காய்ச்சுகைக்காக மிடாக்களோடும் தடாக்க ளோடும் அடுப்பிலே ஏற்றிவைத்து (திவ். பெரியாழ். 2, 9, 5, வ்யா. பக். 463).

தடாய்-த்தல் taṭāy-, *11 v. tr.* <id. To cause to swell or increase; பெருகச்செய்தல். குண்டோதரன்போல் மாலைத் தடாய்த்து (மதி. க. i, 66).

தடி taṭi, *n.* A linear measure; நீட்டலளவு வகை. தடிநான்கிற் பரந்தன (மேருமந். 1153).

தடிக்கொம்பு taṭi-k-kompu, *n.* <தடி+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 16.)

தடிப்பதக்கு taṭi-p-patakku, *n.* prob. id.+. A tax; பழைய வரிவகை. (S. I. I. v, 114.)

தடிப்புத்தி taṭi-p-putti, *n.* <id.+. Thick headedness; மந்தபுத்தி. *Colloq.*

தடிமறை taṭi-maṟai, *n.* <id.+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரியமாட். 19.)

தடிவால் taṭi-vāl, *n.* <id.+. A defect in cattle; மாட்டுக்குற்றவகை. (பெரிய. மாட். 18.)

தடு-தல் taṭu-, prob. *6 v. intr.* To be agreeable; இசைதல். (யாழ். அக.)

தடுக்கு taṭukku, *n.* See தகடு. *Loc.*

தடுதலை taṭu-talai, *n.* <தடு-+. Impediment; தங்குதடை. அவர்கள் தடுதலையின்றி எங்கும் போவார் கள் (எங்களூர், 24).

தடுபுடு-த்தல் taṭupuṭu-, *11 v. intr.* cf. தட புடல். To be hasty; அவசரப்படுதல். (யாழ். அக.)

தடுபுடுதாயம் taṭupuṭu-tāyam, *n.* <தடுபுடு-+. Hastiness; அவசரம். (யாழ். அக.)

தடுமாற்றம் taṭumāṟṟam, *n.* <தடுமாறு-. The cycle of mortal existence; ஸம்ஸாரம். முன் னைப் பழவினைதான் முதலில்லாத் தடுமாற்றம் (நீல கேசி, 179).

தடுமாறு taṭumāṟu, *n.* <id. Disorder, as of things; derangement; தடுமாற்றம். (தொல். பொ. 308, இளம்பூ.)

தண்டசம் taṇṭacam, *n.* Pincers, tweezers; கருவிவகை. *Loc.*

தண்டதாசன் taṇṭa-tācaṉ, *n.* <*daṇḍa*+*dāsa*. Slave; அடிமை. (யாழ். அக.)

தண்டபாலன் taṇṭa-pālaṉ, *n.* <*daṇḍa-pāla*. Gate-keeper; துவாரபாலகன். (யாழ். அக.)

தண்டபிண்டம் taṇṭa-piṇṭam, *n* <தண்டம்+. Food wasted on useless persons; பயனற்றவர்க்கு இடும் வீண்சோறு. *Loc.*

தண்டம் taṇṭam, *n.* <*daṇḍa*. 1. Kingly justice; செங்கோல். (சுக்கிரநீதி, 22.) 2. Fine; அபராதம். *Loc.*

தண்டல்மேனி taṇṭal-mēṉi, *n.* <தண்டல்+. A tax; வரிவகை. (S. I. I. v, 119.)

தண்டலிற்கடமை taṇṭaliṟ-kaṭamai, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. iii, 115.)

தண்டாதனம் taṇṭātaṉam, *n.* <*daṇḍa*+*āsana*. (Śaiva.) A yogic posture; ஆசனவகை. (தத்துவப். 107, உரை.)

தண்டாயம் taṇṭāyam, *n.* A kind of pincers; குறடுவகை. திருவிலர் நாவினைவாங்க வாங்கு தண்டாயத்தினுல் வலித்து (பெரியபு. சத்தி. 4).

தண்டாளர்முதல் taṇṭāḷar-mutal, *n.* prob. தண்டு+ஆள்-+. An ancient tax; பழைய வரி வகை. (S. I. I. vi, 33.)

தண்டிகை taṇṭikai, *n.* See தண்டியல். *C. N.*

தண்டியல் taṇṭiyal, *n.* cf. தண்டியம். Large house; பெரியவீடு. *C. N.*

தண்டு taṇṭu, *n.* perh. *daṇḍa*. 1. Collection, as of money or grain; தண்டும் பணம் முதலியன. தனிசுதண்டுகள் வாங்கிக் கொடுத்து (S. I. I. v, 321). 2. Cantonment; சேனை தங்கும் இடம். இவரிருந்த இடம் பங்களூர்த்தண்டு (மீனாட். சரித். i, 118).

தண்டுக்கிரந்தி taṇṭu-k-kiranti, *n.* perh. தண்டு+. An eruption that spreads all over the body of a child; போத்திக்கரப்பான். (சங். அக.)

தண்டுலாம்பு taṇṭulāmpu, *n.* <*taṇḍula*+*ambu*. Rice gruel; கஞ்சி. (யாழ். அக.)

தண்டுலோதகம் taṇṭulōtakam, *n.* <id.+*udaka*. See தண்டுலாம்பு. (யாழ். அக.)

தண்டெடுப்பார் taṇṭeṭuppār, *n.* <தண்டு+எடு-. Palanquin bearers; பல்லக்குச் சுமப்பவர். (M. E. R. 570 of 26.)

தண்டேசுரப்பெருவிலை taṇṭēcura-p-peruvilai, *n.* <தண்டேசுரன்+. Price fixed by the temple authorities; கோயிலதிகாரிகள் நிர் ணயிக்கும் விலை. (S. I. I. iv, 129.)

தண்டைச்சுறவு taṇṭai-c-cuṟavu, *n.* perh. தண்டை+. A kind of fish; மீன்வகை. *வெள்ளிறுல் தண்டைச்சுறவு.*

தண்டைப்பூடு taṇṭai-p-pūṭu, *n.* perh. id.+. A parasitic plant growing on walls; சுவரொட்டி. (தைலவ. 406.)

தண்ணாயகர்மகமை taṇṇāyakar-makamai, *n.* <தண்டநாயகர்+. A tax or contribution payable to the military commander; இராணுவவரிவகை. (M. E. R. 510 of 1921.)

தண்ணிமை taṇṇimai, *n.* <தண்-மை. Inferiority; தாழ்வு. *கால்மாற்று தண்ணியபொன்* (S. I. I. ii, 22).

தண்ணீர்க்கொப்பு taṇṇīr-k-koppu, *n.* <தண்ணீர்+. A water-vessel used by Buddhists; பௌத்தர் கைக்கொள்ளும் ஒருவகைப் பாத்திரம். (*நீலகேசி*, 250, *உரை*.)

தண்ணீர்ப்பட்டி taṇṇīr-p-paṭṭi, *n.* <id.+. Gift for providing drinking water; தண்ணீர்ப் பந்தலறத்துக்குவிட்ட நிலம். (S. I. I. iii, 365.)

தண்ணீர்ப்பாடம் taṇṇīr-p-pāṭam, *n.* <id.+. Anything well learnt, as a lesson or science; நன்றாக மனப்பாடமானது. *Colloq.*

தண்ணீர்பட்டபாடு taṇṇīr-paṭṭa-pāṭu, *n.* <id.+படு-+. That which can be easily done or performed; easy work; எளிதாகச் செய்ய வல்லது. *செய்யுளியற்றுவது இவர்க்குத் தண்ணீர்பட்டபாடு* (*மீனாட். சரித்.* ii, 278).

தண்ணீர்விடு-தல் taṇṇīr-viṭu-, *v. intr.* <id.+. To become stale or putrid; நீர் கசிந்து பண்டங் கெடுதல். *சாதம் தண்ணீர்விட்டுப் போயிற்று.* (W.)

தண்பகம் taṇpakam, *n.* A kind of tree; ஒருவகை மரம். *சண்பகந் தண்பகம் பாடலம்* (*மேருமந்.* 585).

தணி-த்தல் taṇi-, *11 v. tr.* <தண்-மை. To bear; பொறுத்தல். *மின்னு . . . . துன்னுவாட்டந் தணித்தலின்* (*சீவக.* 867).

தணிமரம் taṇi-maram, *n.* prob. தணி-+. Lever beam for starting a temple car; தேர் நெம்பு தடி. (சுடு, 1, 4, 6, ஜீ. அரும்.)

தத்தரம் tattaram, *n.* perh. *tatara*. A mode of coition; உபரித் தொழில்வகை. (*தெய்வச். விறலிவிடு.* 256.)

தத்தளங்கெனல் tattaḷaṅkeṉal, *n.* Onom. expr. signifying drum-beat; மத்தள வொலிக் குறிப்பு. *தத்தளங்கென்றே பரதஞ் சாதிப்ப* (*கடம்ப. உலா*, 107).

தத்தாங்காரம் tattāṅkāram, *n.* prob. *dagdha+aṅgāraka*. A hell, one of *mānarakam;* மாநரகங்களு ளொன்று. (*சி. போ. பா.* 2, 3, *பக்.* 203.)

தத்துமடை tattu-maṭai, *n.* <தத்து-+. Side-course in a water channel; நீர்வாய்க்காலின் பக்கத்து மடை. (W.)

தத்துவசம்பிரதம் tattuva-campiratam, *n.* <தத்துவம்+. Magic art by which one of the five elements is made to appear from another; ஒரு பூதத்தில் வேறொரு பூதந் தோற்றுவிக்கும் மகேந்திர சாலவித்தை. (*சௌந்தரிய. ஆனந்.* 30, *உரை*.)

தத்துவதரிசனம் tattuva-taricaṉam, *n.* <id.+. (Śaiva.) A spiritual experience of the soul, one of *taca-kāriyam*, q.v.; தசகாரியத் தொன்று. (*சிவப். கட்.*)

தத்துவம் tattuvam, *n.* <*tat+tva*. Soul; ஆன்மா. (*தத்துவப்.* 8, *உரை*.)

தத்துவான்மா tattuvāṉmā, *n.* <*tattva*+. State of the soul when it is associated with the subtle body; சூக்குமதேகத்தைப்பற்றி நிற்கும் ஆன்மா. (*சி. போ. பா.* 6, 2, *பக்.* 317.)

ததுமல் tatumal, *n.* prob. ததும்பு-. (*யாழ். அக.*) 1. Confusion; குழப்படி. 2. Crowd; கூட்டம்.

ததுளன் tatuḷaṉ, *n.* (*யாழ். அக.*) 1. Youth; இளைஞன். 2. Wind; காற்று.

தந்தக்குறி tanta-k-kuṟi, *n.* <தந்தம்+. (Erot.) Marks made by the teeth of the lover on the limbs of his beloved; சம்போகக்காலத்திற் பல்லால் உண்டான அடையாளம். (*கொக்கோ.*)

தந்ததாளி tanta-tāḷi, *n.* <id.+. A kind of tooth-ache; பல்நோய்வகை. (*பைராச.* i, 218.)

தந்தபுற்பம் tanta-puṟpam, *n.* <id.+. A kind of tooth-ache; பல்நோய்வகை. (*பைராச.* i, 218.)

தந்தவேட்டம் tanta-vēṭṭam, *n.* <*danta-vēṣṭa*. The gums; பல்லீறு. (*யாழ். அக.*)

தந்திப்படு-தல் tantippaṭu-, *6 v. intr.* To be irritated; எரிச்சற்படுதல். (*யாழ். அக.*)

தந்திரவாயன் tantira-vāyaṉ, *n.* <*tantra-vāya.* (*யாழ். அக.*) 1. Spider; சிலந்தி. 2. Weaver; நெசவுகாரன்.

தந்துகடம் tantukaṭam, *n.* perh. *tantu-kīṭa.* Spider; சிலந்தி. (*யாழ். அக.*)

தப்பளம் tappaḷam, *n.* Tamarind soup containing pieces of vegetables; பல காய்கறி களைப் புளியிலிட்டுப் பக்குவப்படுத்திய குழம்பு. *Loc.*

தப்புமுதல் tappu-mutal, *n.* <*தப்பு*+. Casual growth in fields; வயல்களில் தானே முளைக்கும் பயிர். *Tj.*

தபசுகாலம் tapacu-kālam, *n.* <*தபசு*+. See தபசுநாள். *Chr.*

தபசுநாள் tapacu-nāḷ, *n.* <id.+. Lent, as the period of fasting; கிறிஸ்தவர்கள் கொண் டாடும் உபவாசநாள். *Chr.*

பசியன் paciyaṉ, *n.* <பசி. Hungry man; பசியுடையவன். பசியரா யிருக்குமவர்கள் சோறு சமையப்பற்றாமல் வெந்தது கொத்தையாக வாயிலிடு மாபோலே (ஈடு, 1, 3, 1).

பசு-த்தல் pacu-, *11 v. intr.* <பசு-மை. To be green; பசுமையாதல். பசுத்து மரகதம்போலே யிருக்கிற மடக்கிளியே (திவ். பெருமாள். தனியன், 3).

பசுங்கூட்டு pacuṅ-kūṭṭu, *n.* <id.+. Ground lime; சுண்ணம்புச்சாந்து. ஆட்டாண்டு தோறும் பசுங்கூட்டாலே ஜீர்ணோத்தாரம் பண்ண வேண்டுகையாலும் (S. I. I. vii, 501).

பசுந்தாளெரு pacun-tāḷ-eru, *n.* <id.+ தாள்+. Green leaves, used as manure; தழை யுரம். *Loc.*

பசுப்பு pacuppu, *n.* <பசு-. 1. Greenness; பசுமை. ஆற்றங்கரைப் பசுத்தா னக்கரையோ டிக்கரை யாய்த் தோற்றும் பசுப்பைத் தொடர்வுறுமே (பாடு. 29, நெஞ்சிற்.). 2. [T. *paśupu*] Greenish yellow; பசுமைகலந்த மஞ்சள் நிறம். (நாநார்த்த. 674.)

பசுபாகநியாயம் pacu-pāka-niyāyam, *n.* <பசு+. (Log.) A *nyāya*; நியாயவகை. (அபி. சிந். 613.)

பசுவன் pacuvaṉ, *n.* cf. *basava.* The boy in charge of the bull-worship in a *kōlāṭṭam* festival; கோலாட்டக் கொண்டாட்டத்திலே விருஷப பூஜை செய்யும் மாணி. *Loc.*

பசை pacai, *n.* A kind of lubricant for carts; உசவு. *Tj.*

பசைப்படம் pacai-p-paṭam, *n.* <பசை+. Cloth smeared with paste and prepared for painting; கஞ்சிபூசிப் படமெழுதத் தயாரித்த துணி. (பஞ்சதசப்பிர. பக். 2.)

பசைபிடி pacai-piṭi, *n.* <id.+. Sliminess, slipperiness; வழவழப்பு. *Loc.*

பசைமண் pacai-maṇ, *n.* <id.+. Clay; களிமண். *Pond.*

பஞ்சகண்டி pañca-kaṇṭi, *n.* <*pañcan*+. A kind of necklace; கழுத்தணிவகை. (T. A. S. ii, 68.)

பஞ்சகம்மியர் pañca-kammiyar, *n.* <id. +. The five castes of artisans; பஞ்சகம்மாளர். (சிற்பரத். முகவுரை, பக். 10.)

பஞ்சகிருத்தியம் pañca-kiruttiyam, *n.* <id.+. The five occupations, viz., agriculture, trade, weaving, writing and fighting; உழுதுபயிர்செய்தல் பண்டங்களைநிறுத்துவிற்றல் நூல் நூற்றல் எழுதுதல் படைகொண்டுகாரியம்பயிலுதல் ஆகிய ஐந்து தொழில்கள்.

பஞ்சசரம் pañca-caram, *n.* <id.+*sara.* A necklace of five strings; ஐந்து சரமுடைய தாழ்வடம். *த்ரிஸரம் பஞ்சஸரம் ஸப்தஸரம் என்றுற் போலே சொல்லுகிற முத்து வடங்களையும்* (திவ். அமலனுதி. 10, வ்யா. பக். 104).

பஞ்சசரன் pañca-caraṉ, *n.* <id. + *śara.* The God of Love; மன்மதன். *கன்னல்வில்ற் பஞ்சசர னுதியோர்* (சிவக். பிரபந். பக். 247).

பஞ்சசன்மவாதனம் pañca-caṉma-v-ātaṉam, *n.* <id. +. A yōgic posture; யோகாசன வகை. *பஞ்சசன்ம வாதனத்திடைப் பண்பொடுமிருந்து* (விநாயகபு. 80, 716).

பஞ்சசீலம் pañca-cīlam, *n.* <id.+. (Buddh.) The five rules of conduct, viz., *ahimcai, sattiyam, astēyam, piramacariyam, asaṅkirakam;* அஹிம்சை ஸத்தியம் அஸ்தேயம் பிரமசரியம் அஸங்கிரகம் ஆகிய ஐவகைப்பட்ட பௌத்த ரொழுக்கம். (மணி. 21, 231, கீழ்க்குறிப்பு.)

பஞ்சட்டைக்கம்பு pañcaṭṭai-k-kampu, *n.* prob. பஞ்சு+அட்டை+. An instrument used in spinning; நூல் நூற்பதற்கேனும் பஞ்சு வெட்டு வதற்கேனும் உபயோகப்படுத்தும் ஒரு கருவி. *Nāñ.*

பஞ்சணகுலம் pañcaṇa-kulam, *n.* prob. *pañcan*+. The caste of Viśvakarmas; விசுவகர்ம குலம். (மக்களே. சிறப்பு.)

பஞ்சதிரவியம் pañca-tiraviyam, *n.* <id.+. The five articles used in bathing an idol, viz., *mañcal, mā, nellimuḷḷi, tiraviya-p-paṭṭai,* etc.; மஞ்சள் மா நெல்லிமுள்ளி திரவியப் பட்டை முதலிய அபிஷேக பண்டங்கள். (S. I. I. v, 86.)

பஞ்சநாதம் pañca-nātam, *n.* <id.+. The five kinds of musical instruments. See பஞ்சமாசத்தம். (பெரியபு. அதிபத். 19.)

பஞ்சநிம்பம் pañca-nimpam, *n.* <id.+. The five parts of the margosa; வேம்பினது ஐந்துறுப்புக்கள். (R.)

பஞ்சபட்சிபாஷாணம் pañca-paṭci-pāṣāṇam, *n.* prob. id.+. A prepared arsenic; வைப்புப்பாஷாணவகை. (W.)

பஞ்சபத்திரம் pañca-pattiram, *n.* <id. +. Offerings of food-stuffs, made along with cooked rice, to a deity; சுவாமிக்குப் படைத்தற்குரிய நைவேத்தியவகை. (S. I. I. iv, 141.)

பஞ்சபரிவர்த்தனம் pañca-parivart-taṉam, *n.* <id. + *parivarttana.* (Jaina.) The five conditions of one's activities, viz., *tiraviyam, kṣēttiram, kālam, pavam, pāvam;* உயிர் வியாபரிப்பதற்குரிய திரவியம் க்ஷேத்திரம் காலம் பவம் பாவம் ஆகிய ஐவகைப்பட்ட நிலைமைகள். (நீல கேசி, 1, உரை.)

பஞ்சபாண்டவர்முல்லை pañca-pāṇṭa-var-mullai, *n.* <id.+. A shrub; செடிவகை. (பதார்த்த. ii, 116.)

பஞ்சமகர் pañca-makar, *n.* <id. + Persn. *muhra.* A way of ending a game in chess, when the total of pieces on both sides is five; சதுரங்க ஆட்டத்தில் இரு பக்கங்களின் காய்களுஞ் சேர்ந்து ஐந்தாவதால் ஆட்டம் முடிவுறுகை.

பஞ்சமகாயக்கியம் pañca-makā-yakki-yam, *n.* <id. + *mahā-yajña.* (Śaiva.) The five sacrifices, viz., *kaṉmayakkiyam, tapōyakkiyam, capayakkiyam, tiyāṉayakkiyam, ñāṉayakkiyam;* கன்மயக்கியம் தபோயக்கியம் சபயக்கியம் தியான யக்கியம் ஞானயக்கியம் என்ற ஐவகை யக்கியங்கள். (சி. சி. 8, 23, சிவாக்.)

பஞ்சமகாவிரதம் pañca-makā-viratam, *n.* <id. + *mahā-vrata.* (Jaina.) The five great vows of ascetics, viz., non-killing, truth-speaking, non-stealing, celibacy, and not taking gifts; அஹிம்சை சத்தியம் அஸ்தேயம் பிரம்மசரியம் அபரிக்கிரகம் என்ற துறவிகளுக்குரிய ஐம்பெரும் விரதங்கள். (மேருமந். முக. xv.)

பஞ்சமசுருதி pañcama-curuti, *n.* <*pañcama*+. (Mus.) Fifth note of the gamut; சப்தசுரங்களுள் ஐந்தாவது. (பரத.)

பஞ்சமணம் pañca-maṇam, *n.* <*pañcan* +. The five aromatics; பஞ்சவாசம். (பொதி. நி. 30.)

பஞ்சமவேதம் pañcama-vētam, *n.* <*pañcama*+. The Mahābhārata, considered as the fifth Vēda; ஐந்தாம் வேதமாகக் கருதப்படும் மகா

பாரதம். *பஞ்சமவேதமான மஹாபாரதத்தில் எழுதக் கூடாதிறே* (*திவ். பெரியதி.* 1, 1, *வ்யா. பக்.* 48).

பஞ்சமாசத்தம் pañca-mā-cattam, *n.* <*pañcan*+. The five drums, viz., *ceṇṭai, timilai, cēkaṇṭi, kai-t-tāḷam* and *kāḷam* or *taltaḷi, mattaḷi, karaṭikai, tāḷam, kākaḷam*; செண்டை திமிலை சேகண்டி கைத்தாளம் காளம் என்றும் தத்தளி மத்தளி கரடிகை தாளம் காகளம் என்றும் இருவித மாகச் சொல்லும் ஐவகைப் பறை. (T. A. S. v, 172.)

பஞ்சமுகம் pañca-mukam, *n.* <id.+. A kind of surgical instrument; சத்திரவைத்தியத்தி லுபயோகிக்கும் ஆயுதவகை. (*தஞ். சர.* iii, 40.)

பஞ்சமுத்திரை pañca-muttirai, *n.* <id.+. An ornament worn on the foot, consisting of pieces shaped like the five weapons of Viṣṇu; பஞ்சாயுத வடிவங்களாகச் செய்து சேர்த்த காலணி. (*சீகாழிக்.* 411.)

பஞ்சரட்டை pañcaraṭṭai, *n.* A kind of bird; பறவைவகை. (*தஞ். சர.* iii, 160.)

பஞ்சலத்தார் pañcalattār, *n.* perh. *pañcan.* The five artisan communities; பஞ்ச கம்மாளர். (I. M. P. Cg. 692.)

பஞ்சவர் pañcavar, *n.* <id. (Jaina.) The five groups of heavenly bodies, viz., *cantiraṉ, cūriyaṉ, 7 kōḷ, 27 nakṣatras* and the other stars; சந்திரன் சூரியன் ஏழுகோள்கள் இருபத் தேழு நட்சத்திரங்கள் ஏனைய நட்சத்திரங்கள் ஆகிய ஐவகைச் சோதிகள். (*தக்கயாகப். பக்.* 282.)

பஞ்சவாரம் pañca-vāram, *n.* <id.+. Land revenue due to government and payable in kind, being one-fifth of the tenant's share of the produce; கண்டுமுதலிற் குடியானவன் பங்கில் ஐந்திலொரு பாகமாகிய அரசிறை. (S. I. I. iii, 380.)

பஞ்சாங்கம் pañcāṅkam, *n.* <id.+. (Jaina.) The five elements constituting the sin of killing; கொலைப்பாவத்துக்குரிய ஐந்து உறுப் புக்கள். (*நீலகேசி,* 541, *உரை.*)

பஞ்சாணுவிரதம் pañcāṇu-viratam, *n.* <id.+ *அணு*+. (Jaina.) The five vows practised by laymen; சைனருள் இல்வாழ்வான் அனுஷ் டிக்கும் ஐந்து விரதங்கள். (*மேருமந். கதை.* 24.)

பஞ்சாரத்திருவிளக்கு pañcāra-t-tiru-viḷakku, *n.* perh. *பஞ்சரம்*+. A kind of light; விளக்குவகை. (S. I. I. v, 215.)

பஞ்சாலவச்சு pañcāla-v-accu, *n.* A coin; நாணயவகை. (I. M. P. Cm. 359.)

பஞ்சான் pañcāṉ, *n.* A kind of fish; மீன்வகை. *கோளையாளை லொஞ்சான் பஞ்சான்* (*குருகூர்ப்.* 7).

பஞ்சிகரன் pañcikaraṉ, *n.* <*pañjikāra.* One who prepares almanacs; பஞ்சாங்கங் கணிப் போன். *Pond.*

பஞ்சிகை pañcikai, *n.* perh. *pañcikā.* Journal; பத்திரிகை. *Loc.*

பஞ்சீகிருதம் pañcīkirutam, *n.* <*pañcīkṛta.* That which is effected by *pañcīkaraṇam;* பஞ்சீகரணப்பட்டது. *பஞ்சபூதங்க ளொன்றோ டொன்று பஞ்சீகிருதமாய்க் கலந்து* (*வேதாந்தசா.* 45).

பஞ்சுபடு-தல் pañcu-paṭu-, *v. intr.* <*பஞ்சு*+. To become light or useless; to be valueless; எளிமையாதல். *பஞ்சுபடு சொல்லவரிவன்* (*தாயு. தேசோ.* 5).

பஞ்சைப்பனாதி pañcai-p-paṉāti, *n.* <*பஞ்சை*+. Useless person; vagabond; அனாதை. (*மதி. க.* ii, 61.)

பட்சம் paṭcam, *n.* <*pakṣa.* Leaning; சார்பு. (*சைவப்பிரகாசன.* 16.)

பட்டகம் paṭṭakam, *n.* <*paṭṭaka.* A piece of cloth; துணி. *பட்டகசாலையுள் பட்டகத்தை விரித்துக்கொண்டிருந்தனள்* (*ஸ்ரீபுராணம்.* Ms.).

பட்டசாலியன் paṭṭacāliyaṉ, *n.* cf. *பட்டாலியன்.* A class of weavers; நெசவுத் தொழிலாளிகளுள் ஒருவகையினன். (S. I. I. iii, 265.)

பட்டடைச்சட்டம் paṭṭaṭai-c-caṭṭam, *n.* <*பட்டடை*+. Sleeper; தண்டவாளம் முதலிய வற்றிற்கு அடியிலிடுங் கனத்த மரத்துண்டு. (C. E. M.)

பட்டடைப்பலகை paṭṭaṭai-p-palakai, *n.* <id.+. Wooden seat in a shop, for the shop-keeper; கடையில் வியாபாரிகள் உட்காரும் பலகை. *Loc.*

பட்டடைப்பாடு paṭṭaṭai-p-pāṭu, *n.* <id.+. Shortage in stored paddy, due to shrinkage, waste, etc.; பட்டடையிற் காணும் நெற் குறைவு. *சம்பாவிற் பட்டடைப்பா டென்றெழுதி* (*சரவண. பணவிடு.* 137).

பட்டடைவரி paṭṭaṭai-vari, *n.* perh. id.+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. v, 95.)

பட்டடைவாய்ச்சீட்டு paṭṭaṭai-vāy-c-cīṭṭu, *n.* <id.+. Ola memorandum stuck in a heap of harvested paddy, showing the quantity stored; வாயோலை. *பட்டடைவாய்ச்சீட்டெழுதிப் புப்பார்* (*சரவண. பணவிடு.* 113).

பட்டப்பாழ் paṭṭa-p-pāḻ, *n.* prob. பட்டம் +. Waste land; சாகுபடியற்ற நிலம். (S. I. I. iv, 289.)

பட்டவஸ்திரம் paṭṭa-vastiram, *n.* <id. +. Royal robe; அரசர்க்குரிய உடை. (W.)

பட்டவாளிமரம் paṭṭavāḷi-maram, *n.* <படு-+. Dead tree; பட்டமரம். *Loc.*

பட்டன் paṭṭaṉ, *n.* perh. *bhaṭṭa*. Truthful man; சத்தியவாதி. (திவ். பெரியாழ். 1, 8, 11, வ்யா. பக். 182.)

பட்டாரிகை paṭṭārikai, *n.* <*Bhaṭṭārikā*. Durgā; துர்க்கை. (S. I. I. iii, 136, n.)

பட்டாவளப்பட்டு paṭṭāvaḷa-p-paṭṭu, *n.* A kind of silk; பட்டுவகை. (S. I. I. v, 103.)

பட்டிக்காடி paṭṭikkāṭi, *n.* A tax; வரி வகை. (S. I. I. vii, 67.)

பட்டிக்கால் paṭṭikkāl, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 67.)

பட்டிகைக்காணம் paṭṭikai-k-kāṇam, *n.* <பட்டிகை+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. ii, 352.)

பட்டிடுவான் paṭṭituvāṉ, *n.* <படு-+இடு-. A term of abuse, meaning 'damned fellow'; ஒரு வசை மொழி. இத்தனையும் வேண்டும் பட்டிடு வானுக்கு (ஈடு, 1, 2, ப்ர.).

பட்டித்தண்டம் paṭṭi-t-taṇṭam, *n.* <பட்டி +. A tax; வரிவகை. (M. E. R. 139 of 1912.)

பட்டிதின்(னு)-தல் paṭṭi-tiṉ-, *v. intr.* <id.+. See பட்டிபுகு-. பட்டிதின்று திரியுங் கன்றுபோலே (திவ். பெரியாழ். 1, 6, 6, வ்யா. பக். 123).

பட்டிநோன்பு paṭṭi-nōṉpu, *n.* <id.+. The festival of ceremonial boiling of rice on the *māṭṭu-p-poṅkal* day; மாட்டுப்பொங்கல். (எங்களூர், 89.)

பட்டிப்பொன் paṭṭi-p-poṉ, *n.* <id.+. A money tax; காசாயவகை. (S. I. I. iv, 195.)

பட்டிபாப் paṭṭi-pāp, *n.* <id.+. Sundry cesses; சில்லறை வரிகள். (R. T.)

பட்டிபுகு-தல் paṭṭi-puku-, *v. intr.* <id. +. To graze stealthily; to go astray; வேற்றுப் புலத்தில் மேய்தல். அயோக்ய விஷயாந்தரங்களில் பட்டிபுக்க வாஸனைகளை மாற்றுவிக்கவும் (ரஹஸ்ய. 507).

பட்டிமாறித்திரி-தல் paṭṭi-māṟi-t-tiri-, *v. intr.* <id.+மாறு-+. To go from place to place; ஊருராய்த் திரிதல். பாரமிறுகச் சுமந்து பட்டி மாறித்திரிந்த சீரும் (பஞ்ச. திருமுக. 1331).

பட்டிறைப்படு-தல் paṭṭiṟai-p-paṭu-, *v. intr.* perh. படு-+இறை+. To be in arrears of tax; அரசிறை செலுத்தப்படாது போதல். எங்களூர் பட்டிறைப்பட்டமையால் (S. I. I. vii, 40).

பட்டினக்கரையார் paṭṭiṉa-k-karaiyār, *n.* <பட்டினம்+. A sub-division of the Paḷḷar caste; பள்ளருள் ஒருவகையினர். *Tp.*

பட்டுக்குட்டை paṭṭu-k-kuṭṭai, *n.* <பட்டு +. Silk cloth, worn over the shoulder; பட்டு அங்கவஸ்திரம். *Pond.*

பட்டுத்துத்து paṭṭu-t-tuttu, *n.* <id.+. Cappadine, a sort of silk flock or waste; பட்டுப் பூச்சியின் கூட்டிலிருந்து பட்டுநூலை யெடுத்தபின் எஞ்சியிருக்குங் கழிவுபட்டு. *Pond.*

பட்டுரோஜா paṭṭu-rōjā, *n.* <id.+. A variety of red rose; சிவப்புநிறமுள்ள ரோஜாவகை. *Loc.*

பட்டுவலை pattu-valai, *n.* <id.+. A kind of net; வலைவகை. *Pond.*

பட்டுவாழை paṭṭu-vāḻai, *n.* <id.+. A species of big red plantain; வாழைவகை. *Loc.*

பட்டுறுமாலை paṭṭuṟumālai, *n.* <id.+உறு மால். See பட்டுக்குட்டை. *Pond.*

பட்டைக்கருப்பட்டி paṭṭai-k-karuppaṭṭi, *n.* <பட்டை+. A kind of jaggery; கருப்புக் கட்டிவகை. *Nāñ.*

பட்டைக்கிண்ணம் paṭṭai-k-kiṇṇam, *n.* <id.+. A kind of vessel; பாத்திரவகை. *Loc.*

பட்டைச்சட்டம் paṭṭai-c-caṭṭam, *n.* <id.+. Reeper; கூரையைத் தாங்குவதற்குக் கை மரத்தின்மேல் நீட்டுப்போக்கில்வைக்கும் மரச்சட்டம். *Madr.*

பட்டைதீர்-த்தல் paṭṭai-tīr-, *v. tr.* <id. +. To cut the facets, as of diamonds; வயிரம் முதலியவற்றைச் செதுக்கி வேலைசெய்தல். *Loc.*

பட்டைப்பலகை paṭṭai-p-palakai, *n.* <id.+. Mantel-piece; சுவரில் தொங்கவிடுந் தட்டுப்பலகை. *Madr.*

பட்டைப்பிதுக்கம் paṭṭai-p-pitukkam, *n.* <id.+. Entablature; தூணின் தலைமேற்பகுதி. *Pond.*

பட்டைப்புழு paṭṭai-p-puḻu, *n.* <id.+. Tapeworm; புழுவகை. (M. L.)

பட்டைப்பேன் paṭṭai-p-pēṉ, *n.* <id.+. An insect; பூச்சிவகை. (அபி. சிந்.)

பட்டோலைக்காசு paṭṭōlai-k-kācu, *n.* <பட்டோலை+. An ancient tax, in cash; காசாய வகை. (S. I. I. i, 89.)

படக்கு paṭakku, *n.* perh. படக்கெனல். Fireworks, crackers; பட்டாசு. *Nāñ.*

படகம் paṭakam, *n.* cf. பிடாகம். A measure of land; நிலவளவு. (I. M. P. Cg. 193, ft.)

படப்பாதி paṭa-p-pāti, *n.* perh. படு-+பாதி. Joining, in carpentry; மரப்பலகைகளைப் பொருத்துந் தச்சுவேலைவகை. (W.)

படர் paṭar, *n.* <படர்-. Cruelty; தறுகண்மை. படரொருமைப் பகட்டின்மிசை (தக்கயாகப். 463).

படலிகை paṭalikai, *n.* A measure of quantity; ஓர் அளவு. வெற்றிலை படலிகையால் ஒரு பற்று (S. I. I. iii, 10).

படவடி-த்தல் paṭa-v-aṭi-, *v. tr.* <படு-+. To vanquish; to lay low; தோற்பித்தல். வெறும் புறத்திலே படவடிக்கவல்ல கையிலே. . . . பாஞ்சஜந்யம் . . . திருவாழி இவற்றை யுடையராயிருக்கை (திவ். அமலனாதி. 7, வ்யா. பக். 83).

படாங்கழி paṭāṅ-kaḻi, *n.* <படாம்+. A kind of tax; வரிவகை. (S. I. I. ii, 352.)

படாம் paṭām, *n.* <படம். A piece of cloth, used as headdress; பரிவட்டம். படாம் பீடம் படுத்தே (ஞானதீக்ஷை. 3).

படி¹-தல் paṭi-, 4 *v. intr.* To be fit or suited; பொருந்துதல். வளை கைக்குப் படிந்திருக்கிறது.

படி² paṭi, *n.* A measure of 34 *palam;* 34 பலங்கொண்ட ஒரு நிறை. (G. Tn. D. i, 238.)

படிகளை-தல் paṭi-kaḷai-, *v. tr.* <படி+. To undress, as an idol; விக்கிரகத்தின் அலங்காரத்தை நீக்குதல். *Loc.*

படிச்சட்டம் paṭi-c-caṭṭam, *n.* <id.+. Palanquin of an idol; விக்கிரகங்களை எடுத்துச் செல்லுங் கோயிற்சிவிகைவகை. (சிவக். பிரபந். பக். 237.)

படித்தளம் paṭi-t-taḷam, *n.* <id.+. Step of a staircase; படிக்கட்டு. ஓராம் படித்தளமாம் (கட்டபொம்மு. பக். 58).

படிப்பினை paṭippiṉai, *n.* <படி-. *Mod.* 1. Lesson; புத்திமதி. 2. Moral; நீதி.

படிமா paṭimā, *n.* <Pkt. *paḍimā* <*pratimā.* Example; illustration; திருஷ்டாந்தம். நம்மோடு ஸஜாதீயர்பக்கல் பரிமாறினதன்றோ நமக்குப் படிமா (ஈடு, 10, 4, 5).

படியள-த்தல் paṭi-y-aḷa-, *v. intr.* <படி+. To supply articles of food for maintenance; ஜீவனத்திற்குரியனவற்றை யளித்தல். பல்லுயிருக்கெல்லாம் படியளக்கும் வேலவரே (சதிரை மலைப்பேரின்பக்காதல், 13).

படிவிஞ்சனம் paṭi-viñcaṉam, *n.* <படி+வியஞ்சனம். Articles other than rice for the preparation of food, as in a temple; நித்தியப்படித்தரமான வியஞ்சனப்பொருள். தேங்காய் பழம் உள்ளிட்ட படிவிஞ்சனங்களுக்கும் (S. I. I. iv, 129).

படிவிடை paṭi-v-iṭai, *n.* <படி-+. Snare; கண்ணி. *Pond.*

படிவு paṭivu, *n.* <id. See படிவிடை. *Pond.*

படிற்றொழுக்கம் paṭiṟṟoḻukkam, *n.* <படிறு+. Hypocritical conduct; போலி ஒழுக்கம். வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் (குறள், 221).

படுகால் paṭu-kāl, *n.* <படு-+. 1. Step; படி. செஞ்சுட் டிட்டிகைச் சுதைச்சுவர்ப் படுகால் (பெருங். உஞ்சைக். 40, 316). 2. *Mēkalai,* a girdle; மேகலை. மணிப் படுகால் (பரிபா. 10, 11).

படுகொலைக்காரன் paṭukolai-k-kāraṉ, *n.* <படுகொலை+. Cold-blooded murderer; assassin; கொடுங்கொலை செய்வோன். நீர்மை கேடனை அப் படுகொலைக்காரனால் (ஈடு, 10, 3, 1).

படுதண்டு paṭu-taṇṭu, *n.* <படு-+. Poles for carrying temple vehicles; திருவாடுதண்டு. *Loc.*

படுநிலம் paṭu-nilam, *n.* <id.+. Barren tract of land; விளையா நிலம். (R. T.)

படுபாதி paṭu-pāti, *n.* <id.+. Just half; சரிபாதி. அறுப்பம் புல்லாய் படுபாதிபோக (சரவண. பணவிடு. 144).

படுமுடை paṭu-muṭai, *n.* <id.+. Flesh of animals which died a natural death; தானே இறந்துபட்ட பிராணிகளின் ஊன். தகவுடையோருண்ணும் படுமுடை தின்பார்க்கு (நீலகேசி, 332, உரை).

படுவாரி paṭu-vāri, *n.* <id.+. Spontaneous growth springing up from stray grains in the field after harvest; அறுவடையான பின் உதிர்ந்த நெல்லினின்றும் தானே உண்டாகும் பயிர். (R. T.)

படைநாயகம் paṭai-nāyakam, *n.* <படை+. Command of the army; சேனைத்தலைமை. (S. I. I. vii, 49.)

படைப்பணம் paṭai-p-paṇam, *n.* <id.+. An ancient tax; வரிவகை. (I. M. P. Tv. 40, A.B.)

படைப்புவரி paṭaippu-vari, *n.* <படைப்பு +. A kind of musical composition in which all the various elements are represented; இசைப் பாட்டுவகை. (சிலப். 7, 4-ம் பாட்டு, உரை.)

படையழிவு paṭai-y-aḻivu, *n.* <படை+. Crops destroyed by the march of troops; பயிர் களுக்குப் போர் வீரரால் உண்டாஞ் சேதம். (Pudu. Insc. 323.)

படையறு-தல் paṭai-y-aṟu-, *v. intr.* <id. +. To become subordinate or submissive; கீழ்ப்பட்டு அடங்குதல். (ஈடு, 1, 9, 9, ஜீ.)

பண் paṇ, *n.* prob. பண்ணு-. Land, field; வயல். (M. E. R. 12 of 1923.)

பண்குறுணி paṇ-kuṟuṇi, *n.* perh. பண் +. A tax; வரிவகை. (M. E. R. 442 of 1925.)

பண்டந்தாங்கி paṇṭan-tāṅki, *n.* <பண்டம் +. Table, shelf or other article of furniture, used as a stand; பண்டங்களை வைக்க உதவும் மேசை முதலியன. *Loc.*

பண்டப்பேழை paṇṭa-p-pēḻai, *n.* <id. +. Dresser; சமையற் சாமான்களை வைக்கும் பண்டந்தாங்கி. *Pond.*

பண்டவெட்டி paṇṭa-veṭṭi, *n.* <id.+. A tax; வரிவகை. (S. I. I. v, 365.)

பண்டாடுபழநடை paṇṭāṭu-paḻa-naṭai, *n.* <பண்டு + ஆடு- +. Ancient, immemorial custom; நீண்டகாலமாக நடந்து வரும் வழக்கம். *பண்டாடுபழநடை இறுத்து வந்த தரத்திலே* (S. I. I. v, 142).

பண்டாரக்கண்காணி paṇṭāra-k-kaṇ-kāṇi, *n.* <பண்டாரம்+. Treasury officer; பொக்கிஷ அதிகாரி. *விற்குமிடத்துப் பண்டாரக்கண் காணி புறப்பட்டு விலை நிச்சயித்து* (S. I. I. viii, 42).

பண்டாரக்கல் paṇṭāra-k-kal, *n.* <id. +. Weight used by the Government Treasury; அரசாங்கப்பொக்கிஷத்தி லுபயோகிக்கும் நிறை. (S. I. I. iii, 295.)

பண்ணறையன் paṇṇaṟaiyaṉ, *n.* <பண் + அறு-. One who talks gibberish, gibberer; தெளிவாகப் பேச இயலாதவன். *மூக்கிழந்த பண் ணறையனுறும் பாராரோ* (நெல்விடு. 270).

பண்ணாட்டு paṇṇāṭṭu, *n.* <பண்ணை + ஆடு-. Authority; அதிகாரம். *வெள்ளைக்காரன் காலத்திலே தலைதலைக்குப் பண்ணாட்டு* (எங்களூர், 152).

பண்ணாடி paṇṇāṭi, *n.* <id. + id. Master; அதிகாரி. (எங்களூர், 16.) *ஆள் ஆளும் பண்ணாடி எருது ஆர் மேய்க்கிறது?*

பண்ணிக்கக்கூலி paṇṇikka-k-kūli, *n.* perh. பணிக்கு+. A tax; வரிவகை. (S. I. I. vi, 189.)

பண்ணையம் paṇṇaiyam, *n.* <பண்ணை. Farming; பண்ணைவைத்து நடத்தும் விவசாயம். (எங்களூர், 21.)

பணம் paṇam, *n.* <*paṇa*. Bet; பந்தயம். *சூதில் . . . வருக்கமார் பொருளனைத்தையும் பணத் திடைமாய்த்தே* (வேதாரணி. பலப். 4).

பணம்பு paṇampu, *n.* [K. *pranambu*.] Bridge; பாலம். (ஸ்ரீபுராணம். Ms.)

பணவர்க்கம் paṇa-varkkam, *n.* <பணம் +. Tax payable in cash; காசாயம். (Insc.)

பணவாசி paṇa-vāci, *n.* <id. +. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. iv, 122.)

பணாமுடி paṇā-muṭi, *n.* <*phaṇā*+. The hood of the cobra, as its crown; பாம்பின் படமுடி. *சோதிப் பணாமுடி யாயிரங் கொண்ட தொல் லறி வென்னுமோர் பாம்பின்மேல்* (பாரதி. பாஞ்சாலி, 1, 81).

பணாமுத்திரை paṇā-muttirai, *n.* <id. +. A handpose, in worship; முத்திரைவகை. (சைவாநு. வி. 18.)

பணி paṇi, *n.* <பணி-. Lowness; meanness; தாழ்ச்சி. (ஈடு, 10, 3, 4, ஜீ.)

பணிக்கு paṇikku, *n.* cf. பணிக்கம். *Pond.* 1. Detailed account or statement; விவரமான குறிப்பு. *நிலங்களின் பணிக்கு.* 2. Counsel; ஆலோசனை.

பணிக்கூடம் paṇi-k-kūṭam, *n.* <பணி +. Smithy; கொல்ல னுலைக்கூடம். (நாநார்த்த. 948.)

பணிக்கொத்து paṇi-k-kottu, *n.* <id. +. Cess collected for the maintenance of village servants; கிராம ஊழியக்காரருக்காக வாங்கும் வரி வகை. (S. I. I. v, 374.)

பணித்திருத்தம் paṇi-t-tiruttam, *n.* <id. +. Fineness of workmanship; வேலைப்பாட்டின் நேர்த்தி. *பணித்திருத்தத்தால் வந்தவழகு தோன்றி யிருக்கிறபடி பாராய்* (திவ். பெரியாழ். 2, 3, 2, வ்யா. பக். 281).

பணிபோ-தல் paṇi-pō-, *v. intr.* <id. +. To be engaged, as in a work; தொழில் புரிதல். *அவர்கள் சப்தாதி விஷயங்களிலே அன்யபராராய் அவற்றோடே பணிபோந்திருந்தார்கள்* (ஈடு, 10, 6, ப்ர. பக். 177).

பணிலம் paṇilam, *n.* Conch bracelets; சங்கினாலியன்ற கைவளைவகை. *கைப்பணிலந்தன்னைக் கழற்றிவிடுத்து* (சொக்க. உலா, 171).

பணிவிடைமடத்தாள் panivitai-matat-tāḷ, n. <பணிவிடை+. Lay sister; மடத்துத் துணைச்சகோதரி. *Pond.*

பணை paṇai, n. prob. பணை-. 1. Anvil; உலைக்களத்துப் பட்டடை. (குறள், 828, மணக். பக். 28.) 2. Tusk of an elephant; யானைத் தந்தம். மகரிகையு மிருபணைகளும் . . . ஒளிவிட . . . முடுகினகரிகளே (பாரத. பதினாறும். 20).

பணையேர் paṇai-y-ēr, n. perh. பணம்+ஏர். Hired plough, dist. fr. *māṟṟēr;* கூலிக்குவிடும் ஏர். *Loc.*

பத்தடி pattaṭi, n. <பற்று+. Place, locality; இடம். எந்த பத்தடியிலிருந்து வருகிறாய்?

பத்தம்[1] pattam, n. cf. பற்றம். Mass, heap, collection; குவியல். தூற்றும்பத்தம் (பட்டினத்துப். கோயிற்றிரு. 2).

பத்தம்[2] pattam, n. cf. பத்தர். Eating vessel; உண்கலம். பத்தங்குடை செருப்புந்தொழு பாவீ (நீலகேசி, 328).

பத்தர் pattar, n. A part of *yāḻ;* யாழ் ஜேறுப்பு. பத்தருங் கோடு மாணியு நரம்புமென்று (சிலப். கானல். கட்டுரை).

பத்தல் pattal, n. See பத்தர். குளப்பு வழி யன்ன கவடுபடு பத்தல் (பொருந. 4).

பத்தாந்து pattāntu, n. <E. Patent; தான் நூதனமாக உண்டாக்கிய பொருளைப்போல் பிறர் செய்யாது தடுத்துத் தானே செய்து பயன் பெற தற்கு அரசாங்கத்தாரளிக்கும் உரிமை. *Loc.*

பத்தியவிளக்கம் pattiya-viḷakkam, n. <பத்தியம்+. Dietary; பத்தியமான ஆகாரமுறை. *Pond.*

பத்திரகடம் pattira-kaṭam, n. <*bhadra*+. Pot filled with water and sanctified by rites; பூர்ணகும்பம். (T. A. S. v, 162.)

பத்திராசனம் pattirācaṉam, n. <*bhadrāsana.* Throne; சிங்காதனம். பத்திராசனங் கொண்டுள்ள பதிகளா (வீரமா. நால்வர. 5).

பத்து pattu, *part.* 1. A prefix to numerals, meaning 'about'; எண்ணுக்கு முன் சேர்த்து 'உத்தேசமாக' என்னும் பொருளில் வருஞ் சொல். உண்டாலும் ஒரு காலே பத்தெட்டு நாளைக்கு உண்ணவுமாய் (திவ். திருநெடுந். 1, வ்யா.). 2. Card marked with ten pips, in playing cards; சீட்டுக் கட்டில் பத்துக்குறியுள்ள சீட்டினம். *Loc.*

பதசம் patacam, n. <*patasa.* (W.) 1. Bird; பறவை. 2. Moon; சந்திரன்.

பதபாளி pata-pāḷi, n. <*pada*+*pāli.* Word-sequence; சொற்களின் வரிசை. (விவேகசிந். பக். 6.)

பதரப்படு-தல் patara-p-paṭu-, v. intr. <பதர்-+படு-. To escape; தப்புதல். பதரப்படாமே பழந்தாம்பா லார்த்த (திவ். பெரியாழ். 1, 2, 9).

பதவளை pata-vaḷai, n. <பதம்+. Swelling in the joints; நெறிக்கட்டி. *Loc.*

பதாகினி patākiṉi, n. <*palākinī.* Army carrying banners; கொடிப்படை. நாயகி பதாகினிகளே (தக்கயாகப். 433).

பதிக்கினி patikkiṉi, n. <*pati-ghnī.* One who murders her husband; புருஷனைக் கொன்றவள். (W.)

பதிதரிராப்போசனம் patitar-irā-p-pōcaṉam, n. <பதிதன்+இரா+. The Lord's supper; இயேசுவின் கடைசி இராப்போஜனம். *Pond.*

பதிப்பெயர்-த்தல் pati-p-peyar-, v. tr. <பதி+. To relinquish; விட்டுநீக்குதல். உண்ணு கோன்போ லுயிர்பதிப்பெயர்ப்புழி (மணி. 14, 95).

பதிபந்தம் patipantam, n. <*prati-bandha.* Obstacle; தடை. வர்த்தமானப் பதிபந்தங் காண் (வேதா. சூ. 141).

பதிபாதமூலப்பட்டுடையார் pati-pāta-mūla-p-paṭṭuṭaiyār, n. <பதி+பாதம்+மூலம்+பட்டு+. A class of temple servants; கோயிற் பணியாளர்வகை. (S. I. I. ii, 111.)

பதியார் patiyār, n. <பதி. Temple servants; கோயிற் பணியாளர். (S. I. I. iv, 295.)

பதினாறுமார் patiṉaṟumār, n. <பதினாறு. A temple committee in ancient days, consisting of sixteen persons; பதினாறுவர் கொண்ட கோயில் விசாரணைச்சபையார். (T. A. S. iii, 191.)

பதினாறுவரிகருமம் patiṉāṟu-vari-karumam, n. <id.+வரி+. A method of calculation; கணிதவகையு ளொன்று. (யாப். வி. 528.)

பதுக்கம் patukkam, n. <பதுங்கு-. Snare; கண்ணி. *Pond.*

பதுப்பி-த்தல் patuppi-, 11 v. tr. cf. பதுக்கு-. To hide; மறைத்தல். பண்டைக் கோலத்தைப் பதுப்பித்திடும் பட்டாங்குரையாய் (வள்ளி. கதை. Ms.).

பதுமை patumai, n. <*padmā. Patuma-niti;* பதுமநிதி. (அபி. சிந்.)

பதுவாரம் patuvāram, n. A tax; வரி வகை. (S. I. I. viii, 214.)

பந்தயமரம் pantaya-maram, n. <பந்தயம்+. Greasy climbing pole; வழுக்குமரம். *Pond.*

பந்தர்ச்சேலை pantar-c-cēlai, *n.* <பந்தர்+. A kind of saree, as from Bunder, the modern Masulipatam; புடைவைவகை. (பஞ்ச. திருமுக. 1163.)

பந்தர்ப்புகையிலை pantar-p-pukaiyilai, *n.* <id.+. A variety of tobacco, as from Masulipatam; புகையிலைவகை. (மதி. க. ii, 194.)

பந்தாட்டு-தல் pantāṭṭu-, *v. tr.* <பந்து+. To tease; to vex; அலைத்து வருத்துதல். பந்தாட்டியே விடுவேனடி (குருகூர்ப். 89).

பந்திக்கட்டு panti-k-kaṭṭu, *n.* <பந்தி+. Dining hall; உணவருந்துவதற்கென்று அமைத்த கட்டிடம். உக்கிராணம் களஞ்சியம் பந்திக்கட்டு பண்ணை முதலிய எல்லா இடங்களின் விசாரணை வேலைகளின் (மீனாட். சரித். i, 36).

பந்திவழங்கு-தல் panti-vaḻaṅku-, *v. intr.* <id.+. To serve food; உணவுபரிமாறுதல். பந்தி வழங்கவிலை (கோவை. 15).

பப்பு-தல் pappu-, *5 v.* perh. பப்பு. *intr.* To roam about; பாவித்திரிதல். சேரன் குலத்தனும் பப்பிப்போய படைஞன் (தியாக. லீலை. 14, 7).—*tr.* To eat; உண்ணுதல். பாரணமாய்த் தான்றானே பப்பினன் (பஞ்ச. திருமுக. 2016).

பம்மாற்று pammāṟṟu, *n.* perh. Persn. *bīmnāk.* cf. பம்மாத்து. False show; பம்மாத்து. பம்மாற்றுக் காட்டிவந்த பாழ்ம்பாதரோ (பஞ்ச. திருமுக. 617).

பமோஜிப் pamōjip, *adv.* <Persn. *bha*+ Arab. *mūjib.* According to; conformably to; அதன்படி. (P. T. L.)

பயணஉத்தரவுச்சீட்டு payaṇa-uttaravu-c-cīṭṭu, *n.* <பயணம்+உத்தரவு+. Port clearance; கப்பல் துறைமுகத்தைவிட்டகலுமுன் கொடுக்கப்படும் அனுமதிச் சீட்டு. (M. Navi.)

பயந்தான்கொள்ளி payantāṉ-koḷḷi, *n.* <பயம்+. Coward; பயங்கொள்ளி. *Loc.*

பயரப்பெறு-தல் payara-p-peṟu-, *v. tr.* prob. பெயர்-+. To resume, as by Government; அரசாங்கத்தாரால் திரும்ப எடுத்துக்கொள்ளப்படுதல். (T. A. S. iii, 167.)

பயற்றுருண்டை payaṟṟuruṇṭai, *n.* <பயறு+. A kind of sweet cake; போரிவிளங்காய். *Loc.*

பயா payā, *n.* A kind of drum; தக்கா என்னும் முழவு. (கலைமகள், xii, 402.)

பயிர்கொளுத்து-தல் payir-koḷuttu-, *v. intr.* <பயிர்+. To cultivate; பயிர்செய்தல். எதப் பயிர்கொளுத்த மேற்பாடும் (சரவண. பணவிடு. 24).

பயிர்ச்செலவு payir-c-celavu, *n.* <id.+. Cultivation, husbandry; பயிர்த்தொழில். *Loc.*

பயிரடைப்பு payir-aṭaippu, *n.* <id.+. Tenancy; நிலத்தைப் பயிர்செய்ய ஒப்படைக்கை. பயிரடைப்பான நிலத்திலே (S. I. I. v, 373).

பயிரேற்று-தல் payir-ēṟṟu-, *v. tr.* <id.+. To cultivate; பயிர்செய்தல். பயிரேற்றி அனுபவிக்க (S. I. I. iv, 134).

பர்மாக்கொண்டை parmā-k-koṇṭai, *n.* perh. மருமா+. A mode of plaiting hair; மயிர்ப்பின்னல் வகை. *Loc.*

பரக்கூலி para-k-kūli, *n.* perh. புறம்+. Wages for carrying; சுமைகூலி. பரக்கூலிபட்டுக் கொண்டுவந்து (S. I. I. v, 497).

பரகசியம் parakaciyam, *n.* cf. பரசியம். Revealing or publishing secrets; அந்தரங்கச் சமாசாரத்தை வெளியிடுகை. (யாழ். அக.)

பரகுடி para-kuṭi, *n.* perh. பரம்+. Non-resident ryot farming land in a village; புறக்குடி. (G. Sm. D. I, ii, 283.)

பரகுரு para-kuru, *n.* <*para*+. Spiritual preceptor; ஞானசாரியன். (ஞானதீக்ஷை. 1.)

பரங்கிக்கள்ளவராகன் paraṅki-k-kaḷḷa-varākaṉ, *n.* <பரங்கி+. An inferior coin; மட்டமான நாணயவகை. (சரவண. பணவிடு. 206.)

பரங்கியாமணக்கு paraṅki-y-āmaṇakku, *n.* <id.+. Papaw; பப்பாளி. (M. M. 55.)

பரசிவைக்கியம் para-civaikkiyam, *n.* <பரம்+சிவம்+. Union of the individual soul with the Supreme Soul; சீவான்மாவும் கடவுளும் ஒன்றுகை. (விவேகசூடா. 9.)

பரசூனியவாதம் para-cūṉiya-vātam, *n.* <id.+சூனியம்+. Egoism; மமகாரம். *Pond.*

பரதளவிபாடன் paratala-vipāṭaṉ, *n.* <*para-dala-vipāṭa.* 'Destroyer of enemy's forces', a military title; பகைப்படையை அழிப்பவன் என்று பொருள்படும் ஒரு விருது. பகைவீர வீரன் பரதளவிபாடன் (குழைக்காதர் திருப்பணிமாலை, 16).

பரதாகம் para-tākam, *n.* perh. *pari-tāpa.* Distress; வருத்தம். பார்த்தவுடனெங்கள் பரதாக மோர் வாக்கால் தீர்த்தருளும் (தெய்வச். விறலிவிடு. 75).

பரப்பிரமவிந்து para-p-pirama-vintu, *n.* <பரம்+பிரமம்+. Sublimate of mercury; வாலரசம். (மூ. அ.)

பரப்பு parappu, *n.* See பரம்பு. பரப்பில் காசும் செல்லும் நியோகம் எழுதி (S. I. I. vi, 29).

பரம் param, n. <*para*. Mendicant; பரதேசி. நீ கிருத்திகைதோறும் பத்துப் பரங்கட்குத் தவறுத அன்னம் போட்டுவோ (மதி. க. i, 180).

பரம்பர் parampar, n. cf. பறம்பர். A class of cultivators; உழவர் குடிவகை. அளவர் பள்ளிகள் பரம்பர் உட்பட உழுது இறுத்து (S. I. I. vii, 385).

பரம்பு parampu, n. Revenue account; வரிக்கணக்கு. பரம்பில் செல்லுங்காசும் வெள்ளாளர் பக்கல் நியோகமெழுதிக் கொள்ள (S. I. I. vi, 27).

பரம்மக்கன்கல் parammakkaṉ-kal, n. Sati stone; உடன்கட்டையேறியவளைக் குறிக்கும் அடையாளக்கல். (M. E. R. 192 of 1931-32.)

பரமகலை parama-kalai, n. <*Parama*+*kalā*. Pārvatī; பார்வதி. (கூர்மபு. திருக்கலியாண. 23.)

பரமபதபடம் paramapata-paṭam, n. <பரமபதம்+. Board for a kind of backgammon; கட்டங்களிற் காய் வைத்தாடும் ஒருவகை விளையாட்டிற்குரிய படம். *Loc.*

பரமாணுவாதம் paramāṇu-vātam, n. <பரமாணு+. Atomic theory of the origin of the world; பிரபஞ்சம் அணுக்கூட்டத்தாலாகியது என்னும் நையாயிக மதம். (பிரபஞ்ச. வி. 28.)

பரரூபம் para-rūpam, n. perh. *para*+. Permutation of letters; எழுத்துக்களைச் மாறிச் சேர்த்து அமைக்கை. (R.)

பரவிந்து para-vintu, n. <id.+. (Śaiva.) Śakti in union with Śiva; சிவத்தோடு ஒன்றிய சக்தி. (சி. போ. பா. 223.)

பராக்கு parākku, n. <*parāk*. Diversion; கவனம் மாறுகை. *Colloq.*

பராசிதம் parācitam, n. <*aparājitā*. *Viṭṭuṇukkirānti*, a medicinal plant; விட்டுணுக்கிராந்தி. (நாமதீப. 324.)

பராத்தம் parāttam, n. cf. வராத்தம். Order; கட்டளை. (W.)

பராபரிப்பு parāparippu, n. <பராபரி-. cf. பராமரிப்பு. Supervision; மேற்பார்வை. பராபரிப் பாளன் (தண்டிகைக்கனகராயன்பள்ளு, குறிப்பு. 69).

பரார்த்தலிங்கம் parārtta-liṅkam, n. <*parārtha*+. Śiva liṅgam in a temple, of five kinds, viz., *cuyampu-liṅkam*, *kāṇa-liṅkam*, *taivika-liṅkam*, *ārita-liṅkam* and *māṇuta-liṅkam*; சுயம்புலிங்கம் காணலிங்கம் தைவிகலிங்கம் ஆரிடலிங்கம் மானுடலிங்கம் என்று ஐவகைப்பட்டதும் திருக்கோயிலிலுள்ளதுமான சிவலிங்கம். (சிவாலயதரிசன விதி, பக். 3.)

பராவிவை-த்தல் parāvi-vai-, v. tr. <பராவு-+. To make an offering to a deity in fulfilment of a vow; நேர்த்திக்கடனுகக் கொடுத்தல். (S. I. I. viii, 379.)

பரிகம் parikam, n. A kind of spoon கரண்டிவகை. (E. T.)

பரிகருமம் pari-karumam, n. (Math.) A method of calculation; கணிதவகையு ளொன்று. (யாப். வி. 528.)

பரிகாரன் parikāraṉ, n. <*parikāra*. Servant; வேலைக்காரன். மடத்துப் பரிகாரர்களுக்கும் (S. I. I. v, 189).

பரிகை parikai, n. perh. *parigha*. Guard; காவல். படைப்பரிகைத் தூரகங்கள் (தக்கயாகப். 267).

பரிச்சேதம் pariccētam, n. <*paricchēda*. Small portion, part; சிறு பகுதி. *Pond.*

பரிசங்கிளத்தல் paricaṅ-kiḷattal, n. <பரிசம்+. (Akap.) Theme in which the lady's maid informs the hero of an impossibly high bride-price; தலைவியை மணத்தற்குரிய அருவிலையைத் தோழி தலைவனுக்கு உரைத்தலாகிய அகத்துறை. (களவியற். 115.)

பரிசம்[1] paricam, n. <*sparśa*. Hard consonant; வல்லெழுத்து. பரிசம் வல்லினப்பெயர் (போகத். 31).

பரிசம்[2] paricam, n. cf. புருஷம். Depth; ஆழம். நாலாள் பரிசம்.

பரிசவேதி parica-vēti, n. <*sparśa*+*vedhin*. Transmuter; பரிசனவேதி. நீர் நம்முடைய பரிசவேதி என்று அருளிச்செய்து (குருபரம். பக். 484).

பரிசவேதைமணி paricavētai-maṇi, n. <பரிசவேதி+. An alchemic substance; இரசவாதத்திற்குரிய மருந்துவகை. (தஞ். சர. iii, 58.)

பரிசனைவைத்தியன் paricaṉai-vaittiyaṉ, n. prob. பரிசனை+. Quack doctor; போலிவைத்தியன். *Pond.*

பரிசை paricai, n. <*pariṣahā*. (Jaina.) The troubles endured for checking karma; கருமத்தைத் தடுத்தற்பொருட்டுப் பொறுக்கவேண்டுந் துன்பங்கள். ஆற்றல் பரிசை முதலாகிய வன்னவெல்லாம் (நீலகேசி, 125).

பரித்தம் parittam, n. <Pali. *parittam* <*paritrā*. Invocation to a deity for deliverance from calamity; கஷ்டநிவாரணத்தின் பொருட்டுச் செய்யும் ஸ்தோத்திரம். மோரிப்பரித்தம் (நீலகேசி, 1, உரை).

பரிதாபி paritāpi, *n.* <*paritāpa*. Sufferer; துன்புறுபவன்-ள். பேதையேன் றன்னைப் பரிதாபி யாக்கலென் (சரபேந்திரபூபாலகுறவஞ்சி, 17, 1).

பரிது paritu, *n.* cf. பரிசு. Manner, mode; விதம். பட்டபரிது விடுபேறு அட்டிப்பேருக (T. A. S. ii, 68).

பரிப்பிராசகர் parippirācakar, *n.* <*parivrājaka*. A class of ascetics; துறவியருள் ஒரு சாரார். (மேருமந். 75.)

பரிபிரமி-த்தல் paripirami-, *11 v. intr.* <*pari-bhrama*. To whirl round; சுழலுதல். சம்சாரத்துப் பரிபிரமிக்கின்றான் (நீலகேசி, 189, உரை).

பரிபுஷ்கரை paripuṣkarai, *n.* A kind of cucumber, *Cucumis madraspatanus;* வெள்ளரி வகை. *Pond.*

பரிமளவெண்ணெய் parimaḷa-v-eṇṇey, *n.* <பரிமளம்+. Consecrated oil, used in baptism; ஞானஸ்நானத்தில் உபயோகிக்குந் தைலம். *Chr.*

பரியநுயோச்சியோபேக்ஷணம் pari-yanuyōcciyōpēkṣaṇam, *n.* <*paryanuyojya*+*upēkṣaṇa*. (Log.) A defect in argumentation; தோல்வித்தானத்தொன்று. (செந். iii, 13.)

பரிவாரக்கொந்தம் parivāra-k-kontam, *n.* perh. பரிவாரக்கொத்து. Temple servants; கோயிற் பணியாளர். (S. I. I. iv, 492.)

பருக்கு-தல் parukku-, *5 v. tr.* Caus. of பருகு-. To increase; பெருக்குதல். (பாரத. i, 231.)

பருக்கை parukkai, *n.* <பரு-. Refuse, dregs; sediment; கோது. அதில் பருக்கை தட்டாத படி அதின் வாயிலே பிழியுமாய்த்து (திவ். பெரியதி. 1, 2, 5, வ்யா.).

பருங்கல் paruṅkal, *n.* perh. பருக்கு-. Fear; அச்சம். *Loc.*

பருதி paruti, *n.* <*paridhi*. Quoit; விளை யாட்டுக்குரிய வளையம். *Pond.*

பருந்தடைப்பு paruntaṭaippu, *n.* <பருந்து +. Double bracket ( ); எழுத்துக்கள் எண்கள் முதலியவற்றை அடைத்துக் காட்டுவதற்கு இடும் ஓர் அடையாளக்குறி. *Mod.*

பருநடை paru-naṭai, *n.* <பரு-மை+. Swift walk, as of bull; வேகமான நடை. *Loc.*

பரும்பிடி parum-piṭi, *n.* <id.+. Extortion; அநீதமாய்ப் பொருள்பறிக்கை. *Pond.*

பரும்புடவை parum-puṭavai, *n.* <id. +. A kind of cloth; ஆடைவகை. பரும்புடவைப் பொதி ஒன்றுக்குக் காசு பத்து (S. I. I. viii, 233).

பருமிப்பு parumippu, *n.* <பருமி-. Fencing; சிலம்பம். *Pond.*

பருமுளைவராகன் parumuḷai-varākaṉ, *n.* A coin; நாணயவகை. (M. E. R. 1923-4, p. 110.)

பருமைசெய்-தல் parumai-cey-, *v. tr.* <பருமை+. To repair; திருத்திச் செப்பனிடுதல். இம்மடைகளும் கரையும் பருமைசெய்கைக்கு (S. I. I. vii, 252).

பருவரு-த்தல் paruvaru-, *5 v. intr.* <பரு வா-. To be distressed in mind; மனம்வருந்துதல். இவட்கு உறுத்துமென்று பருவருத்திருப்பதுஞ் செய் யார் (குறள், 1127, மணக்.).

பருஷி-த்தல் paruṣi-, *11 v. tr.* <*paruṣa*. To chide; கடிதல். மெத்தெனப் பருஷித்தற்காக வருநன்மையும் இல்லையன்றே (நீலகேசி, 537).

பல்சந்தி pal-canti, *n.* <பல்+. (அரு. நி.) 1. Sugar-cane; கரும்பு. 2. Bamboo; மூங்கில்.

பல்லா pallā, *n.* <புல்லா. A linear measure; நீட்டலளவைவகை. (W.)

பல்லி palli, *n.* <வல்லி. Root; வேர். (திவ். பெரியாழ். 3, 4, 2, வ்யா. பக். 594.)

பல்லிங்காஸனம் palliṅkāsaṉam, *n.* A posture of Jaina ascetics; சைனத்துறவியின் ஆசன வகை. (கனம்கிருஷ்ணையர், 3-4.)

பல்லிடுக்கி pal-l-iṭukki, *n.* <பல்+. Pincers to extract teeth; பல்லைப் பிடுங்குங் குறடு. *Pond.*

பல்லுவன் palluvaṉ, *n.* cf. பல்லவன். Mean person; இழிந்தோன். (நாமதீப. 178.)

பல்லூகம் pallūkam, *n.* <*bhallūka*. Bear; கரடி. (W.)

பல்வாங்கி pal-vāṅki, *n.* <பல்+. See பல்லிடுக்கி. *Pond.*

பல்வேவு pal-vēvu, *n.* <id.+. Toothache; பல்நோய்வகை. (பாரத. i, 218.)

பலகாயம் pala-kāyam, *n.* <பல+. Sundry spices, as pepper, etc.; மிளகு கடுகு வெந்தயம் போன்ற கறிக்கு உதவும் பண்டங்கள். பலகாயம் நிசதி மிளகு ஆழாக்கும் கடுகு உழக்கும் (S. I. I. iii, 381).

பலகீரைப்பதார்த்தம் palakīrai-p-patārttam, *n.* <id.+கீரை+. A relish made of *kalavai-k-kīrai;* கலவைக்கீரைக் கறி. *Pond.*

பலகீரைபறி-த்தல் palakīrai-paṟi-, *v. intr.* <பலகீரை+. To do mischief; தீங்குசெய் தல். *Colloq.*

பலகைசுரண்டி palakai-curaṇṭi, *n.* <பல கை+. Carpenter's scraping instrument; சீவுளி. *Loc.*

பலஞ்ஜீப்காயி palañ-jīp-kāyi, *n.* <E. Flying jib guys; பலாஞ்ஜீப்பூம் மரத்தின் பக்க ஆதாரமாகக் கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

பலஞ்ஜீப்மத்தான்காயி palañ-jīp-mat-tāṉkāyi, *n.* <E. *flying* + E. *jib* + E. *martingale*. Flying martingale; பலாஞ்ஜீப்பூம் மரத்தின் கீழ்ப் புறம் ஆதாரமாகக் கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

பலப்பிரமதனி pala-p-piramataṉi, *n.* <*bala* + *pramathanī*. One of *nava-śakti*; நவசக்திகளு ளொன்று. (அபி. சிந்.)

பலராசனம் palar-ācaṉam, *n.* <பலர் +. Sofa; மஞ்சம். *Pond.*

பலவரவை pala-varavai, *n.* <பல + வா-. Lands acquired bit by bit, in a village; பலவழி யிற் சில்லறையாக வந்த நிலங்கள். விக்கிரமசோழ நல்லூரில் பலவரவையான நிலத்து (S. I. I. viii, 29).

பலவிகரணி pala-vikaraṇi, *n.* <*bala* +. One of *nava-śakti*; நவசக்திகளு ளொன்று. (அபி. சிந்.)

பலாங் palāṅ, *n.* Clew-garnets; கப்பற் சதுரப் பாய்களைச் சுருட்டும்போழுது அவற்றின் கீழ் மூலைகளைப் பறுவானுக்கு இழுக்க உதவுங் கயிறு. (M. Navi.)

பலாஞ்ஜீப்பு palāñ-jīppu, *n.* <E. *flying* + E. *jib*. Sail tied to the flying-jib; கப்பலின் பலாஞ்ஜீப்பூம் என்ற உத்திரத்தில் விரிக்கப்படும் பாய். (M. Navi.)

பலாஞ்ஜீப்பூம் palāñ-jīppūm, *n.* <id. + E. *jib-boom*. Flying jib-boom; ஜீப்பூமிலிருந்து புறப்படும் உத்திரம். (M. Navi.)

பலாட்டியன் palāṭṭiyaṉ, *n.* <*balāḍhya*. Strong man; பலசாலி. *Loc.*

பலானிஜீப்பூம் palāṉi-jīppūm, *n.* See பலாஞ்ஜீப்பூம். (M. Navi.)

பலித்தாலம் pali-t-tālam, *n.* <பலி +. A kind of plate; தாம்பாளவகை. (S. I. I. iv, 8.)

பலியோச்சு-தல் pali-y-ōccu-, *v. intr.* <id. +. To offer sacred offerings; நிவேதனம் படைத்தல். (சிவக். பிரபந். பக். 136.)

பலீவர்த்தம் palīvarttam, *n.* <*balīvarda*. Bull; காளை. (திவ். பெரியாழ். 2, 1, 2, வ்யா. பக். 210.)

பலூத் palūt, *n.* Village servant; கிராம வேலையாள். (M. Sm. D. i, 278.)

பவநாமேசுவரன் pava-nāmēcuvaraṉ, *n.* <*bhava* + *nāman* +. A Rudra; உருத்திரரு ளொருவர். (தக்கயாகப். 443, உரை.)

பவப்ரிய pavapriya, *n.* (Mus.) A primary *rāga*; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

பவம்[1] pavam, *n.* <*bhava*. A cant for eleven; பதினொன்றை யுணர்த்துங் குறிப்புச்சொல். மணிப் பவம் (தைலவ. தைல.).

பவம்[2] pavam, *n.* <பவமத்திமம். A stanza of four lines of equal number of *cīr*; பவமத்திமம். (யாப். வி. பக். 483.)

பவழத்திரி pavaḻa-t-tiri, *n.* <பவளம் +. A necklet made of coral; பவழமாலைவகை. (பெருங். மகத. 17, 163.)

பவளவடம் pavaḷa-vaṭam, *n.* <id. +. Wristlet of coral; பவளத்தாலான முன்கை வளை. மணிக்கட்டில் சாத்தின சிறுப்பவளவடமும் (திவ். பெரியாழ். 1, 5, 10, வ்யா.).

பவன் pavaṉ, *n.* <*Bhava*. A Rudra; உருத்திரரு ளொருவர். (தக்கயாகப். 443, உரை.)

பழக்கவழக்கம் paḻakka-vaḻakkam, *n.* <பழக்கம் +. Manners and customs; ஆசார விவகாரங்கள். *Colloq.*

பழங்கண்ணோட்டம் paḻaṅ-kaṇṇōṭṭam, *n.* <பழ-மை +. Sympathy felt on account of old and long acquaintance; நெடுநாட் பழக்கத் தால் நிகழும் இரக்கம். (குறள், 1292, உரை.)

பழங்கறி paḻaṅ-kaṟi, *n.* <id. +. Remnant of relishes, rehashed and preserved; முதனாட் சமைத்து மிஞ்சியதாய் மறுநாள் உபயோகத்திற்குப் பக்குவப்படுத்திய கறி. *Loc.*

பழங்காடி paḻaṅ-kāṭi, *n.* <id. +. Sour vinegar; மிகப்புளித்த காடி.

பழங்கிணறு paḻaṅ-kiṇaṟu, *n.* <id. +. Unused well; பாழான கிணறு. *Loc.*

பழங்கிணறுதூர்வாங்கு-தல் paḻaṅ-kiṇaṟu-tūr-vāṅku-, *v. intr.* <id. + கிணறு +. To talk about old and forgotten things; மறந்துபோன செய்திகளை நினைப்பூட்டிப் பேசுதல். *Loc.*

பழஞ்செய்க்கடன் paḻañ-cey-k-kaṭaṉ, *n.* <id. + செய் +. Unpaid balance of land revenue; நிலவரிப்பாக்கி. பழஞ்செய்க்கடன் வீடு கொண்டது (புறநா. 35).

பழந்தண்ணீர் paḻan-taṇṇīr, *n.* <id. +. Water allowed to stand overnight on cooked rice; நீராகாரம். *Colloq.*

பழம்பஞ்சாங்கம் paḻam-pañcāṅkam, *n.* <id. +. *Colloq.* 1. Old tale; பழைய கதை. 2. Old-fashioned person; பழையகாலத்து வழக்க வொழுக்கத்தையுடையவ-ன்-ள்.

பழம்புள்ளிமாடை palam-pulli-māṭai, *n.* <id.+புள்ளி+. An ancient coin; பழைய நாணயவகை. (S. I. I. iv, 291.)

பழமுதல்கண்காணி pala-mutal-kaṇkāṇi, *n.* <id.+முதல்+. Temple supervisor; கோயில் மேற்பார்வையாளன். (M. E. R. 1 of 1921.)

பழமுந்தினவெட்டு paḷa-muntiṉa-veṭṭu, *n.* <id.+முந்து-+. An ancient coin; பழைய நாணயவகை. (பணவிடு. 141.)

பள்ளி paḷḷi, *n.* [M. *paḷḷi*.] Christian church; கிறிஸ்தவக் கோயில். *சவேரியார் கோயிற் பள்ளி.*

பள்ளிக்குன்று paḷḷi-k-kuṉṟu, *n.* <பள்ளி+. Mt. Kailās; கைலாச பருவதம். *பள்ளிக்குன்றும் விற்குன்று மொழிய* (தக்கயாகப். 536).

பள்ளிச்சிவிகை paḷḷi-c-civikai, *n.* <id.+. A kind of palanquin; பல்லக்குவகை. (S. I. I. iii, 271.)

பள்ளிசை pal-l-icai, *n.* <பள்+. A dramatic poem, dealing with the life of Pallas; பள்ளுப்பிரபந்தம். (*தண்டிகைக்கனகராயன் பள்ளு, குறிப். 3.*)

பள்ளித்தோழன் paḷḷi-t-tōḻaṉ, *n.* <பள்ளி+. Schoolmate; ஒருசாலைமாணுக்கன். *Pond.*

பள்ளியுணர்-தல் paḷḷi-y-uṇar-, *v. intr.* <id.+. To wake up from sleep; துயில் நீங்குதல். *பள்ளியுணர்ந்தா னவனைப் பார்த்து* (பாரதவெண். 85).

பள்ளிவத்தன் paḷḷi-vattaṉ, *n.* <id.+*varjya*. One who is unfit to enter a Buddhist monastery; பௌத்தப்பள்ளியிற் புகுதற்குத் தகுதியற்றவன். *பத்தின்மேலும் பழிசெய்யுமேற் பள்ளிவத்தன் கண்டீர்* (நீலகேசி, 247).

பள்ளிவிளாகம் paḷḷi-viḷākam, *n.* <id.+. cf. மடவிளாகம். Streets around a Jaina temple; சினாலயத்தைச் சுற்றியிருக்குந் தெருக்கள். (M. E. R. 415 of 1928-29.)

பள்ளிவெற்பு paḷḷi-verpu, *n.* <id.+. See பள்ளிக்குன்று. *பள்ளிவெற்பின் மாறுகோள் பெருது* (தக்கயாகப். 371).

பள்ளேசல் pal-l-ēcal, *n.* <பள்+. See பள்ளிசை. (குருகூர்ப். 2, 3.)

பளாயோக்கியம் paḷā-yōkkiyam, *n.* <பளா+. A term meaning 'very good'; 'மிகவும் நன்று' என்ற பொருளில் வழங்குஞ் சொல். *Loc.*

பளிங்கர் paḷiṅkar, *n.* A hill tribe; ஒருவகை மலைச்சாதியார்.

பளிங்கு paḷiṅku, *n.* Topaz; புஷ்பராகம். (S. I. I. ii, 204.)

பளியர் paḷiyar, *n.* cf. பளிங்கர். A hill tribe of the Western Ghats in Pāṇḍya country; பாண்டிநாட்டில் மேற்குமலைத்தொடரில் வசிக்கும் ஒருவகை மலைச்சாதியார். (G. Tn. D. i, 6.)

பற்கிட்டுநோய் paṟ-kiṭṭu-nōy, *n.* <பல்+கிட்டு-+. Tetanus; நாட்கிட்டிசன்னி. *Loc.*

பற்சாரம் paṟ-cāram, *n.* <id.+. A disease; நோய்வகை. (பதார்த். i, 235.)

பற்பபாதன் parpapātaṉ, *n.* <*padma-pāda*. Viṣṇu, as having feet resembling lotus flowers; திருமால். *பரக்கவைத் தளந்து கொண்ட பற்பபாத னல்லையே* (திவ். திருச்சந். 32).

பற்றக்சார் paṟṟakcār, *n.* <E. *futtock*. Futtock shrouds; காவிமரத்தின் கயிறுகளை அடிமரத்தோடு இணைக்குங் கயிறு. (M. Navi.)

பற்றறு-த்தல் paṟṟaṟu-, *v. tr.* <பற்று+. To decide; தீர்மானித்தல். *வழக்குகளைப் பற்றறுத்து வருவேனுன் உன்னிடத்தில்* (கோவ. க. 42).

பற்று-தல் paṟṟu-, *5 v. intr.* To hold oneself in patience; to wait; பொறுத்தல். *சோறு சமையப் பற்றுமல்* (ஈடு, 1, 3, 1).

பற்றுக்கம்பு paṟṟu-k-kampu, *n.* <பற்று+. Peg planted in the levelling plank; பரம்புமரத்தில் ஊன்றுங் கழி. *Loc.*

பற்றுக்காவல் paṟṟu-k-kāval, *n.* <id.+. Watch for the lands; நிலக்காவல். *Nāñ.*

பற்றுப்பருக்கை paṟṟu-p-parukkai, *n.* <id.+. Grain of cooked rice; சோற்றுப்பருக்கை. *Loc.*

பற்றுப்பாடு-தல் paṟṟu-p-pāṭu-, *v. intr.* prob. id.+. To sing in accompaniment; வாரம் பாடுதல். (சிலப். 6, 19, அரும்.)

பற்றுப்பார்-த்தல் paṟṟu-p-pār-, *v. intr.* <id.+. To test by rubbing, as a piece of turmeric; உரைத்துப் பரிசோதித்தல். *ஊரிற் பெண்கள் தங்களுக்குப் பூசுகைக்கு மஞ்சள் அரைத்தால் பற்றுப்பார்ப்பது இவனுடம்பிலே யாய்த்து* (திவ். பெரியாழ். 3, 2, 2, வ்யா. பக். 536).

பற்றுப்பொதுக்காவல் paṟṟu-p-potu-k-kāval, *n.* <id.+. Watchman of the village lands; கிராமக்காவற்காரன். *Nāñ.*

பற்றுமுறி paṟṟu-muṟi, *n.* <id.+. Receipt; ரசீது. *பற்றுமுறி கொடுத்தோம்* (S. I. I. viii, 84).

பற்றுவரவுப்புள்ளி parṟuvaravu-p-puḷḷi, *n.* <பற்றுவரவு+. Customer; வழக்கமாகப் பண்டமுதலியன வாங்குபவன். *Loc.*

பற்றுவழி paṟṟu-vaḻi, *n.* <பற்று+. Running account; நேடுநாட் கணக்கு. *Loc.*

பற்றுவழிக்கணக்கு paṟṟuvaḻi-k-kaṇakku, *n.* <பற்றுவழி+. *Loc.* 1. See பற்றுவழி. 2. Ledger; பேரேடு.

பற்றுவழியா-தல் paṟṟu-vaḻi-y-ā-, *v. intr.* <id.+. To be paid out, as money due; செல்ல வேண்டிய தொகையைக் கொடுத்தல். *Loc.*

பறத்து-தல் parattu-, *5 v. tr.* Caus. of பற-. To hasten; விரைவுபடுத்துதல். வேலை சீக்கிரம் முடியவேண்டுமென்று பறத்துகிறார்.

பறவை paravai, *n.* <பற-. Flying; பறக்கை. பறவை தளருந் துறைவனை (அகநா. 170).

பறவைச்சுழி paravai-c-cuḻi, *n.* <பறவை+. A curl mark, in horses; குதிரைச்சுழிவகை. தனுவோராகிய பறவைச்சுழி (தஞ். சர. iii, 118).

பறி-தல் paṟi-, *4 v. tr.* cf. பரி-. To pierce; to penetrate; ஊடுருவுதல். பட்டுப்பறியும் படை வேல் (சொக்க. உலா, 393).

பறிகால் paṟi-kāl, *n.* <பறி-+. Betel-vine garden; கொடிக்கால். *Loc.*

பறிகூடை paṟi-kūṭai, *n.* <பறி+. Baling basket; இறைகூடை. *Loc.*

பறிப்பு paṟippu, *n.* <பறி-. Plunder; extortion; கொள்ளை. *Pond.*

பறிபட்சி paṟi-paṭci, *n.* <id.+. Bird of prey; மாமிசம் உண்ணும் பறவை. *Pond.*

பறுவான்காசிலிங்கு paṟuvāṅkā-ciliṅku, *n.* <Hind. *parvān*+E. *sling.* Yard-sling; பறுவானைப் பாய்மரத்தோடு இணைக்க உதவுங் கயிறு அல்லது சங்கிலி. (M. Navi.)

பறைத்தறி paṟai-t-taṟi, *n.* prob. பறை+. An ancient tax; பழைய வரிவகை. (S. I. I. i, 91.)

பறைத்துடைவை paṟai-t-tuṭaivai, *n.* <id.+. Endowment for Pariahs; பறையர்க்கு விடும் மானியம். ஊரில்விடும் பறைத்துடைவை உணவுரிமையாக்கொண்டு (பெரியபு. திருநாளைப். 13).

பறைமை paṟaimai, *n.* perh. id. A village perquisite; கிராமசுதந்தரவகை. (Pudu. Insc. 271.)

பறையிறை paṟai-y-iṟai, *n.* perh. id.+. A tax paid in cash; காசாயவகை. (S. I. I. iv, 195.)

பன்சர் pancar, *n.* cf. பஞ்சர். Waste land; தரிசுநிலம். (P. T. L.)

பன்மை panmai, *n.* A tax paid in cash; காசாயவகை. பன்மையாலும் பண்டவெட்டியாலும் ஆளொன்றுக்குக் காசு பத்தாக (S. I. I. v, 365).

பன்றியாழ்வார் panṟi-y-āḻvār, *n.* <பன்றி+. Viṣṇu in His Boar-incarnation; வராகாவதாரமூர்த்தி. (I. M. P. S.A. 380.)

பன்றியோடை panṟi-y-oṭai, *n.* <id.+. Small channel; சிறுவாய்க்கால். *Loc.*

பன்னெறி panneṟi, *n.* <பல்+. Maxims on miscellaneous topics; பலபொருள்களைப்பற்றிக் கூறும் நீதிவசனங்கள். (நாலடி, அதி. 37.)

பனம்பற்று paṉam-paṟṟu, *n.* <பனை+. Palmyra tope; பனந்தோப்பு. (S. I. I. viii, 209.)

பனிச்சுடர் paṉi-c-cuṭar, *n.* <பனி+. Moon; சந்திரன். பனிப்பகையைப் பனிச்சுடர் விட்டெறிப்பன (தக்கயாகப். 485).

பனிநீர் paṉi-nīr, *n.* <id.+. The clear liquid at the top, when curd is allowed to settle; தயிர் முதலியன வடிந்தபின் மேலாக எஞ்சி நிற்குந் தெளிந்த நீர். பனிநீருள்ளது வடித்துக் கட்டியாயிருக்கிற தயிரும் (திவ். பெரியாழ். 2, 2, 2, வ்யா. பக். 250).

பனிப்பிரபை paṉi-p-pirapai, *n.* <id.+. Moonlight; நிலா. பனிப்பிரபையிட் டவித்தே (தக்கயாகப். 482).

பனைமூக்கன் paṉai-mūkkaṉ, *n.* <id.+. cf. பனைமூக்காரன். A kind of paddy; நெல்வகை. நிறக்கும் பனைமூக்க னென்றும் (நெல்விடு. 185).

பனைவடலி paṉai-vaṭali, *n.* <பனை+. Young palymra; வடலி. *Loc.*

பஶ்யதோஹரன் paśyatōharaṉ, *n.* <*paśyatō-hara.* Thief who steals even when a person is looking on; பார்த்துக்கொண்டிருக்கும்போதே திருடுவோன். (திவ். பெரியதி. 1, 1, 5, வ்யா. பக். 37.)

பஸ்கி paski, *n.* A kind of physical exercise which consists of sitting down and standing up alternately; தேகப்பயிற்சி வகை. *Mod.*

பஸ்தி pasti, *n.* Jaina temple; ஜினலயம். (M. E. R. 1901, p. 2.)

பஸ்திசெய்-தல் pasti-cey-, *v. tr.* <பஸ்தி+. To improve; திருத்துதல். *Loc.*

பக்ஷகன் pakṣakaṉ, *n.* <*bhakṣaka.* Consumer; destroyer; அழிப்பவன். ரக்ஷகனன்றிக்கே பக்ஷகனானாலும் விடலாயோ உன் வடிவிருப்பது (திவ். திருமாலை, 39, வ்யா. பக். 118).

பா

பாக்கம் pākkam, *n.* Small bundle; சிறுமூட்டை. *ஆமணக்கங்கொட்டை வண்டி ஒன்றுக்குக் காசு பத்தும் பொதி ஒன்றுக்குக் காசு அரையும் பாக்கம் ஒன்றுக்குக் காசு காலும்* (S. I. I. viii, 232).

பாகத்தியாகலக்ஷணை pāka-t-tiyāka-lakṣaṇai, *n.* <*bhāga*+*tyāga*+. (Gram.) A variety of *ilakkaṇai*, in which the primary sense of a word is partly discarded and partly retained; விட்டும்விடாதவிலக்கணை. (*விசாரசங்.* 227.)

பாகம் pākam, *n.* <*bhāga*. Place, spot, region; இடம். *கன்னபாகமும்* (*பாரத. புட்ப.* 33).

பாகவதநம்பி pākavata-nampi, *n.* <*பாகவதன்*+. Vaiṣṇava devotee; விஷ்ணுபக்தன். (S. I. I. iv, 40.)

பாகவிஸ்தி pāka-visti, *n.* <*பாகம்*+. Partition; பாகப்பிரிவினை. *Tinn.*

பாகாயம் pākāyam, *n.* <U. *bāgāyat*. cf. *பாகாயதி*. Fenced plot of ground, fit for garden cultivation; தோட்டம்வைத்தற் கேற்றபடி வேலியடைப்புள்ள நிலம். *Loc.*

பாகியாங்கம் pākiyāṅkam, *n.* <*bāhya*+. (Phil.) The outer path; புறவழி. *பிரமத்தை யடைதற்கு பாகியாங்கமென்றும் அந்தராங்கமென்று மிரண்டங்கங்களுண்டு* (*வேதாந்தசா.* 26).

பாகுடக்கவி pākuṭa-k-kavi, *n.* <Pkt. *pāhuḍa* <*prābhṛta*+. Dedicatory poem; காணிக்கையாகச் சமர்ப்பிக்கும் பாட்டு. (*செந்.* vi, 335.)

பாகை pākai, *n.* <*bhāga*. The spot from which ichor flows in an elephant; யானையின் உடலில் மதநீர் ஊறுமிடம். *முகபாகை குதிபாய் கடாம்* (*தக்கயாகப்.* 3).

பாங்கு pāṅku, *n.* Palm-leaves, etc., required for constructing a sheep-pen; ஆட்டுக்கிடை மறிப்பதற்குரிய விரியோலை முதலியன. *Tinn.*

பாங்குநெல் pāṅku-nel, *n.* A kind of paddy; நெல்வகை. (*விவசா.* 2.)

பாசனாங்கம் pācaṉāṅkam, *n.* <*bhājana*+*aṅga*. A celestial tree, one of *kaṟpaka-taru;* கற்பகமரவகை. (*தக்கயாகப்.* 757, *உரை.*)

பாசு pācu, *n.* <E. *pass*. 1. Success, as in examinations; பரீட்சை முதலியவற்றில் தேர்ச்சி. (*பிரதாப. விலா.* 13.) 2. Gate-pass; permit; வெளியில் அல்லது உள்ளே செல்வதற்கோ சாமான் கொண்டுபோவதற்கோ கொடுக்கும் அனுமதிச் சீட்டு. *Colloq.*

பாஞ்சாலம் pāñcālam, *n.* <*pāñcāla*. One of the three literary styles, midway between *kauṭam* and *vaitaruppam;* கௌட வைதருப்ப ரீதிகளுக்கு இடைப்பட்ட காவிய ரீதி. (*சங்கற்பசூ. பக்.* 6.)

பாட்சிகன் pāṭcikaṉ, *n.* <*pākṣika*. Bird-catcher; fowler; பட்சிபிடிப்பவன். (W.)

பாட்டம் pāṭṭam, *n.* <*பாடு*. Wet lands held on a favourable assessment paid in grain; குறைந்த தானியத் தீர்வை செலுத்தி அனுபவிக்கும் நஞ்சை நிலம். (R. T.)

பாட்டமாளன் pāṭṭam-āḷaṉ, *n.* <*பாட்டம்*+. 1. Officer in charge of revenue collections; அரசிறையதிகாரி. (M. E. R. 101 of 1926-7.) 2. Cultivator, lessee; உழவுப் பாத்திய முடையவன். (T. A. S. iii, 167.)

பாட்டிராசி pāṭṭirāci, *n.* <*பாட்டு*+. The sign of the zodiac occupied by the sun at sunset; சூரியன் அஸ்தமிக்கும் இலக்கினம். *பாட்டிராசியிற் புறப்படாதே.*

பாட்டிலேபோடு-தல் pāṭṭilē-pōṭu-, *v. tr.* <*பாடு*+. To place or lay down horizontally; பூமியுடன் ஒட்டி நேராகச் சார்த்துதல். *Loc.*

பாட்டு pāṭṭu, *n.* <id. Longitudinal layer, in brick-work; செங்கற்சுவர் எழுப்பும்போது நேடுக்காக வைக்கும் கல். *Loc.*

பாடண்டமதம் pāṭaṇṭa-matam, *n.* <*pāṣaṇḍa*+. Heretic religion; அவைதிகமதம். *புல்லும் பாடண்டமதானுபவங்கடமை* (*நூற்றெட்டுத். திருப்பு.* 7).

பூசைப்பரிசாரகன் pūcai-p-paricārakaṉ, *n.* <id.+. Deacon; திருச்சபையினரின் காரியங்களைக் கவனிப்பவன். *Pond.*

பூசைப்பாடிவெள்ளை pūcaippāṭi-veḷḷai, *n.* A kind of paddy; நெல்வகை. சிறை மீட்டான் வளர்பூசைப்பாடிவெள்ளை (நெல்விடு. 186).

பூட்டக்கக்கள்ளி pūṭṭakka-k-kaḷḷi, *n.* <பூட்டக்கம்+. Deceitful woman; வஞ்சகி. (குருகூர்ப். 51.)

பூட்டைக்கிணறு pūṭṭai-k-kiṇaṟu, *n.* <பூட்டை+. Well fitted with picottah, for irrigating fields; நீர்பாய்ச்சுதற்கு ஏற்றம் அமைந்த கிணறு. (S. I. I. iv, 194.)

பூட்டைக்குண்டிகை pūṭṭai-k-kuṇṭikai, *n.* <id.+. Basket for baling water; ஏற்றச்சால். பூட்டைக்குண்டிகைபோலே யேறுவ திழிவதாக (ரஹஸ்ய. 1366).

பூண்கட்டு-தல் pūṇ-kaṭṭu-, *v. tr.* <பூண் +. To make much of; போற்றுதல். இந்த ருசியைப் பூண்கட்டிக்கொள்ளத் தேடுகிறவர்கள் கழிக்கச் சொன்னால் கழியார்களிறே (ஈடு, 1, 6, 8).

பூண்சம்பா pūṇ-campā, *n.* perh. id.+. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (G. Tp. D. i, 132.)

பூதம் pūtam, *n.* <*bhūta.* 1. Vowel; உயிரெழுத்து. சாம்பூதமா முயிரின்பெயர் (போகத். 10). 2. Huge hollow figure of a man or woman, carried in processions; வீதிவலம் வரும் போது தூக்கிச்செல்லும் மனித வடிவம். *Loc.*

பூதவுடல் pūta-v-uṭal, *n.* <பூதம்+. Body, as composed of the five elements; ஐம்பூதங்களாலாகிய உடம்பு. பூதவுடனிலையாது (வீரநாரா. பாயி. 21).

பூதன் pūtaṉ, *n.* <*pūta.* Purified soul; பரிசுத்தன். புனமயி லுமையொடும் புணர்ந்த பூதனே (வேதாரணி. விநாயக. 43).

பூதான்மா pūtāṉmā, *n.* <*bhūta*+. The state of soul, when it is associated with the five elements; பஞ்சபூதங்களோடு கூடியிருக்கும் ஆன்மநிலை. (சி. போ. பா. 6, 2, பக். 317.)

பூதி pūti, *n.* prob. *bhūti.* Gold; பொன். பூதி வெற்பென (வேதாரணி. சாலிகோ. 14).

பூதிவாதம் pūtivātam, *n.* <*pūtivāta.* Bael; வில்வம்.

பூநெட்டி pū-neṭṭi, *n.* <பூ+. Pith; வெண்கிடை. *Loc.*

பூநோன்பு pū-nōṉpu, *n.* <id.+. A festival observed by maidens on the third day of Poṅgal, in Koṅkunāṭu; கொங்குநாட்டில் பொங்கலின் மூன்றாம்நாள் கன்னிகைகள் கொண்டாடும் பண்டிகை. பூநோன்புக்குப் பூப்பறிக்கச் சென்று (எங்களூர், 159).

பூப்பொங்கல் pū-p-poṅkal, *n.* <id.+. See பூநோன்பு. (எங்களூர், 90.)

பூப்ஸானி pūpsāṇi, *n.* Zenana lady; கோஷாஸ்திரீ. (C. G.)

பூபதனப்பூப்புடம் pū-patana-p-pū-p-puṭam, *n.* <பூ+பதனம்+பூ+. A method of calcining medicine, one of *muppū-p-puṭam,* q.v.; முப்பூப்புடத்து ளொன்று. *Loc.*

பூம்மரம் pūm-maram, *n.* <E. *boom*+. Boom; கப்பற்பாய்களின் அடிப்பக்கத்தை விரிக்க வுதவும் பறுவான்வகை. (M. Navi.)

பூம்மாடு pūm-māṭu, *n.* <பூம் (onom.)+. Performing bull; பெருமாள்மாடு. *Tp.*

பூமம் pūmam, *n.* <*bhūman.* Abundance, plenty; மிகுதி. பூமச் சோதியருளால் (பாடு. 100, சாற்றுபறை).

பூமாலைகொண்டுசொரிதல் pūmālai-koṇṭu-corital, *n.* <பூமாலை+. A kind of votive offering to a temple; நேர்த்திக்கடன்வகை. *Nāñ.*

பூமிசக்கரம் pūmi-cakkaram, *n.* <பூமி+. (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

பூமிசம்பகம் pūmi-campakam, *n*. <id.+. False zedoary; நேர்ப்பிசின். (M. M.)

பூமிப்பிராட்டி pūmi-p-pirāṭṭi, *n*. <id.+. The Goddess of the Earth; பூமிதேவி. *பூமிப் பிராட்டியை எழுந்தருளுவித்து* (S. I. I. viii, 160).

பூமியாகாயச்சக்கரம் pūmi-y-ākāya-c-cakkaram, *n*. <id.+ஆகாயம்+. (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (*யாப். வி.* 497.)

பூமேனடந்தான் pū-mēṉaṭantāṉ, *n*. <பூ+மேல்+. Arhat; அருகக்கடவுள். (*குறள்*, 3, *உரை*.)

பூமொக்குள் pū-mokkuḷ, *n*. <id.+. Chalice; பூசைப்பாத்திரம். *Pond*.

பூயஞ்சம்பா pūyañ-campā, *n*. A kind of *campā* paddy; சம்பா நெல்வகை. (*விவசா*. 2.)

பூர்ணாயனம் pūrṇāyaṉam, *n*. <*pūrṇa*+. The four months, Paṅkuṉi, Cittirai, Puraṭṭāci and Aippaci; பங்குனி சித்திரை புரட்டாசி ஐப்பசி யாகிய நான்கு மாதங்கள். (*பெரியவரு*. 27.)

பூர்வகௌளம் pūrva-kauḷam, *n*. <*pūrva*+. (Mus.) A specific melody-type; இராக வகை. (*பரத. ராக. பக்*. 103.)

பூர்வசென்மவாசனை pūrvaceṉma-vācaṉai, *n*. <பூர்வசன்மம்+. The effect of past karma; பழவினைத்தொடர்பு. *Colloq*.

பூர்வபக்ஷி-த்தல் pūrva-pakṣi-, 11 *v. tr*. <*purva*+*pakṣa*. To state the opponent's views and arguments for the purpose of answering them; எதிர்வாதத்தைக் கூறுதல். *ஓரர்த்தத்தைத் தாயார் வார்த்தையாலே பூர்வபக்ஷித்து மகள் வார்த்தை யாலே ஸித்தாந்திக்கிறது* (*திவ். திருநெடுந்*. 18, *வ்யா*.).

பூர்வவாசனை pūrva-vācaṉai, *n*. <id.+. See பூர்வசென்மவாசனை. *Colloq*.

பூர்வாங்கம் pūrvāṅkam, *n*. <*pūrvāṅga*. (Mus.) Lower tetrachord of the octave; ஸ்தாயி யிலுள்ள முதல் நான்கு ஸ்வரங்கள். (Mus. of Ind. 63.)

பூர்வாசாரம் pūrvācāram, *n*. <*pūrva*++*ācāra*. Ancient custom; பழைய வழக்கம். *பூர்வாசாரங்கொண்டு இறையிலியாக* (S. I. I. vi, 145).

பூர்வார்ஜிதம் pūrvārjitam, *n*. <id.+*arjita*. Ancestral property; முன்னோர் ஈட்டிய பொருள். *நான் விடேன் விடேன் பூர்வார்ஜித பாகம்* (*சர்வசமய. பக்*. 68).

பூர்விகசொத்து pūrvika-cottu, *n*. <பூர்விகம்+. See பூர்வார்ஜிதம். *Colloq*.

பூரணசூத்திரி pūraṇa-cūttiri, *n*. (Mus.) A specific melody-type; இராகவகை. (*பரத. ராக. பக்*. 103.)

பூரணம் pūraṇam, *n*. cf. பூஞ்சணம். Mould, mildew; பூஞ்சாளம். *இந்தப் பண்டம் பூரணம் பிடித்துவிட்டது*. *Loc*.

பூரந்தொழுதல் pūran-toḻutal, *n*. <பூரம்+. cf. பூரங்கழித்தல். Ceremony of warding off evil eye from a pubescent girl, by waving coloured rice about her; பெண் இருதுவானபோது திருஷ்டிகழிக்குஞ் சடங்கு. *Loc*.

பூராயம் pūrāyam, *n*. (*யாழ். அக*.) 1. Priority in time; antiquity; பூர்வம். 2. Desire; விருப்பம்.

பூரி pūri, *n*. See பூரியரிசி. *Nāñ*.

பூரிக்குத்தலரிசி pūri-k-kuttal-arici, *n*. <பூரி+குத்து-+. Polished rice; நன்றாய்த் தீட்டிய அரிசி. (S. I. I. vi, 11.)

பூரிச்சேரல் pūri-c-cēral, *n*. <id.+perh. சொல். A kind of rice; அரிசிவகை. *திருப்புதிய தமுதுக்குப் பூரிச்சேரல்* (S. I. I. vii, 300).

பூரிநெல் pūri-nel, *n*. <id.+. Mixed paddy; கலப்பு நெல். (S. I. I. ii, 127.)

பூரியது pūriyatu, *n*. prob. id. That which is low; தாழ்வானது. *சீரியன வுள்ளிப் பூரியன மறத்தல் வேண்டும்* (*குறள்*, 1206, *மணக்*.).

பூரியரிசி pūri-y-arici, *n*. <id.+. White, polished rice; வெள்ளையரிசி. *Nāñ*.

பூரு-தல் pūru-, 5 *v. tr*. Corr. of பீறு-. To pierce; துளைத்தல். *Colloq*.

பூருவணம் pūruvaṇam, *n*. <பூர்வான்னம். Forenoon; முற்பகல். (*விதான. குணகுண*. 112, *உரை*.)

பூவாடைப்பானை pūvāṭai-p-pāṉai, *n*. <பூவாடை+. A pot in which the cloth offered to *pūvāṭai-k-kāri* at a *cumaṅkali-p-pirārttaṉai* is kept till the next *cumaṅkali-p-pirārttaṉai*; சுமங்கலிப்பிரார்த்தனையன்று பூவாடைக்காரிக்குச் சமர்ப்பிக்குஞ் சேலையை அடுத்த சுமங்கலிப்பிரார்த்தனைவரை சேமித்துவைக்கும் பானை. *Loc*.

பூவை pūvai, *n*. A variety of *kāyā*; காயாச்செடிவகை. *பூவையாவது காயாவின் அவாந்தர பேதமானுப்போலே* (*திவ். பெரியாழ்*. 3, 4, 9, *வ்யா. பக்*. 620).

பூனைக்காஞ்சி pūṉaikkāñci, *n*. <பூனைக் காஞ்சொறி. Small climbing nettle; பூனைக்காஞ் சொறி. (*பச். மூ*.)

பூஜாவாசி pūjā-vāci, *n.* <*pūjā*+. Term of respect; மரியாதைச் சொல். உத்தேசிய தை தோற்ற பூஜாவாசி சப்தங்களாலே சொல்லக் கடவதென்று பூர்வாசார்யர்கள் (திவ். திருநெடுந். 11, வ்யா. பக். 95).

பெ

பெட்டிபோடு-தல் peṭṭi-pōṭu-, *v. intr.* <பெட்டி+. To play on the harmonium; ஆர் மோனியத்தை வாசித்தல். *Mad.*

பெட்டிமோதிரம் peṭṭi-mōtiram, *n.* perh. id.+. A kind of ring; மோதிரவகை. *Pond.*

பெட்டியடி peṭṭi-y-aṭi, *n.* <id.+. Cashier; cash-keeper; ரொக்க வரவு செலவு செய் யுங் கணக்கப்பிள்ளை. *Nāṭ. Chetti.*

பெட்டு peṭṭu, *n.* [T. *beṭṭu.*] Esteem, regard; respect; கௌரவம். பெட்டுப் போகாமல் கேட்போ ரனைவருக்கும் (மதி. க. ii, 9).

பெட்பு peṭpu, *n.* <பேள்-. Protection; பாதுகாப்பு. (தொல். சொல். 338.)

பெண்டுவை-த்தல் peṇṭu-vai-, *v. tr.* <பெண்டு+. To keep as concubine; வைப்பாட்டி யாகக் கொள்ளுதல். நீரிவளைப் பெண்டுவைத்துக் கொள்ளும் (தெய்வச். விறலிவிடு. 292).

பெண்ணாசி peṇ-ṇāci, *n.* prob. பெண்+. cf. பொன்னாசி. Bleeding nose; இல்லிமூக்கு. *Nāñ.*

பெண்பள்ளி peṇ-paḷḷi, *n.* <id.+. Nunnery; பெண்துறவிகள் தங்குமிடம். இம்மனை யும் இக்கிணறும் பெண்பள்ளி யாவதாகவும் (S. I. I. vii, 24).

பெத்தபஞ்சாக்கரம் petta-pañcākkaram, *n.* <*baddha*+. A form of the mantra *namaccivāya;* பஞ்சாட்சரமந்திரவகை. (பஞ்சாக்கர மாலை, 21, உரை.)

பெத்திரிவீடு pettiri-vīṭu, *n.* <E. *factory* +. Factory; தொழிற்சாலை. (Ekoji's copper plate to the Dutch, 1676.)

பெயர்த்துக்கொடுக்கும்வலி peyarttu-k-koṭukkum-vali, *n.* <பெயர்-+கொடு-+. Preliminary labour pains, due to movements of the foetus; பிரசவவலிக்குமுன் சிறிதுசிறிதாக வலிக் கும் நோவு. *Loc.*

பெயர்த்துறை peyar-t-t-urai, *n.* <id.+. Repetition; அனுவாதம். (குறள், 944, உரை.)

பெயர்ப்போலி peyar-p-pōli, *n.* <பெயர் +. Word partaking of the nature of a noun; உரிச்சொல்வகை. (தொல். சொல். 297, சேனா.)

பெயரட்டவணை peyar-aṭṭavaṇai, *n.* <id.+. Index of names; பேரட்டவணை. *Loc.*

பெரட்டு peraṭṭu, *n.* Corr. of புரட்டு. Deception; புரட்டு. பெரட்டும் உருட்டும் வேதனை செய்வதும் (கனம் கிருஷ்ணையர், கீர்த். 21).

பெரியகரடி periya-karaṭi, *n.* <பெரு-மை +. The Great Bear; சப்தரிஷிமண்டலம். *Pond.*

பெரியசம்பா periya-campā, *n.* <id.+. A kind of *campā* paddy, maturing in six months; ஆறு மாதத்திற் பயிராகும் சம்பாநெல் வகை. (விவசாய. 1.)

பெரியதேவர் periya-tēvar, *n.* <id.+. 1. The predecessor of a ruling king; ஆளும் அரச னுக்கு முன்ஆண்ட அரசன். (Insc.) 2. The sacred bull *Nandi;* நந்திதேவர். (பெரியபு. வெள். 44.)

பெரியமுதலியார் periya-mutaliyār, *n.* <id.+. The Vaiṣṇava saint Āḷavantār; ஆள வந்தார் என்னும் வைணவப்பெரியார். பெரியமுதலி யார் . . . ஆதரிக்கும்படியான ஸ்ரீபராசர மஹர்ஷி (ரஹஸ்ய. 308).

பெரியவியாழக்கிழமை periya-viyāḻa-k-kiḻamai, *n.* <id.+. Maundy Thursday; ஈஸ்டர் பண்டிகையில் வரும் வியாழக்கிழமை. *Chr.*

பெரியிலாமிச்சை periyilāmiccai, *n.* cf. பேரொலுமிச்சை. Citron lemon, m. tr., *Citrus medica-limonum;* துரிஞ்சி. (L.)

பெருக்காலட்டை perukkāl-aṭṭai, *n.* prob. பெரு-மை+கால்+. A kind of leech; அட்டைவகை. *Loc.*

பெருக்குமாறு perukku-māru, *n.* <பெருக்கு-+. Broom; விளக்குமாறு *Loc.*

பெருகிலை perukilai, *n.* Pink-tinted heart-leaved glory tree; வெள்ளைக்கண்ணி. (L.)

பெருங்கடுகு peruṅ-kaṭuku, *n.* <பெரு-மை +. A kind of mustard; கடுகுவகை. *Loc.*

பெருங்கத்தரிசால் peruṅ-kattari-cāl, *n.* <id.+சத்திரி+. Candelabra; கிளைவிளக்குத் தண்டு. *Pond.*

பெருங்கரப்பான் peruṅ-karappāṉ, *n.* <id.+. A kind of eruption; கரப்பான்வகை. (தஞ். சர. iii, 92.)

பெருங்கிளையார் peruṅ-kiḷaiyār, *n.* <id.+. A sub-division of the Paḷḷar caste; பள்ளர்வகையினர். *Tp.*

பெருங்கிற்றுரூபாய் peruṅ-kiṟṟu-rūpāy, *n.* <id.+. An ancient coin; பழைய நாணய வகை. (சரவண. பணவிடு. 63.)

பெருங்குடி peruṅ-kuṭi, n. <id.+. Landlord; நிலச்சுவான். (Colas, ii, 389.)

பெருங்குரும்பை peruṅ-kurumpai, n. <id.+. (சங். அக.) 1. Costum; கோட்டம். 2. Long zedoary; பூலாங்கிழங்கு.

பெருந்தொடர் perun-toṭar, n. <id.+. (Gram.) Compound or complex sentence; எழுவாய் பயனிலை முடிந்த வாக்கியஞ் சிலவற்றைப் பிணைத்துநடக்குந் தொடர்ந்தவாக்கியம். (தொல். சொல். 42, சேனா.)

பெரும்பாடிகாவல் perum-pāṭi-kāval, n. <id.+. Chief watchman; தலைமைக்காவலாளர். (M. E. R. 407 of 1921.)

பெரும்பேரன் perum-pēraṉ, n. <id.+. Great-grandson; கொட்பேரன். Loc.

பெருமத்தளி peru-mattaḷi, n. <id.+. A kind of drum; முழவம். (திவ். திருப்பள்ளி. 9, வ்யா.)

பெருமாப்பு perum-āppu, n. <id.+. Shooting stick. See ஆப்புத்தள்ளி. Pond.

பெருமுதியன் peru-mutiyaṉ, n. <id.+. A temple official; கோயில் அதிகாரிகளு ளொருவன். (T. A. S. iii, 166.)

பெருவரகு peru-varaku, n. <id.+. A kind of common millet; வரகுவகை. (விவசா. 4.)

பெருவரி peru-vari, n. <id.+. A tax in cash; காசாயவகை. (S. I. I. i, 87.)

பெருவரைமீன் peruvarai-mīṉ, n. perh. பெருவலை+. A fish. See அறிசா. (சங். அக.)

பெருவளவாய் peru-vaḷa-vāy, n. <பெருமை+வளம்+. Big channel; பேராற்றுக்கால். நாட்டுக்குப் பாயும் பெருவளவாயும் (S. I. I. ii, 54).

பெருவாயன் peru-vāyaṉ, n. <id.+. 1. Basket; கடகப்பெட்டி. Loc. 2. See பெருமத்தளி. (திவ். திருப்பள்ளி. 9, வ்யா.)

பெருவீடு peru-vīṭu, n. perh. id.+விடு-. Letting out cattle in the afternoon, for grazing; பிற்பகலில் மாடுகளை மேய்க்கவிடுகை. சிறுவீடன் றியே பெருவீடும் விடும்படியாய் (திவ். திருப்பள்ளி, 4, வ்யா.).

பெருவெள்ளம் peru-veḷḷam, n. <id.+. The Deluge; பிரளய வெள்ளம். உண்ணுத பெரு வெள்ளம் உண்ணமல் தான்விழுங்கி உய்யக்கொண்ட கண்ணுளன் (திவ். பெரியதி. 2, 6, 7).

பெலி peli, n. perh. bahis. Banishment, excommunication; ஊருக்கு அல்லது சாதிக்குப் புறம்பாக்குகை. (W.)

பெள்-தல்[பெட்டல்] peḷ-, 9 v. tr. To protect; பாதுகாத்தல். பெட்டல் என்பது புறந் தருதல் (தொல். சொல். 332, இளம்பூ.).

பெற்பரோடி perparōṭi, n. Back-stays. See பிரந்தல். (M. Navi.)

பெறுமாதம் peṟu-mātam, n. <பெறு-+. The month of parturition; பேறுகாலம். Rd.

பெறுமுரி peṟu-muri, n. prob. id.+. Wages; சம்பளம். பரிகரத்தார் பெறுமுரியாகப் பெற்று (S. I. I. vii, 30).

பே

பேசாதிரு-த்தல் pēcātiru-, v. intr. <பேசு-+ஆ neg.+. To keep quiet; செயலற்றிருத்தல். வாத்யங்கள் வாய்த்தால் கூத்தாடுவொருடம்பு பேசாதிரா திறே (திவ். பெரியதி. 1, 2, 1, வ்யா. பக். 59).

பேசுலம் pēculam, n. A plant, Arum colocasia; செடிவகை. Loc.

பேசுலி pēculi, n. See பேசுலம். Loc.

பேதவாதி pēta-vāti, n. <பேதம்+. Pluralist; கடவுள் சீவன் உலகு இவை வேறுபட்டன என்னுங் கொள்கையுடையோன். சார்வாகாதிகள் அனைவரும் பேதவாதிகள்; வேதாந்தி ஒருவரே அபேதவாதி (விவேகசிந். பக். 20).

பேதனம் pētaṉam, n. <bhēdana. Dividing; பகுப்பு. Pond.

பேதாபேதி pētāpēti, n. <bhēdābhēdin. Follower of the Bhāskara school of philosophy; பேதாபேத சித்தாந்த முடையோன். (திவ். திருச்சந். 1, வ்யா. பக். 9.)

பேதுரு pēturu, n. St. Peter; இராயப்பர் என்ற கிறிஸ்தவப் பெரியார்.

பேதைபாதம் pētai-pātam, n. perh. பேதம்+. An ornament for the leg of an idol; தெய்வத்தின் காலில் அணியும் அணிவகை. திருக் கழற்சிறிடும் பேதைபாதமும் (S. I. I. viii, 39).

பேதைமை pētaimai, n. Lack of discernment; உய்த்துணராமை. (தொல். பொ. 248, இளம்பூ.)

பேய்க்கதி pēy-k-kati, n. <பேய்+. (Buddh.) One of ṣaṭ-kati, q. v.; ஷட்கதியு ளொன்று.

பேய்த்தி pēytti, n. Fem. of பேய். Demoness; பேய்ச்சி. சிறுபேய் பெரும்பேய்த்தியைச் சென்றுபற்றும் (நீலகேசி, 8).

பேய்நரி pēy-nari, n. <பேய்+. Rabid fox; வெறிபிடித்த நரி. பேய்நாய் பேய்நரி முதலியவற்றின் கடிகளுக்கு (தஞ். சர. iii, 102).

பேய்ப்புகையிலை pēy-p-pukaiyilai, *n.* <id.+. A kind of tobacco; காட்டுப்புகையிலை. (சித். அக.)

பேய்முள்ளி pēy-muḷḷi, *n.* <id.+. Wild thorny plant; காட்டுமுள்ளி. (சித். அக.)

பேய்வரகு pēy-varaku, *n.* <id.+. Wild ragi; காட்டுவரகு. (சித். அக.)

பேய்வாதுமை pēy-vātumai, *n.* <id.+. Wild almond; வாதுமைவகை. *Loc.*

பேயின்சாப் pē-y-iṉcāp, *n.* <U. *bē-insāph.* Injustice, அநீதி. (P. T. L.)

பேயீடு pēy-īṭu, *n.* <பேய்+. A disease of children, attributed to the influence of evil spirits; பேயின் உபத்திரவத்தால் உண்டாவதாகக் கருதப்படும் பிள்ளைநோய். *புள்ளீட்டுக்கும் பேயீட்டுக்கும் பிழைக்கப்பெற்றதென்கிறார்* (திவ். பெரியாழ். 2, 5, 9, வ்யா. பக். 343).

பேயுடுப்பை pēy-uṭuppai, *n.* <id.+. A plant; செடிவகை. (சிவசா. 6.)

பேர்க்கடமை pēr-k-kaṭamai, *n.* <பேர்+. A tax on individuals; ஆள்வரிவகை. (I. M. P. Cg. 529.)

பேர்கெட்டவள் pēr-keṭṭavaḷ, *n.* <id.+. Prostitute; விபசாரி. *Colloq.*

பேர்கெட்டவன் pēr-keṭṭavaṉ, *n.* <id. +. Rogue, scoundrel; அயோக்கியன். *Loc.*

பேர்வரி pēr-vari, *n.* <id.+. Poll tax; தலைவரி. (Colas, ii, 334.)

பேர்வாசி[1] pēr-vāci, *n.* <id.+. 1. Being only nominal; பேர்மட்டிலுள்ளது. *பேர்வாசியேயாம்படி நாம் பண்ணிவைத்த இருவகைப்பட்ட கர்மங்களையும் போக்குவார்* (ஈடு, 1, 6, 9). 2. Characteristics believed to be acquired by a child being named after a person; ஒருவன் பெயரை குழந்தைக்கிடுவதால் அதற்குண்டாவதாகக் கருதும் குணம். *Colloq.*

பேர்வாசி[2] pērvāci, *n.* Corr. of பேர்பாதி. Exactly half; சரிபாதி. *Colloq.*

பேரணி pēr-aṇi, *n.* <பெரு-மை+. 1. The prime cause; மூலகாரணம். *பேரணியாகப் பரத்வத்தைக்கண்டு போர்தார்கள்* (ரஹஸ்ய. 260). 2. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

பேரழை-த்தல் pēr-alai-, *v. intr.* <பேர்+. To take the roll-call or attendance; ஆஜர்க்கணக்கெடுத்தல். *Pond.*

பேரிசை pēr-icai, *n.* <பெரு-மை+. (Poet.) A kind of poetic composition; ஐவகைப்பட்ட வெண்டுறைச்செந்துறையு ளொன்று. (யாப். வி. 538.)

பேரிராசி pēr-irāci, *n.* <பேர்+. See பேர் வாசி[1], 2. *Colloq.*

பேரிளமையார் pēr-iḷamaiyār, *n.* <பெரு-மை+. Middle-aged persons; நடுத்தர வயதினர். (M. E. R. 253 of 1925.)

பேருடைச்சிறப்பு pēr-uṭai-c-ciṟappu, *n.* <பேர்+உடை-+. Grant made to a child at its naming ceremony; நாமகரண காலத்தில் அளிக்கும் இறும். (S. I. I. iv, 121.)

பேருண்டம் pēruṇṭam, *n.* <*bhēruṇḍa.* Fear; பயம். (நாநார்த்த.)

பேளை pēḷai, *n.* Playing marbles; கோலிக்காய். *Colloq.*

பேறாளன் pēṟ-āḷaṉ, *n.* <பேறு+. One who collects tax by force; நிர்ப்பந்தித்து வரி தண்டுவோன். *எங்களைப் பேறாளர் கையிலே காட்டிக் கொடுக்கையில்* (Pudu. Insc. 323).

பேறு pēṟu, *n.* <பெறு-. 1. Creation; சிருஷ்டி. (ஈடு, 8, 10, 6.) 2. Result; முடிவு. *பெருக்கிக் கழித்துப் பேறுகூறலும்* (T. C. M ii, 2, 473).

பேனகத்தி pēṉa-katti, *n.* <E. *pen*+. Penknife; சிறுகத்திவகை. *Pond.*

பேனம் pēṉam, *n.* Opium; அபின். (நாமதீப. 393.)

பேஷ்கீ pēṣkī, *n.* Advance money; முன் பணம். (P. T. L)

பை

பைக்கே paikkē, *n.* [T. *paikam.*] Money; பணம். (P. T. L.)

பைங்கால்நிலம் pai-ṅ-kāl-nilam, *n.* prob. பை+கால்+. Wet field; நஞ்சைநிலம். *பைங்கால் நிலத்தைப் பருமரக் காடென்று* (சரவண. பணவிடு. 142).

பைங்கிணறு pai-ṅ-kiṇaṟu, *n.* <id.+. Small pond; குட்டை. (S. I. I. vii, 41.)

பைசாசபூமி paicāca-pūmi, *n.* <பைசாசம் +. One of the mythological divisions of the world; புராணங்கள் கூறும் பூமிகளு ளொன்று. (அபி. சிந்.)

பைசுன்யம் paicunyam, *n.* <*paiśuna.* Miserliness; உலோபம். பைசுன்ய பண்பினர் (பாடு. 28, அடியவர்.).

பைத்தியன் paittiyan, *n.* <பைத்தியம். Madman; பைத்தியக்காரன். *Pond.*

பையை paiyai, *n.* perh. *paryāya.* Transformation; பரியாயம். பட்டனவைப்பொருள் பையைகளே யென்னும் பான்மையினால் (நீலகேசி, 389).

பைரி pairi, *n.* Inspector of cattle; கால்நடைகளைப் பரிசோதிப்பவன். (மதி. க. ii, 13.)

பைவா-தல்[பைவருதல்] pai-vā-, 13 *v. intr.* cf. பையெனல். To be distressed; துன்புறுத்தல். பைவருங்கேளிரும் பதியும் கதறமெய் விடும்போது (கந்தரலங். 84).

பொ

பொக்கணவன் pokkaṇavaṉ, *n.* <பொக்கணம். Śiva; சிவபிரான். (தஞ். சா. i, 79.)

பொக்கிசம் pokkicam, *n.* [K. *bokkasa.*] 1. Treasury; பொக்கிஷசாலை. 2. Office of a treasurer; பொக்கிஷவேலை பார்க்கும் உத்தியோகம். பொக்கிசம் முத்திருளப்ப பிள்ளை (I. M.P. Rd.).

பொக்கிப்பரு pokki-p-paru, *n.* perh. பொக்கு+. A kind of boil in the ear; செவிப் புண்வகை. (பராரச. i, 134.)

பொக்கிப்பிளவை pokki-p-piḷavai, *n.* perh. id.+. A kind of carbuncle; பிளவைவகை. (பாரச. i, 49.)

பொக்குமல்லி pokkumalli, *n.* perh. E. *bougainville.* A flowering plant, *Bougainvillaea;* பூச்செடிவகை. *Madr.*

பொக்குமுத்து pokku-muttu, *n.* <பொக்கு+. False pearl; தூதுமுத்து. *Loc.*

பொக்கை pokkai, *n.* cf. புற்கை. Porridge; மோர்க்கூழ். *Loc.*

பொகுட்டு pokuṭṭu, *n.* Cone; கூர்முனைக் கோபுரம் போன்ற வடிவு. (J. N.)

பொங்காரம் poṅkāram, *n.* perh. பொங்கு-+காரம். Ire; மிகுகோபம். பூசலைப்பார்த்துப் பழைய பொங்காரந் தீராமல் (தெய்வச். விறலிவிடு. 479).

பொடிக்காசு poṭi-k-kācu, *n.* <பொடி+. Bribe; கைக்கூலி. நானுவித இமிசை செய்து பொடிக்காசு வாங்குகிறவிதங் காண்க (தாசில்தார்நா. பக். 90).

பொடிமாஸ் poṭimās, *n.* 1. A kind of relish; வியஞ்சனவகை. *Loc.* 2. A confection; பக்ஷணவகை. (மதி. க. ii, 15.)

பொடியுழவு poṭi-y-uḻavu, *n.* <பொடி+. Dry ploughing, dist. fr. *toḷi-y-uḻavu;* புழுதிக் காலுழவு.

பொத்தல் pottal, *n.* <Fr. *bouteille.* Bottle; போத்தல். *Pond.*

பொதிக்கூலி poti-k-kūli, *n.* <பொதி+. Wages for carrying headloads; தலைச்சுமை யெடுத்தற்குரிய கூலி. (S. I. I. vi, 29.)

பொதிகாரம் poti-kāram, *n.* perh. பொதி-+. Caustic; காரமருந்து. பொதிகாரமிட்ட புண் போல் (சரவண. பணவிடு. 109).

பொதிகெளிறு poti-keḷiṟu, *n.* perh. பொதி+. A sea-fish; கடல்மீன்வகை. (J. N.)

பொதுக்கூட்டம் potu-k-kūṭṭam, *n.* <பொது+. Public meeting; பொதுஜனக்கூட்டம்.

பொதுக்கெனல் potukkeṉal, *n.* Onom. expr. of suddenness; ஜேரேரெனல். (அகநா. 39, உரை.)

பொதுநாயகம் potu-nāyakam, *n.* <பொது+. Universal sovereignty; எல்லாவற்றிற்குந் தலைமை. பொதுநாயகம் பாவித்து இறுமாந்து (திவ். பெரியாழ். 4, 9, 4).

பொதும்பல் potumpal, *n.* <id. General income; பொதுவருமானம். (J. N.)

பொதுமீக்கூற்றம் potu-mī-k-kūṟṟam, *n.* <id.+மீ+. Mt. Potiyil; பொதியில். (புறநா. 135, உரை.)

பொந்தன் pontaṉ, *n.* A sea-fish, attaining one foot in length, with black and white spots; கடல்மீன்வகை. (J. N.)

பொம்மாசு pommācu, *n.* cf. பொம்மண் மாசு. Pomelo; பம்பளிமாசு. *Loc.*

பொம்மைச்சீட்டு pommai-c-cīṭṭu, *n.* <பொம்மை+. Playing cards; விளையாட்டுச் சீட்டு. *Loc.*

பொம்மைவாசாப்பு pommai-vācāppu, *n.* <id.+. Puppet show; பொம்மலாட்டம். *Pond.*

பொய்க்காய்வு poy-k-kāyvu, *n.* <பொய்+. Temporary estrangement; நிலையில் வெறுப்பு. (குறள், 1246.)

பொய்செய்-தல் poy-cey-, *v. intr.* <id. To prove false; உண்மையற்று ஒழுகுதல். காரியத்தில் வந்தால் மெய்செய்வாரைப் போலே பொய்செய்து நிலக்கட்டும் (ஈடு, 10, 4, 5).

பொய்வெட்டு poy-veṭṭu, *n.* <id.+. A defect in coins; நாணயக்குற்றவகை. (*சரவண. பணவிடு.* 67.)

பொர்மா pormā, *n.* < Fr. *Forme.* Forme; எழுத்துக்கோத்த அச்சுச்சட்டம். *Pond.*

பொரிவாயன் pori-vāyaṉ, *n.* perh. பொரி +. A sea-fish, white, attaining seven inches in length; கடல்மீன்வகை. (J. N.)

பொருட்பெற்றி poruṭ-peṟṟi, *n.* < பொருள் +. Essential or underlying truth, reality; தத்துவம். (*குறள்,* 34, *அதி. அவதா.*)

பொருத்தச்சுவடி porutta-c-cuvaṭi, *n.* <பொருத்தம் +. Treatise on carpentry; தச்சநூல். *Nāñ.*

பொருமல் porumal, *n.* <பொருமு-. Impatience; மிக்க ஆதுரம். *பொருமலை நானெங்ஙனே யடக்குவேன் (தெய்வச். விறலிவிடு.* 239).

பொருள்புரிநூல் poruḷ-puri-nūl, *n.* <பொருள் + புரி- +. Treatise on polity; அர்த்த சாத்திரம். (*பெருங். உஞ்சைக்.* 32, 1.)

பொருள்வழு poruḷ-vaḻu, *n.* <id.+. (Pros.) A defect in versification; செய்யுட்குற்றங்களு ளொன்று. (*யாப். வி.* 525.)

பொருளியல்புரைத்தல் poruḷ-iyalp-uraittal, *n.* <id. + இயல்பு +. Indication of the subject-matter of a treatise; வத்துநிர்த்தேசம். (*சி. போ. பா. மங். பக்.* 1.)

பொல்லாங்கன் pollāṅkaṉ, *n.* <பொல்லாங்கு. Mischievous person; குறும்புக்காரன். (*யாழ். அக.*)

பொல்லாது pollātu, *n.* <பொல்லா-மை. Emaciation; thinness, as of body; spoilt condition; உடல் முதலியன கேடுற்ற நிலை. *நீ இப்படிப் பொல்லாதாயிருப்பானே னென்ன, நாம் நோயாய்க் கிடந்தோம் கண்டீரேயென்று (சங்கற்பநி.* 205, *உரை.*)

பொல்லாநிலம் pollā-nilam, *n.* <id.+. Cremation ground; மயானம். *உங்களைப் பொல்லா நிலத்திலே யிடுவதற்கு முன்னம் (திவ். திருப்பல்.* 4, *வ்யா. பக்.* 50).

பொல்லாப்பு pollāppu, *n.* <id. Objection; ஆட்சேபனை. *இக்காணிக்குப் பொல்லாப்புச் சொல்லில்* (Pudu. Insc. 327).

பொலபொலவெனல் pola-pola-v-eṉal, *n.* Onom. expr. signifying (*a*) crumbling, as of earth; பொலுபொலேனல். (*சகசர்.* 2.): (b) looseness; நெகிழ்ந்திருத்தற் குறிப்பு. *Tj.*

பொலிமுறைநாகு poli-muṟai-nāku, *n.* <பொலி + முறை +. Heifer fit for covering; பொலியக்கூடிய பக்குவமுள்ள கிடாரி. (S. I. I. iv, 102.)

பொற்கெனல் poṟkeṉal, *n.* cf. பொருக்கெனல். Onom. expr. of suddenness; விரைவுக்குறிப்பு. *பொற்கென் றெழுந்து முத்தந்தந்து (கனம் கிருஷ்ணையர், கீர்த்.* 17).

பொற்பலகை poṟ-palakai, *n.* <பொன் +. Ornamental plank for carrying idols; விக்கிரகங்களையெடுத்துச் செல்லுதற்குரிய அலங்காரப் பலகை. *பொற்பலகை யேறிவந்து பூங்கோயி லெய்தினன் (சிவக். பிரபந். தஞ்சைப்பெருவுடையாருலா,* 312).

பொற்பாளை poṟ-pāḷai, *n.* <id. +. A kind of paddy; நெல்வகை. (*குருகூர்ப்.* 58.)

பொற்பின்னல் poṟ-piṉṉal, *n.* <id.+. Waist-band woven of gold threads; பொற்கம்பியாற் பின்னிய அரைஞாண். *திருவரையில் சாத்தின பொற்பின்னலும் (திவ். பெரியாழ்.* 1, 7, 3, *வ்யா. பக்.* 142).

பொற்பூ poṟ-pū, *n.* prob. id. +. An ancient tax; பழைய வரிவகை. (M. E. R. 217 of 1927-8.)

பொன்காண்(ணு)-தல் poṉ-kāṇ-, *v. intr.* <பொன் +. To test the quality of gold; மாற்றுக்காணுதல். *பொன்காண்பார்க ளாகவும்* (S. I. I. vi, 149).

பொன்தாழை poṉ-tāḻai, *n.* <id.+. Yellow aloe; மஞ்சட்டாழை. (*சித். அக.*)

பொன்பண்டாரவாசல் poṉ-paṇṭāra-vācal, *n.* <id. + பண்டாரம் +. Treasury; பொக்கிஷம். (M. E. R 681 of 1919.)

பொன்வர்க்கம் poṉ-varkkam, *n.* <id.+. Money taxes; பணமாக வாங்கும் வரிகள். *பல பொன்வர்க்கமும்* (S. I. I. iv, 79).

பொன்வன்னமீன் poṉ-vaṉṉa-mīṉ, *n.* <id. + வன்னம் +. A kind of fish; மீன்வகை. *Pond.*

பொன்னரளி poṉ-ṉ-araḷi, *n.* <id.+. Common yellow trumpet-flowered tree; நாகசெண்பகம். (B.)

பொன்னாகம் poṉ-ṉ-ākam, *n.* <id. +. cf. பொன்னுடம்பு. Pudendum muliebre; பெண்குறி. (*சங். அக.*)

பொன்னிப்பிளவை poṉṉi-p-piḷavai, *n.* perh. id. +. A kind of carbuncle; பிளவைவகை. (*பாராச.* i, 49.)

பொன்னுருவிமாலை poṉ-ṉ-uruvi-mālai, *n.* <id. + உருவு- +. A kind of necklace; கழுத்தணிவகை. *பொன்னுருவிமாலைதனைக் கழற்றியெறிவேன் (கோவ. க.* 18).

பொன்னொத்தமலர்ப்பூண்டு poṉ-ṉ-otta-malar-p-pūṇṭu, *n.* <பொன் + ஒ- + மலர் +. Chrysanthemum; சாமந்தி. *Pond.*

போ

போக்கறு-த்தல் pōkkaṟu-, *v. tr.* <போக்கு +. To make no default; முட்டின்றிச் செய்தல். கோயில் தேவைகளும் சந்திராதித்தவரை போக்கறப்பாருகச் சிலாலேகை பண்ணிக்கொடுத் தோம் (S. I. I. iv, 102). கடமைத் தட்டுப் போக்கறுக்க வேணுமென்று மகாசபையோம் சம்மதித்து (S. I. I. viii, 165).

போக்கறுதி pōkkaṟuti, *n.* <id. +. Want of an alternative; புகலின்மை. முன்பு பலபடி யுஞ் சொன்னதனையே போக்கறுதியாற் பின்புஞ் சொல்லுகின்றேன் (நீலகேசி, 392, உரை).

போக்கிச்சொல்(லு)-தல் pōkki-c-col-, *v. intr.* <போக்கு- +. To deal with, in a latter place; பின்னர்க் கூறுதல். அவை இரண்டு திணைக்கும் விரவுவினை ஆதலாற் போக்கிச் சொல்லுதும் (நேமிநா. 41, உரை).

போக்கியம் pōkkiyam, *n.* (Poet.) A kind of metrical composition; சித்திரக்கவி வகை. (யாப். வி. 497.)

போக்கு[1] pōkku, *n.* <போ-. Conduct; நடத்தை. அழகிதாயிருந்தது உம்முடைய போக்கு (ஈடு, 1, 4, 7).

போக்கு[2]-தல் pōkku-, *5 v. tr.* Caus. of போ-. To teach; கற்பித்தல். ஆசார்யன் போக்கின வையேயாகிலும் தத்ஸந்நிதியிலே சொல்லக்கடவதல்ல (திவ். திருநெடுந். 13, வ்யா.).

போக்குச்செய்-தல் pōkku-c-cey-, *v. tr.* <போக்கு +. To sell; விற்றல். போக்குச்செய்து பொன் வரக்காட்டுக (Insc.).

போக்குநீக்கு pōkku-nīkku, *n.* <id. +. 1. Amiability; சௌமிய குணம். *Loc.* 2. Kind-heartedness; அவிரக்கம். *Colloq.*

போககாமி pōka-kāmi, *n.* <*bhōga* + *kāma*. Worldly person; உலகவின்பத்தை விரும்பு பவ-ன்-ள். (ஞானபூசா. 10, உரை.)

போகபூமி pōka-pūmi, *n.* <id. +. Place for enjoyment of the fruits of karma, dist. fr. *karuma-pūmi;* கருமபலத்தை அனுபவித்தற்குரிய பிரதேசம். இதுதான் நவகண்டமாய் அதில் எட்டுக் கண்டமும் போகபூமியாய் ஒன்பதாம் கண்டமான பரத கண்டம் கருமபூமியா யிருக்குமென்றபடி (திவ். திருச் சந். 8, வ்யா. பக். 27).

போகி pōki, *n.* <*bhōgin.* (சாதாரத்த.) 1. Trader; வியாபாரி. 2. Barber; நாவிதன்.

போங்கு pōṅku, *n.* <T. *pōṅgu.* Ear-ring; கடுக்கன். (விறலிவிடு. 369.)

போட்கன் pōṭkaṉ, *n.* Deceit; கபடம். அவன் பக்கலுள்ளது போட்கனுகவுமாம் (ஈடு, 1, 5, ப்ர).

போட்டாபோட்டி pōṭṭāpōṭṭi, *n.* Redupl. of போட்டி. Rivalry; competition; contest; போட்டி. பந்தயமென்பதும் போட்டாபோட்டி என்பதும் . . . பெருத்துப்போயிற்று (மதி. க. ii, 146).

போட்டு-தல் pōṭṭu-, *5 v. tr.* Corr. of புகட்டு-. To cause to drink, as liquid food; புகட்டுதல். குழந்தைக்குப் பால் போட்டினுள். *Colloq.—intr.* To suffer from small pox; வார்த் தல். அம்மை போட்டியிருக்கிறது.

போட்டுடை-த்தல் pōṭṭuṭai-, *v. tr.* <போடு- +. To expose; to make public; வெளிப் படுத்துதல். *Colloq.*

போடியார் pōṭiyār, *n.* Farmer; குடியான வன். (J. N.)

போடு pōṭu, *n.* <போடு-. Stroke; அடி. அன்றேயோர் போடா யறைய வெழுங்கால் (பஞ்ச. திருமுக. 745).

போத்தி pōtti, *n.* <Arab. *fauti.* Deceased person; இறந்துபோனவ-ன்-ள். ஆஜரிருக்கும் குடி போத்தி யென்னவும் (தாசில்தார்நா. 69).

போதககுரு pōtaka-kuru, *n.* <*bōdhaka* +. Preceptor who explains the purport of the śāstras; சாத்திரார்த்தத்தைப் போதிக்குங் குரு. (விவேகசிந். பக். 28.)

போதனாமுறை pōtanā-muṟai, *n.* <*bhōdhanā* +. Method in teaching; கல்வி கற்பிக்கும் நெறி. *Mod.*

போதா-தல்[போதருதல்] pō-tā-, *v. tr.* <போ- +. To leave aside; விலக்குதல். மேற்கூறப்பட்டவற்றேடு வையாது இத்துணையும் போதந்துவைத்த தென்னை யெனின் (தொல். சொல். 3, உரை).

போதி-த்தல் pōti-, *11 v. intr.* <*bōdha.* To have inclination; விருப்பமுண்டாதல். போதித்த போது வருவேன். *Nāñ.*

போதிகைப்பலகை pōtikai-p-palakai, *n.* <போதிகை +. (Arch.) Entablature; தூணின் தலையில் வைக்கும் பலகை. *Pond.*

போதியல் pōtiyal, *n.* <id. See போதிகைப் பலகை. *Loc.*

போதுபோக்கு pōtu-pōkku, *n.* <போது +. Play; pastime; விளையாட்டு. தோளைக்கழித்துத் தலையைச்சரித்துப் போதுபோக்காக நின்றுகொன்றபடி (ஈடு, 1, 6, 7).

போய்வா-தல்[போய்வருதல்] pōy-vā-, *v. intr.* <போ- +. To go; போதல். *Colloq.*

போயண்டன் pōyaṇṭaṉ, *n.* cf. போயி. Palanquin bearer; சிவிகை சுமப்போன். *Pond.*

போயிண்டன் pōyiṇṭaṉ, *n.* See போயண்டன். *Pond.*

போர்க்கத்தி pōr-k-katti, *n.* <போர் +. Sword; வாள். *Pond.*

போர்ச்சயப்பாவை pōr-c-caya-p-pāvai, *n.* <id. + சயம் +. The Goddess of Victory; வீரலட்சுமி. (S. I. I. i, 100.)

போர்த்தனிப்பூவை pōr-t-taṉi-p-pūvai, *n.* <id. + தனி +. See போர்ச்சயப்பாவை. (S. I. I. iii, 115.)

போரா pōrā, *n.* Bale of cotton; பஞ்சுப் பொதி. *Loc.*

போரிகட்டு-தல் pōri-kaṭṭu-, *v. intr.* <போரி +. To compete; to rival; போட்டிபோடுதல். (M. Navi.)

போலும் pōlum, *part.* <போல்-. Particle expressing doubt; ஐயப்பாட்டைக் குறிக்குஞ் சொல்.

போஷியபுத்திரன் pōṣiya-puttiraṉ, *n.* <*pōṣya* +. Adopted son; சுவீகாரபுத்திரன். *Pond.*

பௌ

பௌகண்டம் paukaṇṭam, *n.* <*paugaṇḍa.* Period in the life of a child, between the ages of six and ten; ஆறு முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைப்பருவம். (விசாரசந். பக். 343.)

பௌஷியம் pauṣiyam, *n.* <*bhavṣyat.* The future; வருங்காலம். பௌஷியப் பிரதிபந்தம் (பஞ்சதசப். பக். 84).

ம

மக்கட்கதி makkaṭ-kati, *n.* <மக்கள் +. (Buddh.) Birth, as a human being, one of *ṣaṭ-kati,* q.v.; ஷட்கதியு ளொன்று.

மக்கணாயனார் makkaṇāyaṉār, *n.* <id. +. King's son; இராசகுமாரன். (M. E. R. 104 of 1916-C.)

மக்கல் makkal, *n.* <மக்கு-. Rotten straw; muck; கூளம். *Loc.*

மக்கள்வழி makkaḷ-vaḻi, *n.* <மக்கள் +. Patriarchal system of inheritance; மக்கட்டாயம். *Loc.*

மக்காரெட்டி makkāreṭṭi, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 58-59.)

மக்கிரி makkiri, *n.* Big basket; பெரிய கூடை. (எங்களூர், 91.)

மக்கினம் makkiṉam, *n.* <*magna.* 1. Immersion; அழுந்துகை. மக்கினம் பட்டுள்ளே மறுவி யிருந்தாண்டி (பட்டினத்துப். பக். 235). 2. Disgrace; அவமானம். அந்தச்சபையில் அவன் மக்கினப்பட்டான்.

மக்ரிபு makripu, *n.* <Arab. *maghrib.* Prayer at sunset; மாலைத் தொழுகை. *Muham.*

மகப்படி maka-p-paṭi, *n.* perh. *mahat* +. An item of expenditure in a temple; கோயிற் படித்தரச்செலவுவகை. (S. I. I. iv, 289.)

மகப்பு makappu, *n.* prob. id. Greatness; பெருமை. மகப்புருவந்தானே மதிக்கில் (திவ். இயற். 4, 29).

மகர்நோன்பு makarnōṉpu, *n.* Corr. of மகாநோன்பு. Festival of *navarāttiri;* நவராத்திரிப் பண்டிகை. *Loc.*

மகர்நோன்புச்சாவடிக்கறுப்பு makar-nōṉpu-c-cāvaṭi-k-kaṟuppu, *n.* A kind of dark-coloured saree, with yellow silk border; மஞ்சட்பட்டுக் கரையும் கறுப்புநூல் உடலுமுடைய புடைவைவகை. *Loc.*

மகரச்சாயம் makara-c-cāyam, *n.* Dark-red dye; கருஞ்சேந்நிறச்சாயம். (W.)

மகரமுத்திரை makara-muttirai, *n.* <மகரம் +. A kind of hand-pose; முத்திரைவகை. (சைவாநு. வி. 20.)

மகரவாய் makara-vāy, *n.* <id. +. Spout, shaped like the mouth of the *makaram* fish; மகரமீனின் வாய்போலச் செய்யப்பட்ட நீர்த்தூம்பு. (சிலப். 5, 150, உரை.)

மகரூர் makarūr, *n.* <Arab. *muqarrar.* That which is fixed or established; உறுதியாக்கப்பட்டது. (P. T. L.)

மகாகாளை makā-kāḷai, *n.* <*mahā-kālā.* One of *nava-niti;* நவநிதியு ளொன்று. (அபி. சிந். 940.)

மகாசப்தமி makā-captami, *n.* <மகா+. The seventh day in the bright fortnight of the lunar month of *mākam;* இரதசப்தமி. (பஞ்.)

மகாசூசிகை makā-cūcikai, *n.* <id.+. Small-pox; பெரியம்மை. (தஞ். சர. iii, 68.)

மகாதேவர்திருமஞ்சனம் makātēvar-tirumañcaṉam, *n.* <மகாதேவர்+. The submarine fire; வடவாமுகாக்கினி. (தக்கயாகப். 379, உரை.)

மகாதோரணம் makā-tōraṇam, *n.* <மகா+. A kind of temple lamp; கோயில்விளக்கு வகை. (M. E. R. 608 of 1916.)

மகாநியோகம் makā-niyōkam, *n.* <id.+. Royal command; அரசனது ஆணை. மகா நியோகமும் புறப்பட்டு (S. I. I. iv, 152).

மகாப்பட்ட makā-p-paṭṭa, *adv.* <id.+படு-. Very big; மிகப்பெரிய. *Pond.*

மகாப்பிரதானன் makā-p-piratāṉaṉ, *n.* <id.+. Commander-in-chief; தலைமைச் சேனாபதி. (M. E. R. 497 of 1926.)

மகாபலம் makā-palam, *n.* <*mahā-phala.* Bael; வில்வம்.

மகாபூதகடிதானம் makāpūtakaṭitāṉam, *n.* A kind of gift; தானவகை. (S. I. I. vii, 21.)

மகாபூரணசந்திரோதயம் makāpūraṇa-cantirōtayam, *n.* <மகா+பூரணம்+. A kind of medicine; மருந்துவகை. (தஞ். சர. iii, 68.)

மகாமிருத்துயஞ்சயம் makā-miruttu-yañcayam, *n.* <id.+. A mantra; ஒரு மந்திரம்.

மகாயானம் makā-yāṉam, *n.* <*mahā-yāna.* A school of Buddhism; பௌத்தசமய வகை. (நீலகேசி, 342, உரை.)

மகாவித்வான் makā-vitvāṉ, *n.* <*mahā-vidvān.* A title meaning 'great scholar'; பெரும்புலவன் என்னும் பட்டம்.

மகாவேணு makā-vēṇu, *n.* <மகா+. A great number; ஒரு பேரெண். (கணக்கதி. 80.)

மகிமைச்சங்கம் makimai-c-caṅkam, *n.* <மகிமை+. Legion of honour; பிரான்சு தேசத்துள்ள ஒருசார் பட்டதாரிகளின் சங்கம். *Pond.*

மகிமைச்சவை makimai-c-cavai, *n.* <id.+. See மகிமைச்சங்கம். *Pond.*

மகிமைநாடா makimai-nāṭā, *n.* <id.+. Ribbon indicating a title or dignity; பட்டம் பதவிகளுக்கு அறிகுறியாக அணியும் நாடா. *Pond.*

மகிமைப்பட்டாளம் makimai-p-paṭṭā-ḷam, *n.* <id.+. Grand chancellery; அரசாங்க சபைவகை. *Pond.*

மகிழம்பூத்தேன்குழல் makiḻam-pū-t-tēṉkuḻal, *n.* <மகிழ்+பூ+. A kind of cake; மகிழம்பூப்பணிகாரம்.

மகிழிசை makil-icai, *n.* <மகிழ்-+. (Pros.) A kind of *centuṟai-p-pāṭṭu;* செந்துறைப்பாட்டின் ஒரு வகை. (யாப். வி. 538.)

மகுடரேகை makuṭa-rēkai, *n.* <மகுடம்+. A line in the palm of hand, indicating prosperity; செல்வவளத்தைக் குறிக்குங் கையிரேகை வகை. (சிவக். பிரபந். பக். 342.)

மகுமூது makumūtu, *n.* <Arab. *Muhammad.* The Prophet Mahomed; முகம்மது நபிகள். (மஸ்தான். 122.)

மகுளிபாய்-தல் makuḷi-pāy-, *v. intr.* <மகுளி+. To become hard, as an arable land after heavy rains; பெருமழையால் நிலம் இறுகி விடுதல். *Loc.*

மகேந்திரக்கணை makēntira-k-kaṇai, *n.* prob. *mahēndra*+. A kind of disease; கணை நோய்வகை. (பராச. ii, 179.)

மங்கஞ்சம்பா maṅkañ-campā, *n.* A kind of *campā* paddy, maturing in seven months; ஏழுமாதத்திற் பயிராகக்கூடிய சம்பாநெல்வகை. (விவசா. 2.)

மங்களபௌளம் maṅkaḷapauḷam, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மங்குநார் maṅku-nār, *n.* <மங்கு-+. Fibre of plants, dry and decayed; மக்கி உலர்ந்த நார். (திவ். அமலனாதி. 8, வ்யா. பக். 91.)

மச்சவிளக்கம் macca-viḷakkam, *n.* <மச்சம்+. Treatise on marine zoology; மீன்களைப் பற்றிய நூல். *Pond.*

மச்சாவி maccāvi, *n.* cf. மச்சான்வீ. Elder sister's husband; தமக்கையின் புருஷன். சங்கு முத்துசெட்டி யிவளுக்கு மச்சாவி (தெய்வச். விறலிவிடு. 434).

மச்சாழ்வி maccāḻvi, *n.* See மச்சாவி. (M. E. R. 479 of 1917-B.)

மச்சிகம் maccikam, *n.* <மஞ்சிகன். Barber's work; நாவிதத் தொழில். (நீலகேசி, 280.)

மச்சிகன் maccikaṉ, *n.* cf. வைசிகன். Trader; வர்த்தகன். மச்சிகனெழுந்து கம்பவாணனை மகிழ்ந்துபோற்றி (திருவிரிஞ்சைப். வழித்துணை. 42).

மச்சு maccu, *part.* Corr. of மற்று. An expletive; ஓர் அசைநிலை. மச்சிது செய்தார் யாரே (பெரியபு. கண்ணப். 108).

மசகு macaku, *n.* < மசகு-. Mental delusion; திகைப்பு. நெடு மசகு புகுந்திடன்றே (உபதேசகா. சிவபுண். 156).

மசறி macaṟi, *n.* A kind of fish; மீன் வகை. நெற்றலி யசலை மசறி (குருகூர்ப். 20.)

மசிமை macimai, *n.* < *mahimā.* Greatness; பெருமை. மசிமையிலீ கூறைதாராய் (திவ். நாய்ச். 3, 9).

மசிலி macili, *n.* < U. *manzil.* Stage in a journey; பாதையில் தங்கிச்செல்லுங் கெடி. (P. T. L.)

மசினை macinai, *n.* Hemp; சீமைச்சணல். *Pond.*

மஞ்சக்குளிப்பான்பணம் mañca-k-kuḷi-p-pāṉ-paṇam, *n.* < மஞ்சள் + குளி- +. A kind of coin; நாணயவகை. (Tr. Rev. M. ii, 217.)

மஞ்சகீடம் mañca-kīṭam, *n.* < மஞ்சம் +. Bug; மூட்டை. (நாநார்த்த. 1048.)

மஞ்சட்கடுதாசிகொடுத்தல் mañcaṭ-kaṭutāci-koṭuttal, *n.* < மஞ்சள் + கடுதாசி +. Becoming insolvent; கடன் இறுக்க முடியாது பாப்பராதகை. *Colloq.*

மஞ்சட்கிலுகிலுப்பை mañcaṭ-kilu-kiluppai, *n.* < id. +. A kind of rattlewort; பெருங் கிலுகிலுப்பை. (சித். அக.)

மஞ்சட்குளி-த்தல் mañcaṭ-kuḷi-, *v. intr.* < id. +. To lead a fashionable life; இடம்பமாய் வாழ்தல். கொஞ்சி நீ மஞ்சட்குளிக்கிறாய் (பஞ்ச. திருமுக. 1217).

மஞ்சட்கோங்கு mañcaṭ-kōṅku, *n.* < id. +. Common caung; கோங்கமரம். (சித். அக.)

மஞ்சட்சோளம் mañcaṭ-cōḷam, *n.* < id. +. A kind of maize; சோளவகை. (விவசா. 3.)

மஞ்சட்டாழை mañcaṭṭāḻai, *n.* < id. +. A kind of aloe; தாழைவகை. (சித். அக.)

மஞ்சட்டிச்சேலை mañcaṭṭi-c-cēlai, *n.* < மஞ்சிட்டி +. A kind of saree; சேலைவகை. (S. I. I. vii, 22.)

மஞ்சணீர்த்தகப்பன் mañca-ṇīr-t-takappaṉ, *n.* < மஞ்சள் + நீர் +. Adoptive father; சுவீகாரபிதா. *Pond.*

மஞ்சணீர்த்திருவிழா mañcaṇīr-t-tiru-viḻā, *n.* < id. + id. +. The spring festival; வசந்தோற்சவம். (யாழ். அக.)

மஞ்சரி mañcari, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 102.)

மஞ்சண்முளை mañcaḷ-muḷai, *n.* < மஞ்சள் +. Paddy seedling, one or two days old; இரண்டொருநாளான நென்முளை. *Nāñ.*

மஞ்சண்முளைக்கிடை mañcaḷ-muḷai-k-kiṭai, *n.* < id. + முளை +. Penning sheep in a field where paddy has been sown recently; விதைத்து இரண்டொருநாள் சென்றபின் வயலிலிடும் ஆட்டுக்கிடை. *Nāñ.*

மஞ்சள்லவணம் mañcaḷ-lavaṇam, *n.* < id. +. A kind of salt; உப்புவகை. (தஞ். சா. iii, 132.)

மஞ்சளி-த்தல் mañcaḷi-, 11 *v. intr.* < id. To turn yellow; மஞ்சணிறமாதல். கண்கள் மஞ்சளித்து (அசுவசா. 88).

மஞ்சனை mañcaṉai, *n.* Kamela dye; கபிலப்பொடி. (L.)

மஞ்சாம்பரம் mañcāmparam, *n.* prob. மஞ்சள் + அம்பரம். A flowering plant; பூச்செடி வகை. *Madr.*

மஞ்சிட்டம் mañciṭṭam, *n.* < *mañjiṣṭha.* Redness; சிவப்பு. (உரி. நி.)

மஞ்சூரம் mañcūram, *n.* Barbadoes tree; மஞ்சாடிமரம். மஞ்சூர மிலக்கங்கொண்டு (வீரவன. உமையாண். 20).

மஞ்சொட்டி mañcoṭṭi, *n.* A kind of herb; பூடுவகை. (குருகூர்ப். 45.)

மட்டக்கார் maṭṭa-k-kār, *n.* < மட்டம் +. A coarse kind of paddy; மட்டநெல்வகை. (M. M. 146.)

மட்டக்கோணம் maṭṭa-k-kōṇam, *n.* < id. +. cf. மட்டுக்கோணம். Right angle; நேர் கோணம். (M. Navi.)

மட்டக்கோலூசி maṭṭa-k-kōl-ūci, *n.* < id. + கோல் +. A surgical instrument; சத்திர வைத்தியத்தில் உபயோகிக்கும் ஆயுதவகை. (தஞ். சா. iii, 40.)

மட்டசனம் maṭṭacaṉam, *n.* < மட்டு + அசனம். See மட்டுணவு. *Pond.*

மட்டடக்கு-தல் maṭṭaṭakku-, *v. tr.* < id. +. To bring down one's pride; கருவமொடுக்குதல். மண்டை தள்ளிப்போகாதே மட்டடக்க வருவாள் நானே (கோவ. க. 88).

மட்டப்பரப்பு maṭṭa-p-parappu, *n.* < மட்டம் +. Plane surface; மேடு பள்ளமில்லாத சமமான இடம். *Loc.*

மட்டப்பூ maṭṭa-p-pū, *n.* <id.+. A pendant in a jewel; அணியுறுப்புக்களு ளொன்று. (S. I. I. ii, 184.)

மட்டமுக்கோணம் maṭṭa-mukkōṇam, *n.* <id.+. Right-angled triangle; நேர்கோண முடைய முக்கோணம். *Mod.*

மட்டாசனம் maṭṭācaṉam, *n.* <id.+. See மட்டுணவு. *Pond.*

மட்டிச்சகலாத்து maṭṭi-c-cakalāttu, *n.* <மட்டி+. A kind of coarse cloth, used in packing; மூட்டைகட்ட வுதவும் முரட்டுத்துணிவகை. *Pond.*

மட்டிவைத்தல் maṭṭi-vaittal, *n.* <id.+. Mark made with cow-dung on sheaves of paddy left unthreshed on the threshing floor; களத்தில் அடிபடாமலிருக்குங் கதிர்க்கற்றைமேற்சாணியால் இடுங் குறி. *Loc.*

மட்டுணவு maṭṭuṇavu, *n.* <மட்டு+. Moderation in eating and drinking; மிதமாக வுண்கை. *Pond.*

மட்டை maṭṭai, *n.* Corpse; பிணம். *Pond.*

மட்டைவிழுதல் maṭṭai-viḻutal, *n.* <மட்டை+. Death; சாவு. *Loc.*

மடக்கம் maṭakkam, *n.* <மடக்கு-. 1. Set-back; frustration; பலிக்காமை. நம்முடைய நோக்கங்களுக்குத் தடையும் மடக்கமும் விக்கினமும் உண்டு (நித்தியாநு. பக். 25). 2. Subsidence, as of fever; நோய் மட்டுப்படுகை. *Nāñ.*

மடக்குத்தசபின்னம் maṭakku-t-taca-piṉṉam, *n.* <மடக்கு+. (Arith.) Recurring decimal; ஒருவகைத் தசபின்னம். *Mod.*

மடக்குவட்டி maṭakku-vaṭṭi, *n.* <மடக்கு+. Compound interest; வட்டிக்கு வட்டி. *Loc.*

மடக்கோலை maṭakkōlai, *n.* <id.+. Ola, written and folded; எழுதி மடக்கிய ஓலை. டாண்டவர்கள் தூதுவிடுகிறபோது கட்டிவிட்ட மடக்கோலை (திவ். அமலனாதி. 6, வ்யா. பக். 71).

மடங்குவட்டி maṭaṅku-vaṭṭi, *n.* <மடங்கு+. See மடக்குவட்டி. (செல்வவிருத்திவிளக்கம், பக். 111.)

மடபதி maṭa-pati, *n.* <மடம்+. Head of a mutt; மடாதிபதி. (சேக்கிழார்பு. 59.)

மடம் maṭam, *n.* cf. *mūḍha*. Incorrect knowledge; பொருண்மையறியாது திரியக்கோடல். (தொல். பொ. 248, இளம்.)

மடமட்டி maṭa-maṭṭi, *n.* <மடம்+. Utter fool; முழுமுட்டாள். *Colloq.*

மடிநாய் maṭi-nāy, *n.* <மடி+. Lap-dog; சிறுநாய்வகை. *Pond.*

மடிப்பு maṭippu, *n.* <மடி-. Assessment for second crop; இரண்டாம்போகத்திற்கு விதிக்கப்பட்ட தீர்வை. (R. T.)

மடிவலை maṭi-valai, *n.* prob. id.+. A double net to catch small fish; சிறுமீன்களைப் பிடிக்க உதவும் வலைவகை. *Loc.*

மடு maṭu, *n.* prob. மடு-. Udder, especially of a cow; பசு முதலியவற்றின் முலையிடம்.

மடுவிடு-தல் maṭu-viṭu-, *v.* <மடு+. *intr.* 1. To form a pool, as in a river bed; மடுவுண்டாதல். *Loc.* 2. To be specially attached to; விசேஷப் பற்றுண்டாதல். ஸ்ரீ குலசேகரப்பெருமாளிடத்திலே . . . எம்பெருமானார் மடுவிட்டிருப்பது (திவ். பெருமாள். தனியன், வ்யா. பக். 2).—*tr.* To let a calf suck its mother; தாய்ப்பசுவின் மடுவிற் பால் குடிக்கும்படி கன்றை விடுதல். *Loc.*

மடைகழி-த்தல் maṭai-kaḻi-, *v. intr.* <மடை+. To open a sluice; மதகுதிறத்தல். *Pond.*

மடைகிடாய்முக்கந்தன் maṭai-kiṭāy-mukkantaṉ, *n.* <id.+. Purveyor of provisions to officers on circuit, in Ramnad; இராமநாதபுரஞ்சீமையிற் கிராமங்களைச் சுற்றிப் பார்க்கவரும் மேலதிகாரிகளுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் கொடுக்கும் அதிகாரி. (Rd. M. 313.)

மடைநில்-தல் [மடைநிற்றல்] maṭai-nil-, *v. intr.* <id.+. To be able, as a cow, to be milked whenever and wherever required; பால் கறக்கும் இடங்கடோறும் பசு மடுச்சுரந்து கறக்கத்தக்கேற்றதாதல். இந்த மாடு மடைநிற்காது. *Madr.*

மண்காட்டு-தல் maṇ-kāṭṭu-, *v. tr.* <மண்+. To defeat; தோற்பித்தல். *Loc.*

மண்டபக்கொத்து maṇṭapa-k-kottu, *n.* <மண்டபம்+. Temple servants; கோயிற் பணியாளர். (M. E. R. 644 of 1922.)

மண்டபவீடு maṇṭapa-vīṭu, *n.* <id.+. House with vaulted roof; கமான்வடிவில் அமைந்த மேற்றளமுடைய வீடு. *Loc.*

மண்டலமுதலியார் maṇṭala-mutaliyār, *n.* <மண்டலம்+. Chief officer ruling over a *maṇṭalam*; மண்டலத்தையாளும் அரசாங்கத் தலைவர். (Colas. ii, 254, 584.)

மண்டலமுதன்மை maṇṭala-mutaṉmai, *n.* <id.+. Leadership of a *maṇṭalam*; மண்டலத்தையாளும் உத்தியோகம். (S. I. I. v, 156.)

மண்டற்சிங்காய் maṇṭaṟ-ciṅkāy, n. Shining leaved soap-pod; வெள்ளிண்டு. (L.)

மண்டிதம் maṇṭitam, n. <maṇḍita. Decoration; அலங்காரம். திருமணி மாாபா குண்டல மண்டித (நூற்றெட்டுத். திருப்பு. 65).

மண்டிலவரங்கம் maṇṭila-v-araṅkam, n. <id.+. Circus tent; வேடிக்கை காட்டும் அரங்கம். Pond.

மண்டு maṇṭu, n. Corr. of மன்று. Raised platform under a tree; பொதுவிடம். வாடுமுக முடன் வந்ததென்ன மண்டிலே கூடியே நொந்ததென்ன (கட்டபொம்ம. பக். 6).

மண்டைதுள்ளு-தல் maṇṭai-tuḷḷu-, v. intr. <மண்டை+. To be haughty; செருக்கு மிகுதல். மண்டைதுள்ளிப்போகாதே (கோவ. க. 88).

மண்டையவியன் maṇṭaiyaviyaṉ, n. <māṇḍavya. Person belonging to māṇḍavya gōtra; மாண்டவிய கோத்திரத்தான். (M. E. R. 87 of 1925.)

மண்ணகுண்டம் maṇṇa-kuṇṭam, n. <மண்+. Raised, earthen platform, as in a fortification; மண்ணாற் செய்த அட்டாலை. (யாழ். அக.)

மண்ணச்சூலை maṇṇaccūlai, n. A disease of horses; குதிரைநோய் வகை. (தஞ். சா. iii, 183.)

மண்ணறுவான் maṇṇaṟuvāṉ, n. <மண் + அறு-. A term of abuse; ஒரு வசைச்சொல். (தெய்வச். விறலிவிடு. 492).

மண்ணறை-தல் maṉ-ṉ-aṟai-, v. tr. <id.+. To plaster with mud; மண்பூசுதல். சாத்திக் கதவடைத்துத் தாள்பூட்டி மண்ணறைந்தார் (கோவ. க. 5).

மண்ணாந்தை maṇṇāntai, n. Python; வெண்ணாந்தை. Tinn.

மண்பாடு maṇ-pāṭu, n. <மண்+. Earthen mound or bank; ridge of earth; மண்போட்டுச் செய்த வரம்பு. ஏரிகரை மண்பாட்டுக்குக் கிழக்கும் (S. I. I. iv, 97).

மண்மதில் maṇ-matil, n. prob. id.+. A tax; வரிவகை. (M. E. R. 1929-30, p. 87.)

மண்வைப்புப்புடம் maṇ-vaippu-p-puṭam, n. <id.+வை-+. A mode of calcination, one of muppū-p-puṭam; முப்பூப்புடத்தொன்று. (தைலவ. தைல. பக். 9.)

மணப்பொங்கல் maṇa-p-poṅkal, n. prob. மணம்+. First day of the Poṅgal festival; தைப்பொங்கல் விழாவில் முதல்நாட்பொங்கல். (எங்களூர், 90.)

மணல்முள்ளங்கி maṇal-muḷḷaṅki, n. <id.+. A kind of radish; முள்ளங்கிவகை. (சங். அக.)

மணவாட்டுப்பிள்ளை maṇa-v-āṭṭu-p-piḷḷai, n. <மணம்+ஆள்-+. See மணவாட்டுப் பெண்பிள்ளை. (திவ். பெரியாழ். 3, 8, 4, வ்யா. பக். 749.)

மணவாட்டுப்பெண்பிள்ளை maṇa-v-āṭṭu-p-peṇ-piḷḷai, n. <id.+id.+. Bride; மணமகள். மாமியாரான யசோதைப்பிராட்டி இவளைக் கண்டுகெந்து மணவாட்டுப்பெண்பிள்ளை யென்று ஸத்கரிக்குமோ (திவ். பெரியாழ். 3, 8, 1, வ்யா. பக். 735).

மணவாளப்பிள்ளை maṇavāḷa-p-piḷḷai, n. <மணவாளன்+. Bridegroom; மணமகன். (பெரியபு. தடுத்தாட். 27.)

மணவாளன் maṇa-v-āḷaṉ, n. <மணம்+ஆள்-. Master, lord; தலைவன். செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் மணவாள (குமர. பிரபந். முத்துக். 11).

மணற்கொட்டகம் maṇaṟ-koṭṭakam, n. <மணல்+. Toy-house of sand, in children's play; சிறுவர் விளையாட்டாக மணலால் அமைக்குஞ் சிறுவீடு. ஓரானை மணற்கொட்டகத்தைச் சிதறினாற் போலே அனுயாஸேந அழித்து (திவ். திருநெடுந். 28, வ்யா.).

மணற்சீனி maṇaṟ-cīṉi, n. <id.+. A kind of sugar; சர்க்கரைவகை. (சித். அக.)

மணற்பாகு maṇaṟ-pāku, n. <id.+. Fine sugar; நுழைவுச் சீனி. (நாமதீப.)

மணிக்கல் maṇi-k-kal, n. <மணி+. Gem; இரத்தினக்கல். மிகுமொளி மணிக்கல் (ஞானபூசா. 26).

மணிக்கலன் maṇi-k-kalaṉ, n. <id.+. Ornament set with jewels; இரத்தினாபரணம். பரிசட்டமு மிலங்கு மணிக்கலனு நல்கி (S. I. I. iii, 217).

மணிக்கிராமம் maṇi-k-kirāmam, n. perh. vaṇij+. Mercantile guild; வணிகர் குழு வகை. (M. E. R. 598 of 1926.)

மணிச்சூத்திரம் maṇi-c-cūttiram, n. <மணி+. Clock; கடிகாரம். Pond.

மணித்தியாலம் maṇi-t-tiyālam, n. <id. +. Hour; ஒருமணி நேரம். Pond.

மணிப்பயறு maṇi-p-payaṟu, n. <id.+. A kind of gram; பயறுவகை. Loc.

மணிப்பவளம் maṇi-p-pavaḷam, *n.* <id. +. Coral; நற்பவளம். மண்பவளத்தை மணிப் பவளமென்றும் (சரவண. பணவி'டு. 204).

மணிப்பாம்பு maṇi-p-pāmpu, *n.* <id. +. A kind of snake; பாம்புவகை. *Pond.*

மணிமலை maṇi-malai, *n.* <id. +. Rocky hill; மண்சேறியப்பெறாத பாறைகளாலான மலை. தூறுகள் விருக்ஷங்களுண்டாம்படி மண்செறிந்த மலை யன்றிக்கே யிருக்கும் மலைகளை மணிமலை யென்னக் கடவதாய் (திவ். பெரியாழ். 3, 2, 3. வ்யா. பக். 539).

மணிமாறு-தல் maṇi-māṟu-, *v. intr.* <id. +. To trade in gems; இரத்தினவியாபாரஞ் செய்தல். மணிமாற வந்திடத்தே மாதரசே வரலாமோ (கோவ. க. 96).

மணையில்வைத்துப்பாடு-தல் maṇaiyil-vaittu-p-pāṭu-, *v. tr.* <மணை + வை- +. To decorate and set on a platform, as a girl on auspicious occasions, and sing songs; பெண்ணை அலங்கரித்து மணையிலிருத்திச் சுபம்பாடுதல்.

மத்தளிப்பு mattaḷippu, *n.* <Arab. *matlab.* cf. மத்தலபு. Intention, object; எண்ணம். *Loc.*

மத்தான்காயி mattāṉkāyī, *n.* <E. Martingale; ஜீப்பும் மரத்திற்குக் கீழ்ப்புறத்தில் ஆதாரமாக உள்ள கயிறு அல்லது சங்கிலி. (M. Navi.)

மத்திமத்தான் mattimattāṉ, *n.* <மத்திமம். Person belonging to the Buddhist sect of *mādhyamika;* மாத்யமிகன். வாணுளாறக்கின்ற மத்திமத்தார் வழிமாற்றுவமே (தேசிகப். 5, 14).

மத்திமம் mattimam, *n.* <*madhyama.* (Poet.) *Śānta Rasa,* the sentiment of tranquility; நடுவுநிலைமை யென்னுஞ் சுவை. (தொல். பொ. 245, இளம்பூ.)

மத்திமவிம்சதி mattima-vimcati, *n.* <id. +. The second period of 20 years from *carvacittu* to *parāpava* in the Jupiter cycle; அறுபது வருஷக் கணக்கில் சர்வசித்து முதல் பராபவ வருஷம் வரையுள்ள இடையிருபது வருஷங்கள். (பஞ்.)

மத்தியம் mattiyam, *n.* <*madhya.* Earth; பூமி.

மத்தியானரேகை mattiyāṉa-rēkai, *n.* <மத்தியானம் +. The great circle passing through the zenith and the northern and southern points of the horizon; வானுச்சியை அடிவானத்தின் வடக்குத்தெற்கு முனைகளோடு சேர்க்கும் வட்டக்கோடு.

மத்ஸ்யதுவாதசி matsya-tuvātaci, *n.* <*matsya* +. The *tuvātaci titi* of the bright fortnight of the lunar month of *mārkkaciram;* மார்க்கசிர மாதத்துச் சுக்கிலத் துவாதசி. (பஞ்.)

மதகு mataku, *n.* The mythical mountain *cakkaravāḷam;* சக்கரவாளகிரி. மதகோடி யுலகேழு மணநாற (தக்கயாகப். 3).

மதயாணி matayāṇi, *n.* A kind of flower plant; செடிவகை. (புட்ப. 29.)

மதனகாந்தச்சேலை matana-kānta-c-cēlai, *n.* prob. மதனன் + காந்தம் +. A kind of saree; புடைவைவகை. (பஞ்ச. திருமுக. 1161.)

மதாந்தன் matāntaṉ, *n.* <*mada* + *andha.* One who is blind with arrogance; செருக்குடையவன். செல்வத்தின் மதாந்தராகி (சானந்தகணே. நரக. 17).

மதிதெரிகலை mati-teri-kalai, *n.* <மதி + தெரி- +. The day after the new moon, when the crescent is scarcely visible; சினீவாலி. (அரு. நி.)

மதில்தேவை matil-tēvai, *n.* <மதில் +. A tax; வரிவகை. (S. I. I. vii, 63.)

மதிள் matiḷ, *n.* Wall, as round a fort; மதில். மதிளிலங்கை யழித்தவனே (திவ். பெருமாள். 8, 9).

மதிளிடு-தல் matiḷ-iṭu-, *v. tr.* <மதிள் +. 1. To surround by fortifications; சுற்றும் அரணுக மதிற்கவ ரெழுப்புதல். 2. To protect; பாதுகாத்தல். சில தார்மிகர் மதிளிட்டு நோக்கப் பெற்றுமிறே (திவ். திருநெடுந். 9, வ்யா.).

மதிஞாயன் matiṉāyaṉ, *n.* <மதில் + நாயன். Officer in charge of a fort; கோட்டைத்தலைவன். (T. A. S. ii, 68.)

மதுர்பேணி matur-pēṇi, *n.* prob. *madhura* +. A kind of sweet cake; பதர்பேணி. மாமதுரமிக்க மதுர்பேணி (பஞ்ச. திருமுக. 1836).

மதுராந்தகன்மாடை maturāntakaṉ-māṭai, *n.* <மதுராந்தகன் +. An ancient coin; பழைய நாணயவகை. நாங்கள் கைக்கொண்ட மதுராந்தகமாடையோ டொக்கும் பொன் (S. I. I. iii, 164).

மதோதகம் matōtakam, *n.* <*madhu* +. Hydromel, mixture of honey and water; தேனும் நீருங் கலந்தது. *Pond.*

மந்தரச்சக்கரம் mantara-c-cakkaram, *n.* <மந்தரம் +. (Pros.) A kind of metrical composition; சித்திரக்கவிவகை. (யாப். வி. 497.)

மந்தாதிகாரி mantātikāri, *n.* <*manda* +. One who belongs to the last class of persons qualified to receive instructions; கல்விக்குரிய மாணவருள் கீழ்த்தரத்தான்.

மந்தி manti, n. <id. Fool; முட்டாள். *Colloq.*

மந்திரயானம் mantira-yāṉam, n. <*mantra*+. A school of Buddhism; பௌத்த சமயத்துளொருவகை. (நீலகேசி, 342, உரை.)

மந்திராபிடேகம் mantirāpiṭēkam, n. <id.+. A form of worship; அனுஷ்டானவகை. (சைவாநு. வி. 21.)

மந்திரிப்பா-தல் mantirippā-, v. intr. prob. மந்திரி-+ஆ-. To consecrate; குருப்பட்டந் தரித்தல். *Pond.*

மந்தைப்பணம் mantai-p-paṇam, n. <மந்தை+. Tax on grazing; மேய்ச்சல் வரி. (S. I. I. vii, 46.)

மந்தோசை mantōcai, n. <மந்தம்+ஓசை. Low pitch; குறைவான ஓசை. *Pond.*

மப்புச்சோளம் mappu-c-cōḷam, n. Maize; சோளம். *Pond.*

மம்மதுகான்வராகன் mammatukāṉ-varākaṉ, n. A coin; நாணயவகை. (பணவிடு. 116)

மயக்கம் mayakkam, n. <மயங்கு-. Sexual union; கூடல். (சூடு, 1, 9, 6)

மயம் mayam, n. perh. *maya*. Property, wealth; சொத்து. மயக்காரன், மயக்காரி. *Loc.*

மயர்க்கிழங்கு mayar-k-kiḻaṅku, n. Tapioca; மரவள்ளி. (L.)

மயானக்குருவிதோஷம் mayāṉa-k-kuruvi-tōṣam, n. <மயானம்+. A kind of *pakṣi-tōṣam*; பக்ஷிதோஷவகை. (பாலாசு. ii, 214.)

மயிரொட்டியாணம் mayir-oṭṭiyāṇam, n. <மயிர்+. Sackcloth; சணலாற் செய்த துணிவகை. *Pond.*

மயிலன்கம்பு mayilaṉ-kampu, n. A kind of bulrush millet; கம்புப்பயிர்வகை. (விவசா. 4.)

மயிற்கண்சேலை mayiṟ-kaṇ-cēlai, n. <மயில்+கண்+. A kind of saree; புடைவை வகை. (பஞ்ச. திருமுக. 1163.)

மயூரகம் mayūrakam, n. Cockscomb; சாவற்கொண்டைப்பண்ணை. *Pond.*

மர்ஜை marjai, n. <Arab. *marjī*. 1. Opinion; அபிப்பிராயம். 2. Secret opinion; அந்தரங்க அபிப்பிராயம்.

மரக்கால்வலம் marakkāl-valam, n. <மரக்கால்+. Presentation of paddy, in a marriage; விவாகத்தில் நெல்லாகச் செய்யுஞ் சீர். *Loc.*

மரக்குதிரை mara-k-kutirai, n. <மரம்+. Bench used by artisans; கம்மாளர் கருவியுளொன்று. *Pond.*

மரக்கோப்பு mara-k-kōppu, n. <id.+. Wooden roof; மரத்தால் அமைக்கப்பட்ட மேற்கட்டு. குறட்டின்மேலே மரக்கோப்பாகத் திருமண்டபம் கட்டுவித்து (கோயிலொ. 42).

மரச்சுத்தியல் mara-c-cuttiyal, n. <id.+. Wooden beater, mallet; கொட்டாப்புளி. *Pond.*

மரணபுஸ்தகம் maraṇa-pustakam, n. <மரணம்+. The Book of Life; ஜீவ புஸ்தகம். (விவிலி.)

மரத்தட்டு mara-t-taṭṭu, n. <மரம்+. Wooden tray; மரப்பலகையாலான தாம்பாளம். *Colloq.*

மரத்திலடி-த்தல் marattil-aṭi-, v. tr. <id. +. To set in the stocks; தண்டனையாகத் தொழுமரத்தில் மாட்டுதல். பள்ளனைப் பிடித்தடித்தே மரத்திலடித்தான் (குருகூர்ப். 50).

மரப்பரி mara-p-pari, n. <id.+. See மரக்குதிரை. *Pond.*

மரப்பல்லி mara-p-palli, n. <id.+. A kind of lizard; பல்லிவகை. (அபி. சிந்.)

மரம் maram, n. Stocks; தொழுமரம். (குருகூர்ப். 50.)

மரமச்சாதிவிலை mara-maccāti-vilai, n. <மரம்+மச்சம்+ஆதி+. A tax; வரிவகை. (S. I. I. viii, 214.)

மரலைங்குப்பூடு maralaiṅkuppūṭu, n. A plant; பூடுவகை. (சங். அக.)

மரியாதி mariyāti, n. <*maryādā*. Manner, way; முறை. இம்மரியாதியிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும் (S. I. I. iv, 98).

மரியாதைக்கிரமம் mariyātai-k-kiramam, n. <மரியாதை+. See மரியாதைமுறை. *Mod.*

மரியாதைமுறை mariyātai-muṟai, n. <id.+. Etiquette; மரியாதையாக நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்கு. *Pond.*

மருக்கடம் marukkaṭam, n. Indian adjutant; பெருநாரைவகை. *Pond.*

மருட்செந்தொடை maruṭ-centoṭai, n. <மருள்+. (Pros.) A kind of *centoṭai* verse; செந்தொடைவகை. (யாழ். அக.)

மருட்டு-தல் maruṭṭu-, 5 v. tr. Caus. of மருள்-. To make one forget; மறக்கச்செய்தல்.

சோல் வாங்கித்தருகிறேன் என்று இவனை யழுகை மருட்டி (திவ். பெரியாழ். 2, 6, ப்ர. பக். 358).

மருட்டுத்தொழில் maruṭṭu-t-tolil, *n.* <மருட்டு+. Magic, sleight of hand; கைமாய வித்தை. *Pond.*

மருத்துவகுலம் maruttuva-kulam, *n.* <மருத்துவம்+. Barber caste; நாவிதச்சாதி. *Mod.*

மருத்துவவிருத்தி maruttuva-virutti, *n.* <id.+. Land granted in inam to the village physician; கிராமவைத்தியனுக்கு இறையிலியாக விடப்பட்ட நிலம். (An. Dec. 336.)

மருளாடி maruḷ-āṭi, *n.* <மருள்+. cf. மருளாளி. Priest acting as an inspired oracle; ஆவேசங்கொண்டு குறிசொல்லும் பூசாரி. (மதி. க. ii, 187.)

மல்லாக்கு mallākku, *n.* <மல்லா-. Lying on one's back; மேல்முகமாகக் கிடக்கை. *மல்லாக் காய்ச் சயனித்தல்* (வேதாந்தசா. பக். 7).

மலக்கிரகக்குழல் malakkiraka-k-kulal, *n.* <மலக்கிரகம்+. Waste pipe; கக்கூசுக் குழாய். *Pond.*

மலக்கிரகம் mala-k-kirakam, *n.* <*mala+gṛha.* Latrine; கக்கூசு. *Loc.*

மலகு malaku, *n.* Gunny; கோணிப்பை. *Loc.*

மலங்கு-தல் malaṅku-, *5 v. intr.* To incline and fall to the ground; சாய்ந்துவிழுதல். *மலங்க நின்றுதன் மடனொடு மயிர்கையிட் டெயிர்க்கும்* (நீலகேசி, 51).

மலட்டுக்காலம் malaṭṭu-k-kālam, *n.* <மலடு+. Unproductive period of time; பயனில்லாத காலம். *மலட்டுக்காலம் போலே யிருக்கையாலே* (திவ். திருநெடு. 3, வ்யா. பக். 25).

மலட்டுலக்கை malaṭṭulakkai, *n.* <id.+உலக்கை. A kind of crude, wooden pestle; செப்பனிடப்படாத உலக்கை. *மலட்டுலக்கை கொண்டு வந்து மேல் தானடித்தாள்* (கோவ. க. 97).

மலட்டுவிப்புருதி malaṭṭu-vippuruti, *n.* <id.+. A kind of abscess; புண்கட்டிவகை. (தஞ். சர. iii, 145.)

மலடிமகன் malaṭi-makaṉ, *n.* <மலடி+. Non-existent thing, as the son of a sterile woman; இல்பொருள். *Loc.*

மலடுநில்-தல் [மலடுநிற்றல்] malaṭu-nil-, *v. intr.* <மலடு+. To be sterile; மலடாயிருத்தல். *அறுபதினாயிரமாண்டு ஜீவித்த சக்ரவர்த்தி நெடுநாள் மலடுநின்று பின்னைபெற்றவனுகையாலே* (திவ். பெரியதி. 1, 2, 6, வ்யா.).

49

மலந்துவரை malan-tuvarai, *n.* <மலை+. A kind of dholl; துவரைவகை. (விவசா. 4.)

மலயப்பூத்துன்னமரம் malaya-p-pū-t-tuṉṉa-maram, *n.* <மலயம்+. Toon tree, *Cedrella toona;* மரவகை. *Pond.*

மலாய்-தல் malāy-, *4 v. tr.* To mix; கலத்தல். *எல்லாம் ஒன்றாகச் சேர்த்து மலாய்ந்து* (மதி. க. ii, 52).

மலாரம் malāram, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மலை malai, *n.* The squares in the board of an indoor game, where the pieces cannot be cut; கட்ட ஆட்டத்தில் காய்வெட்டுதற்கு இயலாத கட்டங்கள். *Colloq.*

மலைக்காக்கை malai-k-kākkai, *n.* <மலை+. A kind of crow, *Pica rufiventris vagabunda;* காக்கைவகை. (M. M. 149.)

மலைக்கேப்பை malai-k-kēppai, *n.* <id.+. A species of ragi; கேப்பைவகை. (விவசா. 3.)

மலைத்துத்தி malai-t-tutti, *n.* <id.+. Plant whose fibre is used for making ropes, etc.; செடிவகை. (விவசா. 5.)

மலைப்புகையிலை malai-p-pukaiyilai, *n.* <id.+. Wild tobacco; காட்டுப்புகையிலை. (சித். அக.)

மலைமருப்பு malai-maruppu, *n.* <id.+. Summit, top of a mountain; மலைச்சிகரம். *மலை மருப்பெறி மாருதம்* (தக்கயாகப். 687).

மலைமுண்டன் malai-muṇṭaṉ, *n.* <id.+. A kind of paddy; ஒருவகை நெல். *மீளுஞ்சிறை மீட்டான் மலைமுண்டன்* (நெல்விடு. 186).

மலையலரி malai-y-alari, *n.* <id.+. Exile oleander; மஞ்சளலரி. (சித். அக.)

மலையாண்விளக்கு malai-y-āṇ-viḷakku, *n.* perh. id.+ஆண்+. A kind of lamp; விளக்குவகை. (S. I. I. vii, 467.)

மலையாளமுதலி malaiyāḷa-mutali, *n.* <மலையாளர்+. Chief of a tribe of hillmen; மலைகளில் வாழும் மக்களின் தலைவன். (S. I. I. vii, 49.)

மலைவடு malai-vaṭu, *n.* <மலை+. Tender mango, fit for pickling; ஊறுகாய்க்கு உதவும் மாவடு. *Loc.*

மலைவெற்றிலை malai-veṟṟilai, *n.* <id.+. Box-leaved ivory wood; காட்டுவெற்றிலை. (சித். அக.)

மழலைச்சிரிப்பு malalai-c-cirippu, n. <மழலை+. Charming smile of a child; குழந்தையின் புன்சிரிப்பு. இடையிடையே மழலைச்சிரிப் பாகச்சிரியா (திவ். பெருமாள். 7, 7, வ்யா. பக். 107).

மழுக்கு-தல் malukku-, 5 v. tr. To gobble; மொக்குதல். சருக்கரைப் பொங்கலை மழுக்க (தாசில் தார்நா. பக். 25).

மழுமழுப்பு malu-maluppu, n. Smoothness; வழுவழுப்பு. தூரத்திலுள்ள மலைக்கு மழுமழுப் பதிகமென்பார்கள் (பிரதாப. விலா. பக். 101).

மழைவில் malai-vil, n. <மழை+. Rainbow; வானவில். Pond.

மறக்கொண்டை mara-k-kontai, n. <மறம்+. A mode of coiffure or doing the hair, by Marava women; மறக்குலப் பெண்டிர் இட்டுக்கொள்ளும் மயிர்முடிவகை. Loc.

மறமாணிக்கர் mara-māṇikkar, n. <id. +. A class of warriors; ஒருசார் வீரக்குடியினர். பொன்னமராபதி முதலான நாடுகளில் மறமாணிக்க ரோம் (Pudu. Insc. 158).

மறிப்பு marippu, n. <மறி-. Plunder, depredation; கொள்ளை. Pond.

மறியல் mariyal, n. <id. Voluntary suspension of normal work, as by artisans; வேலை நிறுத்தம். Loc.

மறியோடு-தல் mari-y-ōṭu-, v. intr. <id.+. To divert cattle or sheep, and prevent them from straying; ஆடுமாடுகளைச் சிதறி யோடாதபடி முன்சென்று மறித்தோட்டுதல். கன்று கள் மேய்த்து மறியோடி (திவ். பெரியாழ். 3, 3, 3).

மறுகளப்படுத்துதல் maru-kaḷa-p-paṭu-ttutal, n. <மறு+களம்+. Transferring of the harvested heaps, as of tobacco, from one place to another; ஓரிடத்திருந்து பிறிதோரிடத்திற்கு அறுவடையான புகையிலை முதலியவற்றை மாற்றுகை. Tinn.

மறுகால்தலை marukāl-talai, n. <மறுகால் +. Drainage sluice; வடிமதகு. (S. I. I. v, 138.)

மறுதளி-த்தல் marutaḷi-, 11 v. tr. cf. மறுதலி-. To deny, disavow; மறுத்தல். மறு தளித்ததிம்மொழியென (திருவிரிஞ்சைப். நைமிச. 39).

மறுதி maruti, n. <மறு-. Undoing; செய்த தனை இல்லதாக்குகை. இந்திர னெண்ணலன் மறுதி யின்மையின் (நீலகேசி, 211).

மறுநனை-தல் maru-nanai-, v. intr. <மறு+. To be completely submerged and lost; to be swallowed up; முழுதும் அழிதல். தன் சோகம் மறுநனையும்படியான ஆனந்தம் இவன்பக்க லிலே உண்டு (ஈடு, 10, 4, 4, பக். 139).

மறுப்பறு-த்தல் maruppaṟu-, v. tr. <மறுப்பு+. To give after first refusing; முதலில் மறுத்துப் பின் கொடுத்தல். (W.)

மறுமண்டலம் maru-mantalam, n. <மறு +. Region or tract of land belonging to an alien king; வேற்றரசர் நாடு. மறுமண்டலத்துக்குப் போம் தூதர் (குறள், 631, மணக். அவதா.).

மறுமுள் maru-muḷ, n. <id.+. Small, new eruption about a healing ulcer; ஆறிவரும் புண்ணில் தோன்றுஞ் சிறுசிரங்கு. Loc.

மறுவு maruvu, n. <மறு. Picāṉam, as the second crop; இரண்டாம்போகமாகிய பிசானம். காரும் மறுவும் இருப்பூவும் (S. I. I. iv, 106).

மறைப்புமை maraippu-mai, n. <மறை- +. A magical unguent which renders things invisible; பொருளைக் கண்ணுக்குப் புலனாகாமற் செய்யும் அஞ்சனம். ஜாலங்கள் சித்திகள் . . . மறைப்புமை முதலியவைகளும் (தஞ். சர. iii, 65).

மன்னா mannā, n.< E. manna. Flowering ash tree; மேனாமரம். (M. M.)

மனப்பான்மை mana-p-pāṉmai, n. <மனம்+. Inclination, propensity; மனத்தின் போக்கு. Loc.

மனப்பீடை mana-p-pīṭai, n. <id.+. Chagrin, mental worry; விசனம். Pond.

மனபாவகம் mana-pāvakam, n. <id.+. Real state of one's mind; உள்ளெண்ணம். உன்ற னது மனபாவகம் பார்த்தனம் (அருண. பு. சாரப். 10).

மனனம் mananam, n. <manana. Intention; எண்ணம். நேர்பொரு மடங்கல்போல் வந்தனை மனனம் யாதென (புரூரவ. போர்புரி. 3).

மனிக்கி manikki, n. A plant; செடிவகை. (பச். மூ.)

மனிச்சம் maniccam, n. <manu-ja. Individual; ஆள். மனிச்ச மொன்றுக்கு நாளொரான் றுக்குக் குறுணி யிருநாழியும் (T. A. S. vi, 174).

மனுத்துவம் manu-t-tuvam, n. <manu +tva. Human nature; மனிதசுபாவம். Pond.

மனுமுறை manu-murai, n. <id.+. See மனுத்துவம். Pond.

மனுவாறு manu-v-āṟu, n. <id.+. The code of Manu; மனுநீதி. மனுவாறு பெருக (S. I. I. ii, 233).

மனுஷ்யர் manuṣyar, n. <manuṣya. (Jaina.) Human beings, of five kinds, viz.,

cu-maṉuṣyar, tur-maṉuṣyar, tivviya-maṉuṣyar, ku-maṉuṣyar, pirakiruti-maṉuṣyar; சுமனுஷ்யர் துர்மனுஷ்யர் திவ்வியமனுஷ்யர் குமனுஷ்யர் பிரகிருதிமனுஷ்யர் என்ற ஐவகை மனுஷ்யர். (நீலகேசி, 82, உரை.)

மனைக்கடையான் maṉai-k-kaṭaiyāṉ, n. <மனை+. Shop-keeper who opens a shop in his place of residence; வீட்டிற் கடைவைத்து வியாபாரஞ் செய்பவன். (M. E. R. 1915, p. 108.)

மனைத்திர்வை maṉai-t-tirvai, n. <id. +. Ground-rent; நிலத்துக்குமட்டுங் கொடுக்கப்படும் வாடகை. *Loc.*

மனைப்பணம் maṉai-p-paṇam, n. <id.+. House tax; வீட்டுவரி. (S. I. I. viii, 139.)

மனைவானீளம் maṉai-vāṉīḷam, n. <மனை +வால்+. Longitudinal piece of land at the back of a house; மனையைச் சேர்ந்த வால் வீச்சு. மடைவளாகத்து மனைவானீளத்துக்குக் கிழக்கும் (S. I. I. iii, 214).

மனோகிதம் maṉōkitam, n. <*manōhita*. Desire; விருப்பம். *Pond.*

மனோகை maṉōkai, n. (Jaina.) One of *nava-niti*; நவநீதியு ளொன்று. (அபி. சிந். 940.)

மனோபேதம் maṉō-pētam, n. <*manas*+. Art of making a person change his mind; மனத்தைப் பேதிக்கச் செய்யும் வித்தை. (சௌந்த. ஆனந். 30, உரை.)

மனோரஞ்சனி maṉō-rañcaṉi, n. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 102.)

மனோரதியம் maṉōratiyam, n. <*manō-ratha*. Fancy, imagination; மனோராச்சியம். *Pond.*

மனோவர்த்தி maṉō-vartti, n. <*manas*+ *vṛtti*. Action of the mind; மனத்தின் தொழில். மனோவர்த்தி நிகழ் செலவுக்கு (பஞ்ச. திருமுக. 1593).

மனோவலிமை maṉō-valimai, n. <id.+. Will-power; மனத்திடம். (கூட்டுறவு. பக். 1.)

மனோற்பவம் maṉōṟpavam, n. <id.+. Thought, as arising in the mind; idea; மனத்திலே தோன்றுவது. (ஞானாமிர்த. 707, உரை.)

மஜா majā, n. <Persn. *maza*. 1. Enthusiasm, exuberant feeling; ஆர்வம். 2. Enjoyment, pleasure; சுகம். என்ன மஜாவா யிருக்கிறது.

மஜாக் majāk, n. <Arab. *mazāq*. 1. Pleasantry; பரிகாசம். 2. Restiveness, as of a horse; shying; இடக்கு. குதிரை மஜாக் செய்கிறது.

மஷால்சோரி maṣāl-cōri, n. <Arab. *mashal*+Hind. *chori*. Torch-light dacoity; தீவட்டிக்கொள்ளை. மஷால்சோரி நடந்ததாக (தாசில்தார். நா. 37).

மஸ்கூர் maskūr, *adj.* <Arab. *mazkūr*. cf. மஜ்கூர். Aforesaid; மேற்படி. *Loc.*

மஸ்லீன் maslīṉ, n. <E. Muslin; ஒருவகை மெல்லிய ஆடை. டாகா மஸ்லீன்கள் ஆரணி சல்லாக்கள் (பிரதாப. விலா. பக். 46).

மஹபூபு mahapūpu, n. <Arab. *mahabb*. A Muhammadan invocatory word; ஒரு முகம்மதிய மந்திரம். (மதி. க. ii, 93.)

மஹால் mahāl, n. <Arab. *mahal*. Palace; அரண்மனை. (P. T. L.)

மா

மா[1] mā, n. <*mā*. (Log.) Source of perception; authority; பிரமாணம். தெளிந்ததெல்லாம் மாவென்று கொண்டு (நீலகேசி, 5).

மா[2] mā, n. (Pros.) Symbolic expression for *nēr*, ending an *iyaṟ-cīr*; இயற்சீர் இறுதியிலுள்ள நேரசையைக் குறிக்குஞ் சொல். மாமுன் னிரையும் விளமுன் னேரும்.

மாசாணத்தய்யன் mācāṇattayyaṉ, n. perh. மசாணம்+. A village-deity; ஒரு கிராமதேவதை. கற்றூர்க் கணிகலமே மாசாணத்தய்யா (பஞ்ச. திருமுக. 675).

மாசிப்பச்சை māci-p-paccai, n. prob. மாசி+. A plant; பூச்செடிவகை. *Loc.*

மாசுவாங்கி mācu-vāṅki, n. <மாசு+. Blotting paper; மையொற்றுங் கடுதாசி. *Pond.*

மாட்டறி-தல் māṭṭaṟi-, v. intr. <மாடு +. cf. மாட்டறை-. To sign as witness; சாட்சிக் கையெழுத்திடுதல். சேனை போக நாச்சண்ணனும் மாட்டறிந்தது (S. I. I. iv, 134).

மாட்டுக்கறை māṭṭu-k-kaṟai, n. <மாடு+. A tax; வரிவகை. (S. I. I. v, 499.)

மாட்டுப்பட்டி māṭṭu-p-paṭṭi, n. <id.+. Cattle pound; மாடடைக்குங் கொண்டித்தொழு. நித மாட்டுப்பட்டிக் கோனைந்து பணமென்று (சரவண. பணவிடு. 110).

மாட்டுப்பல் māṭṭu-p-pal, n. <id.+. Large teeth, dist. fr. *arici-p-pal*; அகன்று பெரிதான பல். *Tinn.*

மாடச்சிவிகை māṭa-c-civikai, n. <மாடம் +. A kind of palanquin; சிவிகைவகை. (ஆராய். தொ. 233.)

மாடை māṭai, *n.* cf. *māṣa.* Gold; பொன். ஆடை கொண்டுயர் மாத ரம்புலி மாடை யென்பவை மீதி னெஞ்சக வாசை (அலங்காரச்சிந்து. 16).

மாடைக்கூலி māṭai-k-kūli, *n.* <மாடை+. A tax; வரிவகை. (S. I. I. iii, 161.)

மாணவை māṇavai, *n.* <*māṇavikā.* Female disciple; lady pupil; உபாஸக ஸ்த்ரீ. சிந்தாமாணவை (நீலகேசி, 531, உரை).

மாணி māṇi, *n.* cf. *māṇava.* Disciple; மாணவகன். புத்தனார் முதன்மாணி . . . மொக்கல னெனச் சொன்னான் (நீலகேசி, 266).

மாணிக்கச்சம்பா māṇikka-c-campā, *n.* <மாணிக்கம்+. A kind of *campā* paddy, சம்பா நெல்வகை. (குருகூர்ப். 58.)

மாணிக்கவாளி māṇikka-vāḷi, *n.* <id.+. An ear-ornament; காதணிவகை. (S. I. I. viii, 39.)

மாத்திரை māttirai, *n.* <*mātrā.* 1. An ear-ornament; காதணிவகை. செம்பொன் மாத் திரை செரீஇய காதினர் (பெருங். மகத. 17, 157) 2. (Mus.) Interval in the musical scale; quarter-tone; இசைச்சுரப் பகுதி. (திவா.)

மாத்திரைச்சுதகம் māttirai-c-cutakam, *n.* <மாத்திரை+. (Pros.) *Māttirai-c-curukkam,* a literary device; மாத்திரைச்சுருக்கம். (யாப். வி. பக். 510.)

மாதப்படி māta-p-paṭi, *n.* <மாதம்+. A tax; வரிவகை. (S. I. I. vii, 403.)

மாதவமனோகரி mātava-manōkari, *n.* <*mādhava*+. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மாதவழி māta-vaḻi, *adv.* <மாதம்+. Every month, monthly; மாதந்தோறும். மாதவழி நூறு பொன்னு முத்தார மென்றேன் (தெய்வச். விறலிவிடு. 295).

மாதாரிக்கம் mātārikkam, *n.* A tax; வரி வகை. (M. E. R. 1913, p. 122.)

மாதிருபந்து mātirupantu, *n.* <*mātṛ-bandhu.* (Legal.) Mother's *ātma-bandhu;* தாயின் ஆத்மபந்து.

மாதுபர்ஜாமின் mātupar-jāmiṉ, *n.* <Arab. *mutabar*+. Substantial security; போதிய பிணை. *Madr.*

மாந்தாளி māntāḷi, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

மாந்தோட்டுப்பச்சை māntōṭṭu-p-paccai, *n.* A kind of emerald; மரகதவகை. (S. I. I. vii, 22.)

மாந்தோட்டுப்பொத்தி māntōṭṭu-p-potti, *n.* A kind of emerald; மரகதவகை. (S. I. I. vii, 53.)

மாப்பட்டடை māppaṭṭaṭai, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 404.)

மாப்பணம் mā-p-paṇam, *n.* 1. A coin; நாணயவகை. (S. I. I. v, 224.) 2. A tax; வரி வகை. (S. I. I. viii, 139.)

மாப்பதக்கு māppatakku, *n.* A tax; வரி வகை. (S. I. I. vii, 30.)

மாப்பூச்சி mā-p-pūcci, *n.* prob. மா+. A kind of louse; பேன்வகை. (அபி. சிந்.)

மாம்சபுக்கு māmca-pukku, *n.* <*māṃsa-bhuk.* Non-vegetarian; புலாலுண்பவ-ன்-ள். (சுக சந். 53.)

மாம்பழவண்டு māmpaḻa-vaṇṭu, *n.* <மாம்பழம்+. An insect inside some species of mango fruits; சிலவகை மாம்பழங்களுள் வாழும் வண்டுவகை. (அபி. சிந்.)

மாமகம் māmakam, *n.* An ancient tax in cash; காசாயவகை. (S. I. I. i, 82.)

மாமாத்தாத்தா māmā-t-tāttā, *n.* <மாமா+. Father's or mother's maternal uncle; தாய்க்கு அல்லது தந்தைக்குத் தாயுடன் பிறந்த அம்மான். *Brāh.*

மாமிசபேசி māmicapēci, *n.* <*māṃsa-pēśī.* Muscle; ஆடுசதை. (சுகசந். 66.)

மாயம் māyam, *n.* Brass; பித்தளை. மாய மேகலா பாரம் வாரியே (தக்கயாகப். 502).

மாயாக்காய் māyākkāy, *n.* cf. *māyā-phala.* Gall-nut; மாசக்காய். (பதார்த். i, 223.)

மாயாசம்பிரதம் māyā-campiratam, *n.* <*māyā*+. The magic art of causing the appearance of a town, forest, hill or river at a place; ஓரிடத்தில் ஊர்போலவும் வனம்போலவும் மலைபோலவும் நதிபோலவுந் தோற்றுவிக்குங் கலை. (சௌந்த. ஆனந். 30, உரை.)

மாயி māyi, *n.* <*māyin.* Adherent of *māyāvātam;* மாயாவாதி. மாயிவை நிஷேதிக்கைக் காக அர்த்தம் அருளிச்செய்கிறார் (ஈடு, 1, 5, 4, ஜீ.).

மார்க்கண்டம் mār-k-kaṇṭam, *n.* <மார்+. Breast; chest; நெஞ்சுப்பிரதேசம். மார்க்கண்டந் துடிக்குதிங்கே மணவாளன் மாண்டிருக்க (கோவ. க.).

மார்க்கா mārkkā, *n.* perh. E. *mark.* Trade name; name or style under which a business is carried on; கடை முதலியவற்றின் விலாசம். *Loc.*

மார்க்கூடு mār-k-kūṭu, *n.* <மார்+. See மார்க்கண்டம். *Loc.*

மார்வுதட்டு-தல் mārvu-taṭṭu-, *v. intr.* <மார்வு+. To be ready, to be prepared; to be eager to act; ஒன்று செய்ய உற்சாகத்துடன் முன் வருதல். இவர்களுக்கு வந்த தொண்டுக்கு அவன் மார்வுதட்டிக்கொண்டு வரும் (ஈடு, 10, 2, 1).

மார்வோநெய் mārvō-ney, *n.* Marvo, a kind of vegetable ghee; செயற்கை நெய்வகை. (மதி. க. ii, 109.)

மாரரஞ்சனி mārarañcaṉi, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

மாராசன் mā-rācaṉ, *n.* <மா+. King; அரசன். *Loc.*

மாராசி mā-rāci, *n.* Fem. of மாராசன். Queen; அரசி. (Colas. ii, 238.)

மாரிசம் māricam, *n.* <*mārīca*. 1. Hypocrisy; வஞ்சகம். மாரிசமும் சூதுமிட்ட (நெல்விடு. 214). 2. Affectation; ஒய்யாரம். *Pond.*

மாருவதன்னியாசி māruva-taṉṉiyāci, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மால் māl, *n.* <Arab. *māl.* Property; wealth; செல்வம். (P. T. L.)

மால்கானா mālkāṉā, *n.* <Arab. *māli-kānā.* Palace; அரண்மனை. (P. T. L.)

மாலகம் mālakam, *n.* Lotus bendy, *Hibiscus mutabilis;* செம்பரத்தை வகை. *Pond.*

மாலாமந்திரம் mālā-mantiram, *n.* <*mālā*+. A many-lettered mantra; பல எழுத் துக்களுள்ள மந்திரவகை. (ஈடு, 1, 2, 8.)

மாலிகை mālikai, *n.* Flax; சீமைச்சணல். *Pond.*

மாலிமை mālimai, *n.* prob. மால். Dignity, eminence, honour; கௌரவம். ஒருவன்கீழ் மாலிமையாய்ப் பெண்டிருந்து வாழ்ந்ததல்லால் (தெய் வச். விறலிவிடு. 289).

மாலினிவித்தை māliṉi-vittai, *n.* The magic art of crossing the seas; சமுத்திரங்கடக்கச் செய்யும் வித்தை. (சௌந்த. ஆனந். 38, உரை.)

மாலைவடம் mālai-vaṭam, *n.* <மாலை+. Large, long rope for dragging a temple car; தேரிழுத்தற்கான பெரிய வடக்கயிறு. இந்தத் தேருக்கு மாலைவடம் இன்னும் பூட்டவில்லை. *Loc.*

மாவிறை mā-v-iṟai, *n.* <மா+. A tax; வரிவகை. (Anc. Dec. 344.)

மாழ்கி māḻki, *n.* <மாழ்கு-. A sensitive plant; தொட்டால்வாடி. யாதினு மாழ்குமம் மாழ்கியும் (நீலகேசி, 365).

மாழ்கு māḻku, *n.* <id. Curl; சுருள். அட்டை முதலாயினவும் மாழ்கு நீங்கினுற் காரண மின்றி முன்புபோலேயாம் (நீலகேசி, 365, உரை).

மாளிகை māḷikai, *n.* Top floor of a storied building; மாடிவீட்டின் மேல்நிலம். (திவ். பெரியாழ். 2, 7, 3, வ்யா. பக். 393.)

மாளிகைக்கோல் māḷikai-k-kōl, *n.* <மாளிகை+. A measuring rod; நீட்டலளவுக் கருவிவகை. (I. M. P. Tp. 726.)

மாளிகைநாயகம் māḷikai-nāyakam, *n.* <id.+. The office of a seneschal or chamberlain; அரண்மனை விசாரணை யுத்தியோகம். (S. I. I. iv, 336.)

மாற்றம் māṟṟam, *n.* <மாறு-. Debate; வாதம். மன்பெரியான் றிருந்தவையுண் மாற்றந்தா வெனச்சொன்னாள் (நீலகேசி, 169).

மாற்றவன் māṟṟavaṉ, *n.* <id. Rival lover; சக்களவன். (யாழ். அக.)

மாற்றிலக்கம் māṟṟilakkam, *n.* <மாற்று-+. (Math.) Logarithm; கணக்குவகை. *Pond.*

மாற்றுக்கட்டுச்சாகுபடி māṟṟu-k-kaṭṭu-c-cākupaṭi, *n.* <மாற்று+கட்டு+. Cultivation in alternate years; ஒருவருஷம்விட்டு மறு வருஷஞ் சாகுபடி செய்யும் முறை. *Loc.*

மாற்றெண் māṟṟeṉ, *n.* <மாற்று-+. (Math.) See மாற்றிலக்கம். *Pond.*

மாற்றேர் māṟṟēr, *n.* <id.+. Plough lent to a person in return for a loan of his plough; தனக்குப் பிறனொருவன் விட்ட ஏருக்குப் பதிலாக விட்ட ஏர்.

மாறல்சுரம் māṟal-curam, *n.* <மாறு-+. A kind of fever; சுரவகை. (தஞ். சர. ii, 307).

மாறாட்டம் māṟāṭṭam, *n.* <id.+. Error; தவறு. பார்வை மாறாட்ட மின்றி (மகாராஜா துறவு, 54).

மாறாநீர் māṟā-nīr, *n.* <id.+ஆ neg.+. Sea, ocean; கடல். மாறாநீர் வையக் கணி (குறள், 707, மணக்.).

மாறுஷ்டகன் māṟāṣṭakaṉ, *n.* <*mahā-rāṣṭra.* Native of the Maharaṭṭa country; மகா ராஷ்டிர தேசத்தான். (வாசுதேவமனனம். பக். 51.)

மாறொலி mār-oli, n. <மாறு-+. Echo; எதிரொலி. Loc.

மான்புள்ளிக்கண்டாங்கி māṉ-pulli-k-kaṇṭāṅki, n. <மான்+புள்ளி+. A kind of saree; சீலைவகை. Loc.

மான்புள்ளிச்சேலை māṉ-pulli-c-cēlai, n. <id.+id.+. A kind of saree; சீலைவகை. Loc.

மானபோகம் māṉa-pōkam, n. prob. mānya+. Enjoyment of land, as ināmdār; மானிய அனுபவம். எங்கள் மானபோகமான பாப்பார வயல் (Pudu. Insc. 317).

மானம்பார்-த்தல் māṉam-pār-, v. intr. <வானம்+. To die; இறத்தல். Loc.

மானவதி māṉavati, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

மானஸ்தன் māṉastaṉ, n. <māna-stha. Man of self-respect; மானி. என்போலனைய மானஸ்தர்க் கெல்லாம் வசையாச்சே (பஞ்ச. திருமுக. 1409).

மானாங்குலம் māṉāṅkulam, n. A linear measure, one-sixth of a tālam; நீட்டலளவுவகை. (சிற்பரத். 18.)

மானாபரன் māṉāparaṉ, n. <māna+bhara. See மானஸ்தன். மானாபர ஞானியையன் (விறலிவிடு. 976).

மானிறம் māṉiṟam, n. prob. மான்+நிறம். cf. மாநிறம். Fawn colour; tawny colour; வெளிறின மஞ்சள் நிறம். Loc.

மானுயர் māṉuyar, n. <manuja. Human beings; மக்கட் பிறப்பினர். மானுய ரென்னப் படுபவர் (நீலகேசி, 86).

மாஜினம் mājiṉam, n. <Arab. mājun. An intoxicating drug prepared from hemp; கஞ்சாச் சேர்த்துச்செய்த லாகிரிப்பண்டவகை. (மதி. க. ii, 52.)

மாஷகம் māṣakam, n. <māṣa. A standard weight for weighing gold; பொன்னிறை வகை. (S. I. I. iii, 257-8.)

மாஷபருணி māṣaparuṇi, n. prob. id. A pulse, Glycineri debilis; பயறுவகை. Pond.

மி

மிகுத்தம் mikuttam, n. <மிகு-. cf. மிகுதம். Abundance; மிகுதி. (W.)

மிகுத்தியல் mikuttiyal, n. A species of garlic pear; பெரியமாவிலிங்க வகை. (L.)

மிச்சிரகம் miccirakam, n. prob. misraka. (Arith.) A mode of calculation; கணிதவகையு ளொன்று. (யாப். வி. 528.)

மிடறுசெய்-தல் mitaru-cey-, v. intr. <மிடறு+. To raise one's voice; பெருங்குர லெடுத்தல். (சடு, 3, 8, ப்ர.)

மிடறுதின் (னு)-தல் mitaru-tiṉ-, v. intr. <id.+. To irritate in the throat; தொண்டையில் அரிப்புண்டாதல். மிடறுதின்றால் சொறிய வொண்ணுதாற்போல (திவ். பெரியதி. 1, 1, 5, வ்யா. பக். 37).

மிடை mitai, n. <மிடை-. Closeness; நெருக்கம். பசுக்களை மிடையற மேய்க்கும்படி பண்ணினவனே (திவ். பெரியாழ். 2, 3, 7, வ்யா. பக். 292).

மித்தியாபுருஷன் mittiyā-puruṣaṉ, n. <mithyā+. Non-existent thing; இல்பொருள். ககனாரவிந்த மித்தியாபுருஷன் போலவே காலத்திரயத் திலுந் தனக்கில்லை (சத். பிர. பக். 82).

மித்திரஸப்தமி mittira-saptami, n. <mitra+. The captami titi falling on a Sunday; ஞாயிற்றுக்கிழமை வருஞ் சப்தமித்திதி. (பஞ்.)

மிதக்கங்காய் mitakkaṅkāy, n. cf. முதக்கங்காய். Country cucumber; தும்மட்டி. (யாழ். அக.)

மிதுக்காய் mitukkāy, n. cf. மிதுக்கை. See மிதக்கங்காய். (வைத். மூ.)

மிர்தம் mirtam, n. <mṛta. Death; மரிப்பு. மிர்த மதனன் (தக்கயாகப். 35).

மிருகசீவன் miruka-cīvaṉ, n. <mṛga+. Animal; நாற்கால் பிராணி. Colloq.

மிருகவியாதன் miruka-viyātaṉ, n. <id.+. A Rudra; உருத்திரரு ளொருவர். (தக்கயாகப். 443, உரை.)

மிருகாசயம் mirukācayam, n. <id.+āśaya. Menagerie; மிருகங்களை வைத்திருக்கும் இடம். Mod.

மிருதகல்பன் mirutakalpaṉ, n. <mṛta-kalpa. One who is as good as dead; செத்தவனுக்குச் சமானமானவன். பெற்றவழி மிருதகல்பனாய் (நீலகேசி, 429, உரை).

மிருதிடு-தல் mirutitu-, v. tr. <மிருது+. 1. To polish; மெருகிடுதல். Pond. 2. To rub and smoothen; தேய்த்து வழவழப்பாக்குதல்.

மிருதுவாசகம் mirutu-vācakam, n. <id.+. Gentle speech; மென்மொழி. எந்த வேளையு மிருதுவாசகமே (சர்வசமய. பக். 202).

மிலாகத்து milākattu, *n.* prob. Hind. *milāp.* Meeting, interview; சந்திப்பு. (P. T. L.)

மிளகுபட்டினி miḷaku-paṭṭiṉi, *n.* < மிளகு +. A fast which consists in taking only a few grains of pepper as food, undertaken by a childless person with a view to be blessed with a child; மகப்பேறுவேண்டிச் சில மிளகுமட்டும் உட்கொண்டு பட்டினியிருக்கும் விரதவகை. *Loc.*

மிறுங்கு-தல் miṟuṅku-, *5 v. intr.* 1. To harden; இறுகுதல். 2. To be opposed or inimical; பிரதிகூலித்தல். (*திவ். பெரியாழ்.* 2, 6, *ப்ர. பக்.* 358.)

மின் miṉ, *n.* < மின்னு-. Woman; பெண். *மின்னன்மை விபசாரத்து . . . மடிந்திடும்* (*நீதிசாரம்,* 60).

மின்சாரமானி miṉcāra-māṉi, *n.* < மின்சாரம் +. Electro-meter; மின்சாரவோட்டத்தை அளக்குங் கருவி. *Pond.*

மின்தபால் miṉ-tapāl, *n.* < மின் +. Telegram; தந்தி சமாசாரம். *Pond.*

மின்தாது miṉ-tātu, *n.* < id. +. Electricity; மின்சாரம். *Pond.*

மின்னூது-தல் miṉ-ṉ-ūtu-, *v. intr.* prob. id. +. To solder, in making jewels; நகையில் அதனுருக்களைப் பொடிவைத்துச் சேர்த்தல். *Loc.*

மின்னூல்[1] miṉṉūl, *n.* Corr. of மெய்ந்நூல். Sacred writing; மெய்ந்நூல். (W.)

மின்னூல்[2] miṉṉūl, *n.* Corr. of முந்நூல். 1. Sacred thread; பூணூல். 2. Woman's necklace of three strands; மகளிர் கழுத்தணிவகை.

மின்னொழுகுதல் miṉ-ṉ-oḻukutal, *n.* < மின் +. Stroke of lightning; மின்னல் பாய்கை. *Loc.*

மினிக்கி miṉikki, *n.* A tree; ஒரு மரம். (*பச். மூ.*)

மினுக்கன்வளையல் miṉukkaṉ-vaḷaiyal, *n.* < மினுக்கன் +. A kind of bangle; வளையல்வகை. *இத்தேவர்க்குக் கொடுத்த மினுக்கன்வளையல் இரண்டினால்* (S. I. I. viii, 128).

மீ

மீகக்கல் mīka-k-kal, *n.* perh. E. *mica* +. Mica; அப்பிரகம். *Loc.*

மீட்சிமொழி mīṭci-moḻi, *n.* < மீட்சி +. (Log.) Instance in which the major term is absent; விபக்கம். (*மணி.* 29, 66.)

மீட்டுணர்வு mīṭṭuṇarvu, *n.* < மீட்டு- +. Recognition of identity or similarity. See பிரத்தியபிஞ்ஞானம். *நினைவு மீட்டுணர்வு சேர்தரும்* (*நீலகேசி,* 119).

மீயாளுங்கணத்தார் mīyāḷuṅ-kaṇattār, *n.* < மீயாள்- +. Members of the supervising body; மேற்பார்க்குங் கூட்டம். (Insc.)

மீளக்கொடு-த்தல் mīḷa-k-koṭu-, *v. tr.* < மீள்- +. To return; திரும்பக் கொடுத்தல். *மீளக்கொடுக்குமாப் போலே* (*ரஹஸ்ய.* 440).

மீளாக்கடன் mīḷā-k-kaṭaṉ, *n.* < id. + ஆ neg. +. Irredeemable debt; தீராக்கடன். (*கூட்டுறவு.* 1.)

மீனவன் mīṉavaṉ, *n.* < மீன். Kāma, as having the fish-emblem on His banner; [*மீனைக் கொடியாகக் கொண்டவன்*] காமன். *மாதர் மேனியல்லால் வில்லில்லை மீனவர்க்கு* (*தேசிகப்.* 4, 15).

மு

முக்கவர்த்தடி mukkavar-t-taṭi, *n.* prob. முக்குவர் +. Harpoon, gaff; மண்டா. *Pond.*

முக்காலும் mukkālum, *adv.* < முக்கால். See முக்காலேமூன்றுவீசம். *Loc.*

முக்காலேமூன்றுவீசம் mukkālē-mūṉṟu-vīcam, *adv.* < id. +. Almost certainly; பெரும்பாலும் நிச்சயமாய். *முக்காலே மூன்றுவீசம் வந்துவிடுவான்.* *Colloq.*

முக்கியன் mukkiyaṉ, *n.* < *mukhya.* Chief, leader; தலைவன். *எங்கள் முக்கியர்பால்* (*தேசிகப்.* 1, 21).

முக்கியாத்மா mukkiyātmā, *n.* < id. +. The intelligent witness in one's self; கூடத்தன். (*விசாரசந். பக்.* 305.)

முக்கு-தல் mukku-, *5 v. intr.* cf. முங்கு-. To immerse one's self; முழ்குதல். *முத்துப்படுந் துறையில் முக்குவார் முத்தைக் கொடுத்துப் பழங்கொள்ளுவார்கள்* (*திவ். திருமாலை,* 1, *வ்யா. பக்.* 14).

முக்குணவேளை mukkuṇa-vēḷai, *n.* < முக்குணம் +. The divisions of a day into periods of one and a half hours, named successively as *tāmasam, cātvikam* and *rājasam;* கிழமைகளை ஒன்றரைமணிக் கூறுகளாகப் பிரித்து முறையே தாமஸம் சாத்விகம் ராஜஸம் எனக்கொள்ளும் காலப்பகுதி. (*பஞ்.*)

முக்குவர் mukkuvar, *n.* prob. முக்கு-. [K. *mukkuvar.*] A sect of fishermen; செம்படவருள் ஒருசாதியினர். (W.)

முக்கூட்டு mu-k-kūṭṭu, n. <மூன்று+. Junction, where three paths meet; மூன்று வழிகள் சேரும் இடம்.

முக்கோணி mukkōṇi, n. <முக்கோணம். Pārvatī, as residing in the mystic triangle; பார்வதி. சக்தி கௌரி முக்கோணி (பேரின்பக்கீர்த். பக். 55).

முக்தியார் muktiyār, n. <U. mukhtār. Agent; காரியத்தலைவன். (M. E. R. 163 of 1931-32.)

முககக்காறை muka-k-kāṟai, n. <முகம்+. A kind of ornament; அணிவகை. (M. E. R. 720 of 1916-B.)

முககட்டணம் muka-kaṭṭaṇam, n. <id. +. Porch; கட்டட முகப்பு. (S. I. I. viii, 21.)

முகச்சாயை muka-c-cāyai, n. <id.+. Facial features; முகச்சாடை. Colloq.

முகச்சேஷ்டை muka-c-cēṣṭai, n. <id.+. Grimace; முகத்தாற்காட்டுங் கோரணி. Pond.

முகட்டறை mukaṭṭaṟai, n. <முகடு+. Garret; முகட்டுவீட்டில் உத்தரமட்டத்திற்கு மேலுள்ள அறை. Pond.

முகட்டுக்கால் mukaṭṭu-k-kāl, n. <id.+. High level channel; மேட்டுமடையின் கால். (S. I. I. iii, 347.)

முகட்டுப்பாய்ச்சு mukaṭṭu-p-pāyccu, n. <id.+. Ridge piece; முகட்டுவளை. (யாழ். அக.)

முகடு mukaṭu, n. prob. முகம். Nipple; முலைமுகம். (நாநார்த்த. 10.)

முகத்தூண் muka-t-tūṇ, n. <id.+. Front pillar; முகப்புத் தூண். (பெருங். உஞ்சைக். 58, 54.)

முகத்தைக்காட்டு-தல் mukattai-k-kāṭṭu-, v. intr. <id.+. To express unwillingness by facial signs; சம்மதமின்மையை முகக்குறிப்பால் தோற்றுவித்தல். ஒரு காரியத்தில் ஏவினால் முகத்தைக் காட்டுகிறான். Loc.

முகத்தைத்துடை-த்தல் mukattai-t-tuṭai-, v. intr. <id.+. To console; தேற்றுதல். Loc.

முகநாடி muka-nāṭi, n.<id.+. A treatise on the diagnosis of diseases by an examination of the face and of the breath of the nostrils; முகத்தையும் மூக்கில் ஓடுஞ் சுரத்தையும் பார்த்து நோயின்தன்மை கூறும் நூல். (தஞ். சர. iii, 191.)

முகப்பந்தல் muka-p-pantal, n. <id.+. Pandal in front of a house; வீட்டின்முன் போடும் பந்தல். முத்துவளைத்து முகப்பந்தலிட்டார்கள் (சித். நாய. 46).

முகம் mukam, n. <mukha. Kind, class; வகை. பல முகங்களான கலக்கங்கள் நேரிட்ட சமயத்தில் (ரஹஸ்ய. 4).

முகவசனம் muka-vacaṉam, n. <id.+. Talk, words; வாய்ச்சொல். சுப்பு ஒதுவார் முக வசனத்தாலும் விசதமாகுமே (மீனாட். சரித். ii, 310).

முகவணை mukavaṇai, n. Corr. of முக வீணை. A kind of Indian clarionet; இசைக்கருவி வகை. முகவணையை வாசி (பணவிடு. 183).

முகவரை muka-v-arai, n. <முகம்+. Central stone in a jewel; அணியின் நாயகக்கல். முகவரை என்று பாடமாம்போது, நாயகக்கல்லுபோலே பாட்டுக்களுக்கெல்லாம் ப்ரகாசகமாயிருக்கும் (திவ். திருப்பல். 2, வ்யா. பக். 34).

முகவளை muka-vaḷai, n. <id.+. Bangle of shorter size, worn as a keeper; வளைகள் கழலாதிருக்க அணியுந் தடைவளையம். வளைக்கு முகவளை (குலோத். கோ. 505).

முகவார் muka-vār, n. <id.+. Head-stall, halter; குதிரை முதலானவைகட்டு முகத்திலிடுங் கயிறு. Pond.

முகவுரை muka-v-urai, n. <id.+. (திவ். திருபபல். 1, வ்யா. பக். 34.) 1. Introductory entry of date, etc., in daily account; கணக்குப்புத்தக முதலியவற்றின் தலைப்பில் எழுதும் வருஷம் மாதம் தேதி முதலிய குறிப்பு. 2. Auspicious expression, at the commencement of an epistle, etc.; திரு முகம் முதலியவற்றின் தொடக்கத்தில் எழுதும் மங்களச் சொல்.

முகுட்டை mukuṭṭai, n. cf. முகட்டுப்பூச்சி. Bug; மூட்டைப்பூச்சி. உண்ணி முகுட்டை யெறும்பு (நீலகேசி, 79).

முசிவு mucivu, n. <முசி-. Crumpling; கசங்குகை. திருப்பரியட்டத்தைக் கொண்டு வசைவும் முசிவுமற விரித்துச்சாத்தி (திவ். பெரியாழ். 3, 4, 2, வ்யா. பக். 594).

முசீபத்து mucīpattu, n. <Arab. musībat. Distress; misfortune; துன்பம். முசீபத்தைப் போக்கிப் பாக்கத்து உண்டாக்கும் (மதி. க. ii, 94).

முசுமுசுப்பு mucumucuppu, n. Eager attention; earnestness; சிரத்தை. சீராட்டி வளர்த்த முசுமுசுப்பெல்லாம் திருநிறத்திலே தோன்றும்படியிருக்கும் (திவ். பெரியாழ். 1, 2, 12, வ்யா. பக். 38).

முட்குடப்பழம் muṭ-kuṭa-p-paḻam, n. <முள்+குடம்+. Jackfruit; பலாப்பழம். முட்குடப்பழமெல்லா மிடறி (திருச்செந்தூர். பிள்ளை. செங். 4).

முட்டகம் muṭṭakam, *n.* cf. முட்டை. Ball of dried cow-dung, used in preparing sacred ashes; விபூதிநீற்றுவதற்குரிய பசுஞ்சாண உண்டை. *Nāñ.*

முட்டவம் muṭṭavam, *n.* See முட்டகம். *Nāñ.*

முட்டி muṭṭi, *n.* 1. A magic cure for poison; விடந்தீர்க்கும் மந்திர சிகிற்சைவகை. (பெரிய பு. திருஞா. 1060.) 2. A tax; வரிவகை. (Pudu. Insc. 504.)

முட்டிடு-தல் muṭṭiṭu-, *v. intr.* < முட்டு +. To come to a crisis; வியாதி முதலியன மிகுதல். *Loc.*

முட்டுச்சந்து muṭṭu-c-cantu, *n.* < id. +. Blind alley; ஒருபுறம் அடைப்பாயிருக்குஞ் சந்து. *Loc.*

முட்டைவெள்ளை muṭṭai-veḷḷai, *n.* < முட்டை +. White lime mixed with the white of eggs; முட்டையின் வெண்கரு கலந்த சுதை. *Loc.*

முட்டொளை muṭṭoḷai, *n.* < முள் +. (Anat.) Foramen spinale. See கண்டகதுவாரம். *Mod.*

முடங்கி muṭaṅki, *n.* < முடங்கு-. Lame person; முடவன். *Pond.*

முடங்கு muṭaṅku, *n.* < id. 1. cf. முடங்கி. Elbow or jutting part of a field; நிலத்தின் மூலை நீட்டம். *மேற்கு முடங்கு குழி* (S. I. I. iv, 194). 2. Corner; turning; வளைவு. *Loc.*

முடிச்சுக்காறை muṭiccu-k-kāṟai, *n.* < முடிச்சு +. A kind of gold necklet, worn by women; பெண்களின் கழுத்தணிவகை. *Loc.*

முடுக்குத்தெரு muṭukku-t-teru, *n.* < முடுக்கு +. Small, narrow lane; ஒடுங்கிய சிறு தெரு. *நெடுங்தெருவே போகிறவர்கள் நான் இருந்த முடுக்குத்தெருத் தேடி வந்தபோதே* (ஈடு, 1, 2, 6).

முடுக muṭuka, *adv.* < முடுகு-. 1. Swiftly, quickly; விரைவாய். 2. Near; கிட்ட. (*யாழ். அக.*)

முடுகு muṭuku, *n.* prob. id. A kind of boat; தோணிவகை. (குருகூர்ப். 19.)

முண்டப்பாட்டு muṇṭa-p-pāṭṭu, *n.* < முண்டம் +. (Pros.) A variety of metrical composition; மிறைக்கவிவகை. (*யாப். வி. பக்.* 510.)

முண்டம் muṇṭam, *n.* perh. *muṇḍa.* A single card of a suit, in the hands of a player; சீட்டாட்டத்தில் ஒருவர் கையிலுள்ள ஒரு சாதியைச் சார்ந்த ஒற்றைச்சீட்டு. *Colloq.*

முண்டன் muṇṭaṉ, *n.* < மிண்டன். Obstinate man; விடாப்பிடியன். *Colloq.*

முத்தத்தீபம் mutta-t-tīpam, *n.* prob. முத்தம் +. A kind of temple-lamp; கோயிலிலுள்ள தீபவகை. (*தமிழ்விடு. முகவுரை, பக்.* 12.)

முத்தவல்லி mutta-valli, *n.* < Arab. *mutawalli.* Manager of a mosque; மசூதியை மேற் பார்க்குந் தலைவன். *Loc.*

முத்தழலோர் mu-t-taḻalōr, *n.* < மூன்று +. Brahmins; அந்தணர். *முத்தழலோர் மனைகடொறும்* (*தேவா.* 113, 2).

முத்தா muttā, *n.* cf. முத்தண்ணு. Elder brother; தமையன். *Vaiṣṇ.*

முத்தாவணம் muttāvaṇam, *n.* A tax; வரிவகை. (M. E. R. 1916, p. 119.)

முத்தாளம் muttāḷam, *n.* prob. முன் + தாலம். 1. Morning meal, dist. fr. *attāḷam;* காலையுணவு. *Loc.* 2. Morning offerings; காலை நிவேதனம். *பூசை நமக்காரம் அத்தாளம் முத்தாளம் வச்சு* (T. A. S. v, 116).

முத்திகாமன் mutti-kāmaṉ, *n.* < முத்தி +. One who desires liberation; முத்தியை விரும்பு வோன். (*சைவாநு. வி.* 1.)

முத்திநாடு mutti-nāṭu, *n.* < id. +. Heaven; சொர்க்கம். *முத்திநாட்டின் முகத்தினை முட்டுற* (*கம்பரா. முதற்போர்.* 41).

முத்திப்பழுது mutti-p-paḻutu, *n.* < id. +. Doctrine which holds that there is no absolute salvation; மலம் முற்றும் நீங்கிய முத்திநிலை இல்லை யென்னுங் கொள்கை. (*சிவப்பிர.* 36.)

முத்திராவதாரம் muttirāvatāram, *n.* prob. *mudra* +. An ear-ornament; காதணி வகை. (M. E. R. 222 of 1921.)

முத்திரைக்கணக்கர் muttirai-k-kaṇakkar, *n.* < முத்திரை +. A class of temple servants; கோயிற்பணியாளருள் ஒருவகையார். (*மீனாட். சரித்.* i, 2.)

முத்திரைமெழுகு muttirai-meḻuku, *n.* < id. +. Sealing wax; முத்திரை வைக்கும் அரக்கு. *Pond.*

முத்துச்சொரிதல் muttu-c-corital, *n.* < முத்து +. Talking in an excellent manner; வெகு அழகாகப் பேசுகை. *அவன் வாயிலிருந்து முத்துச்சொரிகிறது.* *Loc.*

முத்துநிரப்பம் muttu-nirappam, *n.* < id. +. Necklace of a single string; ஏகாவலி வடம். (*தக்கயாகப்.* 340, *உரை.*)

முத்துப்பேய்ச்சி muttu-p-pēycci, *n.* A village goddess; ஒரு கிராமதேவதை. (பஞ்ச. திருமுக. 671.)

முத்துராக்கு mutturākku, *n.* A village goddess; ஒரு கிராமதேவதை. முத்துராக்கு முத்துப் பேய்ச்சி ரணவீர (பஞ்ச. திருமுக. 671).

முதல் mutal, *n.* Document; பத்திரம். இந்த முதல் இற்றைநாள் முதலியான் காட்டுகையில் (S. I. I. v, 90).

முதல்நூல் mutal-nūl, *n.* < முதல் +. Primer; ஆரம்ப பாடநூல். கூட்டுறவு முதல்நூல். *Mod.*

முதலி mutali, *n.* < முதல். Chief officer of the state; பிரதான அரசாங்க அதிகாரி. (M. E. R. 1923-24, p. 103.)

முதவல்லி mutavalli, *n.* See முத்தவல்லி. *Loc.*

முதற்றிரமம் mutarriramam, *n.* < முதல் + திரமம். A tax; வரிவகை. (Colas, ii, 334.)

முதன்மரியாதை mutan-mariyātai, *n.* < id. +. First honours; முதலிற் செய்யும் மரியாதை.

முதுக்கங்காய் mutukkaṅkāy, *n.* cf. மிதுக்கங்காய். Country cucumber; தும்மட்டிக்காய். *Loc.*

முதுக்கள் mutukkaḷ, *n.* < முது-மை. Ancestors; முன்னோர். எங்கள் முதுக்கள் ஒற்றி வைக்கையில் (Pudu. Insc 317).

முதுகண் mutu-kaṇ, *n.* < id. +. Guardian; காப்பாளன். சுந்தரப்பட்டனையே முதுகண்ணாகவுடைய (S. I. I. v, 272).

முதுகால் mutu-kāl, *n.* < id. +. Leaves at the middle of the betel vine; வெற்றிலைக் கொடியின் மத்தியிலுள்ள இலை. (மதி. க. ii, 55.)

முதுதறை mutu-tarai, *n.* < id. +. Barren ground; பாழ்நிலம். நீர்நிலமும் முதுதறையும் (Pudu. Insc. 361, p. 233.)

முதுநீர்மலையாளர் mutu-nīr-malaiyāḷar, *n.* < id. +. A sect of hill-men; மலையில் வாழும் ஒருவகைச் சாதியார். (S. I. I. vii, 49.)

முதுப்போக்கன் mutuppōkkaṉ, *n.* Cook; சமையற்காரன். *Loc.*

முந்நீர் mu-n-nīr, *n.* < மூன்று +. The three kinds of liquids, viz., milk of tender cocoanut, sugared water and juice of sugar-cane; இளநீர் சர்க்கரைநீர் கன்னலினீர் என்பன. முந்நீர் நடைக்காயும் படைத்து (ஞானநீலை, 4).

முப்பட்டையரம் muppaṭṭai-y-aram, *n.* < id. + பட்டை +. Corner file; மூன்று பட்டைகள் அமைந்த அரவகை. *Loc.*

முப்பறமுந்நாழி mupparamunnāḻi, *n.* A tax; வரிவகை. (T. A. S. iii, 216.)

முப்பால் mu-p-pāl, *n.* < மூன்று +. The three kinds of land, viz., *vaṉpāl, meṉpāl* and *cama-p-pāl*; வன்பால் மென்பால் சமப்பால் என்ற மூவகை நிலங்கள்.

முர்தார் murtār, *n.* prob. முதாரி. Leaves at the bottom of the betel vine; வெற்றிலைக் கொடியின் அடிப்பகுதியிலுள்ள வெற்றிலை. (மதி. க. ii, 55.)

முரசகேதனன் muraca-kētaṉaṉ, *n.* < முரசம் +. Dharmaputra, as having the drum-emblem on his banner; [முரசைக் கொடியாக வுடையவன்] தருமபுத்திரன். காமேவு முரசகேதனனுள் மகிழ்ந்திட (பழனிப்பிள்ளைத். காப்பு. 2).

முரண்மொழி muraṇ-moḻi, *n.* < முரண் +. (Pros.) A defect in versification; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி. பக். 525.)

முருந்து muruntu, *n.* Stalk of flower; பூவின் தாள். பூமுருந்துங் குருந்துஞ் செருந்தும் பொருந்து மூட்டுடன் (குருகூர்ப். 6).

முல்லங்கிமோகரா mullaṅki-mōkarā, *n.* An ancient coin; பழைய நாணயவகை. (சரவண. பணவிடு. 62.)

முலாஜா mulājā, *n.* < Arab. *mulāhiza.* Compassion; தயவு. (தாசில்தார்நா. பக். 82).

முலைத்தடம் mulai-t-taṭam, *n.* < முலை +. cf. முலைத்தளம். An ornament; அணிவகை. (M. E. R. 720 of 1916-B).

முலையெழு-தல் mulai-y-eḻu-, *v. intr.* < id. +. To become an adolescent girl; பெண் பருவமடைதல். பிராட்டி முலையெழுந்தாப்போலேயோ நான் முலையெழுந்தபடி (திவ். நாய்ச். 8, 4, வ்யா.).

முழங்காற்கரப்பான் muḻaṅkāṟ-karappāṉ, *n.* < முழங்கால் +. A kind of *karappāṉ* disease; கரப்பானோய்வகை. (தஞ். சா. iii, 92.)

முழவரிசை muḻavaricai, *n.* A tax; வரிவகை. (S. I. I. vii, 51.)

முழுக்கூழ் muḻu-k-kūḻ, *n.* < முழு-மை +. Utter confusion; கலக்கம். செய்தாய் முழுக்கூழ் (நீலகேசி, 399).

முழுந்து-தல் muḻuntu-, *5 v. tr.* perh. முழுங்கு-. To swallow; விழுங்குதல். முத்திப்பார் மிழ்த முழுந்திட (பாடு. 92, 7).

முழுவோட்டம் mul̤u-v-ōṭṭam, *n.* <முழுமை+. Gallop; வேகமாக ஓடுகை. *Pond.*

முள்ளிப்பாலை mul̤l̤i-p-pālai, *n.* prob. முள்ளி+. *Vatu-maram*, a tree; வதுமரம். (சங். அக.)

முள்ளுக்குத்தினகண்டமாலை mul̤l̤u-k-kuttiṉa-kaṇṭamālai, *n.* <முள்ளு+குத்து-+. A kind of scrofula; கண்டமாலைவகை. (பாலசா. i, 254).

முளகார் mul̤akār, *n.* Broom; வாருகோல். *Naṭ. Cheṭṭi.*

முளைதண்டல் mul̤ai-taṇṭal, *n.* <முளை+. Obtaining grains of paddy from a few houses for the ceremony of sowing them in pots, in a marriage; திருமணத்திற் சிலவீடுகட்குச் சென்று பாலிகைதெளிக்க முளைநெல் வாங்கிவருகை. *Loc.*

முளைப்பயறு mul̤ai-p-payaṟu, *n.* <id.+. A kind of preparation, made of green gram; பயற்றுப்பணிகாரவகை. முளைப்பயற்றுக்குப் பயறு (S. I. I. vii, 300).

முற்காரமுத்திரை muṟkāra-muttirai, *n.* prob. *mudgara*+. A hand-pose; முத்திரை வகை. (சைவாநு. வி. 20.)

முற்கூறு-தல் muṟ-kūṟu-, *v. tr.* <முன்+. To proclaim, announce, as sale; முன்னதாக அறிவித்தல். கொள்வாருளரோ என்று முற்கூற (S. I. I. iv, 285).

முற்சேர்பு muṟ-cērpu, *n.* <id.+. Preface, etc., added at the beginning of a book; முன்னுரையாகச் சேர்க்கப்பட்டது. *Mod.*

முற்பணையம் muṟ-paṇaiyam, *n.* <id.+. Advance, earnest; முன்பணம். உற்றவரை முற்பணையங் கேளாதே (தெய்வச். விறலிவிடு. 331).

முற்பாடு muṟ-pāṭu, *adv.* <id.+படு-. At first; at the beginning; தொடக்கத்தில். முற்பாடு துன்பம் உறவரினும் துணிந்து செய்க (குறள், 667, மணக்.).

முற்றனவு muṟṟaṉavu, *n.* <முற்று-. Maturity, full growth; முதிர்ச்சி. (பழ. 171, உரை.)

முறியக்குத்து-தல் muṟiya-k-kuttu-, *v. tr.* <முறி-+. To defeat; தோற்கடித்தல். (Insc.)

முறிவு muṟivu, *n.* <முறி-. A flaw in diamonds; வைரக்குற்றவகை. (S. I. I. ii, 78).

முறுவல் muṟuval, *n.* Lettuce-tree, laughing tree; இலச்சைகெட்டமரம். (L.)

முறைபிறழ்வைப்பு muṟai-piṟal̤-vaippu, *n.* <முறை+பிறழ்-+. (Pros.) A defect in poetic composition; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி. பக். 525.)

முறைமைப்பிள்ளை muṟaimai-p-pil̤l̤ai, *n.* <முறைமை+. Legitimate son; ஔரச புத்திரன். *Pond.*

முறையோ muṟaiyō, *int.* <முறை. An interjectory word demanding justice; முறை வேண்டினோர் அநியாய நிகழ்ச்சிபற்றி இடுங் கூப்பீடு. எம்பெருமானே முறையோ (திருவையாற்றுப்பு. சைவச. 8).

முன்சாக்கிரதை muṉ-cākkiratai, *n.* <முன்+. Precaution; எச்சரிக்கை. *Loc.*

முன்பிதாக்கள் muṉ-pitākkal̤, *n.* <id.+. Forefathers; manes; பிதிர்க்கள். *Pond.*

முன்பேறு muṉ-pēṟu, *n.* <id.+. 1. Security; ஜாமீன்தொகை. *Loc.* 2. Advance money; முன்பணம். *Nāñ.*

முன்மண்டபம் muṉ-maṇṭapam, *n.* <id.+. Front hall of a temple; கோயிலின் முக மண்டபம். *Loc.*

முன்மாலை muṉ-mālai, *n.* <id.+. Temple garland first offered to a person, as an honor; மரியாதையாக முதலில் ஒருவர்க்கு அளிக்கப்படுங் கோயில்மாலை. கோயிலில் முன்னொடுக்கும் முன் மாலையும் (Pudu. Insc. 710).

முன்வாசல் muṉ-vācal, *n.* <id.+. Front gate of a house; வீட்டின் முன்பக்கத்து வாயில். *Colloq.*

முன்னணியம் muṉ-ṉ-aṇiyam, *n.* <id.+. Bow of a ship; கப்பலின் முன்பக்கம். (M. Navi.)

முன்னாக muṉ-ṉ-āka, *adv.* <id.+ஆ-. First, at the outset; முன்னதாக. ஒரு ஆசார்யன் ஸ்ரீபாதத்திலே இயல் முன்னாகக் கற்று (திவ். பெரியாழ். 3, 3, 10, வ்யா. பக். 588).

முன்னாடி muṉṉāṭi, *adv.* <id.+நாடு-. See முன்னாக. *Loc.*

முன்னிடும்பணம் muṉ-ṉ-iṭum-paṇam, *n.* <id.+இடு-+. An ancient tax; பழையவரி வகை. (S. I. I. vii, 46.)

முன்னொடுக்கு muṉ-ṉ-oṭukku, *n.* <id.+. That which is first paid; முன்னாலே செலுத்தியது. (Pudu. Insc. 710.)

முன்னோடி muṉ-ṉ-ōṭi, *n.* <id.+. Spy; உளவுகாரன். *Pond.*

முன்ஷி muṉṣi, *n.* <Arab. *munshi*. Teacher of a language; பாஷை கற்பிக்கும் போதகன்.

முனுசப் munācap, *adj.* <Arab. *munāsib.* Proper; நியாயமான. முனுசப் தீர்வை (P. T. L.)

முனிப்பாய்ச்சலாய் muni-p-pāyccalāy, *adv.* <முனி+. Suddenly; quickly; திடீரென. முனிப்பாய்ச்சலாய்ப் பாய்ந்து (சரவண. பணவிடு. 161).

முனுச்சி mun-ucci, *n.* <முன்+உச்சி. 1. Fore part of the head; நெற்றியின் மேலிடம். 2. Forelock; நெற்றியின் மேலிடத்துள்ள மயிர். குழந்தைக்கு முனுச்சி வாருகிறாள். *Madr.*

முனைக்கடல் munai-k-kaṭal, *n.* <முனை+. Cape; கடல்முனை. *Mod.*

முஜரா mujarā, *n.* <Arab. *majrā.* Direction; திக்கு. (M. Navi.)

முஷரப் muṣarap, *n.* <Arab. *mushrif.* Accountant, examiner of accounts; கணக்குப் பரிசோதகன். (P. T. L.)

முஸ்தீது mustītu, *n.* <Arab. *mustaid.* Preparedness; ஆயத்தம். *Pond.*

மூ

மூக்கரண்டி mūkkaranṭi, *n.* perh. மூக்கரட்டை. Spreading hogweed; கொடிவகை. (T. C. M. ii, 2, 632.)

மூக்கரிசியுடைதல் mūkkarici-y-uṭaital, *n.* <மூக்கு+அரிசி+. Bleeding from the nose; மூக்கிலிருந்து இரத்தம் ஒழுகுகை. *Tp.*

மூக்கன்சம்பா mūkkan-campā, *n.* prob. id.+. A kind of *campā* paddy; சம்பாநெல் வகை. மூக்கன்சம்பாச் சிறிய முள்ளுச்சம்பா (நெல்விடு. 181).

மூக்குக்கணம் mūkku-k-kaṇam, *n.* <id.+. A disease; கணநோய்வகை. (பாலவா. 41.)

மூக்குநீர்ப்பாய்ச்சல் mūkku-nīr-p-pāyccal, *n.* <id.+நீர்+. A kind of disease; நோய்வகை. (தஞ். சர. iii, 132.)

மூங்கிற்சம்பா mūṅkiṟ-campā, *n.* <மூங்கில்+. A kind of *campā* paddy; சம்பாநெல் வகை. நெடுமூக்கன் அரிக்கராவி மூங்கிற்சம்பா (முக்கூடற். 97).

மூங்கைமை mūṅkaimai, *n.* <மூங்கை. Dumbness; ஊமைத்தன்மை. தலைசாய்த் தங்கிருந் தார் மூங்கைமையால் (நீலகேசி, 271).

மூசைப்புல் mūcai-p-pul, *n.* <மூசை+. Mistletoe berry thorn; சங்கஞ்செடி. (சங். அக.)

மூஞ்சூறுவாணம் mūñcūṟu-vāṇam, *n.* <மூஞ்சூறு+. A kind of rocket; ஆகாசவாண வகை. (W.)

மூட்டு mūṭṭu, *n.* <மூட்டு-. The part of a *mirutaṅkam,* comprising the *valaiyam, tōl,* and *cāṭṭaivār;* வளையம் தோல் சாட்டைவார் மூன்றும் சேர்ந்த மிருதங்கத்தின் பகுதி. (கலைமகள், xii, 399.)

மூடலை mūṭalai, *n.* <மூடம். Lack of sense; மதிகேடு. மூடலையாவதன் காரணமென்னை (நீலகேசி, 380).

மூடுதூறு mūṭu-tūṟu, *n.* <மூடு-+. Winding sheet; பிரேதச்சீலை. *Pond.*

மூத்திரப்பாளம் mūttira-p-pāḷam, *n.* <மூத்திரம்+. A disease of the urinary organs; மூத்திரநோய்வகை. (தஞ். சர. iii, 140.)

மூதண்டம் mutanṭam, *n.* Bermuda grass; அறுகு. மூதண்ட லேகியம். *Loc.*

மூதலிப்பி-த்தல் mūtalippi-, *11 v. tr.* cf. மூதலி-. To cause to prove; ருசுப்படுத்துதல். ஸ்ரீபீஷ்மர் முதலான ஜ்ஞாநாதிகளையிட்டு மூதலிப்பித் தும் (ரஹஸ்ய. 33).

மூந்திக்கருக்கல் mūnti-k-karukkal, *n.* <முந்தி+. Evening twilight; அந்திநேரம். *Tinn.*

மூபலகு mūpalaku, *n.* <Arab. *mablagh.* Total, especially when written in words; எண்ணினாலன்றி எழுத்தால் தெரிவிக்கும் மொத்தத் தொகை.

மூர்ச்சை mūrccai, *n.* <*mūrcchā.* (Mus.) Distinguishing marks of a musical mode; ஓர் இராகத்தின் சிறப்பியல்பு. (கனம்கிருஷ்ணையர், 16.)

மூர்த்தன்னியம் mūrttanniyam, *n.* <*mūrdhanya. Colloq.* 1. Prominence; பிரதானம். 2. Highhandedness; அதிக்கிரமம்.

மூர்த்திகரம் mūrtti-karam, *n.* <*mūrti*+. Sanctity; தெய்விகம். இந்தக்கோவில் மூர்த்திகரத் துக்குப் பின்னம் நேரிட்டிருக்கிறதென்று (தாசில் தார்நா. பக். 30).

மூரிப்போ-தல் mūri-p-pō-, *v. intr.* <மூரி+. To become weak by age; முதுமையால் வலிமையற்றுப்போதல். முன்பே மூரிப்போய்ப் பல விடங்களிலும் பூண்கட்டிக்கிடக்கிறதொரு சொத்தை வில்லை (திவ். பெரியாழ். 3, 9, 2, வ்யா. பக். 771).

மூலக்கல்வி mūla-k-kalvi, *n.* <மூலம்+. Elementary education; ஆரம்பக்கல்வி. மூலக் கல்வி நாங்கள் வாசித்தா லாபத்தோ (பெண்மதிமாலை, பக். 29).

மூலநாயன் mūlanāyaṉ, *n.* St. Tirumūla Nāyaṉār; திருமூலர். (J.)

மூலப்பரிஷத்து mūla-pariṣattu, *n.* <*mūla* +*pariṣad.* Chief assembly; தலைமைச் சபை. (I. M. P. Rd. 236, 239.)

மூலபருடை mūlaparuṭai, *n.* See மூல பரிஷத்து. (I. M. P. Tj. 134.)

மூலபலா mūla-palā, *n.* <*mūla*+. A kind of jack tree; வேர்ப்பலா. (பரி. அக.)

மூலபிருத்தியன் mūla-piruttiyaṉ, *n.* <id. +. Caṇḍeśvara, as the chief servant of Śiva; சண்டேசுரர். (S. I. I. iii, 170.)

மூலம் mūlam, *n.* <*mūla.* Document of title; ஆதாரபத்திரம். இப்படிக்கு ஒருமூலம் எங்களால் காட்ட ஒண்ணுதென்றும் (S. I. I. vii, 385).

மூலவெளி mūla-veḷi, *n.* <id.+. Brain; மூளை. (மூ. அ.)

மூழ்கிக்கப்பல் mūḻki-k-kappal, *n.* <மூழ்கு- +. Submarine; நீரில் மூழ்கிச்செல்லும் கப்பல். *Mod.*

மூஜுவாணி mūjuvāṇi, *n.* <Hind. *munh*+Persn. *zabānī.* Oral statement; வாக்கு மூலம். *Madr.*

மெ

மெணமெணெனல் meṇameṉeṉal, *n.* Onom. expr. of murmuring dissent or discontent; வெறுப்புத்தோன்ற முறுமுறுத்தற் குறிப்பு. ஒன்றை மெணமெணென் றகம் வேறதாம் (தாயு. ஆனந்தமான. 3).

மெதுவடை metu-vaṭai, *n.* <மெது+. A kind of cake; பணிகாரவகை. (மதி. க. ii, 15.)

மெய்செய்-தல் mey-cey-, *v. intr.* <மெய் +. 1. To be true; to be faithful; உண்மையுடன் நடத்தல். காரியத்தில் வந்தால் மெய்செய்வாரைப் போல பொய்செய்து தலைக்கட்டும் (ஈடு, 10, 4, 5, பக். 141). 2. To accomplish a thing; காரியம் நிறைவேற்றுதல். தொடங்கின காரியத்தை மெய் செய்து வரவேண்டாமா?

மெய்தாங்கி mey-tāṅki, *n.* <id.+தாங்கு-. Seat; ஆசனம். (M. E. R. 343 of 1923.)

மெய்ப்பு meyppu, *n.* <id. Ostentation; ஆடம்பரம். ஆறுவ மெய்ப்பாகச் செப்பாதே (குரு கூர்ப். 89).

மெய்மட்டு meymaṭṭu, *n.* See மெய்மட்டுக் காணி. (S. I. I. v, 233.)

மெய்மட்டுக்காணி meymaṭṭu-k-kāṇi, *n.* <மெய்மட்டு+. Right of beating the small drum, as an accompaniment to dancing; நட்டுவத்துக்கு மிருதங்கம் அடிக்கும் உரிமை. (S. I. I. v, 232.)

மெரவணை meravaṇai, *n.* <மரவணை. Procession; ஊர்வலம். *Loc.*

மெழுக்கடிகள் meḻukkaṭikaḷ, *n.* <மெழுக்கு +. Servants who clean the floor, in a temple; கோயிலை மெழுகிச் சுத்தஞ் செய்வோர். (S. I. I. v, 248.)

மெழுக்குப்புறம் meḻukku-p-puṟam, *n.* <id.+. Rent-free *inam* land, granted for sweeping and washing the floor, in a temple; கோயில் மெழுகுதற்கு விடப்பட்ட இறையிலி நிலம். (M. E. R. 17 of 1930-31.)

மெழுகூட்டு-தல் meḻukūṭṭu-, *v. tr.* <மெழுகு+. To cover up, as with wax; மூடி மறைத்தல். நிஷித்த த்ரவ்யத்தை உள்ளே வைத்து மெழுகூட்டின வோபாதியிறே (ஈடு, 1, 2, 1).

மெழுமெழு-த்தல் meḻumeḻu-, 11 *v. intr.* To be soft to the touch; மெதுவாதல். மிடறு மெழுமெழுத்தோட (திவ். பெரியாழ். 3, 2, 6).

மே

மேகநாதக்குளிகை mēka-nāta-k-kuḷikai, *n.* A medicinal pill; குளிகைமருந்துவகை. (தஞ். சர. iii, 189.)

மேகயோனி mēka-yōṉi, *n.* <மேகம்+. Smoke; புகை. (பரி. அக.)

மேகலாரேகை mēkalā-rēkai, *n.* <*mēkhalā*+. Equator; பூமத்தியரேகை. *Mod.*

மேகவன்னப்பட்டு mēka-vaṉṉa-p-paṭṭu, *n.* <மேகம்+வன்னம்+. Shot silk; பலவர்ணங் களைக் காட்டும் பட்டுத்துணிவகை. மேகவன்னப்பட்டு மேற்கட்டி (பத்ம. தென்றல்விடு. 40).

மேகாரக்குறிஞ்சி mēkāra-k-kuṟiñci, *n.* cf. மேகராகக்குறிஞ்சி. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

மேசகல்யாணி mēcakalyāṇi, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

மேசபௌளி mēcapauḷi, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

மேசம் mēcam, *n.* (வை. மூ.) 1. Disease; நோய். 2. Chebulic myrobalan; கடுக்காய்.

மேட்டேற்றம் mēṭṭēṟṟam, n. < மேடு+. High land; மேட்டுநிலம். (S. I. I. iii, 288.)

மேடுகல்லு-தல் mēṭu-kallu-, v. intr. < id.+. To level down, by digging up the high ground; மேட்டுநிலத்தை வெட்டிச் சமமாக்குதல். (S. I. I. vii, 277.)

மேதாவிலாசம் mētā-vilācam, n. < mēdhā + vilāsa. Genius; மிக்க இயற்கையறிவு. Mod.

மேமூட்டைபோடு-தல் mē-mūṭṭai-pōṭu-, v. intr. < மேல் + மூட்டை +. To deceive; ஏமாற்றுதல். Colloq.

மேமூட்டையாசாமி mē-mūṭṭai-y-ācāmi, n. < id. + id. +. Cheat; வஞ்சகன். Colloq.

மேய்ச்சற்றலை mēyccaṟṟalai, n. < மேய்ச்சல் +. Pasture land; meadow; மேய்ச்சற்றரை. கன்றுகளுக்கு மேய்ச்சற்றலை பார்க்கையாலும் (திவ். பெரியாழ். 3, 3, 4, வ்யா. பக். 570).

மேராழி mēṟāḻi, n. A tax in money; காசாயவகை. (S. I. I. iv, 195.)

மேல்காயர் mēl-kāyar, n. < மேல் + perh. Persn. kār. Superstructure; கட்டடத்தின் மேற்கோப்பு. Loc.

மேல்பீட்டி mēl-pīṭṭi, n. < id. +. Breast of a garment; சட்டையின் மேற்பாகம். Loc.

மேல்விலங்கு mēl-vilaṅku, n. < id. +. (Gram.) Sign of i, ī, in vowel-consonants; உயிர்மெய்களில் இகர ஈகாரங்களைக் குறிக்க மெய்கள் மேல் இடும் குறியீடு. (தொல். எழுத். 17, உரை.)

மேலடி mēl-aṭi, n. < id. +. Tax paid in kind; தானியமாகச் செலுத்தும் இறை. (T. A. S. vi, 41.)

மேலத்து mēlattu, n. perh. id. + prob. U. hadd. Superior airs; பெருமிதம். மிகமேலத்தாய்ப் பேசிவெளிப் பகட்டாய் (பஞ்ச. திருமுக. 970).

மேலாமரம் mēlāmaram, n. A kind of fishermen's instrument; பட்டினவரின் கருவிவகை. (அபி. சிந்.)

மேலாவலை mēlāvalai, n. A kind of fishing net; மீன்பிடிக்கும் வலைவகை. (அபி. சிந்.)

மேலாள் mēl-āḷ, n. < id. +. Loc. 1. Caste Hindu; நாற்சாதியு ளொன்றைச் சேர்ந்தவன். மேலாளா? கீழாளா? 2. Overseer, supervisor; கண்காணிப்போன்.

மேலெழ mēleḻa, adv. < மேலெழு-. Superficially, on the surface; மேலுக்கு. மேலெழச் சிறிது கலங்கிற்றாகிலும் (ஈடு, 1, 4, 3, வ்யா. பக். 183).

மேலெழுத்து mēl-eḻuttu, n. < மேல் +. 1. Senior clerk; தலைமை யெழுத்தாளன். (M. E. R. 565 of 1926.) 2. Signature of a superior officer approving the order of his subordinate; கீழ் அதிகாரியின் உத்திரவை அங்கீகரித்து மேல் அதிகாரி இடுங் கையெழுத்து. 'ஐயர் யாதொன்று சொல்லிற்று அவையெல்லாமப்படியே' என்று கண்களாலே மேலெழுத்திட்டுக் கொடுக்கும் (ஈடு 10, 6, 1).

மேலைநெற்றி mēlai-neṟṟi, n. < id. +. The third eye of Śiva on His forehead; சிவபிரானது நெற்றிக்கண். இறைவர்தம் மேலைநெற்றி விழிக்க (தக்கயாகப். 334).

மேலோசனை mēl-ōcaṉai, n. < id. + யோசனை. Foresight; முன்யோசனை. (தெய்வச். விறலிவிடு. 80.)

மேலோடு-தல் mēl-ōṭu-, v. intr. < id. +. To attack, rush against; எதிர்த்துத்தாக்குதல். மெய் சொல்லா விராவணனை மேலோடி யீடழித்து (தேவா. 158, 2).

மேலோலை mēl-ōlai, n. < id. +. 1. Letter of authority; அதிகாரமளிக்குஞ் சீட்டு. 2. Covering letter; மேற்கடுதாசி.

மேவுபர்சாத்கணக்கு mēvuparcāt-kaṇakku, n. < Hind. men + Hind. barsāt +. Record of rainfall; மழைபெய்த அளவைக் காட்டுங் கணக்கு. (P. T. L.)

மேற்கருமம் mēṟ-karumam, n. < மேல் +. Want, need; குறை. அவர்களுக்குண்டாகிய மேற்கருமம் அந்தக் காரியப்பேர்களாலே தீர்க்கப்பட்டாற்போல (சங்கற்பநி. 2, உரை, பக். 24).

மேற்கோண்மலைவு mēṟkōṇ-malaivu, n. < மேற்கோள் +. (Rhet.) A defect in poetic composition; செய்யுட்குற்றங்களு ளொன்று. (யாப். வி. பக். 525.)

மேற்கோள் mēṟ-kōḷ, n. < மேல் +. Set purpose; உறுதிப்பாடான நோக்கம். ஒழியாமலுலகுய்யக் கொள்வனென்னு மேற்கோளுடையான் (நீலகேசி, 188, உரை).

மேற்பயிர் mēṟ-payir, n. < id. +. Corn, large vegetables and trees; மரம் செடி முதலியன. (R.).

மேன்படை mēṉ-paṭai, n. < id. +. Reserve force; மூலபலம். (R.).

மேன்பாட்டுக்குரு mēṉpāṭṭu-k-kuru, n. < மேன்பாடு +. High priest; பிரதான குரு. Pond.

மேனடைநீர் mēṉaṭai-nīr, n. < மேல் + நடை +. Surplus water; அதிகப்படியாகவுள்ள நீர். மேனடைநீர் பாயவும் (S. I. I. iii, 411).

மேனத்து mēnattu, *n.* See மேலத்து. *Tinn.*

மேனாம்பு mēnāmpu, *n.* perh. மேல் + நா + வம்பு. Harsh word, offensive language; அவமதிச்சொல். கண்டாற் புலவரை மேனாம்பு பேசுங் கசடர் (பெருந்தொ. 1336).

மேனிச்சம்பா mēṉi-c-campā, *n.* <மேனி +. A kind of *campā* paddy; சம்பாநெல்வகை. (*தமிழன்.*)

மேஜாடு mējāṭu, *n.* prob. மேஜை +. Goat; ஆடு. வருகிற போகிற சில துரைகளுக்குக் கொழுத்த மேஜாடும் (தாசில்தார்நா. பக். 8).

மேஷசிருங்கி mēṣa-ciruṅki, *n.* <*mēṣa* + *śriṅgī*. Wormkiller; ஆடுதின்னாப்பாளை.

மேஷவிஷாணிகை mēṣa-viṣāṇikai, *n.* <id. + *viṣāṇi*. See மேஷசிருங்கி.

மை

மை mai, *n.* Ignorance; அஞ்ஞானம். மைதபு ஞான மனத்திடையொன்றும் (பாகவத. 8, வாமனாவ. 32).

மைகோதி mai-kōti, *n.* prob. மயிர் +. Comb; சீப்பு. சுவரின்மேல் மைகோதியும் ஈர்கொலியுமே கிடக்கின்றன (எங்களூர், 127).

மைந்து maintu, *n.* Child; பிள்ளை. (திவ். பெரியாழ். 1, 1, 8, வ்யா. பக். 16).

மைப்பு maippu, *n.* Rottenness, as of wood; மரம் முதலியன உளுத்திருக்கை.

மைப்பேறு-தல் maippēṟu-, *v. intr.* <மைப்பு +. To become rotten, as wood; மரம் முதலியன உளுத்துப்போதல்.

மையக்கவர்ச்சி maiya-k-kavarcci, *n.* <மையம் +. Centripetal force; ஒரு பொருளின் சுற்றெல்லைக்குட்பட்ட அணுக்கள் அப்பொருளின் மையத்தை நோக்கி நெருங்குஞ் சக்தி. *Mod.*

மையநாட்டம் maiya-nāṭṭam, *n.* <id. +. Gravitation; ஒருபொருளை மற்றொருபொருள் இழுக்கும் ஆகருஷணசக்தி. *Mod.*

மையநூக்கம் maiya-nūkkam, *n.* <id. +. Centrifugal force; ஒரு பொருளின் மத்தியிலுள்ள அணுக்கள் அப்பொருளின் சுற்றெல்லையை நோக்கிப் போகுஞ் சக்தி. *Mod.*

மையுறிஞ்சி mai-y-uṟiñci, *n.* <மை +. Blotting paper; மையொற்றி. *Mod.*

மொ

மொக்கட்டையீனம் mokkaṭṭai-y-īṉam, *n.* Disrespect; மதிப்புக்கேடு. (*யாழ். அக.*)

மொச்சம் moccam, *n.* cf. மோசம். Plantain; வாழை. (*சங். அக.*)

மொசுகுமொசுகெனல் mocuku-mocukeṉal, *n.* Onom. expr. of being resonant; நாதம் நிரம்புதற் குறிப்பு. மொசுகுமொசுகென் றிருக்கிற நாதத்தை யுடைத்தா யிருக்கையாலும் (திவ். அமலனாதி. 6, வ்யா. பக். 71).

மொசுமொசெனல் mocumoceṉel, *n.* Expr. signifying luxuriant growth; செழித்து வளர்தற்குறிப்பு. மொசுமொசென்று வளர்ந்த பெரிய வடிவும் (திவ். அமலனாதி. 9, வ்யா. பக். 103).

மொட்டூசி moṭṭūci, *n.* <மொட்டு +. Pin; குண்டூசி. *Loc.*

மொட்டைக்கட்டை moṭṭai-k-kaṭṭai, *n.* <மொட்டை +. Nakedness, nudity; அம்மணம். *Tp.*

மொட்டைக்கோதுமை moṭṭai-k-kōtumai, *n.* <id. +. A kind of wheat; கோதுமை வகை. (விவசா. 3.)

மொட்டைத்தனம் moṭṭai-t-taṉam, *n.* <id. +. 1. Shaven condition, as of head; முண்டிதம். *Pond.* 2. Foolishness; அசட்டுத்தனம். *Loc.*

மொட்டைப்பையன் moṭṭai-p-paiyaṉ, *n.* <id. +. Boy of bad conduct; துர்நடத்தையுள்ள சிறுவன். *Tp.*

மொண்டளியன் moṇṭaḷiyaṉ, *n.* A kind of sea-fish; கடல்மீன்வகை. *Loc.*

மொத்தி motti, *n.* cf. மொத்தை. Dull-witted woman; புத்தியில்லாதவள். *Tp.*

மொதக்கெண்டை motakkeṇṭai, *n.* cf. மதுக்கெண்டை. A kind of *keṇṭai* fish; கெண்டைமீன்வகை. (R.)

மொய் moy, *n.* 1. Beauty; அழகு. மொய்ய கலத்துள் ளிருப்பாள் (திவ். திருநெடு. 19). 2. Country fig; அத்தி. (*சங். அக.*)

மொய்ப்பு moyppu, *n.* prob. மொய்-. Crowd, multitude; கூட்டம். *Pond.*

மொயின்சாபிதா moyiṉ-cāpitā, *n.* <மொயின் +. List of revenue establishment; அரசிறை யுத்தியோகஸ்தர் பட்டி. (G. Sm. D. I, i, 283.)

மொழமொழவெனெல் moḻa-moḻa-v-eṉal, *n.* Onom. expr. of being smooth and soft; வழவழப்புக்குறிப்பு. *தரை மொழமொழ வென் றிருக்கிறது. Colloq.*

மொழிக்கறுப்பன் moḻi-k-kaṟuppaṉ, *n.* A kind of paddy; நெல்வகை. (*விவசா.* 2.)

மொழுக்கட்டை moḻu-k-kaṭṭai, *n.* perh. முழு-மை+. Stout person; தடித்தவ-ன்-ள். *Loc.*

மொழுமன் moḻumaṉ, *n.* cf. முழுமல். Grain escaping unbroken in the process of grinding; அரைக்கும்போது சிதைவுபடாது விழும் முழுத்தானியம். *Loc.*

மொழுமொழுவெனெல் moḻu-moḻu-v-eṉal, *n.* Expr. of being plump; கொழுத்திருத் தற்குறிப்பு. *மாடு மொழுமொழு வென்றிருக்கிறது.*

மொறமொற-த்தல் moṟamoṟa-, *11 v. intr.* To be rough or stiff; முறுமுறுப்பாதல்.

மொஹசல் mohacal, *n.* See மோசல்.

மொஹதர்பா mohatarpā, *n.* <மோதரிபா. Tax on profession; தொழில்வரி. (C. G.)

மோ

மோக்கிசம் mōkkicam, *n.* <*mōkṣa.* 1. Liberation; விடுதலை. *முன்னுண்ட வல்வினை பின் னுண்டு வாராமே மோக்கிசமாகவே* (*பாடு.* 121, *ஆண்டார்.*) 2. See மோக்கிழம்.

மோக்கிழம் mōkkiḻam, *n.* <*mokṣa.* Salvation; மோட்சம். (T. A. S. vi, 49.)

மோகமுத்திரை mōka-muttirai, *n.* prob. *mōha*+. A hand-pose; முத்திரைவகை. (*சைவ. வி.* 17.)

மோகலி mōkali, *n.* <Persn. *mugal.* Mogul; மோகலாயன். (*பிரதாப. விலா. பக்.* 131.)

மோகவர்ணச்சேலை mōkavarṇa-c-cēlai, *n.* prob. மேகவர்ணம்+. A kind of saree; புடைவைவகை. (*பஞ்ச. திருமுக.* 1160.)

மோகன்டால் mōkaṉ-ṭāl, *n.* A kind of confectionery; தித்திப்புப்பண்ட வகை. *Mod.*

மோகனம் mōkaṉam, *n.* <*mōhanīya.* (Jaina.) A karma; மோகனீயம் என்னுங் கருமம்.

மோசல் mōcal, *n.* <Arab. *mohassil.* 1. Detention; surveillance; தப்பியோடாதபடி இடுங் காவல். 2. Guard in charge of a person under arrest; பிடிபட்டவனைக் காக்குங் காவற்காரன்.

மோசு mōcu, *n.* Tender jack-fruit; பலாப்பிஞ்சு. *Loc.*

மோட்சகாமி mōṭca-kāmi, *n.* <*mōkṣa*+. One who desires liberation; மோட்சத்தை விரும்புபவன். (*ஞானபூசா.* 10, *உரை.*)

மோட்டடைப்பன் mōṭṭaṭaippaṉ, *n.* <மோடு+. A decorated piece of plank, placed on both sides of the ridge of a roof; கூரை முகட்டின் இருபக்கங்களிலும் வைக்கப்படுஞ் சித்திர வேலைப்பாடுடைய பலகையடைப்பு. *Nāñ.*

மோட்டுச்சரம் mōṭṭu-c-caram, *n.* <id.+. Ridge-piece; முகட்டுவளை. *Mad.*

மோதி mōti, *n.* <Hind. *mōdī. Loc.* 1. Stake-holder in a chit fund; சீட்டுநடத்துங் கரைசுவான். 2. Servant in a mosque; பள்ளி வாசலிற் பணிசெய்பவன்.

மோதிரமெடுத்தல் mōtiram-eṭuttal, *n.* <மோதிரம்+. A ceremonial function in a marriage, which consists in the bride and the bridegroom competing in taking out their rings dropped in a pot of turmeric water; விவாகத்தில் மணமகனும் மணமகளும் தத்தம் மோதிரங்களைக் கூறைச்சாலிலுள்ள மஞ்சணீரில் போட்டு ஒருவரை யொருவர் முற்படக் கைவிட்டு அம்மோதிரங்களை யெடுக்குஞ் சடங்கு. *Loc.*

மோதிசூர்லாடு mōticūr-lāṭu, *n.* <Hind. *mōticūr*+. A kind of sweet cake; ஒருவகைப் பணிகாரம். (*இந்துபாக.* 311.)

மோர்சா mōrcā, *n.* <Persn. *mōrcā.* Place constructed to mount cannon; பீரங்கி வைக்கு மிடம். *Pond.*

மோர்வியம் mōrviyam, *n.* A kind of reed-pipe; முகவீணை. *மோர்வியமும் காணியாகக் கொடுத் தோம்* (S. I. I. v, 233).

மோரி mōri, *n.* <Pkt. *mōra* <*mayūra.* Peacock; மயில். *மோரிப்பரித்தம்* (*நீலகேசி,* 1, *உரை*).

மோனம்பாட்டம் mōṉam-pāṭṭam, *n.* A tax; வரிவகை. (S. I. I. iv, 106.)

ய

யமனிகைப்புடவை yamaṉikai-p-puṭavai, *n.* <யமனிகை+. Curtain; இடுதிரை. (S. I. I. v, 307.)

யமுனா yamuṉā, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (*பரத. ராக. பக்.* 103.)

யா

யாகப்ரிய yākapriya, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (*சங். சங்.* 47.)

யாத்திரி yāttiri, *n.* <*yātrika.* Traveller; one who goes on voyages; தரைமார்க்கமாகவா வது கடல்மார்க்கமாகவாவது பிரயாணஞ் செய்பவன். (M. Navi.)

யாத்திரைபோதல் yāttirai-pōtal, *n.* <*யாத்திரை*+. Ceremonial setting out of the bridegroom as a pilgrim, just before the celebration of the marriage; மணமகன் விவாகச் சடங்கின்முன் பரதேசயாத்திரையாகச் செல்லுகை. *Loc.*

யாதினிக்குல்லி yātinikkulli, *n.* Arrack; சாராயம். (*சித். அக.*)

யாப்புவழு yāppu-valu, *n.* <*யாப்பு*+. (Rhet.) A defect in poetic composition; செய்யுட்குற்றங்களு ளொன்று. (*யாப். வி. பக்.* 525.)

யாபேரும் yāpērum, *pron.* Corr. of *யாவரும்.* All; எல்லாரும். *Colloq.*

யாருந்தின்னாமூலி yārun-tinnā-mūli, *n.* <*யார்*+*தின்-*+*ஆ* neg.+. A kind of herb; ஒரு வகை மூலிகை. (*மூ. அ.*)

யானைக்கத்தளை yānai-k-kattalai, *n.* <*யானை*+. A species of *kattalai* fish; கத்தளை மீன்வகை. (W.)

யானைக்கரணம் yānai-k-karanam, *n.* <id.+. (Astrol.) The *karanam* known as *karacai;* கரசைக்கரணம். *சோமவாரமும் திரிதி நாமயோகமும் யானைக்கரணமும்பெற்ற திருவோண நக்ஷத்ரத்து* (T. A. S. v, 122).

யானைக்கால்வணக்கிப்பூடு yānai-k-kāl-vanakki-p-pūtu, *n.* <id.+*கால்*+*வணக்கு-*+. Cows' thorn; நெருஞ்சில். (*மூ. அ.*)

யானைப்பந்து yānai-p-pantu, *n.* prob. id. +. A game; விளையாட்டுவகை. (*தஞ். சர.* i, 529.)

யு

யுக்திமொழி yukti-moli, *n.* <*yukti*+. Epigram; கட்டுரை நயம்படக்கூறும் வசனம். *Pond.*

யுக்திவாக்கியம் yukti-vākkiyam, *n.* <id. +. See யுக்திமொழி. *Pond.*

யூ

யூகாட்சரம் yūkātcaram, *n.* prob. *ūha*+*akṣara.* Secret language or code; இரகசிய வெழுத்து. *Pond.*

யூதக்கல் yūta-k-kal, *n.* <*யூதன்*+. Jew-stone; மருந்தாக உபயோகிக்கும் ஒருவகைக் கடற் பண்டம். *Loc.*

யோ

யோகபூசை yōka-pūcai, *n.* <*யோகம்*+. Contemplation of God Siva as the Light of Knowledge; சிவபெருமானை அறிவின் ஒளியாகத் தியானிக்கை. *உறைந்தோ ரொளியதாக்கி யொடுங் கிடின் யோகபூசை* (*ஞானபூசா.* 14).

யோகம் yōkam, *n.* <*yōga.* (Jaina.) Activity relating to mind, body and word; மனோவாக்குக் காயங்களின் வியாபாரம். (*நீலகேசி,* 427, *உரை.*)

யோகாங்குலிநியாயம் yōkāṅkuli-niyā-yam, *n.* <*yōga*+*anguli*+. (Log.) A nyāya; நியாயவகை. *பூர்வபதமும் உத்தரபதமும் யோகாங் குலிநியாயம்போலப் புணரா* (*பி. வி.* 26, *உரை, பக்.* 49).

யோகிதண்டம் yōki-tantam, *n.* <*யோகி*+. Rattan; பிரம்பு. (*மூ. அ.*)

யோகினிசாலம் yōkini-cālam, *n.* <*yōginī* +. The magic art of showing the *yōkini,* by worshipping Sakti in the cremation ground; மயானத்திற் சக்தி உபாசனையால் யோகினிகளைக் காண்பிக்கும் வித்தை. (*சௌந்த. ஆனந்.* 30, *உரை.*)

யோத்திரம் yōttiram, *n.* A medicinal drug; ஒருவகை மருந்துப்பண்டம். (*மூ. அ.*)

யௌ

யௌவனஸ்தன் yauvana-stan, *n.* <*yauvana*+*stha.* Youth; இளவயதினன். (*தென். இந். க்ஷேத். பக்.* 60.)

ர

ரகுப்தி rakupti, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (*பரத. ராக. பக்.* 104.)

ரகுப்பிரிய raku-p-piriya, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (*சங். சங்.* 47.)

ரங்கம் raṅkam, n. <E. Rangoon; இரங்கோன். Loc.

ரங்குபர்லா raṅkuparlā, n. A game of chance, played with cards; ஒருவகைச் சூதாட்டம். (கலைமகள், No. 54, 531.)

ரங்கூன்மல்லிகை raṅkūṉ-mallikai, n. A kind of jasmine; மல்லிகைவகை. Loc.

ரசசிந்தாமணி raca-cintāmaṇi, n. <ரசம் +. A medicinal preparation; மருந்துவகை. (தஞ். சர. iii, 31.)

ரசதைலம் raca-tailam, n. <id.+. Honey; தேன். (பரி. அக.)

ரசிகப்ரிய racikapriya, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரசிதம் racitam, n. <rajata. Silver; வெள்ளி. ரசிதஞ் சொன்னபாத்திரம் (நீதிசாரம், 6).

ரசிதவேமம் racita-v-ēmam, n. prob. racita+. A medicinal preparation; மருந்துவகை. (தஞ். சர. iii, 43.)

ரஞ்சனி rañcaṉi, n. A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 102.)

ரஞ்சான் rañcāṉ, n. <Arab. ramazān. The ninth Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் ஒன்பதாவது மாதம். (பெரியவரு. 28.)

ரணகாளி raṇa-kāḷi, n. <ரணம்+. Bugle; ஊதுகொம்புவகை. (தாசில்தார்நா. பக். 49.)

ரணவீரி raṇa-vīri, n. A village goddess; ஒருகிராமதேவதை. (பஞ்ச. திருமுக. 671.)

ரத்தபேதி ratta-pēti, n. <ரத்தம்+. Dysentery; வயிற்றுளைச்சல். Loc.

ரத்னாங்கி ratṉāṅki, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரதகாரன் rata-kāraṉ, n. <ratha-kāra. Carpenter, coach-builder; தச்சன். (I. M. P. Tp. 715.)

ரப்பிசானி rappicāṉi, n. <Arab. rabiuth-zāni. The fourth Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் நான்காவது மாதம். (பெரியவரு. 28.)

ரப்பிலவ்வல் rappilavval, n. <Arab. rabiul-awwal. The third Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் மூன்றாவது மாதம். (பெரியவரு. 28.)

ரவிசு ravicu, n. cf. rava. Noise; இரைச்சல். ரவிசு பண்ணாதே. Loc.

ரவைசல்லா ravai-callā, n. <ரவை+. A kind of cloth; துணிவகை. ரவைசல்லா தான்முடி நலமாகக் கொண்டுவந்தார் (கோவ. க. 37).

ரஜப் rajap, n. <Arab. rajab. The seventh Arabic month; அராபியர்களுடைய வருஷத்தின் ஏழாவது மாதம். (பெரியவரு. 28.)

ரக்ஷணம் rakṣaṇam, n. <rakṣaṇa. Protection; பாதுகாப்பு.

ரா

ராக்கடை rākkaṭai, n. <ராக்கடி. A head-ornament, worn by women; ராக்கடி. (தாசில்தார்நா. பக். 40.)

ராக்கினி rākkiṉi, n. <rajñī. Queen; இராணி. விக்டோரியமகா ராக்கினியார் மெச்சுநரபாலன் (பஞ்ச. திருமுக. 56).

ராகவர்த்தனி rāka-varttaṉi, n. <rāga+. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ராசமம் rācamam, n. (பரி. அக.) 1. Thorny plant; முள்ளி. 2. cf. இராசயுகம். Silvery leaved apeflower; பாலை.

ராசவாணன் rāca-vāṇaṉ, n. <rajan+. A kind of paddy; நெல்வகை. மாராசவாண னென்றும் வாள்சுருணை வாலன் (நெல்விடு. 189, 190).

ராசாங்கம் rācāṅkam, n. <rājāṅga. Kingship; அரசு. ராசாங்கத்திலமர்ந்தது வைதிக சைவம் (தாயு. ஆகார. 10).

ராசிபாளையன்பணம் rācipāḷaiyaṉ-paṇam, n. A coin; நாணயவகை. (M. E. R. 225 of 1927-8.)

ராசிபொன் rāci-poṉ, n. prob. ராசி+. A coin; நாணயவகை. (M. E. R. 303 of 1924.)

ராசிரோசன்குளிகை rācirōcaṉkuḷikai, n. A coin; நாணயவகை. (M. E. R. 15 of 1924-c.)

ராப்பு rāppu, n. Safety; பந்தோபஸ்து. வீடு அவந்தரையாயிருக்கிறது; ராப்பில்லை. Madr.

ராமதுவாதசி rāma-tuvātaci, n. <rāma +. The dvādaśi tithi of the bright fortnight of the lunar month Jyēṣṭā; ஜ்யேஷ்ட மாதத்து சுக்கிலபட்சத்துத் துவாதசி. (பஞ்.)

ராமபாணம் rāma-pāṇam, n. <id.+. A kind of paddy; நெல்வகை. சீராம பாணமென்றும் சீர்த்தி படைத்ததல்லால் (நெல்விடு. 190).

ராமளி rāmaḷi, n. (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 103.)

ராயில் rāyil, n. Bastion; கொத்தளம். Pond.

ராஜக்கட்டி rāja-k-kaṭṭi, n. <ராஜன்+. Carbuncle; ராஜபிளவை. (மதி. க. i, 190.)

ராஜகீயம் rājakīyam, n.<rājakīya. Good government; நல்லாட்சி. இப்போது ஒட்டர்க்குக் காலமின்றியே ராஜகீயமாய் (S. I. I. iv, 140).

ராஜகோபாலசக்கரம் rājakōpāla-cakkaram, n. A gold coin; பொன்னாணயவகை. (M. E. R. 14, 15 of 1920-21-A.)

ராஜமுதலிகள் rāja-mutalikaḷ, n. <rājan +. Ministers and chieftains; தலைமை யதிகாரிகள். ராஜாக்கள் விட்டும் ராஜமுதலிகள் பொன்னிட்டும் (S. I. I. vi, 28).

ராஜராஜன்காசு rājarājan̲-kācu, n. A coin; நாணயவகை. (I. M. P. Tj. 862.)

ராஜராஜன்பழங்காசு rājarājan̲-paḻaṅ-kācu, n. See ராஜராஜன்காசு. (I. M. P. Tp. 106.)

ராஜன் rājan̲, n. <rājan. King; அரசன்.

ராஜஸ்வம் rāja-svam, n.<id.+. King's property; அரசனுடைய சொத்து. (colas, ii, 425.)

ரி

ரிங்கின்கயிறு riṅkin̲-kayiṟu, n. <E. rigging+. Rigging; கப்பல்களின் பாய்களை விரிக்கவுஞ் சுருக்கவும் உதவுங் கயிறு. (M. Navi.)

ரிஷபதீபம் riṣapa-tīpam, n. <ṛṣabha+. A kind of temple lamp; கோயில்தீபவகை. (தமிழ்விடு. முகவுரை, பக். 12.)

ரிஷபதேவர் riṣapa-tēvar, n. <id.+. The holy bull Nanti; நந்திதேவர். (M. E. R. 215 of 1924.)

ரிஷபப்ரிய riṣapa-priya, n. prob. id.+. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரிஷபவாகனதேவர் riṣapa-vākan̲a-tēvar, n. <id.+vahana+. 1. Śiva, as riding a bull; சிவபெருமான். 2. See ரிஷபதேவர். (M. E. R. 182 of 1925.)

ரு

ருசரகம் rucarakam, n. Nitrogen; நிர்ஜீவ மூலம் என்னும் இலவண வாயு. (விவசா. ரசா. 8.)

ருத்திரகணப்பெருமக்கள் ruttira-kaṇa-p-perumakkaḷ, n. <Rudra+. A class of Śaiva devotees; ஒருசார் சிவனடியார். (I. M. P. S.A. 762.)

ருத்திரம் ruttiram, n. Wiry indigo; சிவனார்வேம்பு. (பரி. அக.)

ரூ

ரூபபரிணாமம் rūpa-pariṇāmam, n.<rūpa +. Metamorphosis; உருமாற்றம். Mod.

ரூபாவதி rūpāvati, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

ரூபி-த்தல் rūpi-, 11 v. tr.<rūpa. To state metaphorically; to metaphorize; உருவகப்படுத்துதல். மேகத்தை ஆனையினுடைய ஸ்தானேயாகவும் .... ரூபித்துக்கொண்டு பாரிச்செய்கிறார் (திவ். பெரியாழ். 3, 5, 4, வ்யா. பக். 638).

ரெ

ரெபம் repam, n. cf. இரம்பிலம். Black pepper; மிளகு. (பரி. அக.)

ரே

ரேகை rēkai, n. A coin; நாணயவகை. (I. M. P. S.A. 115.)

ரேணு rēṇu, n. <rēṇu. Dust; பொடி.

ரோ

ரோகநிதானசாஸ்திரம் rōka-nitāna-cāstiram, n. <rōga+. Pathology; ரோகத்தின் தன்மையை உணர்த்துஞ் சாஸ்திரம். Mod.

ரோசாம்பரம் rōcāmparam, n. A flowering plant; பூச்செடிவகை. Madr.

ரௌ

ரௌத்திரி rauttiri, n. <raudrī. A śakti, one of nava-catti; நவசத்தியு ளொன்று. (அபி. சிந்.)

ல

லங்காடி laṅkāṭi, n. <Arab. laṅgar. Rake; கெட்டநடத்தையுடையவன். அவன் வெறும் லங்காடி. Loc.

லதாங்கி latāṅki, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

லந்தர் lantar, n. <E. Lantern; விளக்கு. தகர லந்தர்க் கடைமுதலாய் (பஞ்ச. திருமுக. 1192).

லம்பாடி lampāṭi, *n.* Quarrelsome woman; வம்புக்காரி. *Colloq.*

லயம் layam, *n.* <*laya*. Entire absence; சிறிதுமின்மை. போதகம் என்னிடம் லயமே (சர்வ சமய. பக். 8).

லவ்வோலவ்வோவெனல் lavvō-lavvō-v-eṉal, *n.* cf. லபோலபோவெனல். Expr. of beating one's mouth with palm of hand, in sorrow; துயரத்தால் வாயிலடித்துக்கொள்ளுதற் குறிப்பு. யாசகத்துக்கோடியலைந்து லவ்வோலவ்வோ வென்று (பஞ்ச. திருமுக. 233).

லவணசாரம் lavaṇa-cāram, *n.* <*lavaṇa* +. Chlorine; மூலரசாயனப்பண்டவகை. *Mod.*

லவாஜமா lavājamā, *n.* Bag and baggage; மூட்டைமுடிச்சு. (P. T. L.)

லவுரான் lavurāṉ, *n.* Shrouds in a sail; கப்பற்பாய் மரங்களில் உச்சியிலிருந்து அடிவரைக்கும் நேராய்க் கட்டப்படுங் கயிறுகள். (M. Navi.)

லக்ஷணக்காரன் lakṣaṇa-k-kāraṉ, *n.* <லக்ஷணம் +. 1. Grammarian; இலக்கணம் வல்லவன். 2. One who is expert in *cāmut-tirikā-cāttiram;* சாமுத்திரிகா சாத்திரம் வல்லவன். (தமிழறி. 13.)

லக்ஷணம் lakṣaṇam, *n.* <*lakṣaṇa*. Deed; சாசனப்பத்திரம். இப்படி லக்ஷணம் பண்ணிக் குடுத்து லக்ஷணப்படி கல்வெட்டுவித்தோம் (S. I. I. viii, 15).

லக்ஷார்ச்சனை lakṣārccaṉai, *n.* <*lakṣa* +. Worship by performing *sahasranāmārccaṉai*, a hundred times; நூறுமுறை ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்கை.

லக்ஷி-த்தல் lakṣi-, *11 v. tr.* Corr. of ரக்ஷி-. To protect; இரட்சித்தல். (தஞ். சா. ii, 207.)

லக்ஷியலக்ஷணபாவசம்பந்தம் lakṣiya-lakṣaṇa-pāva-campantam, *n.* <*lakṣya* +. One of *campanta-t-tirayam;* சம்பந்தத்திரயங்களு ளொன்று. (வேதாந்தசா. 79.)

லா

லாகரி lākari, *n.* prob. *lahari.* Blissful experience; ஆனந்தானுபவம். பரமானந்த லாகரியைக் கொடுக்கிறதாயும் (வேதாந்தசா. பக். 85).

லாண்டோ lāṇṭō, *n.* <E. Landau; மேற் கூட்டைத் திறந்துமூட வசதியுள்ள வண்டிவகை. *Pond.*

லி

லிங்காவட்டம் liṅkāvaṭṭam, *n.* Rib-piece, as in a shed; வரிச்சல். *Madr.*

லிபி-த்தல் lipi-, *11 v. tr. & intr.* <*lipi*. To write; எழுதுதல். வம்பு லிபித்தானயன் (சங்கர. அந்தாதி. 11.)

லு

லுச்சா luccā, *n.* <Hind. *luccā*. That which is vulgar or obscene; ஆபாசமானது. இன்னம் எனுமக்கு லுச்சாப் பேச்சிது (தாசில்தார்நா. பக். 70).

லெ

லெச்சம் leccam, *n.* <*lakṣa*. Lakh; லக்ஷம். (சிவக். பிரபந். சரபேந். 59.)

லே

லேபம் lēpam, *n.* <*lēpa*. Smearing; லேபனம். கடித்தவாயில் . . . லேபஞ் செய்தாலும் (தஞ். சா. iii, 103).

லோ

லோகாயதிகன் lōkāyatikaṉ, *n.* <*lōkāyata*. (Phil.) Materialist. See உலோகாயதன். (சிசி, முதல் ஸ்ரீய: பதி, அவ. பக். 51.)

லோகோக்தி lōkōkti, *n.* <*lōkōkti*. Popular saying; பழமொழி. உன்செவியில் புண்ணைக் குறிக்கொண்டிரு என்றிறே லோகோக்தியும் (திவ். பெரியாழ். 2, 3, 1, வ்யா. பக். 275).

லௌ

லௌத்துவம் lauttuvam, *n.* <*laghu-tva*. Disgrace; அவமானம். லௌத்துவஞ் சேருமன்றே (நீதிசாரம், 65).

வ

வக்கட்டை vakkaṭṭai, *n.* Lean animal; மெலிந்த பிராணி. *Loc.*

வக்கிரகண்டி vakkira-kaṇṭi, *n.* <*vakra* + *kaṇṭha*. Vessel with a long neck, used in distilling; still; திராவகம் வடிக்க வுதவும் நீண்ட கழுத்துள்ள பாத்திரம். *Pond.*

வகுப்பு vakkuppu, *n.* <வகு-. Class; பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைத் தாரதம்மியமாகப் பிரிக்

தும் பிரிவு. ஒரே வகுப்பி லாங்குக் கலைபயின்றோ மல்லவா (பஞ்ச. திருமுக. 432).

வகுளாபரணம் vakuḷāparaṇam, n. (Mus.) A primary rāga; மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

வகைகாரன் vakai-kāraṉ, n. <வகை+. Clever man; கெட்டிக்காரன். நீயாமெம் வித்தை வெகு மாயவித்தை கண்டாய் வகைகாரா (நெல்விடு. 240).

வகைப்பேறு vakai-p-pēṟu, n. <id.+. A tax; வரிவகை. (S. I. I. vi, 29.)

வகையறு-த்தல் vakai-y-aṟu-, v. tr. <id. To settle, as a dispute; வழக்குத்தீர்த்தல். எங்களில் நாங்கள் பொருந்தி வகையறுத்துக் கொண்டோம் (S. I. I. viii, 156).

வங்கக்களங்கம் vaṅka-k-kaḷaṅkam, n. <வங்கம்+. A medicinal preparation; மருந்து வகை. (தஞ். சர. iii, 79.)

வங்கணம் vaṅkaṇam, n. Propriety; தகுதி. எனை ஆதரித்தல் வங்கணமே (சர்வசமய. பக். 67.)

வங்குல் vaṅkul, n. Spleen tree; மரவகை. (L.)

வங்கை vaṅkai, n. Mischief; சேஷ்டை. சங்கையில்லாமலே வங்கைகள் செய்தாரே (கனம் கிருஷ்ணையர், கீர்த். 40).

வச்சளம் vaccaḷam, n. <vatsala. Affection, as towards a child; வாற்சல்யம்.

வசக்கு-தல் vacakku-, 5 v. tr. <வயக்கு-. To improve, as land; நிலத்தைத் திருத்துதல். கட்டை பறிச்சு வசக்கி (S. I. I. v, 307).

வசநீக்கம் vaca-nīkkam, n. <வசம்+. Dispossession; கைவசமிருந்ததை நீக்குகை. Pond.

வசம்புவாசா vacampuvācā, n. Pepper; மிளகு. (வை. மூ.)

வசமொழிக்கை vacam-oḻikkai, n. <வசம் + ஒழி-. See வசநீக்கம். Pond.

வசைவு vacaivu, n. Fault; blemish; குற்றம். (திவ். பெரியாழ். 3, 4, 2, வ்யா. பக். 594.)

வட்டக்கோரை vaṭṭa-k-kōrai, n. prob. மட்டம்+. A kind of grass; புல்வகை. (சாசனத்த. 128.)

வட்டச்சக்கரம் vaṭṭa-c-cakkaram, n. <வட்டம்+. (Poet.) A kind of metrical composition; சித்திரக் கவிவகை. (யாப். வி. பக். 497.)

வட்டச்சொச்சவியாபாரம் vaṭṭa-c-cocca-viyāpāram, n. <id.+சொச்சம்+. Money-changer's trade; நாணயமாற்று முதலிய தொழில். Pond.

வட்டம்போர் vaṭṭam-pōr, n. <வட்டு+. Dice-play; சூதுபோர். (தொல். எழுத். 418, இளம்பூ.)

வட்டமணியம் vaṭṭa-maṇiyam, n. <வட்டம்+. The office of revenue collection in a division; வட்டத்து ஊர்களில் வரிவசூலிக்கும் வேலை. (R. T.)

வட்டை vaṭṭai, n. 1. Field; வயல். (J. N.) 2. Large tract of forest; பெருங்காடு. Loc. 3. Direction; திக்கு. எட்டுவட்டையிலும் வந்தார்கள். Loc.

வடகாவிசேர் vaṭa-kāvi-cēr, n. prob. Hind. badā+. Main top-sail; வடகாவிமரத்திற் கட்டப்படும் பாய். (M. Navi.)

வடகாவிடஸ்தூர் vaṭa-kāvi-ṭastūr, n. <id.+. Main top mast studding sail; வடகாவி மரத்திலிருக்கும் டஸ்தூர். (M. Navi.)

வடகாவிமரம் vaṭa-kāvi-maram, n. <id. +. Main-top mast; வடமரத்தின் அடிக்கட்டைக்கு மேலுள்ள பகுதி. (M. Navi.)

வடசவர்சவாய் vaṭa-cavar-cavāy, n. <id.+. Main-top-gallant stay; வடசவர் மரத்திற்கு முற்பக்கத்தில் ஆதாரமாகக்கட்டப்படும் கயிறு. (M. Navi.)

வடசவர்சேர் vaṭa-cavar-cēr, n. <id.+. Maintop-gallant-sail; வடசவர் மரத்தில் கட்டப்படும் பாய். (M. Navi.)

வடசவர்டஸ்தூர் vaṭa-cavar-ṭastūr, n. <id +. Main top-gallant studding sail; வடசவர் மரத்திலிருக்கும் டஸ்தூர். (M. Navi.)

வடசவர்பறுவான் vaṭa-cavar-paṟuvāṉ, n. <id.+. Main-top-gallant yard; வடசவர் மரத்தின் குறுக்கே போடப்படும் பறுவான். (M. Navi.)

வடசவர்பிராந்தல் vaṭa-cavar-pirāntal, n. <id.+. See வடசவர்பெற்பரோடி. (M. Navi.)

வடசவர்பெற்பரோடி vaṭa-cavar-peṟpa-rōṭi, n. <id.+. Main top-gallant backstays; வடசவர் மரத்திற்குப் பக்க ஆதாரமாய்க் கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

வடசவர்மரம் vaṭa-cavar-maram, n. <id. +. Main-top-gallant mast; வடமரத்திலுள்ள காவிமரத்துக்கு மேலுள்ள பகுதி. (M. Navi.)

வடசவர்லவுரான் vaṭa-cavar-lavurāṉ, n. <id.+. Main-top-gallant shrouds; வட

சவர்மரத்துக்கு ஆதாரமாகக்கட்டப்படுங் கயிறு. (M. Navi.)

வடசேடி vaṭa-cēṭi, n. <வடக்கு+. The northern range of the mythical silver mountain; வெள்ளிமலையின் வடசாரி. (தக்கயாகப். 371.)

வடசேர் vaṭa-cēr, n. prob. Hind. baḍā +E. sail. Main sail; கப்பலின் வடமரத்தில் விரிக்கப்படும் பாய். (M. Navi.)

வடடவர்சேர் vaṭa-ṭavar-cēr, n. <id.+ E. tower+. Main royal sail; வடடவர் மரத்திற் கட்டப்படும் பாய். (M. Navi.)

வடடவர்மரம் vaṭa-ṭavar-maram, n.<id. +id.+. Main royal mast; வடமரத்தின் உச்சிப் பாகம். (M. Navi.)

வடதுருவசக்கரம் vaṭa-turuva-cakkaram, n. <வடக்கு+துருவம்+. Arctic circle; பூமியின் வடகோடியிலுள்ள குளிர்ச்சியான மண்டலத்தை வரையறுக்குஞ் சுற்றுரேகை. (M. Navi.)

வடமரம் vaṭa-maram, n. prob. Hind. baḍā+. Main mast; கப்பலின் நடுவிலிருக்கும் பாய்மரம். (M. Navi.)

வடும்பு vaṭumpu, n. Tie-beam; சாத்துமரங் களின் குறுக்கே போடுங் கழி. Loc.

வண்டாளை vaṇṭāḷai, n. A kind of paddy; நெல்வகை. (குருகூர்ப். 58.)

வண்ணக்கன் vaṇṇakkaṉ, n. Manager; காரிய நிர்வாகி. Loc.

வண்ணாத்தி vaṇṇātti, n. Myna; நாகண வாய்ப்புள். Pond.

வண்ணாரம் vaṇṇāram, n. <varṇakāra. Work of a dhoby or washerman; வண்ணான் தொழில். வண்ணாரந்தன்னா மச்சிகமே (நீலகேசி, 280.)

வண்ணானைக்கும்பிட்டார் vaṇṇāṉai-k-kumpiṭṭār, n. <வண்ணான்+. St. Cēramāṉ-perumāḷ; சேரமான்பெருமாணாயனார். ஆண்டார் வண்ணானைக்கும்பிட்டார் எழுந்தருளி (S. I. I. vii, 321).

வணக்குமார் vaṇakkumār, n. perh. வண்ணக்கர். Temple accountant; கோயில் மணியகாரர். (J. N.)

வணை-த்தல் vaṇai-, 11 v. tr. To pour, as water from a pot; தண்ணீர் ஊற்றுதல். Rd.

வத்தா vattā, n. Barber; நாவிதன். வத்தா வொருகத்தியினாலே வைக்கின்ற மயிர்ச்சிகையன்று (பாடு. 76, சிகை. 1).

வத்திநயினி vattinayiṉi, n. Fainting, delirium; மயக்கம். (சித். அக.)

வத்திரதாரு vattiratāru, n. Roselle; செம்புளிச்சை. (பச். மூ.)

வத்துபேதம் vattu-pētam, n. <வத்து+. (Jaina.) Doctrine which affirms both existence and non-existence; அஸ்திநாஸ்திவாதம். வத்து பேதங் கூறுமெழாத குழக்கன்றினுக்கு (நீலகேசி, 403).

வத்தைச்சீட்டு vattai-c-cīṭṭu, n. <வத்தை +. Bill of lading; கப்பலில் ஏற்றவாவது கரையில் இறக்கவாவது வத்தையில் போடப்படுஞ் சரக்கோடு கொடுத்தனுப்புஞ் சீட்டு. (M. Navi.)

வந்தரியர் vantariyar, n. Fem. of வந்தரர். A class of goddesses, inhabiting the heaven; மேலுலகத்திலுள்ள வியந்திர ஸ்திரீகள். சுந்தரியர் வந்தரியர் (மேருமந். 1032).

வமிசாட்டவணை vamicāṭṭavaṇai, n. <வமிசம்+. Genealogy; வமிசாவளி. Pond.

வய-த்தல் vaya-, 12 v. tr. cf. vaśa. To wish for; to desire; விரும்புதல். வயந்தே யுமக்காட் செய்து (தேவா. 946, 7).

வயற்சூலம் vayaṟ-cūlam, n. <வயல்+. (Astrol.) Nakṣatras, which are inauspicious for tilling; உழவுக்காகாத நட்சத்திரங்கள். (சோதிட. சிந். 178.)

வயிரப்படையோன் vayira-p-paṭaiyōṉ, n. <வயிரம்+. Indra, as the wielder of thunderbolt; இந்திரன். வயிரப்படையோன் முதலமரர் (காசிக. தேவர்கள் அகப். 10).

வயிரவுருக்கு vayira-v-urukku, n. <id. +. That which melts or dissolves diamond; வைரத்தை உருக்கக்கூடிய பொருள். வயிரவுருக்கானது அரக்கையுருக்கச் சொல்லவேணுமோ (திவ். திருநெடுந். 22, வ்யா. பக். 205).

வயிறுவாழ்-தல் vayiṟu-vāḻ-, v. intr. <வயிறு+. 1. To have enough of food; வேண்டும் உணவு உடையவனாதல். ஸ்வைக்ருஹத்தில் ஜீவனமற்று வயிறுவாழாமல் செய்கிறானன்றே (திவ். பெரியாழ். 2, 9, 3, வ்யா. பக். 457). 2. To make a living; உயிர்வாழ்தல். Loc.

வர்ணம் varṇam, n. <varṇa. Degree of fineness, as of gold; மாற்று. கைங்கர்யைகப்ரயோஜனராயிருக்கு மவர்களுடைய பரமைகாந்தித்வம் ஷோடசவர்ணஸ்வர்ணத்தோடொக்கும் (ரஹஸ்ய. 846).

வர்த்தகம் varttakam, n. <vardhaka. That which increases or promotes; விருத்திசெய்வது. இது ஆயுள் வர்த்தகம்.

வர்த்தகன் varttakaṉ, *n.* <*vardhaka.* Promoter; one who helps to increase or promote; விருத்தியாக்குவோன். உத்பன்னையான பக்திக்கு வர்த்தகர் ஆர் (ஈடு, முதல் ஸ்ரீய:பதி, அவ. பக். 94).

வர்த்திப்பு varttippu, *n.* <வர்த்தி-. Increase; பெருக்கம். *Pond.*

வரக்கூலி vara-k-kūli, *n.* <வா-+. Hire or rent for carrying paddy, etc.; நெல் முதலியன எடுத்து வருவதற்குள்ள வண்டிச்சத்தம். (S. I. I. viii, 5.)

வரத்து varattu, *n.* <id. 1. Genealogy; lineage; வமிசாவளி. ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச் சொல்லியிறே கவிபாடுவது (திவ். அமலனாதி. 1, வ்யா. பக். 24). 2. Chirping of lizard indicating the arrival of guests; விருந்து வரவைக் குறிக்கும் பல்லிச்சொல். (கௌளி சா. 2.) 3. Order; உத்திரவு. திலகிவர்த்தஞ்செய்ய வரத்துத் தருகவென்ன (S. I. I. vii, 482).

வரம்பழிதரிசு varampaḻi-taricu, *n.* <வரம்பு+அழி-+. Waste land; பாழ்நிலம். (Pudu. Insc. 224.)

வரவுசெலவு varavu-celavu, *n.* <வரவு+. *Colloq.* 1. Income and expenditure; வருமானமுஞ் செலவும். 2. Ledger entry; பேரேட்டிற் செய்யும் பதிவு.

வரவோலை varavōlai, *n.* <id.+. Letter of invitation; அழைப்புக் கடிதம். வரவேண்டு மென்று சொல்லி வரவோலை அனுப்புவித்தார் (கோ ல. க. 17).

வராகசம்மாரர் varāka-cammārar, *n.* <வராகம்+. A manifestation of Śiva; சிவபெருமானது மூர்த்தங்களு ளொன்று. (காஞ்சிப். சிவபுண். 31.)

வராகபணம் varāka-paṇam, *n.* <id.+. A coin; நாணயவகை. (S. I. I. viii, 87.)

வராகமுத்திரை varāka-muttirai, *n.* <id.+. A hand-pose, in worship; கரமுத்திரை வகை. (சைவாநு. வி. 18.)

வராகன்புள்ளிக்குளிகை varākaṉ-puḷḷi-k-kuḷikai, *n.* <id.+. An ancient coin; பழைய நாணயவகை. (M. E. R. 1922-23, p. 114.)

வராங்கம் varāṅkam, *n.* perh. *varāṅga.* The body of a celestial being; வானவரின் சரீரம். (R.)

வராணி varāṇi, *n.* Wedge-leaved ape-flower; பாலை. (வை. மூ.)

வரி vari, *n.* (Pros.) A kind of musical composition, pertaining to dance; கூத்திற்குரிய வெண்டுறைப்பாட்டு ளொருவகை. (யாப். வி. பக். 538.)

வரிக்கற்றாழை vari-k-kaṟṟāḻai, *n.* <வரி+. A kind of aloe; கற்றாழைவகை. (சித். அக.)

வரிக்கற்றை vari-k-kaṟṟai, *n.* prob. id.+. Bundle of straw, etc., suitable for roofing; கூரை வேய்தற்குதவும் புற்கற்றை முதலியன. வரிக்கற்றை இடுமெடுத்து (S. I. I. vi, 29).

வரிக்காம்பு vari-k-kāmpu, *n.* <id.+. Pile of harvested tobacco plants; அறுத்த புகையிலைச் செடியின் அடுக்கு. *Tinn.*

வரிக்காய் vari-k-kāy, *n.* <வரி+. cf. வரிக் கடுக்காய். A species of chebulic myrobalan; கடுக்காய்வகை. (M. M.)

வரிக்குமரி vari-k-kumari, *n.* <id.+. See வரிக்கற்றாழை. (சங். அக.)

வரிசை varicai, *n.* Cultivator's share of produce; பயிர்விளைவில் உழவனுக்குரிய பங்கு. வரிசைக்கு உழும் (நேமிநா. சொல். 17, உரை).

வரிசையார் varicaiyār, *n.* prob. வரிசை. Elder brother's wife; அண்ணன் மனைவி. *Loc.*

வரிவளை vari-vaḷai, *n.* <வரி+. A kind of bangles; வளையல்வகை. கோல்வளை கழல்வளை வரிவளை யென்னுமாபோலே (திவ். பெரியாழ். 3, 4, 8, வ்யா. பக். 618).

வரீக்கு varīkku, *n.* (Mus.) A kind of grace in music; இசைக்கமகவகை. (பூர். சங். எ.)

வருக்கை varukkai, *n.* A kind of fish; மீன்வகை. திருக்கை வருக்கை (குருகூர்ப். 7).

வருணப்பிரியை varuṇappiriyai, *n.* (Mus.) A specific melody-type; இராகவகை. (பரத. ராக. பக். 104.)

வருத்தமானம் varuttamāṉam, *n.* A mathematical treatise, not now extant; இறந்துபட்ட ஒரு கணிதநூல். (யாப். வி. பக். 528.)

வருவு-தல் varuvu-, 5 *v. tr.* perh. வகுவு-. To open, as one's mouth; திறத்தல். கப்பியமே யென்று வாய் வருவுதலின் (நீலகேசி, 375, உரை).

வரைக்கெண்டை varai-k-keṇṭai, *n.* <வரை+. Carp; கெண்டைமீன்வகை. (நாநார்த்த.)

வல்லவன் vallavaṉ, *n.* <*vallabha.* The Western Caḷukya king; மேலைச்சளுக்கிய அரசன். (Insc.)

வல்லூரி vallūri, *n.* Pig; பன்றி. (சங். அக.)

வல்லை vallai, n. (பச். மூ.) 1. Battle of Plassey tree; புனமுருங்கை. 2. Palas-tree; முருக்கு.

வலங்கையிடங்கைமகன்மை valaṅkai-y-iṭaṅkai-makaṉmai, n. <வலங்கை+. An ancient tax; பழையவரிவகை. (S. I. I. v, 365.)

வலசை[1] valacai, n. Hamlet; உட்கிடைக் கிராமம். Loc.

வலசை[2] valacai, n. cf. வரிச்சல். Lath; வரிச்சல். மூங்கில் வலசைகள் 25 விழுக்காடு சுமை கட்டி (மதி. க. ii, 173).

வலஞ்சியர் valañciyar, n. prob. vaṇij. The Vaiśya community; வைசியர். (M. E. R. 505 of 1922.)

வலம் valam, n. perh. vara. That which is excellent; சிரேஷ்டம். வணக்கொடு மாள்வது வலமே (திவ். திருவாய். 1, 3, 8).

வலவன் valavaṉ, n. <வலம். Person on the right side; வலப்பக்கத்துள்ளவன். Loc.

வலவன்பாடி valavaṉ-pāṭi, n. <வலவன் +. Tinn. 1. One who accompanies the singer playing the vil in villuppāṭṭu, sitting on his right side; வில்லுப்பாட்டில் வீசுகோற்காரனுக்கு வலப் பக்கத்திலிருந்து பாடுபவன். 2. Sycophant; ஒத்துப் பாடுவோன்.

வலவாய்வாங்கு-தல் vala-vāy-vāṅku-, v. tr. <வலம்+வாய்+. To break with spade the portion of the field near its ridge where ploughing is not feasible; வயல் வரப்பினருகில் உழமுடியாது கிடக்கும் இடத்தை மண்வெட்டியால் வெட்டி உழவு பதமாக்குதல். Nāñ.

வலிச்சம் valiccam, n. prob. வலி-. Grimace; வலிப்புக்காட்டுகை. Loc.

வலுக்கொள்(ளு)-தல் valu-k-koḷ-, v. tr. <வலு+. To take forcibly; பலாத்காரமாக எடுத்துக்கொள்ளுதல். நிலத்தை வலுக்கொண்டு (சரவண. பணவிடு. 184).

வழக்காடி vaḻakkāṭi, n. perh. விளக்கு+. Lighthouse; விளக்குக்கூடு. Pond.

வழக்காரம் vaḻakkāram, n. <வழக்கு. Dispute; சச்சரவு. மணவாளப் பிள்ளையுடன் வழக் காரம் நன்றுச்சே (வள்ளி. கதை. Ms.)

வழக்குமுறி vaḻakku-muṟi, n. <வழக்கு+. Complaint; பிராது. (M. E. R. 257 of 27, p. 117.)

வழங்கு-தல் vaḻaṅku-, 5 v. intr. To frequent; நடமாடுதல். Loc.

வழிகாட்டி vaḻi-kāṭṭi, n. <வழி+. Directory; பொதுமக்களுக்கு வேண்டிய வியாபாரம் தொழில் முதலியவற்றையும் முக்கியஸ்தர்களைப்பற்றி யும் விவரமாகத் தெரிவிக்கும் நூல். Pond.

வழிச்சந்தி vaḻi-c-canti, n. <id.+. Junction of roads; தெருக்கள் கூடுமிடம். Pond.

வழிச்செவ்வை vaḻi-c-cevvai, n. <id.+. Road; சாலை. போகிற வழிச்செவ்வைகளில் (S. I. I. v, 138).

வழிசொல்(லு)-தல் vaḻi-col-, v. intr. <id.+. To make arrangements, as for payment of debts; ஏற்பாடுசெய்தல். கடனுக்கு வழி சொன்னாற் கைச்சாத முண்டேன் (கோவ. க. 52).

வழித்திருடன் vaḻi-t-tiruṭaṉ, n. <id.+. Highway robber; வழிப்பறி செய்பவன். Pond.

வழிநடைக்கிடும்பணம் vaḻinaṭai-k-k-iṭum-paṇam, n. <வழிநடை+இடு-+. Road cess; வரிவகை. (S. I. I. vii, 47.)

வழிப்பணி vaḻi-p-paṇi, n. <வழி+. Laying and repairing roads, being the labour of a person sentenced to rigorous imprisonment; கடுங்காவல் தண்டனையாகக் குற்றவாளிக்கு விதிக்கப் படும் பாதை செப்பனிடுகை முதலிய வேலை. Nāñ.

வழிபாடுசெய்-தல் vaḻipāṭu-cey-, v. intr. <வழிபாடு+. To serve a great person, guessing his wishes; கருத்தறிந்து அடிமை செய்தல். (திவ். திருப்பள்ளி. 5, வ்யா. பக். 31.)

வழிமொழி vaḻi-moḻi, n. <வழி+. (Rhet.) A figure of speech; அணிவகை. (யாப். வி. பக். 511.)

வழு vaḻu, n. Dirt or mucus, as on the body of a calf just yeaned; கன்று முதலானவை பிறக்கும்போது காணப்படுஞ் சவ்வு முதலியன. வழு நுகர்ந்தாதரவொடு கன்றுகள் (தூற்றெட்டு. திருப்பு. 67).

வழுக்கைப்பயல் vaḻukkai-p-payal, n. <வழுக்கை+. Young boy; சிறுவன். Tinn.

வழுத்தரவு vaḻu-t-taravu, n. <வழு+தரு-. Decline, fall; வழுவிவீழ்கை. ப்ரபாதஸமயத்து உதிதனாகிய ஆதித்யனுக்கு அஸ்தமயம்போல ஆயு ரவஸானகாலத்து வழுத்தரவு ஸகல தேவர்கட்கும் ஸாதாரணமேயாகும் (ஸ்ரீபுராணம், Ms).

வழுது vaḻutu, n. cf. பழுதை. Stubble; அரிதாள். Pond.

வழுமெனல் vaḻum-eṉal, n. Onom. expr. of (a) smoothness; வழவழப்புக் குறிப்பு;

(b) being silent and secretive; தெரிந்துந் தெரியாதவன்போல் அடக்கமாயிருத்தற் குறிப்பு.

வளக்குவெல்லி vaḷakkuvelli, *n.* A plant; பூவகை. (தெய்வச். விறலிவிடு. 405.)

வளகு vaḷaku, *n.* <வளம். Fertility; செழிப்பு. வளகுபெறு பண்பைத் திருமலையும் (இலஞ்சி. முருகனுலா, 133).

வளர்த்து-தல் vaḷarttu-, 5 *v. tr.* To stretch as a thing, on the ground; கிடத்துதல். தயிலத்தோணி வளர்த்துமினென்னச் சொன்னான் (கம்பரா. உயுத்த. இராவணன்சோகப். 61).

வளரிக்கை vaḷarikkai, *n.* <வளர்-. Talkativeness; வளர்த்துப் பேசுகை. வளரிக்கையாலே வம்பிலே போகுதென் வாணாள் (வள்ளி. கதை. Ms.).

வளைக்காச்சுமணி vaḷai-k-kāccu-maṇi, *n.* <வளை+. A kind of bead; சங்குமணி. (சிவரக. அபுத்தி. 5.)

வளைப்புக்கிட-த்தல் vaḷaippu-k-kiṭa-, *v. tr.* <வளைப்பு+. 1. To besiege; to pester a person by surrounding him and not allowing him to escape; வெளியில் தப்பவிடாது சூழ்ந்துகொள்ளுதல். (திவ். பெருமாள்தி. 9, 2, வ்யா. பக். 126.) 2. To lie down, vowing not to get up unless one's request is granted; to sit dharna; பழிகிடத்தல். ஸ்ரீபரதாழ்வானை வளைப்புக்கிடக்கவிட்டுப் போந்து கடற்கரையிலே வளைப்புக்கிடந்தாற்போலே (திவ். அமலனாதி. 3, வ்யா.).

வளைமணிவடம் vaḷai-maṇi-vaṭam, *n.* <வளை+. A string of beads; அக்குவடம். திருவரையிற் சாத்தின வளைமணிவடமானது (திவ். பெரியாழ். 1, 7, 8, வ்யா. பக். 150).

வளையல் vaḷaiyal, *n.* <வளை-. Fetters; கைவிலங்கு. (T. C. M. ii, 2, 531.)

வற்கெனவு varkeṉavu, *n.* prob. வன்-மை. Beauty; அழகு. ஸ்வர்ணம் என்னும் வஸ்துவில் வற்கெனவும் வசஞ்செய்தலு முதலாயின அனுவிருத்த ஸ்வபாவம் (நீலகேசி, 380, உரை).

வற்பனை varpaṉai, *n.* A species of ragi; கேழ்வரகுவகை. (விவசா. 3.)

வறட்கணம் varaṭ-kaṇam, *n.* <வறள்+ A kind of wasting disease; கணைநோய்வகை. (பாலவா. 41.)

வறட்சேதம் varaṭ-cētam, *n.* <id.+. Loss to growing crops on account of drought; மழையின்மையால் பயிர் விளையாமை. (P. T. L.)

வன்பா-தல் vaṉpā-, 11 *v. intr.* <வன்பு+. To become hard; கடினமாதல். வன்பாயிருப்பது பிறிதில்லை (குறள், 1063, மணக்.).

வன்பாட்டம் vaṉ-pāṭṭam, *n.* <வன்-மை+. Fixed rent in kind due under a lease-deed which does not provide for any relief against loss due to drought; தீய்வு கரிவு காலத்திலும் குறையாமல் அளக்கவேண்டிய குத்தகை நெல். பதினாறுகலனே தூணியாக வன்பாட்டம் அளக்கவும் (S. I. I. v, 90.)

வன்மி vaṉmi, *n.* <வன்மம். Spiteful person; துவேஷபுத்தியுள்ளவன். காயிபாசெனுமோர் வன்மி (இரக்ஷணிய. பக். 51).

வன்னசாஸ்திரம் vaṉṉa-cāstiram, *n.* <வன்னம்+. Science relating to colours; வர்ணங்களைப்பற்றிய சாஸ்திரம். *Pond.*

வன்னிசிகரம் vaṉṉi-cikaram, *n.* <வன்னி +. Cock's-comb; சாவற்சூட்டுப்பண்ணை. *Pond.*

வனசம் vaṉacam, *n.* <*panasa*. Jack tree; பலா. வனசக் கனியொ டந்தண் வாழையே (அலங்காரச்சிந்து, 12).

வனப்பு vaṉappu, *n.* (Mus.) A tune; இசைவகை. பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பெண்ணும் வண்ணவிசை (பெரியபு. ஆனாய. 28).

வனப்புள் vaṉa-p-puḷ, *n.* prob. வனம்+. Shepherd koel; சாதகபட்சி. (வள்ளசத்தியஞான. 25.)

வனமுருங்கை vaṉa-muruṅkai, *n.* <id. +. Wild Indian horse-radish; காட்டுமுருங்கை. (நாநார்த்த.)

வனஸ்பதி vaṉaspati, *n.* (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சந். 47.)

வனைகோல் vaṉai-kōl, *n.* <வனை-+. Painter's brush; படந்தீட்டுங் கருவி. செம்பொற் படமும் வனைகோலும் வாங்கினான் நம்பி வடிவெழுத (அழகியநம்பியுலா, 147).

வஸ்துகிருத்தியம் vastu-kiruttiyam, *n.* <*vastu*+. Building work; கட்டடவேலை. வஸ்துகிருத்தியம் எப்பேர்ப்பட்டதும் (T. A. S. iii, 216).

வா

வாக்கின் vākkiṉ, *n.* <E. Wagon; பண்டங்களேற்றும் ரயில்வண்டி. *Mod.*

வாக்கு vākku, *n.* Manner, nature; விதம். என் இன்னும் ஒருவாக்காயிருக்கிறாய் (பிரதாப. விலா. 105).

வாக்குநிச்சயம் vākku-niccayam, *n.* <வாக்கு+. Ceremonial confirmation of marriage agreement; நிச்சயதாம்பூலம். *Loc.*

வாகதீஸ்வரி vākatīsvari, n. (Mus.) A primary *rāga;* மேளகர்த்தாக்களு ளொன்று. (சங். சங். 47.)

வாகனக்கவி vākaṉa-k-kavi, n. <வாகனம் +. Stanza eulogising the *vākaṉam* carried during temple festivals; கோயில் திருவிழாக்களில் மூர்த்தி எழுந்தருளும் வாகனத்தின் சிறப்பைப் பற்றிப் பாடுஞ் செய்யுள். (மீனாட். சரித். i, 125.)

வாகனமாலை vākaṉa-mālai, n. <id.+. See வாகனக்கவி. (மாறனலங், முகவுரை. 22.)

வாகுப்தார் vākup-tār, n. prob. Arab. *waqf* +. Person in possession; அனுபோகஸ்தன். *Madr.*

வாங்கு vāṅku, n. <Hind. *bāṅk*. Billhook; அரிவாள். கைகளில் வாங்கு பிடித்திருக்கின்றனர் (எங்களூர், 32).

வாசகப்பா vācaka-p-pā, n. <வாசகம்+. Comedy; கேலிநாடகம். *Pond.*

வாசகப்பாங்கு vācaka-p-pāṅku, n. <id. +. Good style; நல்ல உரைநடை. திருத்தமான வாசகப்பாங்காயும் (மானுமிசா. முகவுரை).

வாசமாற்றம் vāca-māṟṟam, n. <வாசம் +. Emigration; புறநாட்டிற் குடியேறுகை. *Pond.*

வாசல்காரியம் vācal-kāriyam, n. <வாசல் +. Officer who carries out royal orders; அரசன் ஆணையை நிறைவேற்றும் உத்தியோகஸ்தன். (M. E. R. 33 of 1928-9.)

வாசல்நிர்வாகம் vācal-nirvākam, n. <id. +. See வாசல்காரியம். திருநெல்வேலி வாசல் நிர்வாகம் . . . தொழிற்படுத்தி (தெய்வச். விறலிவிடு. 77).

வாசல்பணம் vācal-paṇam, n. <id.+. An ancient tax; பழையவரிவகை. வாசல்பணம் உள்பட்ட கடமை (S. I. I. i, 93).

வாசல்முதலி vācal-mutali, n. <id.+. See வாசல்காரியம். (M. E. R. 293 of 1928-9.)

வாசவுப்பு vāca-v-uppu, n. <வாசம்+. Rock-salt; கல்லுப்பு. (சித். அக.)

வாசனைவாக்கியம் vācaṉai-vākkiyam, n. <வாசனை+. Benediction; வாழ்த்து. வல்லோர் வகுத்த வாசனைவாக்கியம் பல்லோர் பகர (பெருங். உஞ்சைக். 34, 27).

வாசாப்பு vācāppu, n. See வாசகப்பா. *Pond.*

வாசியோகம் vāci-yōkam, n. prob. வாசி +. A kind of *yōga;* யோகவகை. மூலக்கனலை வாசியோகத்தா லெழுப்பி (கோபாலகிருஷ்ணபாரதி, 95).

வாசிலிங்கரு vāciliṅkaru, n. Stem of a plant; தண்டு. (மூ. அ.)

வாசுகி vācuki, n. Seed; விதை. (மூ. அ.)

வாட்டி vāṭṭi, n. The bull at the farthest end from the pole in the centre of the threshing-floor in treading corn; களமடிக்குங் கடைசிப் பிணையல்மாடு. *Loc.*

வாடகம் vāṭakam, n. <*bhāṭa*. Rent; வாடகை. *Loc.*

வாடாவிளக்கு vāṭā-viḷakku, n. <வாடு-+ ஆ neg.+. Perpetually burning lamp; நந்தா விளக்கு. *Tinn.*

வாணம் vāṇam, n. cf. வானம். Excavation for laying foundation; கடைகால். *Tinn.*

வாணன் vāṇaṉ, n. A kind of paddy; நெல்வகை. மலைமுண்டன் வாணன் (நெல்விடு. 186).

வாணி[1]-த்தல் vāṇi-, 11 v. tr. <பாணி-. To form, make; அமைத்தல். மன்னுதிரு வெண் மணலை வாணித்து (இலஞ்சி. முருகனுலா, 37).

வாணி[2] vāṇi, n. Flesh of the head of cattle, etc.; ஆடு மாடுகளின் தலைமாமிசம். (மூ. அ.)

வாதமடக்கி vāta-maṭakki, n. <வாதம்+. Windkiller, l. sh., *Clerodendron phlomoides;* மரவகை. (L.)

வாதுகவி vātu-kavi, n. <வாது+. Verses of poets competing in a literary contest; பந்தய மிட்டுப் புலவர்கள் பாடுங் கவி. திருமலைராயன் முன் சிறியே வாதுகவி பாடுதற் கெதிர்வரும் (ஆராய்ச். பக். 327).

வாதுபாட்டு vātu-pāṭṭu, n. <id.+. Song set for competition; போட்டிப் பரீட்சையில் பாடும் இசைப்பாட்டு.

வாமனூல் vāmaṉūl, n. <வாமன்+. The Buddhist works; பௌத்தநூல். வாமனூலின் மறைபொரு ளல்லவோ (நீலகேசி, 244).

வாய்க்கடைப்புகையிலை vāy-k-kaṭai-p-pukaiyilai, n. <வாய்+கடை+. Quid; வாயிலே மென்று அடக்கிக்கொள்ளும் புகையிலை யுருண்டை. *Pond.*

வாய்க்காற்சடைச்சி vāykkāṟ-caṭaicci, n. <வாய்க்கால்+. Malabar catamint; வெதுப்படக்கி. (சங். அக.)

வாய்க்கிலை vāy-k-k-ilai, n. <வாய்+. Betel leaf; வெற்றிலை. (சரவண. பணவிடு. 304.)

வாய்க்குடுமி vāy-k-kuṭumi, *n.* <id.+. Beard; தாடி. *Colloq.*

வாய்க்கேட்பார் vāy-k-kēṭpār, *n.* <id.+. Personal secretary, as to a king; அரசன் முதலியோரது வாய்மொழிகேட்டுக் காரியம் நிர்வகிக்கும் அதிகாரிகள். (S. I. I. ii, 353.)

வாய்கூசுதல் vāy-kūcutal, *n.* <id.+. Being ashamed to use indecent words; தீச்சொற்கள் பேசுவதில் அருவருப்புக் கொள்ளுகை. *Colloq.*

வாய்ச்சேதி vāy-c-cēti, *n.* <id.+செய்தி. 1. Casual mention; பேச்சுவாக்கு. நாடியதை வாய்ச்சேதியா யுரைக்க வாயெடுக்கு முந்தி (பஞ்ச. திருமுக. 1198). 2. Oral communication; ஆள் மூலமாகச் சொல்லியனுப்புஞ் செய்தி.

வாய்ப்பொருத்து vāy-p-poruttu, *n.* <id.+. Joint, as of two planks; மூட்டுவாய். கதவின் வாய்ப்பொருத்து விலகிவிட்டது.

வாய்பார்-த்தல் vāy-pār-, *v. intr.* <id.+. To listen to a talk without taking part in it; பிறருடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருத்தல். *Tp.*

வாய்மருந்து vāy-maruntu, *n.* <id.+. Spittle spit by the doctor into the mouth of a snake-bitten patient, as an antidote or poison; விஷந்தீண்டப்பட்டோரின் வாயில் விஷமருந்தாக மருத்துவர் உமிழும் வாயெச்சில். (திவ். நாய்ச். 13, 5, அரும். பக். 313.)

